# நெஞ்சில் நெருப்பு

அகத்திலிருந்து அன்லான செய்திகள்

R.ஸ்டான்லி

# நெஞ்சில் நெருப்பு

**R. ஸ்டான்லி,** B.E., M.TECH.,
*திருமறைப் போதகராய்*
*மாறிய ஒரு கட்டிடப் பொறியியலர்*

*வெளியிடுவோர்:*
**ஆசீர்வாத இளைஞர் இயக்கம்**
சர்ச் காலனி, வேலூர் 632 006
தொலைபேசி : 0416-2242943, 2248943
<bym@sancharnet.in> *www.BlessingYouthMission.org*

**FIRE IN MY BONES** (Tamil)

Copyright 2000 R. STANLEY

First Edition : May 2000
Second Edition : August 2001
This Edition : December 2009

Printed at
Bapuji Printers, Chennai 600 002

# உள்ளே...


| | | | |
|---|---|---|---|
| 0. | நெஞ்சில் நெருப்பு | ... | 5 |
| 1. | தன் பிழைகளை உணருகிறவன் யார்? | ... | 7 |
| 2. | செய்தி இல்லையே ஏன்? | ... | 15 |
| 3. | சீடத்துவத்திற்குப் பிரதான நிபந்தனை | ... | 31 |
| 4. | ஆராதனையின் அடுத்த பக்கம் | ... | 39 |
| 5. | திருசித்தம் செய்யத் தவறுவதேன்? | ... | 50 |
| 6. | பாடுகளின் வார மிஷனரிப் பாடங்கள் | ... | 62 |
| 7. | விளைச்சல் குறைவதேன்? | ... | 73 |
| 8. | கர்த்தரின் சேனைகள் | ... | 84 |
| 9. | துன்புறுத்தப்படுவோர் பாக்கியவான்கள்! | ... | 91 |
| 10. | கிறிஸ்தவமே தானதர்மம்தான்! | ... | 103 |
| 11. | இதிலும் பெரிதானவைகள்! | ... | 117 |
| 12. | உன் தேவனைச் சந்திக்க நீ ஆயத்தமா? | ... | 127 |

## o

# நெஞ்சில் நெருப்பு

"அவருடைய வார்த்தை என் எலும்புகளில் அடைபட்டு எரிகிற அக்கினியைப்போல் என் இருதயத்தில் இருந்தது... எனக்குப் பொறுக்கக் கூடாமற்போயிற்று" (எரே 20:9).

இப்புத்தகத்திலுள்ள கட்டுரைகளை நான் எழுதும்போது மேற்குறிப் பிட்டுள்ள வசனத்தில் தீர்க்கன் எரேமியா வெளிப்படுத்திய உணர்வுகளே எனதாகவுமிருந்தன. எனது ஆன்மாவில் ஏற்பட்ட கிளர்வுகள் மற்றும் ஆராய்வுகளின் வேளைகளிலேயே இச்செய்திகளை நான் பெற்றேன். அவைகளை எழுதிவிடும்வரை அமர்ந்திருக்கமுடியாது எனும் நிலைக்கு அலைபோல் இக்கருத்துக்கள் என்மேல் புரண்டு வந்தன. இச்சத்தியங்களை நான் பகிர்ந்துகொண்ட இடங்களிலெல்லாம் இதயங்கள் கொழுந்துவிட்டு எரியத் துவங்கின.

இக்கட்டுரைகளில் அறிவாற்றல் குறைவாயிருக்கலாம்; ஆனால் இவை முழுக்க முழுக்க திருவசனத்தைச் சார்ந்தவை என நான் உத்திரவாதமாய்க் கூறமுடியும். இறையியல் கல்லூரியொன்றில் முறையாய்க் கற்கும் வாய்ப்பு எனக்குக் கிட்டாமற்போயிற்று. கிடைத்திருந்தால் நன்மையாயிருந் திருக்கும். கடவுள் தமது சர்வ ஞானத்தின்படி என்னைக் கட்டிடவியலைக் கற்கப் பொறியியல் கல்லூரியில் பயிற்றுவித்துப் பின்னர் தமது இறை



யரசைக் கட்டும்பணிக்காய் அழைத்தார். தூக்குநூலை ஒருநாள் பிடித் திருந்த கை இப்பொழுது எழுதுகோலைப் பிடித்திருக்கிறது. எனது கரத்திலுள்ள பேனா அழிப்பதற்கான பட்டயமல்ல; அது அக்கக்காய்ப் பகுக்கும் கத்தி. நான் எவ்விடத்திலாவது குற்றங்கண்டுபிடிக்கிறவன் போல் காணப்பட்டால் என்னை மன்னியுங்கள். பகுத்துப்பார்க்கவே நான் விரும்பினேன்.

எரிக்கப்பட முடியாதவை மட்டுமே நிலைத்து நிற்கும்படி நமது உபதேசத்திலும் செயல்களிலும் எரிக்கப்படக்கூடியது அத்தனையும் எரிக்கப்படட்டும் (1 கொரி 3:12-15). ஆவியின் ஏவுதலால் எழுதப்பட்ட திருவசனம் நவீனக் கிறிஸ்தவத்தின் செயற்கைக் கண்டுபிடிப்புகள் யாவற்றையும் சாம்பலாக்கிவிடும் (எரே 23:28,29).

இப்புத்தகத்திலடங்கியவை ஒரே கருப்பொருளைச் சார்ந்தவையல்ல. பல்வேறு தலைப்புகள் இங்கு விவரிக்கப்பட்டுள்ளன. மொத்தமாக இவை பலமான சரிவிகித உணவாக அமையும். இவை மின்சார அடுப்பிலல்ல, நெருப்பில் சமைக்கப்பட்டவை. இச்சத்தியங்களைச் செரிக்க ஒருமுறை வாசித்தால் போதாது. இப்புத்தகத்தை வாசிப்பது இதயங்களை எரியச் செய்து, உதடுகளை அனல்கக்கச் செய்யும் எம்மாவூர் பயணம் போன்று உங்களுக்கிருக்கட்டும்!

# 1

# தன் பிழைகளை உணருகிறவன் யார்?

பாடுகளின் பள்ளியில்தான் வாழ்வின் உயரிய படிப்பினைகளைக் கற்றுக் கொள்கிறோம். இறைமகனும்கூட தாம் அனுபவித்த ''பாடுகளினால்'' கீழ்ப்படிதலைக் ''கற்றுக்'' கொண்டாராம் (எபி 5:8). தேவனுக்குப் பாவமில்லாத ஒரு குமாரன் உண்டு; ஆனால் காயமில்லாத குமாரனே கிடையாது என்றொருவர் சரியாய்ச் சொன்னார்.

ஏப்ரல் '96இல் எனக்கு இருதய அறுவை சிகிச்சை செய்யப்படவேண்டு மென்று கண்டுபிடிக்கப்பட்டவுடன் எனது எண்ணத்தில் எழுந்த முதற் கேள்வி ''ஏன் ஆண்டவரே?'' என்பதுதான். ''தேவனிடம் ஏன் என்று கேட்காதே; அவர் ஏன் கூடாது என்று கேட்டுவிடுவார்'' என்று நெடுங் காலமாய் நான் பிரசங்கித்துவந்த வார்த்தைகளே எனக்கு உடனடிப் பதிலாய் வந்தன. எனது மனதில் எழுந்த கேள்விகளை இவ்வாசகம் கொண்டு நான் அடக்கிக்கொண்டாலும், எனது இதயத்தில் கொந்தளித்த அலை களை என்னால் அமைதிப்படுத்த முடியவில்லை. அவ்வேளையில் தீர்க்கன் எரேமியா எனக்குதவினான். புலம்பல் 3:39,40, ''உயிருள்ள மனிதன் முறையிடுவானேன்? அவன் தன் பாவத்திற்கு வரும் தண்டனையைக் குறித்து முறையிடுகிறதென்ன? நாம் நமது வழிகளைச் சோதித்து ஆராய்ந்து கர்த்தரிடம் திரும்புவோம்.''

ஆனாலும் கேள்விகள் தீர்ந்தபாடில்லை. இவ்வியாதியை எனக் கனுப்பியது தேவனா? சாத்தானா? அல்லது என்னை வருத்த தேவன்



சாத்தானை அனுமதித்தாரா? இக்கேள்விகளுக்கு விடை கண்டுபிடிக்க முடியவில்லை; ஆனால் இக்கேள்விகளுக்கு விடைகாணுவது அவசிய மில்லை என்று கண்டுபிடித்தேன். நான் செய்ய வேண்டியதெல்லாம் ''என்னை'' ஆராய்ந்து பார்த்து அவர் மடியில் சாய்ந்துவிடவேண்டியதே. மருத்துவமனையிலிருந்து அனுப்பப்பட்ட பின்னர் எனது தற்பரிசோத னைக்குச் சிறந்த வழிகாட்டியாய் அமைந்தது எபிரேயர் 12ஆம் அத்தியாயமே. கடவுளது கண்ணோட்டத்தில் நான் என்னில் குறைந்தது ஏழு பிழைகளைக் கண்டுபிடித்தேன்.

### 1. அளவுக்கு மீறிய சுமை

''பாரமான யாவற்றையும் தள்ளிவிட்டு'' (வச 1).

அளவுக்குமீறி வேலை செய்துகொண்டிருந்தேன். அவசரமானதெல்லாம் அதிமுக்கியமானதென்று மதியீனமாய் நினைத்திருந்தேன். வாழ்வின் காரியங்களை முக்கியத்துவ வரிசைப்படுத்துவதற்குப் பதிலாக கோரிக்கை களுக்கும் அழுத்தங்களுக்கும் பலியானேன். வேலை வேலை என்றே இருந்தேன். எரிந்து முடியும் நிலைக்கு வந்துவிட்டேன்.

ரெயில் பெட்டிகளில் எழுதப்பட்டிருக்கும் வாசகம் நினைவிற்கு வந்தது: ''குறைந்த சாமான்; நிறைந்த வசதி; பயணத்தை இனிதாக்குக!'' நான் எல்லாவற்றையும் செய்துவிட வேண்டுமென தேவன் எதிர்பார்க்கவில்லை என்றுணர்ந்தேன். கிறிஸ்துவின் உடலில் ஓர் இடது கையாய்ச் செயல்பட நான் அழைக்கப்பட்டிருந்தால் வலது கையின் வேலைகளையும், என்னால் முடிந்தாலும், நான் செய்யக் கூடாது. அப்படிச் செய்தால் என் வேலை கூடும்; பிறருக்கோ போதுமான வேலையிருக்காது. மட்டுமல்ல, எனது வாழ்நாளில் நான்தான் முடிக்கவேண்டுமென நியமிக்கப்பட்ட அளவு வேலையைத்தான் தேவன் என்னிடம் எதிர்பார்க்கிறார். நான் அதற்கு மிஞ்சினால் அகல உழுவேனே தவிர ஆழ உழமாட்டேன். முதல் நூற்றாண்டிலேயே இந்தியாவில் எண்ணற்றோர் பாவத்திலும் பிணியிலும் மாண்டுகொண்டுதானே இருந்தனர்? பின்னை ஏன் இயேசுவோ பவுலோ இந்நாட்டிற்குப் பிரசங்கிக்க வரவில்லை? ஆனாலும் அவர்கள் இருவரும் தங்கள் வாழ்நாட்களின் இறுதியில் ''முடிந்தது'' என்று முழங்கினரே! (யோ 17:4; 2 தீமோ 4:7).

சில அழைப்புகளுக்கும் வற்புறுத்தல்களுக்கும் நான் இல்லை என்று சொல்லாவிடில், தாவீதுக்குக் கிடைத்த கீழ்க்கண்ட கல்லறை வாசகம் எனக்குக் கிட்டாது போகும். ''தாவீது தன் காலத்தில் தேவ சித்தத்தின்படி அவருக்கு ஊழியம் செய்தபின் நித்திரையடைந்தான்'' (அப் 13:36). தேவ ஊழியம் என்றழைக்கப்படுவதெல்லாம் எனக்கு தேவ சித்தமாய் இல்லா

திருக்கலாம். ஆனால் எனது வாழ்வில் நான் தேவ சித்தத்தை நிறை வேற்றுகையில் அவரது ஊழியத்தைச் செய்துமுடிக்கிறேன் எனலாம்.

## 2. வழக்கமான பாவங்கள்

‘‘நம்மைச் சுற்றி நெருங்கி நிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு’’ (வச 1).

‘‘மாம்சத்தின் இச்சை, கண்களின் இச்சை, வாழ்வின் பெருமை’’ ஆகியவை நபருக்கு நபர் வெவ்வேறு விதங்களில் வெளிப்படும். கர்த்தர்மீது நான் ‘‘ஆதி அன்பு’’ கொண்டிருந்த நாட்களில் கொடூரமாய் என் வாழ்வில் கண்டித்தவற்றை இப்போது கண்டுங்காணாமலும் இருந்தேன். அவை எனது பலவீனம் என விளக்கங்கொடுத்தும், எல்லாருந்தானே செய்கிறார்கள் எனத் தர்க்கித்துக்கொண்டும் இருந்தேன்.

எனது புதுவாழ்வின் துவக்கக் காலங்களில் வாரந்தோறும் தற்பரிசோதனைக்கென்று நேரம் செலவிடுவதுண்டு. இப்பொழுதோ எனது தனித்தியான வேளையைத் துதிப்பதிலும், விண்ணப்பிப்பதிலும், வசனத்தைத் தியானிப்பதிலும் மட்டுமே செலவழிக்கலானேன். ‘‘தேவனே, என்னை ஆராய்ந்து பாரும்’’ என்று அவசரப்படாமல் அவரது பாதத்தில் நான் அமருவது அபூர்வமாகிவிட்டது (சங் 139:23,24). இப்பயிற்சியை நான் மேற்கொள்ளாததால் தூசி அதிகமதிகமாய்ப் படியத் துவங்கியது. சில பாவங்களுக்குப் பழகியே போய்விட்டேன் என்ற தெளிவு திடீரென உண்டாகியது. பிரசங்கியார் என்ற முறையில் பிரசங்கபீட வெற்றிகள் என் கண்களை மேலும் குருடாக்கியிருந்தன.

தேவனது ஒளியில் என்னை இன்னும் துருவிப் பார்த்தபோது ஒட்டுண்ணி போன்ற சில பாவங்களைச் செய்வதும் அறிக்கையிடுவதுமான பழக்கத்திற்குள் வந்துவிட்டதைத் திட்டமாய் அறிந்தேன். ‘‘பாவத்திற்கு விரோதமாய்ப் போராடுகிறதில் இரத்தம் சிந்தும் அளவுக்கு நீங்கள் இன்னும் எதிர்த்து நிற்கவில்லை’’ என்பதை எபிரேய நிருப ஆக்கியோன் என்னையே சுட்டிகாட்டிச் சொல்வதாய் உணர்ந்தேன் (வச 4). ஆவியானவரின் இந்த இடைபாடு எனக்கு ஏசாயாவின் ‘‘நெருப்புத்தழல்’’ அனுபவமேயன்றி வேறல்ல (ஏசா 6:5-7).

## 3. அத்துமீறிய வேகம்

‘‘நமக்குக் குறிப்பிட்டுள்ள ஓட்டத்தில் பொறுமையோடு ஓடுவோமாக’’ (வச 1).



இவ்வரிகளைத் தியானித்தபோது எனக்குள் சிரித்துக்கொண்டேன். ‘‘ஓட்டம்... பொறுமை’’ ஆகிய இவ்விரு சொற்களுக்கும் என்ன சம்பந்தம்? விரைவாய் ஓடியே ஒலிம்பிக் ’96இல் இந்தியாவுக்குக் கிடைத்தது ஒரு வெண்கலப் பதக்கந்தான்!

நான் எதையுமே விரைவாய்ச் செய்பவன். விரைவாய்ப் பேசுவேன், விரைவாய் எழுதுவேன். நான் லில்லியனை மணந்து 26 ஆண்டுகள் ஆகின்றன. கிட்டத்தட்ட தவறாது மாலையில் உலாவ ஒன்றாகவே செல்லுகிறோம். ஆனால் இன்றுவரை அவளது மெதுவான நடைக்கு நான் பழகமுடியவில்லை. சாப்பிடும்போதும் அதே பிரச்னைதான். அவள் பாதி சாப்பிடுமுன் நான் சாப்பாட்டிற்குப் பின்னர் உண்ணும் பழம் பலகாரங்களுக்கு ரெடி! அவள் மதிய உணவு முடிக்குமுன்னர் நான் பிற்பகலின் சிறு துயிலை முடித்து எழுந்துவிடுவேன். இப்படியிருக்கும் நான் வேகமற்ற மக்களைச் சகித்துக்கொள்ள முடிவதில்லை. நத்தைபோல் மெதுவாக ஒருவர் ஒன்றைச் செய்துகொண்டிருந்தால் அதை அவர் கையிலிருந்து பிடுங்கி நொடிப்பொழுதில் நானே அதை முடித்துவிடும் அகம்பாவமெல்லாம் என்னிடமுண்டு. அவரும் இதனால் தன்னையே நொந்துகொள்வார். பிறர்க்குப் பயிற்சி கொடுக்கும் காரியத்தில் இது எனது பலவீனங்களில் ஒன்று.

பொறுமையின்மையால் தேவனது பணியை எவ்வளவாய்ப் பாதித்திருக்கிறேனென்று அவர் எனக்குக் காட்டினார். உடனடி விளைவுகளை நாடியதால் தேவனது வழிகளை மறந்து மனித சுபாவ முறைகளைக் கையாள வேண்டியதாயிற்று. இப்பொழுது அறுவை சிகிச்சைக்குப் பின்வந்த மாதங்களில் முன்புபோல் எதையும் என்னால் விரைவாய்ச் செய்ய முடியவில்லை. அதினால் பூமியின் சுற்றுவேகம் குறைந்தா போய்விட்டது?

கடவுளின் செய்தி எனக்குத் தெளிவாய் வந்தது: ‘‘நீங்கள் மனந்திரும்பி அமர்ந்திருந்தால் இரட்சிக்கப்படுவீர்கள்; அமரிக்கையும் நம்பிக்கையுமே உங்கள் பலமாயிருக்கும் என்று... தேவன் சொல்லுகிறார்; நீங்களோ அப்படிச் செய்ய மனதாயிராமல்; அப்படியல்ல, குதிரைகளின்மேல் ஏறி ஓடிப்போவோம் என்கிறீர்கள்; அப்படியே ஓடிப்போவீர்கள். வேகமான வாகனங்களின் மேல் ஏறிப்போவோம் என்கிறீர்கள்; அப்படியே உங்களைத் துரத்துகிறவர்கள் வேகமாய்த் துரத்துவார்கள்... ஆனாலும் உங்களுக்கு இரங்கும்படிக் கர்த்தர் காத்திருப்பார்’’ (ஏசா 30:15,16,18).

## 4. மறந்த உதைகள்

‘‘என் மகனே, கர்த்தருடைய சிட்சையை அற்பமாக எண்ணாதே... உங்களுக்குச் சொல்லுகிற புத்திமதியை மறந்தீர்கள்’’ (வச 5,6).

சிறுவயது முதல் நான் நெடுகவே அநேக தெய்வீக சுக அற்புதங்களை அனுபவித்து வந்திருக்கிறேன். ஐந்து வயதில் தொடர்ந்தேர்ச்சியான வயிற்றுக் கோளாறிலிருந்து சுகம் பெற்றேன். பதினாறு வயதில் மும்முறை திரும்பிய கொடூர டைபாயிடு காய்ச்சலில் வருந்தினேன். ஆண்டவர் பணிக்கு என்னை அர்ப்பணித்து ஜெபித்த தேவப் பிள்ளைகளின் கூப்பிடுதலுக்கிரங்கி தேவன் என்னை மரணப் படுக்கையிலிருந்து தூக்கி யெடுத்தார். 1976இல் உள் மூக்கடைப்பினால் வேதனைப்பட்டேன். ஒரு முறை உள் மூக்கெலும்பைக் குத்தி சிகிச்சையளித்தபின் ஆறுமாதங்களுக் கொருமுறை இவ்வித சிகிச்சை தேவைப்படுமென்றார் மருத்துவர். பயத்தினால் (விசுவாசத்தினாலல்ல!) கர்த்தரை நோக்கிக் கதறினேன். கிருபையாய் இரங்கினார். இன்னொரு குத்துதல் தேவையில்லாது போயிற்று. ஒரு சில ஆண்டுகள் கழித்துச் சிறுநீரகக் கல்லினால் துடி துடித்தேன். ஆண்களுக்கு அதுதான் பிரசவ வேதனை என்பேன்! எளிய சிகிச்சைக்குப்பின் சுகம் பெற்றேன். பதினைந்து ஆண்டுகளாக இன்றுவரை அப்பிரச்னையில்லை. அடுத்து வந்தது காதிரைச்சல். இடது காதில் பாதிச் செவிடானேன். ஒரு பிரசங்கத்தை முடித்துக்கொண்டிருக்கும் தருவாயில் ஏற்பட்டதொரு பாதிப்பினால் சமநிலையிழந்து மேடையிலேயே விழுந்து வாந்தியெடுத்தேன். இதை நேரில் பார்த்த விசுவாசிகள் உபவாசத்துடன் ஜெபித்தனர். அவ்வியாதி ஒழிந்தது. இழந்த கேட்குந்திறனையும் அசா தாரணமாகத் திரும்பப் பெற்றேன். இப்படிச் சொல்லிக்கொண்டே போகலாம். ஒவ்வொரு இக்கட்டின்போதும் புதிய தீர்மானங்கள் எடுப்பேன்; ஆண்ட வரிடம் வாக்குகள் கொடுப்பேன்; அவற்றில் பலவற்றை அடுத்த இக்கட்டு வருமுன் மறந்துவிடுவேன் — உண்மையைச் சொல்லுகிறேன்.

எனது அறுவை சிகிச்சைக்கு நான்கு மாதங்கள் கழித்து எனது மனைவியும் நானும் எனது மருத்துவரைச் சும்மா சந்திக்கச் சென்றி ருந்தோம். அவர் அவளைப் பார்த்து, "சாப்பாட்டிலெல்லாம் ஸ்டான்லி கவனமாயிருக்கிறாரா?" என்றார். "அளவுக்குமீறிக் கண்டிப்பாயிருக் கிறார்" என்று அவள் பதிலளித்தாள். உடனே அவர், "எனது நோயாளி களெல்லாம் முதல் ஆறுமாதம் அப்படித்தானிருப்பார்கள்; பின்னர்தான் கவனிக்கவேண்டும்" என்றார்! எனது தம்பியும் நானும் பதினைந்து வயது கடக்கும்வரை அம்மா பிரம்பைக் கையாடத் தவறவில்லை. நாங்கள் வாலாட்டினால் ஓட்டுக் கூரையில் சொருகி வைத்திருந்த பிரம்பைக் காட்டி மறந்துவிட்டதோ என்பார்கள்!

யேகோவாவின் மீட்பின் நாமங்களை ஆராதனையில் உற்சாகமாய் உச்சரிக்கிறோம். யேகோவா-யீரே! யேகோவா-ரப்பா! யேகோவா-ஷாலோம்! யேகோவா-ஷம்மா! யேகோவா-நிசி! இப்படி...! ஆனால் இவையெல்லாவற் றிற்கும் சமமான, ஆனாலும் நாம் கவனியாத, இன்னொரு கூட்டு நாமம் அவருக்குண்டு தெரியுமா? அதுதான் "யேகோவா-மாக்கே" என்பதாம்



(எசேக் 7:9). கர்த்தரின் அடிகள் அவரது அருள்களைப் போலவே ஆசீர் வாதமானவை. "அவர் காயப்படுத்திக் காயங்கட்டுகிறார்; அவர் அடிக் கிறார், அவருடைய கை ஆற்றுகிறது... இதோ, தேவன் தண்டிக்கிற மனிதன் பாக்கியவான்" (யோபு 5:17,18). அடிக்கிற கைதான் அணைக்கும்; அணைக்கிற கையே அடிக்கும்!

இருவகை ஊழியர்கள் எனக்காக ஜெபித்து என்னை உற்சாகப்படுத் தினார்கள். இந்த எகிப்தியனை இனி நீங்கள் காணமாட்டீர்களென்றது ஒரு குழு (யாத் 14:13). நண்பர் சுவிசேஷக் குழுவின் பேட்ரிக் ஜாஷ்வா அண்ணன் போன்ற அடுத்த வகை ஊழியர்கள், "இந்தியச் சபைக்கு உங்கள் செய்தி முக்கியம் வாய்ந்ததாயிருக்கும்; ஆனால் நீங்கள் வேதனைகள், இக்கட்டுகள் வழியாய்ச் செல்ல வேண்டியதிருக்கும்" என்றனர். இயற்கை யாக நான் முதல் தீர்க்கதரிசனத்தைத்தான் நம்ப விரும்புகிறேன். ஆனால் இரண்டாவதுதான் வசனத்திற்குக் கூடுதல் ஏற்றது. "ஆறு இக்கட்டு களுக்குப்" பின்னர் "ஏழாவதும்" வரலாம் (யோபு 5:19). ஆனால் ஆளுவது ஆண்டவரே!

### 5. அன்பற்ற உறவுகள்

"யாவரோடும் சமாதானமாயிருக்கவும் பரிசுத்தமுள்ளவர்களாயிருக் கவும் நாடுங்கள்... யாதொரு கசப்பான வேர் முளைத்தெழும்பிக் கலக முண்டாக்குகிறதினால் அநேகர் தீட்டுப்படாதிருக்கவும்... எச்சரிக்கை யாயிருங்கள்" (வச 14,15).

அடிப்படையாக நான் சிநேகக் குணமுள்ளவன். எனினும் "நான்" எனும் அகங்காரத்தினால் கருணையையும் கனிவையும் இழந்துவிடுவேன். அது குடும்பத்திலும் ஊழியத்திலும் பிறரோடு உறவுப் பிரச்னைகளை உரு வாக்கும். தலைவனாயிருப்பதால் குறியீடுகளை நிறைவேற்ற மக்களை வெறுமனே "பயன்படுத்தத்" தொடங்கினேன். ஒவ்வொரு தனி நபரின், அதிலும் குறிப்பாக தாழ்ந்த சகோதரரின், மதிப்பையும் அறியாது போனேன். "ஜீவனுள்ள தேவனுடைய நகரத்தில்" உள்ள ஒவ்வொருவரின் முக்கியத் துவத்தையும் நன்குணர எனது சமீபகால இக்கட்டு ஏதுவாயிருந்தது (வச 22,23). கிறிஸ்துவின் உடலில் தேவையற்ற குடல் முளை கிடையாது!

மருத்துவமனையிலிருந்து அனுப்பப்படுமுன் எனது மருத்துவரை நன்றிக் கண்ணீருடன் பாராட்டியபோது, தினமும் மருத்துவமனையில் எனது அறையைப் பெருக்கித் துடைத்த நபரும் நான் பெற்ற கவனிப்புக்கு அதே பாராட்டு பெற வேண்டியவர் என்றார் அவர். 1 கொரிந்தியர் 12:17-25க்கு என்னே அருமையான வியாக்கியானமிது!

இன்று நமது இயக்கத்தில் ஊழியராயிருப்போர் எனக்காக எதையும் செய்ய ஆயத்தமாயிருந்தால் அதில் அதிக ஆச்சரியமில்லை. ஆனால் எனக்கு இரத்த தானமளித்ததில் இருவர் இவ்வியக்கத்தின் முன்னாள் ஊழியர்! இது எனக்கு எத்தனைப் பிரசங்கங்களைப் பண்ணிவிட்டது! எனது வாழ்வின் முந்திய அனுபவங்கள் எனக்கு "இரண்டாம்" தொடுதலாய் அமைந்திருந்தன. இப்பொழுதோ மனிதரை வெறுமனே மனிதராக அல்ல, அவர்கள் கடவுளால் அருளப்பட்ட ஈவுகள் எனக் காண எனக்கு "மூன்றாம்" தொடுதல் கிடைத்துள்ளது (மாற் 8:22-25).

## 6. பொருளாதார நாட்டம்

"ஒருவேளை உணவுக்காகத் தனது தலைப்பேற்று உரிமையை விற்றுப் போட்ட ஏசாவைப் போல்... இராதபடி எச்சரிக்கையாயிருங்கள்" (வச 16,17).

வருவாய் நிறைந்த தொழிலை இறையரசுக்காக நான் விட்டுவிட்டதால் பண ஆசையெனும் பாவத்திற்கு என்னிடம் இடமேயில்லை என்றே எண்ணியிருந்தேன். ஆனால் கவனிக்கப்படாமல் அடையாளங்காட்டாமல் நமது கட்டிலின் கீழேயே பதுங்கிக் கிடக்கும் தந்திரமான பாவங்களில் ஒன்றே பொருளாசையென அவ்வளவாய் நினைக்கவில்லை. இப்பொழுது "ஊழியத்திற்காகத்தானே" பணம் சேர்க்கிறோமென்று ஒரு தைரியம்! பரம தந்தையின் மீது சிறுபிள்ளைபோல் எளிய நம்பிக்கை கொள்வதற்குப் பதிலாகப் பணம் சேகரிக்க பலவித வழிகளைக் கையாண்ட நிலை. இந்த அபாயத்திற்கு நம்மைத் தப்புவிக்கவே, தமது ஊழியத் துவக்கத் திலேயே இயேசு தமது சீடருக்குப் போதித்தது: "இவைகளையெல்லாம் அஞ்ஞானிகள் நாடித் தேடுகிறார்கள்; இவைகளெல்லாம் உங்களுக்குத் தேவை என்று உங்கள் பரமபிதா அறிந்திருக்கிறார். முதலாவது தேவ இராஜ்யத்தையும் அவரது நீதியையும் தேடுங்கள்; அப்பொழுது இவைகளும் உங்களுக்குச் சேர்த்துக் கொடுக்கப்படும்" (மத் 6:31-33).

ஆசீர்வாத இளைஞர் இயக்கத்தின் கூட்டங்களில் நாம் பணம் சேகரிப்பதில் அதிக மும்முரமாய் இருப்பதில்லை என்பது உண்மை யெனினும், பிரசங்கிக்கும்போது பலதடவை மக்களின் ஆன்மீகத் தேவை களைவிட ஊழியத்தின் பணத் தேவைகளே எனக்குள் எழுந்து நின்றுள்ளன. சபையாருக்குத் தூக்கமருந்து கொடுத்துக்கொண்டிருக்கிறேனென்று பாவம் மந்தை போன்ற அவர்களுக்குத் தெரியாது! ஆனால் பிரசங்கத்தை முடித்தபின் என்னை அனுப்பியவருக்குமுன் நான் ஆஜராகும்போது தேவ வசனத்தை ஆதாயத்திற்காய்க் கலப்பாய்ப் பேசியதாக அவர் என்னை உணர்த்தியிருக்கிறார் (2 கொரி 2:17).

எந்த மனிதனையும் கிறிஸ்துவுக்குள் "தேறினவனாய்" நிறுத்துவதே பவுலின் நோக்காயிருந்தது (கொலோ 1:28). கர்த்தாவே, எந்த மனிதனையும் எங்கள் ஊழியத்திற்குக் "கொடுக்கிறவனாய்" மாற்றுவதே எனது குறி யாயிருக்க வேண்டாம்! மரண வாசல் வரை சென்று வந்த அனுபவம் பாழுலகச் சிந்தையுள்ள இச்சமுதாயத்தில் பரலோகச் சிந்தையுள்ள வனாயிருக்க எனக்குப் போதித்துள்ளது.

## 7. நடுக்கமற்ற நடை

"பயத்தோடும் பக்தியோடும் தேவனுக்குப் பிரியமாய் ஆராதனை செய்யும்படிக் கிருபையைப் பற்றிக்கொள்வோமாக. நமது தேவன் பட்சிக்கிற அக்கினியாய் இருக்கிறாரே" (வச 28,29).

வெற்றிகளும் உசிதங்களும் எனது வாழ்வில் வாடிக்கையானவை. படிப்பென்றால், முதல் வரிசையிலிருந்தேன். கையெழுத்துப் போட்டி மற்றும் பல பள்ளிக்கூடப் போட்டிகளில் முதலில் வந்தேன். எவரும் எதிர்க்காமலே பலமுறை வகுப்புத் தலைவனானேன். நாடகங்களில் கதாநாயகனாயிருந் தேன். மேற்படிப்பிற்கோ வேலைக்கோ நேர்முகத் தேர்வு என்றால் அதிலும் முதலிடமே. செருப்பே தேயாமல் பிரமாதமான வாழ்க்கைத் துணைவி எனக்குக் கிடைத்தாள். எனது 30 ஆண்டு பிரசங்க ஊழியத்தில் ஏதோ ஒரு பிரசங்கம் பயனில்லாமல் போனது என்று ஒன்றும் நினைவில்லை. நமது இயக்கம் 25 ஆண்டுகள் நடத்திய பெரிய முகாம்கள், நிகழ்ச்சிகளில் தோல்வி கண்டது எதுவுமில்லை. இவையெல்லாம் கர்த்தராலேயே ஆயிற்று என்று நெடுகவே நான் உணர்ந்து கர்த்தரைத் துதித்துக் கொண்டிருந் தாலும், அவ்வப்போது நான் பெருமைக்குப் பலியானேன்.

சுபாவத்தின்படி நான் பெருமைக்காரன். இது நான் கற்றுக்கொண்ட குணமென்றும் சொல்லுவேன். எனது தந்தை ஓர் இராணுவ அதிகாரி. எங்கும் நிமிர்ந்து மார்பைத் தூக்கியே நடப்பார். அவர் சத்தமே அதிகாரத் தோரணையில்தானிருக்கும். எனது இரத்தத்தில் கொழுப்புச்சத்து அதிகமெனக் கண்டுபிடிக்கப்பட்டது. "கொழுத்து... நிணம் துன்னின போது... உதைத்து... தேவனை அசட்டைபண்ணின" யெஷுரனை அப் பொழுது நினைத்துக் கொண்டேன் (உபா 32:15). சமீபத்தில் என்னைச் சந்தித்த முன்னாள் நண்பர் ஒருவர் இன்னொருவரிடம் "ஸ்டான்லி அண்ணன் இப்படிக் குனிந்து நடப்பதை நான் ஒருநாளும் பார்த்ததில்லை" என்றாராம். என்னைக் குனிந்து பணிவாக்க ஓர் இருதய அறுவை சிகிச்சை தேவைப்படுமானால் அது தகுதியே. தனக்குப் பதினைந்து ஆண்டுகள் கூட்டிக்கொடுக்கப்பட்டவுடன் அரசன் எசேக்கியா செய்த அறிக்கையை எனதாக்குகிறேன்: "நான் என்ன சொல்லுவேன்? அவர் எனக்கு வாக்கு அருளினார்; அப்படியே செய்தார்; என் ஆயுசின் வருடங்களிலெல்லாம் என் ஆத்துமாவின் கசப்பை நினைத்து நடந்துகொள்வேன்" (ஏசா 38:15).

## ௨

# செய்தி இல்லையே ஏன்?

“அந்நாட்களில் ஆண்டவரின் வார்த்தை அபூர்வமாயிருந்தது” (1 சாமு 3:1). இஸ்ரவேல் மக்களின் சரித்திரத்தில் மிக இருண்ட காலங்களில் இது ஒன்றாகும். இதே நிலை இன்று நமக்கும் ஏற்பட்டுவிட்டதோவெனக் கலங்குகிறேன். சபைச் சரித்திரத்தில் என்றுமில்லாத அளவு நமக்கு இன்று பிரசங்கிகளும் பிரசங்கங்களும் உண்டு. ஆனால் ஆண்டவருடைய “செய்தி” எங்கே? கலைமான் நீரோடைகளுக்காக ஏங்கித் தவிப்பதுபோல் நமது ஆன்மா ஆண்டவரின் சத்தம் கேட்க ஆவலாய்க் காத்து நிற்கிறது (சங் 42:1; 29:4). “ஏராளமான செத்த பிரசங்கிகள் ஏராளமான செத்த சபைகளுக்கு ஏராளமான செத்த பிரசங்கங்களைச் செய்துகொண்டிருக்கிறார்களே” என்ற எழுப்புதல் வீரன் லியோனார்டு ரேவன்ஹில் அவர்களோடு சேர்ந்து நாமும் புலம்புவோம்!

கடவுள் என்னை 1963இல் ஆவியினால் அபிஷேகத்ததிலிருந்து நான் பிரசங்கித்து வந்திருக்கிறேன். கடந்த முப்பத்தைந்து ஆண்டு பிரசங்க அனுபவத்தில், பிரசங்கிக்கச் செல்லுவதற்கு முன்னர் தவறாது நான் செய்த ஜெபமாவது: “ஆண்டவரே, சபையாரை உமக்காய் எரிந்து பிரகாசிக்கச் செய்யும்படி பிரசங்கபீடத்தில் நான் உமது வசனத் தீயினால் கொழுந்து விட்டெரியச் செய்யும்!” மனிதருக்கு முன் நான் தம்பட்டம் அடித்துக்கொள்ள வில்லை; ஆனால் “எனக்குத் துணையாய் நின்று, என்னாலே பிரசங்கம்



நிறைவேறவும் என்னைப் பலப்படுத்தின” என் மன்னவருக்குமுன் நான் தலைவணங்கி நிற்கிறேன் (2 தீமோ 4:17). ஆண்டவரது செய்தி இந்நாட்களில் அபூர்வமாகிவிட்டதற்குக் காரணங்களையும் அதற்கான பரிகாரங்களையும் என் உடன் பிரசங்கிமாருடன் பகிர்ந்துகொள்ளக் கர்த்தருடைய பாரம் என்னை வெகுவாய் அழுத்துகிறது. குற்றம்சாட்டும் நோக்குடன் அல்ல, ஆலோசனை கூறும் மனதுடன் இதை எழுதுகிறேன்.

ஆண்டவரது செய்தி நமது பிரசங்க பீடங்களில் அரிதாகி வருவதற்குக் குறைந்தது பத்து காரணங்கள் உண்டு: செல்வம் (money), அற்புதங்கள் (miracles), திரள்கள் (masses), பெண்ணாசை (maids), நிர்வாகம் (management), இன்னிசை (music), செயல்முறைகள் (methods), ஊழியங்கள் (ministries), கற்பனைக் கதைகள் (myths), மறைபொருள் (mysticism).

### 1. செல்வம் (Money)

அவ்விதம் இருக்கத் தேவையில்லை, ஆனால் பொதுவாக பணம் படைத்த ஊழியரைவிட செல்வாக்கு குறைந்த பிரசங்கிமாரின் வாய்களிலிருந்தே ஆண்டவரின் செய்தி தெளிவாகவும் திட்டமாகவும் வருகிறது. இவ்வுலகின் செல்வம் வசன ஊழியத்தை எவ்வளவாய்ப் பாதித்துள்ளதென்பதை அடிக்கடி காண்கிறோம். தனது நாட்களில் தலையோங்கியிருந்த சீர்கேடான இந்நிலைக்கு எப்படித் தப்பினானென்பதை பவுல் சாட்சியாய் அறிவித்தான்: “அநேகரைப்போல நாங்கள் தேவ வசனத்தைக் (ஆதாயத்திற்காய்) கலப்பாய்ப் பேசாமல், துப்புரவாகவும், தேவனால் அருளப்பட்டபடியும், கிறிஸ்துவுக்குள் தேவ சந்நிதியில் பேசுகிறோம்” (2 கொரி 2:17).

அப்போஸ்தலன் பவுலிடம் பயிற்சி பெற்று மலர்ந்து எழுந்துகொண்டிருந்தான் தீமோத்தேயு. மூத்த ஊழியனிடமிருந்து இந்த இளம் பிரசங்கி பெற்ற கடுமையான எச்சரிப்புகளில் ஒன்று இதோ: “பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது... நீயோ, தேவனுடைய மனிதனே, இவைகளை விட்டோடு” (1 தீமோ 6:10,11). பொன், பெண், புகழ் ஆகியவையே ஊழியர் பலர் தப்பிக்க முடியாதபடி சிக்கிக்கொண்ட மூன்று வலைகளாகும். இதில் முதலாவது வருவது பொருளாசையே. மக்களை வசப்படுத்தி அவர்களிடமிருந்து பணம் கறப்பது இன்று வழக்கமாகிவிட்டது.

பொருளாசையுடைவர்களாய்த் தந்திரமான வார்த்தைகளால் மக்களைத் தங்களுக்கு ஆதாயமாக வசப்படுத்திக்கொள்பவர்களென்று கள்ளப்

போதகர்களை அப்போஸ்தலன் பேதுரு அடையாளங்காண்கிறான் (2 பேது 2:1,3). மக்கள் பிரசங்கிமாரோடு நெருங்கவே பயப்படுமளவிற்குப் பணப் பைத்தியமே இன்றைய ஊழிய உலகின் கலாச்சாரமாகிவிட்டது. சிறுவனொருவன் ஒரு நாணயத்தை விழுங்கிவிட்டான். பக்கத்தில் நின்று கொண்டிருந்தொரு சிறுமி, "அவனை அந்தப் பிரசங்கியாரிடம் அனுப்புங்கள். அவர் யாரிடமிருந்தும் பணத்தை எடுப்பதில் தேறினவர்" என்றாள்!

"பணக்காரரைக் குறித்த பயம் பிரசங்கிமாருக்கு இருக்கவே இருக்கக் கூடாது" என்று வேத வியாக்கியானி மேத்யு ஹென்றி எச்சரித்தார். பிலேயாமின் பொருளாசைப் பாவத்தினால் வஞ்சிக்கப்பட கிறிஸ்துவின் அப்போஸ்தலர் மறுத்தனர் (யூதா 11). செல்வந்தருக்குப் பிரசங்கிக்கையில் இயேசு ஒருபோதும் அவர்களைத் தாலாட்டவில்லை. தமது விண்ணகத் தந்தை நட்டியிராத நாற்றெல்லாம் பிடுங்கப்பட்டுப்போகுமென்று அவர் நிச்சயித்திருந்ததால் செல்வம் படைத்தவர்கள் மனமடிந்துவிடுவார்களோவென்று அவர் அஞ்சவில்லை. "நேர்மையற்ற செல்வத்தைக் கையாளுவதில் நீங்கள் நம்பத்தகாதவராய் இருந்தால் யார் உங்களை நம்பி உண்மைச் செல்வத்தை ஒப்படைப்பார்?" என்று இயேசு ஒரு முறை மக்களிடம் சவாலிட்டார் (லூக் 16:11). கடவுளின் செய்திதான் "உண்மைச் செல்வம்." பண ஆசையினால் பீடிக்கப்பட்டிருக்கும் எந்தப் பிரசங்கியையும் நம்பிப் பரலோகம் தனது செய்திகளை அனுப்பாது.

## 2. அற்புதங்கள் (Miracles)

அற்புதங்கள் கூடாதா? நமது ஊழியங்களில் அவைகள் தேவையில்லையா? அற்புதங்களைக் கிறிஸ்தவப் பணிகளிலிருந்து பிரிக்க முடியாது. "திருப்திகரமாக விளக்க முடியாத, உடல், பொருள் அல்லது ஆன்மீக ரீதியான, இயற்கைக்கப்பாற்பட்ட இறைச் செயல்கள்" என்பதே அற்புதங்களைக் குறித்த எனது வரையறை. கிறிஸ்துவை உயிருள்ள தேவனாக நாம் பறைசாற்றுவதால் அற்புதங்களே இல்லாத எதுவும் கிறிஸ்தவ ஊழியம் என்றே அழைக்கப்பட தகுதி பெறாது!

பல நூற்றாண்டுகளாகப் பாரம்பரியக் கிறிஸ்தவ ஊழியமானது சுகமளிப்பு அற்புதங்களை உள்ளடக்காததால், குணமாக்கும் வரங்களின் மீது ஏற்பட்டுள்ள புதுப்பித்த ஆர்வமானது நம்மை அடுத்த ஓரத்திற்குத் தள்ளிவிட்டது. சுகமளிப்பு ஊழியத்தின்மீது ஏற்பட்டுள்ள அளவுக்கு மீறிய நாட்டமானது சுத்த சுவிசேஷத்தைக் களங்கமாக்கிவிட்டது. இதனால் ஏற்பட்டுள்ளது இரட்டை இழப்பு. இன்று அற்புதங்களும் (எதிர்பார்த்த அளவு) இல்லை, செய்தியும் இல்லை.



தமது ஊழியத்திலும் தமது சீடரைப் பணிக்கும்பொழுதும் ஆண்டவராகிய இயேசு பிணியாளிகளைக் குணமாக்குவதை வலியுறுத்தினார். ஆனால் "முதலாவது" நற்செய்தியறிவிப்பு, அடுத்துதான் சுகமளிப்பு என்பதை நாம் கவனிப்பது முக்கியம். மத்தேயு சுவிசேஷத்திலிருந்து இரு வசனப் பகுதிகளை எடுத்துக்காட்டாகக் கவனிப்போம்: "இயேசு எல்லா நகர்களையும் சிற்றூர்களையும் சுற்றிவந்து... உபதேசித்து... பிரசங்கித்து... குணமாக்கினார்" (மத் 9:35). "பன்னிருவரையும் இயேசு அனுப்புகையில்... பிரசங்கியுங்கள்... குணமாக்குங்கள்" என்றார் (மத் 10:5,7,8). இந்த வரிசைக் கிரமம் இயேசுவின் ஊழியத்தில் தெளிவாய்க் காணப்பட்டதால்தான் அவர் ஊழியஞ்செய்த இடங்களிலெல்லாம் நெருக்கிக்கொண்டு வந்த திரள்கள் குணமடைவதற்குமுன் முதலாவது வசனத்தைக் கேட்க விரும்பினர் (லூக் 5:1,15). இரட்சிக்கப்பட்டு ஆனால் சுகம் பெறாத குஷ்டரோகி பரலோகம் போய்விடுவான்; ஆனால் சுகம் பெற்றும் இரட்சிக்கப்படாத பாவி அங்கு போகவே முடியாது!

தனது கூட்டங்களில் பில்லி கிரஹாம் பிணியாளிகளுக்காய் ஜெபிப்பதில்லை. ஆனால் எத்தனையோ சுகமளிப்புக் கூட்டங்களில் சேர்த்து மொத்தமாய்க் கிறிஸ்துவிடம் வந்தவர்களைவிட அவரது கூட்டங்களிலேயே கூடுதல் நபர்கள் கிறிஸ்துவுக்காய்த் தீர்மானித்துள்ளனர். இரகசியம்? அவரிடம் "செய்தி" உண்டு. அவர் அதைக் கலப்படம் பண்ணுவதுமில்லை, அதை விட்டு அங்குமிங்கும் சாய்வதுமில்லை. எலியாவின் ஆவியும் வலிமையும் பெற்றிருந்த மிகப்பெரிய தீர்க்கதரிசியைக் குறித்து, "யோவான் ஒரு அற்புதமும் செய்யவில்லை; ஆனாலும் அவரைக் குறித்து அவன் சொன்னதெல்லாம் உண்மையாயிருக்கிறது... அங்கு அநேகர் அவரிடம் விசுவாசமுள்ளவர்களானார்கள்" என்று எழுதப்பட்டுள்ளது (யோ 10:41,42). ஆம், அவன் மரித்த எவரையும் எழுப்பவில்லை; மாறாக செத்துக்கிடந்த ஒரு நாட்டையே உயிர்பெறச் செய்தான்! அவனிடம் ஒரு செய்தி இருந்தது! அவன் ஒரு "சத்தம்!"

செய்தியை உறுதிப்படுத்தும் அடையாளங்களாய் அற்புதங்கள் திகழ்கின்றன என்பது உண்மைதான் (மாற் 16:20). ஆனால் செய்தியில்லாத அற்புதங்களைவிட அற்புதங்களில்லாத செய்தி நீடித்த விளைவை உண்டாக்கும். திருநெல்வேலியில் பணியாற்றிய தாமஸ் வாக்கர், டோனாவூரில் ஏமி கார்மைக்கல், சிவகாசியில் தாமஸ் ராக்லாண்ட், வேலூரில் ஐடா ஸ்கடர் மற்றும் கல்கத்தாவில் அன்னை தெரசா ஆகியோர் பிரதானமாக அற்புத ஊழியரல்ல. ஆனால் அவர்களது செய்தி தலைமுறை தலைமுறையாய்த் தொனித்துக்கொண்டிருக்கிறது.

## 3. திரள்கள் (Masses)

“துன்புறுத்துதலைவிட பேர்ப்புகழே அநேக தீர்க்கதரிசிகளைக் கொன்று விட்டது” என்றார் பல்லாண்டுகள் கனி நிறைந்த பிரசங்க ஊழியத்தை நிறைவேற்றிய வேன்ஸ் ஹேவ்னர் என்ற பக்தன். மக்களுக்குப் பிரியமாகப் பேசி அவர்களது பாராட்டைப் பெறவேண்டுமென்று நினைக்கும் அதே வேளையில் பிரசங்கி தனது செய்தியை இழக்கிறான். இனி அவனைக் கர்த்தரது செய்தியாளன் என்று சொல்லுவதற்கில்லை. பெறுவோருக்குப் பிரியமாயிருக்கக்கூடிய செய்திகளைக் கொண்டுவரும் கடிதங்களை மட்டும் வந்து கொடுக்கும் அஞ்சல்காரனைக் குறித்து நீங்கள் என்ன நினைப் பீர்கள்? சிலுவையின் செய்தியானது நல்ல செய்திதான்; ஆனாலும் கெட்டுப்போகிறவர்களுக்கு அது பைத்தியமாகத்தானே தோன்றும்? (1 கொரி 1:18). “இப்போது நான் மனிதரையா, தேவனையா, யாரை நாடிப் போதிக்கிறேன்? மனிதரையா பிரியப்படுத்தப் பார்க்கிறேன்? நான் இன்னும் மனிதரைப் பிரியப்படுத்துகிறவனாயிருந்தால் நான் கிறிஸ்துவின் ஊழியக்காரனல்லவே” என்று பவுல் கலாத்திய நாட்டுக் கிறிஸ்தவருக்குக் கண்டிப்பாய் எழுதினான் (கலா 1:10).

மனித பயம் ஒரு கண்ணி. பிரசங்கி கடவுளிடமிருந்து பெற்றுக்கொண்ட படியே செய்தியைக் கொடுக்க முடியாதபடி அது அவனது தொண்டையை நெறித்து அவனது நாக்கைக் கட்டிப்போடுகிறது. “கடவுளுக்குப் பயப்படு வதைவிட மனிதருக்கு அதிகம் பயப்படுகிற எவனும் பிரசங்கபீடத்தில் ஏறக்கூடாது” என்று வில்லியம் ஸ்டில் என்பவர் சரியாய்ச் சொன்னார். ஜெப அறையில் பெற்றுக்கொண்ட செய்தியை மக்களின் ரசனைக்கேற்ப மாற்றிக்கொள்ள நமக்கு எவ்வித உரிமையுமில்லை. பன்னிருவரை ஊழியத் திற்கு அனுப்புகையில் கொடுத்த செய்தியில் இயேசு கூறியது: “நான் உங்களுக்கு இருளில் சொல்வதை நீங்கள் ஒளியில் கூறுங்கள். காதோடு காதாய்க் கேட்பதை வீட்டின் மேல்தளத்திலிருந்து அறிவியுங்கள். ஆன்மா வைக் கொல்ல இயலாமல் உடலை மட்டும் கொல்பவருக்கு அஞ்ச வேண்டாம். ஆன்மாவையும் உடலையும் நரகத்தில் அழிக்க வல்லவருக்கே அஞ்சுங்கள்” (மத் 10:27,28).

இயேசுவின் போதனைகள் கடினமானபோது, “அவரது சீடரில் அநேகர் அவரோடு நடவாமல் பின்வாங்கிப் போனார்கள்.” அதினால் அவர் பதட்டப்படவில்லை. பன்னிருவரைப் பார்த்து நிதானமாய் அவர் “நீங்களும் போய்விட நினைக்கிறீர்களோ?” என்று கேட்டார். அதற்குச் சீமோன் பேதுரு கொடுத்த பதில் மக்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதைக் கவனியாது **“வசனத்தை”** இருக்கிறபடியே பிரசங்கிக்கத் துணிந்துள்ள பிரசங்கிமாருக்கு



எத்தனை பேருக்கமாய் அமைந்துள்ளது! “ஆண்டவரே, நாங்கள் யாரிடம் nghnt h«? ã¤Âa Ét **வசனங்கள்** உம்மிடம் உண்டே!” (யோ 6:66-68). இன்னொரு சமயம் இயேசு சொன்ன சில சத்தியங்களினால் மார்க்கத் தலைவர்கள் பலர் மனவேதனையடைந்துவிட்டனர் என வருந்திய சீடரைப் பார்த்து அவர், “என் பரமபிதா நடாத நாற்றெல்லாம் வேரோடே பிடுங்கப் படும்; அவர்களை விட்டுவிடுங்கள்” என்று மனவுறுதியுடன் சொன்னார் (மத் 15:12,13). மேய்ப்பராகிய கர்த்தரின் சத்தத்தைப் புரிந்துகொள்ளக் கூடிய ஆடுகள் “சிறு” மந்தையைச் சேர்ந்தவை. அவை எண்ணிக்கையில் குறைவாயிருந்தாலும் முக்கியமானவை; ஏனெனில் அவை விண்ணரசில் ஆட்சி நடத்தப்போகின்றன (யோ 10:3,4; லூக் 12:32).

“கடவுளின் உத்தம செய்தியாளன் மனிதரின் கணிப்பின்படி எப் பொழுதும் வெற்றியாளனாயிருக்கமாட்டான்” எனக் குறிப்பிட்டார் A. W. டோசர். அவர் தொடர்ந்து கூறியது: “நாம் தந்திரசாலிகளல்ல, தீர்க்க தரிசிகள். நமது செய்தி சமரசமல்ல, சம்மட்டி... சத்தியத்தைப் பிரசங்கித்து அதைக் கேட்பவர்களின் வாழ்க்கையில் அப்பியாசிக்கச் செய்பவனை ஆணிகளும் முட்களும் குத்தத்தான் செய்யும். அவனது வாழ்க்கை கடினமாயிருக்கும், ஆனால் மகிமையாயிருக்கும்.” நொறுக்குத்தீனிகளையே தின்றுகொண்டிருக்கும் பழக்கத்திற்குள் ஆன்மீக உலகிலும் மக்கள் வந்துவிட்டனர். இவர்கள் சத்தியத்திற்குப் புறங்காட்டி கானல் நீரையே பின்தொடர்கின்றனர் (2 தீமோ 4:3,4). மாறும் இவ்வுலகில் மாறாத திரு வசனத்தை உத்தமமாய்ப் பிரசங்கிப்போர் பாக்கியவான்கள் (லூக் 21:33).

## 4. பெண்ணாசை (Maids)

தெலீலாளின் மடியானது வல்லமையான பிரசங்கிமார் பலரது ஆன்மீகப் பலத்தை உறிஞ்சிக் குடித்துவிட்டது (நியா 16:19). கண்களின் இச்சை ஆவிக்குரிய தரிசனத்தை மங்கச் செய்யும். பாவ சந்தோஷங்கள் ஆன்மாவை இருட்டாக்கும். மணவாழ்விற்கு வெளியேயுள்ள பாலுறவுகள் தேவனது வழிகளைப் புரிந்துகொள்வதில் பிரசங்கிக்குக் குழப்பமுண்டாக்கும். மதிப்பிற்குரிய பாத்திரம் கறைப்படுகிறது. ஆண்டவருக்குப் பயன்படுவதில் அது கொஞ்சங்கொஞ்சமாய்க் குறைந்து நாளடைவில் ஒதுக்கி வைக்கப் படுகிறது (2 தீமோ 2:21,22; 1 கொரி 9:27).

“நீ என் விதிமுறைகளை எடுத்துரைக்கவும், என் உடன்படிக்கை பற்றிப் பேசவும் உனக்கு என்ன அருகதை? ... விபச்சாரரோடும் உனக்குப் பங் குண்டு” என்று தேவன் நமக்குச் சவாலிடுகிறார் (சங் 50:16,18). இதே சவாலை அப்போஸ்தலன் பவுல் ரோமர் 2:21,22இல் நமக்கு இவ்விதம்

நினைப்பூட்டுகிறான்: "பிறருக்குக் கற்பிக்கிற நீ உனக்குத்தானே கற்பிக்காமல் இருக்கலாமா?... விபச்சாரம் செய்யக்கூடாதென்று சொல்லுகிற நீ விபச்சாரம் செய்யலாமா?"

மறுபாலரோடு பழகும் வாய்ப்பு பிரசங்கிமாருக்குத்தான் மிக அதிகம். மக்கள் அவர்களை நம்பி ஜெபத்திற்காகவும் ஆலோசனைக்காகவும் நெருங்கி வருவர். இவ்விதச் சூழலைச் சாதகமாய்ப் பயன்படுத்திவிடா திருக்கத் தெளிவானதோர் எச்சரிப்புண்டு: "நீங்கள் தூயோராவதே கடவுளுடைய திருவுளம். நீங்கள் வேசிமார்க்கத்திற்கு விலகியிருந்து... இந்தக் காரியத்தில் ஒருவனும் மீறாமலும் தன் சகோதரனை வஞ்சியாமலும் இருக்கவேண்டும்... கடவுள் நம்மை ஒழுக்கக்கேட்டிற்கு அல்ல, தூய வாழ்விற்கே அழைத்தார்" (1 தெச 4:3,6,7). தூய்மையான ஊழியனெவனும் கடவுளின் திருக்கரத்தில் கூர்மையான ஆயுதமாவான்.

இன்னொரு பெண்ணின்மீது மோகத்தினால் ஒரு பிரசங்கியின் மனது நிரம்பியிருக்குமானால், திருவசனம் காலையும் மாலையும் அவனது பிரிய மாயிருக்காது. வேதத் தியானம் மற்றும் ஆராய்ச்சியில் அவனது கவனம் குறையும். இது அவனது பிரசங்கத்தில் தெரியும். சொல்வன்மை, நினைவாற்றல் மற்றும் பிரசங்கபீட அனுபவங்களையெல்லாம் வைத்துக் கொஞ்சக் காலம் அவன் சமாளிப்பான். ஆனால் அவனது பிரசங்கங்களில் "செய்தி" இல்லையென்பதை ஆன்மீகக் கண்ணோட்டமுள்ளோர் எளிதில் கண்டு கொள்வர். தங்களது மேய்ப்பரின் கவலையீன வாழ்க்கையினால் எத்தனை மந்தைகள் பட்டினி கிடக்கின்றன! தேன்கூடுபோல் ஒழுகும் விபச்சாரியின் உதடுகளே திருவசனத்திற்கு நெருங்கிய போட்டி (நீதி 5:3).

## 5. நிர்வாகம் (Management)

நிர்வாகக் காரியங்களில் நேரடியாக ஈடுபடுவதற்குச் சபை மேய்ப்பர்களுக்கும் பிரசங்கிமாருக்கும் வரும் சோதனை சாதாரணமானதல்ல. வல்லமையான தேவ செய்தியாளர்கள் பலர் சபைகளிலும் ஊழியங்களிலும் வெறும் மேலாளர்களாய் மாறிவிட்டனர். ஆனால், நிர்வாக வரம் அவர்களுக்குக் கொடுக்கப்படாததால் அவர்கள் செய்வதெல்லாம் வேடிக்கையாயிருக்கும்; இதுதான் சோகம். "அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள், போதகர்கள்" ஆகிய ஊழிய வரங்களுக்கும் "உதவிகள், ஆளுகைகள்" ஆகிய நிர்வாக வரங்களுக்கும் நிறைய வேறுபாடுண்டு (1 கொரி 12:28). இவ்விரு துறைகளிலும் சேர்த்து வரம் பெற்றோர் மிக மிகச் சிலரே. அப்படியே இருந்தாலும், முக்கியத்துவ வரிசை நிர்ணயக்கப்படாவிட்டால் இரண்டு



துறைகளும் பாதிக்கப்படும். திருவசன ஊழியந்தான் நிர்வாகத் துறைக்கு ஏராள ஊழியரை இழக்கக் கொடுத்துவிட்டது — மாறாக அல்ல—என்பதே சரித்திரச் சான்று.

பொறுப்புகளைப் பிறருக்குப் பகிர்ந்துகொடுக்கும் கலையை மேய்ப்பர் மற்றும் பிரசங்கிமார் பலர் கற்றுக்கொள்ளாதிருப்பதும் அதின் தேவையை உணராதிருப்பதும் துர்ப்பாக்கியம். உண்மையென்னவெனில் அவர்கள் பயந்து சாகிறார்கள். தங்கள் பதவிக்கும் நிலைக்கும் ஆபத்து வந்துவிடுவோமெனக் கலங்குகிறார்கள். இன்னும் சரியான நபர்கள் கிடைக்கவில்லையென்று நொண்டிச்சாக்கு சொல்லிக்கொண்டிருப்பார்கள். ஆரம்ப முதலே யூதாஸ் திருடன்தான் என்பது இயேசுவுக்குத் தெரிந்ததுதானே? தமது பிதாவின் சர்வ வல்லமையின்மீது எவ்வளவு விசுவாசம் வைத்திருந்தால் அவர் அவனிடம் பணப்பையை ஒப்படைத்திருப்பார்! வேண்டுமானால் பணத்தை எடுத்துக்கொண்டு யூதாஸ் ஓடி விடுவான்; ஊழியத்தை அவனால் திருடமுடியாது என்பதுதானே அவரது மனவுறுதி?

1987இல் என் மனைவியும் நானும் ஆசீர்வாத இளைஞர் இயக்கத்தின் மத்திய நிர்வாகப் பொறுப்புகளை அடுத்த வரிசையினரிடம் ஒப்படைத்து விட்டு நமது மிஷனரிகள் தங்கிப் பணிபுரியும் ஒவ்வொரு மாநிலத்திலும் ஈராண்டுகள் அவர்களோடு தங்கி கள ஊழியராகச் செயல்படத் தீர்மானித்த போது எங்களை உண்மையாய் நேசிக்கும் கிறிஸ்தவத் தலைவர் பலர் நாங்கள் மறுபடி அத்தீர்மானத்தைப் பரிசீலனை செய்யக் கோரினர். மக்களை நம்பும்போதுதான் அவர்கள் வளருவார்கள் என்பதே நான் அவர்களுக்குக் கொடுத்த ஒரே பதில். நெடுகவே இத்தத்துவம் செயல்பட்டு வருவதை நான் கண்டுள்ளேன்; எனது தீர்மானத்திற்காக வருந்திலேன். தடுமாறும் பேதுருவிடம்தான் இயேசு இறையரசின் சாவிகளை ஒப்படைத்தார். பின்னர் அவன் பாறைபோல் திடமாய்த் திகழ்ந்தான் (மத் 16:18,19).

வேதத்திலிருந்து, பழைய ஏற்பாட்டிலிருந்து ஒன்றும் புதியதிலிருந்து ஒன்றுமாக, இரு எடுத்துக்காட்டுகள் நாம் குறிப்பிடும் இச்சத்தியத்தை விளக்குகின்றன. எத்திரோ சரியான வேளையில் கொடுத்த ஆலோசனை தனது மருமகன் மோசேயைக் காலத்திற்குமுன் கரைந்துவிடாது காத்தது. மோசே கடவுள்முன் மக்களுக்காக நிற்கவும் மக்களுக்குக் கடவுளின் செய்தியைக் கொண்டுவரவும் போதுமான நேரம் செலவழிக்க ஏதுவுண்டாகும்படி வழக்கமான நிர்வாகப் பொறுப்புகளை திறமையான மனிதரிடம் ஒப்புவித்துவிடும்படி மோசேக்கு அந்த மூத்த மனிதன் ஆலோசனை கூறினான் (ஆதி 18:17-26). பந்திவிசாரணை செய்வதற்காகப் பிரசங்க ஊழியத்தை விட்டுவிட மறுத்த அப்போஸ்தலர் இதே தத்துவத்தில்தான்

செயல்பட்டனர். ஜெபிப்பதற்கும் பிரசங்கிப்பதற்கும் தடை வந்துவிடாதபடி உணவு வினியோகிக்கும் பொறுப்பை நம்பிக்கையுள்ள ஏழு மனிதரிடம் ஒப்படைத்துவிடும்படிச் சீடரிடம் அப்போஸ்தலர் சொல்லிவிட்டனர் (அப் 6:1-7). நிர்வாகக் காரியங்களால் பிரசங்கிமார் அழுந்தும்போது உன்னத த்திலிருந்து செய்திகளைப் பெற்றுக்கொள்ள இன்றியமையாத ஆன்மீகப் புத்துணர்வை இழந்துவிடுகின்றனர். வேத வியாக்கியானங்கள் மற்றும் ஆராய்ச்சி நூல்களை நிதானமாகப் படிக்க அவர்களுக்குப் போதுமான நேரம் கிடைப்பது அரிதாகிவிடுகிறது.

## 6. இன்னிசை (Music)

துதியிலும் தொழுகையிலும் இன்று ஏற்பட்டுள்ள மலர்ச்சி மறுக்க முடியாதது. புதிய பாடல்களும் பல்லவிகளும் இயற்றப்பட்டு இக்காலத்திற் கேற்ற ராகங்களில் பாடப்படுகின்றன. ஆராதனை வேளைகளில் பரவசம் கூடிக்கொண்டிருக்கிறது. பெந்தெகொஸ்தேயல்லாத சபையினரிடையேயும் தொழுகையில் உற்சாகம் அதிகரித்துவருகிறது. நடுவானில் நமது விண்ணக மணமகனைச் சந்திக்க ஆயத்தப்படும் இவ்வேளையில் இது வரவேற்கப் படவேண்டியதே. எல்லா யுகங்களின் பரிசுத்தவான்களும் பரலோகத்தில் இடைவிடாது செய்யப்போவது ஆராதனைதானே!

ஆனால் நமது கூட்டங்களில் அதிக அளவு நேரத்தைப் பாடலும் துதியும் எடுத்துவிடுவதால் வசன வியாக்கியானத்திற்குப் போதுமான நேரம் கிடைப்பதில்லையென்பது கவலைக்குரியது. பிரசங்கத்தைக் கேட்பதற்கு மக்களைத் தொழுகையானது ஆயத்தப்படுத்துகிறது என்று சொன்னாலும், உணர்ச்சிவசம் நிறைந்த ஆராதனைகளில் மக்கள் உடலில் களைத்துப் போவதால் வசனத்தைக் கேட்பதற்குப் போதுமான புத்துணர்வு இல்லாது காணப்படுகின்றனர். இவ்விதச் சமயங்களில் பிரசங்கிமார் ஆயத்தம் பண்ணாத எதையெல்லாமோ பேசத் துவங்குகின்றனர். அதினால் மக்களுக்குப் பலமான ஆகாரம் கிடையாமற்போகிறது.

தேவாலயத்திற்குச் செல்லுகையில் நாம் கடவுளிடம் "பேசுவதைவிட" அவர் நம்மிடம் பேசுவதைக் "கேட்பதே" நமது பிரதான நோக்கமாயிருக்க வேண்டும். இரண்டும் முக்கியமானதுதான்; ஆனால் சமநிலை வேண்டும். "உன்" வார்த்தைகள் சுருக்கமாயிருப்பதாக என்பதே ஆலோசனை (பிர 5:1,2). திருவசனத் தியானமே நம்மை அர்த்தமுள்ள ஆராதனைக்குள் வழி நடத்தும். கடவுளை நமக்கு வெளிப்படுத்துவதில் பரிசுத்த வேதமே முதன்மையானது (யோ 5:39; லூக் 24:27). தேவனைப் பற்றிய அறிவு கூடக்கூட தொழுகை மேன்மையாகும் (ரோ 10:14). எனவேதான் ஆதி



விசுவாசிகள் தங்களது கூடுகைகளில் பெருவாரியான நேரத்தைத் திருவசனத் தியானத்தில் செலவிட்டனர். நாம் முழு இரவு ஜெபம் என் கிறோம்; அவர்களுக்கு முழு இரவுப் பிரசங்கம் இருந்தது!—அப்பம் பிட்கும் ஆராதனையில்கூட! (அப் 20:7-11).

கிறிஸ்துவின் வசனம் "பரிபூரணமாய்" நம்மில் வாசமாயிராவிடில் பாடல் பாடுவதெல்லாம் வெறுமையாய்த்தானிருக்கும் (கொலோ 3:16). முற்காலத்தில் பாடல்கள் இயற்றியவர்கள் தங்கள் பாடல்களில் வேத சத்தியங்களை நிறைவாய்ப் பொதிந்து வைத்தார்கள். சொல்லப்போனால் இறையியலையே இப்பாடல்களிலிருந்து கற்றுவிடலாம். இன்று இயற்றப் படும் பெரும்பாலான பாடல்களோ கவர்ச்சியாயிருந்தாலும் கருத்தாழ மற்றிருக்கின்றன. ஆழமின்மையே இன்றையக் கிறிஸ்தவத்தின் அடையாளச் சின்னம் என்பதில் ஆச்சரியமில்லையே! இந்நிலையைச் சபை மேய்ப்பர்கள் நன்றாகப் புரிந்துகொண்டு தங்கள் சபையினருக்கு உயிருள்ள சத்தியங்கள் நிறைந்த செய்திகளைப் பிரசவ வேதனைப் பட்டாவது கொண்டுவர வேண்டும்.

## 7. செயல் முறைகள் (Methods)

E. M. பவுண்ட்ஸ் என்ற ஜெபவீரன் ஜெபத்தைக் குறித்து எழுதியவை களுக்கு நிகரில்லை. இப்புனிதப் பயிற்சியைக் குறித்து எழுதும் ஆசிரியர் எவரும் பவுண்ட்ஸ் எழுதியவைகளை மேற்கோள் காட்டப் பெரும்பாலும் தவறுவதில்லை. "திருச்சபையானது மேம்பட்ட முறைகளைத் தேடுகிறது; திருவுள்ளமோ மேம்பட்ட மனிதரைத் தேடுகிறது" என்று அவர் குறிப்பிட்டார்.

கலாச்சாரத்திற்கும் காலத்திற்கும் ஏற்றாற்போல் நமது ஊழிய முறை களை மாற்றிக்கொள்வது அவசியந்தான். ஆனால் இதைச் செய்யும்போது வேதாகமத் தத்துவங்களை மீறிவிடக்கூடாது. இல்லையேல் நாம் செய்தியை இழந்துவிடுவோம். "செயல்முறையைத் தக்கவைத்துக்கொள்ள விரும்பி செய்தியைத் தளர்த்திவிடவேண்டிய நிலைக்குள் சென்றுவிடக்கூடாது" என்று ஜான் பிளன்ச்சார்ட் என்பவர் எச்சரிக்கிறார். பெலிஸ்தியரிடமிருந்து கற்றுக்கொள்ளக்கூடாது, கவனம்! தங்களது திட்டங்களையும் ஊழியங் களையும் முன்னேற்றுவதற்கான கவர்ச்சிகர கோஷங்களுக்காகச் சபை களும் சங்கங்களும் வியாபாரவுலகிற்குத் திரும்புவது எத்தனைக் கேவலம்! இதுகுறித்த பவுல் அப்போஸ்தலனின் புத்திமதி இன்றைக்குப் பொருத்த மானது: "அவிசுவாசிகள் தங்கள் வீணான எண்ணங்களுக்கேற்ப வாழ்வது போல் நீங்கள் வாழக்கூடாது... அவர்கள் உள்ளம் மரத்துப்போய்ப் பேராசை கொண்டுள்ளது... நீங்களோ இவ்விதமாய்க் கிறிஸ்துவைக் கற்றுக் கொள்ளவில்லை" (எபே 4:17,20).

இறைப்பணியில் பயன்படுத்தும்படி நமது திறமைகளைப் பரிசுத்தாவியானவர் புனிதமாக்கமுடியும் (யாத் 31:1-5). ஆனால் அவைகள் மீதே நாம் சார்ந்துவிட்டால் அவர் துக்கிப்பார். செருபாபேல் ஆற்றல் மிகுந்ததொரு பணியாளன். ஆனாலும் அவனுக்கு வந்த இறை வார்த்தை: "உனது ஆற்றலாலும் அல்ல, வலிமையாலும் அல்ல; ஆனால் எனது ஆவியாலேயே ஆகும்" (சக 4:6). அசாதாரண தாலந்துகள் பெற்ற பிரசங்கிமார் கூடுதல் கவனமாயிராவிடில் அவர்கள் பிரபல பேச்சாளர்களாய்த்தானிருப்பரேயன்றி பரமனின் செய்தியாளராயிருக்கமாட்டார். நாம் முழுவதும் தேவன் மேலேயே சார்ந்திருக்கிறோம் என்ற மனப்பூர்வ அறிக்கையைப் பிரசங்கபீடத்தில் ஏறுவதற்கு முன் எப்பொழுதும் செய்யவேண்டும். "பிரசங்கபீடமானது நமது தாலந்துகளை வெளிக்காட்டும் கொலு மண்டபமாகலாம்; ஆனால் ஜெப அறையோ அதற்கு மரணத் தண்டனை விதிக்கும்" என்றார் லியோனார்டு ரேவன்ஹில்.

பிரசங்க பாணிகள் பழங்காலத்தவையாயிருக்கவேண்டிய அவசியமில்லை; ஆனாலும் நித்தியமான வசனமானது எல்லாக் கண்ணியத்தோடும் பிரசங்கிக்கப்பட வேண்டும். தேவனது வசனத்திற்கு "நடுங்குகிறவர்கள்" மீதுதான் அவரது கிருபைநிறை பார்வை இருக்கும். புறக்காரியங்கள் எதுவும் அவரைக் கவராது (ஏசா 66:1,2). பிரசங்கபீடத்தில் திரையுலகுப் பாவனைகளைக் கண்டு வெட்கமடைகிறேன். பாடகர்கள் மைக்கை கையில் பிடித்துக்கொண்டு வாய்க்கருகில் வைத்துப் பாடுவது ஒருவேளை தேவையாயிருக்கலாம். ஆனால் பிரசங்கியாராகிய எனது இரு கரங்களும் எதையும் பிடிக்காமலிருந்தால்தானே நான் வேதத்தைத் திறக்கவும் பக்கங்களைத் திருப்பவும் வசனங்களைப் பார்த்து வாசித்து வியாக்கியானிக்கவும் வசதியாயிருக்கும்? மக்களைப் பரவசப்படுத்த அல்ல, அவர்களைப் பக்தி விருத்தியாக்கி, அவர்களுக்குப் பயிற்றுவித்து, அவர்களைப் பக்குவப்படுத்தவே நாம் பிரசங்கிக்கிறோம். கட்டாக உடையுடுத்த வேண்டும்; ஆனால் பகட்டு கூடாது. திருமுழுக்கினன் யோவானின் பிரசங்கம் கேட்கப் போனவர்களைப் பார்த்து இயேசு, "நீங்கள் எதைப் பார்க்கப் பாலை நிலத்திற்குப் போனீர்கள்?... மெல்லிய ஆடையணிந்த ஒரு மனிதரையா? இதோ, மெல்லிய ஆடையணிந்தோர் அரச மாளிகையில் இருக்கின்றனர். பின்னர் யாரைத்தான் பார்க்கப் போனீர்கள்? இறைவாக்கினரையா? ஆம், இறைவாக்கினரைவிட மேலானவரையே!" என்று கூறினார் (மத் 11:8,9). போட்டோ மற்றும் வீடியோ எடுக்கிறார்களென நினைத்துக்கொண்டேயிருந்தாலும் செய்தி கெட்டுவிடும்.

வேத ஆராய்ச்சித் தகவல்கள் கம்ப்யூட்டரில் வந்தது வேத அறிவில் ஒரு புதிய உலகையே நமக்குத் தந்து விட்டது. ஒரு பொத்தானை அழுத்திய



மட்டில் நூற்றுக்கணக்கான பிரசங்கக் குறிப்புகள் நமக்குமுன் திரையில் வந்துவிடும். இவ்வித அமோக வசதிகள் நமக்குக் கிட்டிவிட்டதால் நமது முன்னோர்கள் வியர்வை சிந்தி தியானித்துக் கற்றுக்கொண்ட வழிமுறைகளுக்கு நாம் அன்னியராகிவிட்டோம். கடவுளுக்குமுன் முழங்காலில் காத்திருப்பதைவிட கம்ப்யூட்டருக்குமுன் உட்கார்ந்து பார்த்துக்கொண்டிருக்கும் நேரம் கூடினால் நமது பிரசங்கக் குறிப்புகளெல்லாம் உயிரற்ற எலும்புக்கூடுகளாகத்தானிருக்கும். வெறும் எழுத்து கொல்லும், ஆவியோ உயிர்ப்பிக்கும்! (2 கொரி 3:6ஆ).

## 8. ஊழியங்கள் (Ministries)

"தேவனுக்குமுன் அமர்ந்திருந்து அவர் சொல்வதையெல்லாம் பொறுமையாய்க் கேட்டு அவருடன் ஐக்கியப்பட முடியாதபடி நேரத்தையும் பலத்தையும் ஊழியம் ஊழியமென்று விதவிதமான காரியங்களில் செலவழிப்பது கிறிஸ்தவப் பணியில் மிகுந்த ஆபத்து" என்றார் ஆன்ட்ரூ போனர் (1810-1892) என்ற பரிசுத்தவான். இதை அப்படியே ஆமோதித்த பேராயர் J. C. ரைல் கூறியது: "எப்பொழுது பார்த்தாலும் பிரசங்கித்துக்கொண்டும், போதித்துக்கொண்டும், பேசிக்கொண்டும், எழுதிக்கொண்டும், பொதுப் பணிகளில் ஈடுபட்டுக்கொண்டுமிருப்பது வைராக்கியத்தின் அடையாளந்தான்; ஆனால் அது அறிவுக்கேற்ற வைராக்கியமல்ல!"

ஓரளவுக்குமீறி பிரசங்கிக்க அழைப்புகளையும் ஊழியப் பொறுப்புகளையும் ஏற்றுக்கொள்ளும்போது பட்டும்படாமலுந்தான் நாம் நம்மை வார்க்கமுடியும். இன்னும் நாற்பது ஆண்டுகள் அவருக்குக் கொடுக்கப்பட்டால் அதை அவர் எப்படிச் செலவழிப்பாரென்று பேட்டி ஒன்றில் பில்லி கிரஹாமிடம் கேட்கப்பட்டது. "பிரசங்கிப்பதைக் குறைத்துப் படிப்பதைக் கூட்டுவேன்" என்று இச்சுவிசேஷகர் பதிலுரைத்தார்! வாரந்தோறும் வாரயிறுதிக் கூட்டங்களில் பேசச் செல்லும் பிரசங்கிமார் ஓய்வெடுக்கவும், தங்கள் பலத்தைக் கர்த்தர் முன் புதுப்பித்துக்கொள்ளவும் தங்களுக்கென்று மாதத்திற்கு ஒரு முழு வாரத்தையாவது எடுத்துக்கொள்ளவேண்டும் (ஏசா 40:31). மட்டுமல்ல, இரு நிகழ்ச்சிகளுக்கிடையிலும் தங்கள் குடும்பங்களோடு தரமான நேரம் செலவழிக்கத் திட்டமான முயற்சியெடுக்க வேண்டும். கடவுளுக்கும் குடும்பத்திற்கும் முன்னதாக ஊழியம் வருமானால் விளைவுகள் கொடுமையாயிருக்கும்.

வெற்றியாய்ச் செயல்படவேண்டுமானால் அவனவன் தனது அழைப்பிற்குள் நின்றுகொள்ளவேண்டும். கிறிஸ்துவின் உடலில் நான் ஒரு

கண்ணாயிருக்கும்படி தேவன் என்னை அழைத்திருப்பாரானால், நான் ஒரு காதாய் மாற விரும்பக்கூடாது. முன்னோடிச் சுவிசேஷகர்களாகவும் தொலைவிட மிஷனரிகளாகவும் அழைக்கப்பட்டுள்ள பலர் வசதியையும் மதிப்பையும் நாடியதால் உள்ளூர்களிலேயே சபை மேய்ப்பர்களாய் உட்கார்ந்துவிட்டனர். இவர்கள் தங்கள் சபையினருக்குத் திடமான ஆகாரம் கொடுக்க முடியாமலும், அவர்களை ஊழியத்தில் பயிற்றுவிக்க முடியாமலும் இருப்பதில் ஆச்சரியமில்லையே! சகலகலா வல்லவனாக மாறவேண்டுமென்று வரும் சோதனைகளை முழுமூச்சாய் எதிர்க்க வேண்டும். விசுவாசம் வேறே, துணிகரம் வேறே (ரோ 12:3).

திருவசனப் பிரசங்கிமார் கூடியமட்டும் ஊழியத்திற்குப் பணம் திரட்டுவதில் முக்கிய பொறுப்பை எடுத்துக் கொள்ளக்கூடாது. பணம் நமது குறியாகும்போது நாம் தீர்க்கதரிசிகளாக அல்ல, தந்திரசாலிகளாகவே செயல்படுவோம். நான் ஒரு மிஷனரி இயக்கத் தலைவனென்றாலும் திருவசனத்தைப் பிரசங்கிப்பதும் போதிப்பதுமே எனது அடிப்படை அழைப்பு. தங்களைத் தாங்குவோர் தாக்கப்பட்டுவிடக்கூடாதென்று சபைப்பிரிவு பாகுபாடற்ற மிஷனரி நிறுவனங்கள் பொதுவாக உபதேசங்களைப் போதிப் பதில்லை, கடவுளுடைய முழு ஆலோசனையையும் அறிவிப்பதில்லை. இதைக் குறித்து துவக்க ஆண்டுகளில் எனக்கு ஒரே போராட்டம். முடிவில், எது எப்படியானாலும் சரி, சத்தியத்தைச் சத்தியமாய்ப் பிரசங்கிக்க அழைக்கப்பட்டதற்கு உத்தமமாய் இருக்கத் தீர்மானித்துவிட்டேன். இந்த இயக்கத்தின் பணத் தேவைகளைக் குறித்து நான் பேசாமல் இருப்பதில்லை. ஆனால் அது எனது பட்டியலில் கடைசிதான். ஆசீர்வாத இளைஞர் இயக்கத்திற்கு சீக்கிரம் முப்பது வயதாகும். அதற்கு அன்றன்றுள்ள அப்பம் என்றுமே கிடையாமற் போனதில்லை. இவ்வியக்கம் கிறிஸ்துவின் உடலில் ஒரு தீர்க்கதரிசனத் தொனியாய் நீடித்திருக்கவேண்டுமென்பதே என்னு டைய மற்றும் என் உடன் தலைவர்களுடைய இதயக் கதறலாகும்.

## 9. கற்பனைக் கதைகள் (Myths)

தமது பன்னிரண்டாம் வயதிலிருந்தே இயேசு வேத வாக்கியங்களில் கிட்டத்தட்ட தேறினவராயிருந்தார் (லூக் 2:42,46,47). ஆனாலும், தமது முதல் பிரசங்கத்தைப் பண்ணுவதற்குமுன் இன்னும் பதினெட்டு ஆண்டுகள் தம்மை ஆயத்தப்படுத்தினார் (லூக் 3:23). பவுல் “தாமதமின்றி” உடனே பிரசங்கிக்கப் புறப்பட்டுவிடவில்லையா என்று சொல்லிக்கொண்டு அநேகர் காலத்திற்குமுன் பிரசங்கபீடம் ஏறுகின்றனர். வேதப் பண்டிதர் கமாலியேலின் கீழ் அநேக ஆண்டுகள் அவன் பழைய ஏற்பாட்டை ஐயமறக் கற்றறிந்தான் என்பதை அவர்கள் நினைப்பதில்லை (அப் 22:3). பொது



விடங்களில் திருவசனத்தை வியாக்கியானிக்கத் துவங்குமுன் தவறாய்க் கற்றவைகளைக் களைந்துவிடவும் சிலகாலம் தேவை என்று நான் நிச்சயித் திருக்கிறேன். எனவேதான் நூதன சீடரை, அதாவது புது விசுவாசிகளை, ஊழியத்தில் ஏற்படுத்த வேண்டாமென்று பவுல் தீமோத்தேயுவுக்கு அறிவுறுத்தினான் (1 தீமோ 3:6). கற்பனைகளும் சத்தியங்களும் கலந்து விட்டால் செய்தி குழப்பமாகும்.

இப்படிச் சொல்வதால், பாரம்பரியங்களை அடியோடு அகற்றிவிட வேண்டுமென்றும் பொருளல்ல. ஆனால் திருவசனத்திற்கு முரண்பாடான எந்தப் பாரம்பரியத்தையும், அது எவ்வளவு காலம் கடைப்பிடிக்கப்பட்ட தாயிருந்தாலும், தூக்கியெறியவேண்டியதுதான். பாரம்பரியங்களை நாம் கும்பிட ஆரம்பித்துவிட்டால் திருவசனத்தை அவமாக்குகிறோம் என்று பொருள் (மாற் 7:6-13). திருவசனத்தைப் பயனற்றதாக்கும் “அநேக” காரியங்களை நாம் செய்கிறோமென்று இயேசு கடிந்துகொள்கிறார். அவரது வார்த்தையின் சுகந்த வாசனை நமது வாழ்க்கையெங்கும் செல்லும்படி குப்பைக்கூளங்கள் யாவற்றையும் வீட்டிலிருந்து தூக்கி யெறிந்துவிடுவோம்!

முடிவுகாலத்தைக் குறித்த அப்போஸ்தலன் பவுலின் எச்சரிப்பு இன்று மிகவும் தேவை: “ஒரு காலம் வரும். அப்போது மக்கள் நலந்தரும் போதனை யைத் தாங்கமாட்டார்கள். மாறாக... உண்மைக்குச் செவிசாய்க்க மறுத்துப் புனைக்கதைகளை நாடிச் செல்வார்கள்” (2 தீமோ 4:3,4). பொருளாதாரத் தையே நாடிச்செல்லும் நாடுகளின் கண்டுபிடிப்பாகிய சுகபோக வாழ்வு உபதேசம் ஒரு புனைக்கதையாகும். இந்தக் கொள்ளைநோயை அவ்வளவு எளிதில் நிறுத்தமுடியாது. சபைச் சரித்திரத்தில் வேறெந்த உபதேசமும் இவ்வளவு பிரபலமானதில்லை. ஆண்டவரிடமிருந்து தெளிவான செய்தி களை அறிவிக்க முடியாதபடி நமது பிரசங்க பீடங்கள் ஏராளமானவற்றை இவ்வுபதேசம் கைப்பற்றிவிட்டது.

*“Smile! Jesus loves you!”* இவ்வித வாசகங்களெல்லாம் ஸ்டிக்கருக்கு நன்றாய்த்தானிருக்கும்; ஆனால் பாவிக்குப் போதாது. நாணயத்தின் மறுபக்கமாகிய *“Repent! Jesus loves you!”* என்பதும் சொல்லப்படா விட்டால் இதுவும் ஒரு புனைக்கதைதான் (வெளி 3:19). இடிந்து போனோரைத் தூக்கவேண்டும்; தூங்குவோரை இடிக்கவேண்டும். பிரசங்கிப்பது உள்ளத்தைத் துளைப்பதற்காகவே, உடம்பைச் சொறிவதற் காக அல்ல. மனிதரைப் பிரியப்படுத்த விரும்பும் பிரசங்கி தாளம்தான் போடுவான். “மக்கள் விரும்புவதையே பிரசங்கிப்பதுதான் கள்ளத் தீர்க்க

தரிசிகள் மற்றும் கள்ளப் போதகர்களின் அடையாளமாய் இருந்து வந்திருக்கிறது'' என்ற பீட்டர் ஜோங்கின் கூற்றில் தவறில்லை. ''கர்த்தர் உரைக்கிறார்!'' என்று மறுபடி நமது பீடங்களிலிருந்து முழங்குவோம். அப்பொழுதுதான் கற்பனைக் கதைகளின் கட்டுகளிலிருந்து மக்கள் விடுதலை பெறுவர் (யோ 8:32).

## 10. மறைபொருள் (Mysticism)

புதிய வெளிப்பாடுகள், புதிய சந்திப்பு, புதிய காரியம், இதுதான் இன்று கிறிஸ்தவ உலகெங்கும் பேச்சு. பார்வைக்கு இவை நலமாய்த் தோன்றி னாலும் இவை ''மரமும் வைக்கோலும் புல்லுமேயன்றி'' வேறல்ல. கடவுளது வசன நெருப்பின் பரிசோதனைக்கு இவை தாக்குப்பிடிக்காது (1 கொரி 3:12,13). வேதப் புத்தகம் எழுதி முடிக்கப்பட்டதோடு தேவன் நமக்குப் போதுமான வெளிப்பாடுகளைத் தந்துவிட்டார். வெளிப்படுத்தல் புத்த கத்தின் ஆமெனைத் தாண்டிச் சென்று விலக்கப்பட்ட பழத்தைப் பறிக்க எனக்குத் துணிவில்லை. கிறிஸ்துவில் எனது வாழ்வை நிறைவாய் அனுபவிக்க ஏற்கனவே எழுதப்பட்டவையே எனக்குப் போதும், போதும் (யோ 20:30,31). எழுதப்படாதவை தெய்வீக ஞானத்தின்படி இரகசியமாய் வைக்கப்பட்டுள்ளன. அவற்றை நான் தோண்டிப் பார்க்கக்கூடாது, யூகிக்கவும் கூடாது. அவை தேவனுக்குரியவை. வெளிப்படுத்தப்பட்டவை களுக்கே நான் பொறுப்பு (உபா 29:29). மறைபொருள் ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள பிரசங்கிமார் பலர் ''சாத்தானின் ஆழங்களில்'' இறங்கி விட்டனர் (வெளி 2:24).

இரகசியங்களிலெல்லாம் பெரிய இரகசியம் ''தேவ பக்தியின் இரகசியந்தான்.'' அது ஏற்கனவே வெளிப்படுத்தப்பட்டாயிற்று (1 தீமோ 3:16). இன்னும் என்ன வேண்டும்?

சொப்பனங்களையும் தரிசனங்களையும் பற்றிப் பிரசங்கிமார் பேசிய தும் மக்கள் பரவசமடைந்துவிடுகின்றனர். இப்படிப்பட்ட கூட்டங்களுக்குத் தான் திரள்கள் செல்கின்றன. ஆனால் கடவுளுடைய வசனமாகிய ''கோதுமைக்கு'' முன் சொப்பனங்கள் தரிசனங்களெல்லாம் ''பதர்'' போல் தான். தீர்க்கன் எரேமியா விடும் சவாலைக் கவனியுங்கள்: ''சொப்பனங் கண்ட தீர்க்கதரிசி சொப்பனத்தை விவரிக்கட்டும்; என் வார்த்தையுள்ள வனோ என் வார்த்தையை உண்மையாய்ச் சொல்லட்டும்; கோதுமைக்கு முன் பதர் எம்மாத்திரம்? என்று கர்த்தர் சொல்லுகிறார். என் வார்த்தை அக்கினியைப் போலும், கன்மலையை நொறுக்கும் சம்மட்டியைப் போலும் இருக்கிறதல்லவோ? என்று கர்த்தர் சொல்லுகிறார்'' (எரே 23:28,29).



பவுலுக்குக் கிடைத்த அளவு தரிசனங்களும் வெளிப்பாடுகளும் வேறு எவருக்கும் கிடைத்திருக்காது. அவன் ஒரு முறை பரதீசுக்குக்கூடப் போய்வந்தான். ஆனால் அவன் சென்றவிடமெங்கும் இவ்வித அனுபவங் களையே மக்களுக்குச் சொல்லிக்கொண்டு அவர்களையும் இவைகளை நாடும்படி ஊக்குவிக்கவில்லை. இவ்வித அனுபவங்களைப் பற்றி அவன் சொன்னதெல்லாம், ''நானறியேன், தேவனறிவார்... நானறியேன், தேவனறி வார்'' என்பதே! மாறாக, அவன் வாழ்க்கையின் சிக்கல்களை எப்படிச் சமாளிக்கவேண்டுமென்று மக்களுக்குப் போதித்து திருவசனத்தினால் அவர்களைத் திடப்படுத்தினான் (2 கொரி 12:1-10; 2 பேது 3:15,16).

தனி நபர்களுக்கு வரும் வெளிப்பாட்டுத் தீர்க்கதரிசனங்களுக்கு இன்று ஒரே கிராக்கி. வார நாட்களில் பாவம் சபைப் போதகர் நடத்தும் வேத ஆராய்ச்சிக் கூட்டங்களிலெல்லாம் யாருக்கு அக்கறை? மக்களுக்கு வேண்டியதெல்லாம் உடனடி விடுதலைகளும் உடனடி விளைவுகளும்தான். இது வேதமார்க்கமல்ல.

தேவனைப் பிரியப்படுத்துவதையும், அவரது மக்களின் வளர்ச்சிக்காய்ப் பாடுபடுவதையும், அவரது இறையரசுச் செய்தியை எங்கும் பரப்புவதையுமே ஒரே நோக்காய்க் கொண்டு தைரியமாய், உண்மையாய்த் திருவசனத்தை முழங்கும் பிரசங்கிமாரையும் போதகர்களையும் தேவன் நமக்கு நிறையத் தருவாராக!

# 3

# சீடத்துவத்திற்குப் பிரதான நிபந்தனை

**"ஒருவன் என் பின்னே வர விரும்பினால் அவன் தன்னைத் தான் வெறுத்து, தன் சிலுவையை அனுதினமும் எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன்" (லூக் 9:23)**

இயேசுவின் இவ்வார்த்தைகள் சீடத்துவத்தின் பிரதான நிபந்தனையை வரையறுக்கின்றன. இது நான்கு சுவிசேஷங்களிலும் சொல்லப்பட்டுள்ளது. மத்தேயுவிலும் லூக்காவிலும் இச்சத்தியம் இருமுறை கூறப்பட்டுள்ளது (மத் 10:38; 16:24; மாற் 8:34; லூக் 9:23; 14:27; யோ 12:25). இயேசுவின் வேறெந்த கூற்றும் இவ்வளவு வலியுறுத்தப்படவில்லை.

"இயேசுவிடம்" வருவோர் அநேகர்; "இயேசுவின் பின்" செல்லு வோரோ மிகச்சிலர். "என்னிடம் வாருங்கள்" என்பது இரட்சிக்கப்படா தோருக்கு இயேசுவின் செய்தி; "என் பின்னே வாருங்கள்" என்பதோ அவரைச் சேர்ந்துவிட்டோருக்கு அவரது செய்தி. இயேசுவிடம் வருவதால் பிரதானமாகச் சிலாக்கியங்களைச் சுகிக்கிறோம்; அவரைப் பின் செல்வ தாலோ முக்கியமாகச் சிரமங்களைச் சகிக்கிறோம். இயேசுவிடம் வரும் போது பாவமன்னிப்பு பெறுகிறோம்; அவரைப் பின்செல்லும்போது பாவ சுபாவத்தை அகற்றவேண்டும்.



இயேசுவிடம் வருவதற்கான அழைப்பைத் திரும்பத் திரும்பச் சொல்லி ஆனால் அவரை பின்பற்றுவதற்கான சவாலைக் கொடுக்காமலே விடுவதால் தான் இன்று பின்மாற்றம் ஏராளம். நீங்கள் ஏன் உங்கள் கிறிஸ்தவ வாழ்வில் வளர்ச்சியின்றிக் குழந்தையாகவே இருக்கிறீர்களெனச் சிந்தித்துக் கொண்டிருந்தால் இச்செய்தியே உங்களுக்குப் பதில்.

சீடத்துவத்திற்கு இயேசு தரும் நிபந்தனைக்கு எதிர்மறையானதும் நேர்முகமானதுமான இரு கூறுகள் உண்டு. அது சுயத்திற்கு "இல்லை" என்பது; சிலுவைக்கு "ஆம்" என்பது. இந்த இரட்டை நிபந்தனைகளைச் சற்று விரிவாக இங்கு தியானிப்போம்.

### அ) சுயவெறுப்பு

கிறிஸ்துவின் பாடசாலையில் கற்பிக்கப்படும் முதல் பாடமே சுய வெறுப்புதான் என்று மாபெரும் வேத வியாக்கியானி மேத்யு ஹென்றி கூறினார். தொடர்ந்து சுயத்திற்கு மரித்துக்கொண்டேயிருப்பதைவிட கிறிஸ்தவ வாழ்விற்கு வேறு வழியில்லை. ஒருவன் இயேசுவின் பின் வர விரும்பினால் அவன் தன்னைத்தான் வெறுக்க "வேண்டும்."

***இயேசுதான் மாதிரி***

முடிவிலா மகிழ்ச்சி நிறைந்த இடத்தை விட்டு இயேசு "துக்கம் நிறைந்தவர்" ஆனார் (ஏசா 53:3).

பரலோக ஐக்கியத்தைத் துறந்து இயேசு "பாவிகளின் சிநேகிதன்" ஆனார் (மத் 11:19).

தேவத்துவத்தின் நித்திய மகிமையை விட்டு இயேசு "ஆகாதென்று தள்ளப்பட்ட கல்" ஆனார் (1 பேது 2:7).

பரம சேனைத் திரளால் எப்போதும் பணிவிடை கொள்வதை விட்டு இயேசு "தாழ்மையான அடிமை" ஆனார் (பிலி 2:7,8).

இராப்பகலாய்த் தூதர்களால் போற்றப்படுவதைத் துறந்து இயேசு மனிதரின் "பரியாசத்திற்கு" ஆளானார் (மத் 27:39-44). தேவனின் பரிசுத்த குமாரன் பிசாசு பிடித்தவரென்றும் பெயல்செபூலின் பிரதிநிதி என்றும் நிந்திக்கப்பட்டார் (யோ 7:20; 8:52; லூக் 11:15).

தமது தேவத்துவத்தின் பூரண அழகையும் வடிவையும் துறந்து இயேசு நமக்காகப் “பாவம்” ஆனார் (2 கொரி 5:21).

சிங்காசனத்திலிருந்து இறங்கிவந்து இயேசு பலிபீடத்தின்மேல் “பலி” ஆனார் (எபே 5:2).

இயேசு செய்தது செய்யாதது யாவற்றிலும் சுயவெறுப்பு காணப்பட்டது. இதோ சில எடுத்துக்காட்டுகள்: தமது வல்லமையைப் பகட்டாகக் காட்டுவதற்கு வந்த சோதனைக்கு மறுப்பு தெரிவித்துவிட்டார் (மத் 4:3-11). வாழ்க்கையின் அடிப்படை வசதிகளைக்கூட விட்டுவிட்டு தலைசாய்க்க இடமில்லாது சுற்றியலைந்தார் (மத் 8:20). தூங்கும் நேரம் சாப்பிடும் நேரம் என்றெல்லாம் பார்க்காது அறியாத பண்டிதர்க்கும், ஆசை தீராத பெண் டிற்கும் ஊழியம் செய்தார் (யோ 3 & 4). இறையரசுக்கடுத்தவைகளில் தமது சொந்தக் குடும்பத்தினரின் ஆசாபாசம் தம்மைப் பாதிக்காது பார்த்துக்கொண்டார் (மத் 12:46-50). தமது சீடர்களின் பாதங்களைக் கழுவும்படித் தமது கர்த்தத்துவத்தின் மேன்மையைக் கழற்றிவைத்தார் (யோ 13:3-5). தமக்காகப் போரிடும்படித் தூதர் பட்டாளங்களுக்காகப் பிதாவை நோக்கி ஜெபிக்க மறுத்துவிட்டார் (மத் 26:53,54). அவருக்கு நியாயமான தீர்ப்பு கொடுக்கப்படாதபோதும் அமைதியாய் இருந்துவிட்டார் (மாற் 15:3-5; ஏசா 53:7,8). வையப்பட்டபோது திரும்ப வையாதபடி நாவை அடக்கிக்கொண்டார் (1 பேது 2:23). தமக்காகப் பரிதபித்தவர்களை அவர்களுக்காகவும் அவர்கள் பிள்ளைகளுக்காகவுமே அழும்படித் திருப்பிவிட்டார் (லூக் 23:27,28). சிலுவையில் துடித்துக்கொண்டிருந்த வேளையில் வலி குறைப்புப் பானமொன்றைக் குடிக்க மறுத்துவிட்டார் (சங் 69:20,21; மத் 27:34).

### *எரிந்துவிடுவோம்!*

சுயவெறுப்பு என்பது உன்னதமான தியாகமாகும். அது “மாம்சத்தின்” சுய இச்சைகளுக்கும், “உலகத்தின்” சுய முன்னேற்றத்திற்கும், பிசாசின் சுய நாட்டத்திற்கும் அடுத்த சோதனைகளுக்கு இல்லை என்பதாம் (1 யோ 2:15,16). நாமெல்லாரும் நம்மைப் போதுமான அளவும் அதற்கு மீறியும் நேசிக்கிறோம். அது மனித சமுதாயத்தின் இயற்கைக் குணம். நம்மை வெறுப்பதற்கோ நாம் நம்மைப் பயிற்சிவிக்கவேண்டும். ஒவ் வொரு சுயவெறுப்புச் செயலும் நம்மைக் கிறிஸ்தவ வாழ்வில் முன்தள்ளும். சுயத்தில் இறங்குபவன் தேவனிடத்தில் ஏறுவான். எரியாமல் பிரகாசிப்பது எப்படி ? யோவான் ஸ்நானன் “எரிந்து பிரகாசிக்கிற விளக்காயிருந்தான்” (யோ 5:35). “நான் சிறுகணும், அவர் பெருகணும்” என்ற அவனது



கோட்பாடே அதற்கு இரகசியம் (யோ 3:30). ஹட்சன் டெய்லர் சீன நாட்டில் தேவனுக்காய் எரிந்து பிரகாசித்தார். “தேவன் எரிவதற்கான திரிகள் தேடியலைகிறார்; எண்ணையும் நெருப்பும் இலவசம்” என்று அவர் கிறிஸ்தவ உலகிற்குச் சவாலிட்டார்!

பவுல் இன்னொரு எடுத்துக்காட்டு. “நானல்ல, கிறிஸ்துவே” என்பதே அவனது கோஷம். சுயவெறுப்பின் ஆசீர்வாதத்திற்கு இவ்விதம் சாட்சி பகர்ந்தான்: “சாகிறவர்களெனப்பட்டாலும் உயிரோடிருக்கிறவர்களாகவும், தண்டிக்கப்படுகிறவர்களெனப்பட்டாலும் கொல்லப்படாதவர்களாகவும், துக்கப்படுகிறவர்களெனப்பட்டாலும் எப்போதும் சந்தோஷப்படுகிறவர் களாகவும், தரித்திரரெனப்பட்டாலும் அநேகரை ஐசுவரியவான்களாக்கு கிறவர்களாகவும், ஒன்றுமில்லாதவர்களெனப்பட்டாலும் சகலத்தையுமு டையவர்களாகவும் எங்களை விளங்கப்பண்ணுகிறோம்” (2 கொரி 6:9,10).

### *சுயவெறுப்பு விலையேறப்பெற்றது.*

சுயவெறுப்பு மலிவானதல்ல. கணக்குப் பார்க்கும்படி இயேசு தம்மைப் பின்பற்றினவர்களுக்குச் சவாலிட்டார். கோபுரம் கட்டுதல், எதிரிக்குமுன் படையெடுத்தல் ஆகிய இரு எடுத்துக்காட்டுகளைக் கொடுத்தார். போது மான பணம் இல்லாவிடில் கட்டத் துவங்காதிருப்பதும், போதுமான படை இல்லாவிடில் போர் தொடுக்காதிருப்பதுமே ஞானமென்றார். இவ்வித உபதேசம் ஒரு வேளை மக்களை உற்சாகமிழக்கச் செய்வதுவோல் தோன்றி யிருக்கும். ஆனால் தம்மைப் பின்பற்றுபவர்களின் அர்ப்பணிப்பை ஆழப்படுத்துவதே இயேசுவின் நோக்கமாயிருந்தது (லூக் 14:27-33). ரொட்டிக்கும் மீனுக்குமே மக்கள் அவர் பின் வந்துகொண்டிருக்கக்கூடாது. ஆசீர்வாதங்கள், அற்புதங்களையே நாடி அவரைப் பின்பற்றுவோர் பரிதாபமாக ஏமாற்றமடைவர்.

### *உரிமைகளும் உடமைகளும்.*

நியாயமான சில உரிமைகளையும், வாழ்க்கையின் அனுபவிப்புகளையுங் கூட தியாகம் செய்யும்படிக் கிறிஸ்துவின் சீடர் அழைக்கப்படுகின்றனர். “தன் உயிரைச் சிநேகிக்கிறவன் அதை இழந்துபோவான்; இவ்வுலகில் தன் உயிரை வெறுக்கிறவனோ அதை நித்திய ஜீவ காலமாய்க் காத்துக் கொள்ளுவான்” (யோ 12:25). இவ்வித உபதேசமும் வாழ்க்கைமுறையும் இறுதிக்காலத்தில் எவ்விதம் விரும்பப்படாததாய் இருக்குமெனப் பவுல் முன்னறிவித்தான். கொடிய காலங்களின் அடையாளங்களை வரிசைப் படுத்துகையில் எதை முதலாவது குறிப்பிடுகிறான் பாருங்கள்: “மனிதர் தற்பிரியராயும், பணப்பிரியராயும்,... இருப்பர்” (2 தீமோ 3:1,2). நமக்

கிருப்பதெல்லாம் நாம் அனுபவிக்க அல்ல. நாம் சம்பாதிப்பதெல்லாம் நாம் செலவழிக்க அல்ல. "உங்களில் எவனாகிலும் தனக்கு உண்டானவை களையெல்லாம் வெறுத்து விடாவிட்டால் அவன் எனக்குச் சீடனாயிருக்க மாட்டான்" (லூக் 14:33) இங்கேதான் நமது பிரச்னையெல்லாம்! எதை முடியாது என்று இயேசு சொன்னாரோ அதைத்தான் முயற்சிக்கிறோம் — "கடவுளுக்கும் உலகப் பொருளுக்கும் ஊழியஞ்செய்ய உங்களாலே கூடாது" (லூக் 16:13). ஒரு புயல் நம்மைத் தாக்கி பணத்தின் மீதுள்ள நமது பிடிப்பைத் தளர்த்தி விடுவதற்காகக் காத்திருப்பது மடமையிலும் மடமை. இயேசு தாமாகவே தரித்திரரானாரே!

### *சுயவெறுப்பு கடினமானது.*

இவற்றையெல்லாம் சொன்ன பிறகும், சுயவெறுப்பு எளிதல்ல என ஒத்துக்கொள்ளுகிறோம். "நான் சந்தித்த வேறு எவரையும் விட டி.எல். மூடியோடுதான் எனக்கு அதிகப் பிரச்னை" என்று ஒருமுறை டி.எல். மூடி சொன்னார்! ஆனால் இவ்வுலகு கண்டுள்ள அசாதாரண வீரதீரமெல்லாம் சுயவெறுப்பிலிருந்தே முளைத்தெழும்பிற்று எனும் சான்று இவ்வுபதே சத்தை நிலைநிறுத்துகிறது. "தியாகம்" எனும் சொல்லை அகற்றிவிட்டால் சபைச் சரித்திரத்தின்—ஏன், உலகச் சரித்திரத்தின்—பக்கங்கள் வெறுமை யாகவே இருக்கும். ஏனெனில், உயரிய பண்புகள் அனைத்திலும் சுய வெறுப்பின் முத்திரை உண்டு.

எந்தெந்த பகுதிகளில் நீங்கள் இப்போது சுயவெறுப்பைக் கடைப் பிடிக்கிறீர்களென குறிப்பாய்ச் சொல்லமுடியுமா? முடியாவிடில், இப் புத்தாண்டில் சுயவெறுப்புக்கான சிலவற்றைத் தெரிந்துகொண்டாலென்ன?

## ஆ) சிலுவை சுமத்தல்

சிலுவை சுமப்பதற்குச் சுயவெறுப்பு முன் நிபந்தனையாகும். அதே வேளையில், சுயவெறுப்பையடுத்து சிலுவை சுமத்தல் வராவிடில் அது கிறிஸ்தவ வாழ்விற்கும் சீடத்துவத்திற்கும் பொருந்தியதல்ல. அரிய தியாகங்களைச் செய்தும் சிலுவையை எடுக்காதோர் ஏராளமுண்டு. உலகம் அவர்களுக்குப் புகழ்மாலை சூடியிருக்கலாம்; ஆனால் நித்தியத்தின் வெளிச்சத்தில் அவர்களுக்குப் பயனேதுமில்லை. சீடத்துவத்தின் நிபந்தனையை வரையறுத்தவுடன் இயேசு இவ்விதம் கேட்டார்: "மனிதன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக்கொண்டாலும், தன் ஆத்துமாவை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? மனிதன் தன் ஆத்துமா விற்கு ஈடாக என்னத்தைக் கொடுப்பான்?" (மாற் 8:36,37).



### *சிலுவை பிரபலமானதல்ல.*

கொடூரமான, வேதனையான சாகடிப்பிற்காகவே சிலுவை பயன் படுத்தப்பட்டது. அது வெட்கத்திற்கும் துன்பத்திற்கும், சாபத்திற்கும் ஆக்கினைத்தீர்ப்பிற்கும், பரிகாசத்திற்கும், நிந்தனைக்கும் ஓர் அடையாளச் சின்னமாய் விளங்கிற்று. யார்தான் அதை விரும்புவார்? எடுப்பது வேறு! தேவனது மீட்பின் திட்டத்தில் பேதுருவால் சிலுவையை வைத்துப் பார்க்க முடியாதது விந்தையல்ல. தம்மைக் குறித்து அவனுக்குப் பரத்திலிருந்து கிடைத்த அபார வெளிப்பாட்டிற்காக அப்பொழுதுதான் இயேசு அவனைப் பாராட்டியிருந்தார். ஆனால் சிலுவை என்றவுடன் அவன் இயேசுவையே "கடிந்துகொள்ளும்" அளவிற்கு அதின்மீது வெறுப்பு கொண்டான். சிலுவையற்ற மார்க்கம் சாத்தானின் சரக்கு என்பதால் இயேசு திரும்பி அவனைக் கடினமாய்க் கனிவின்றிக் கடிந்துகொண்டார். இச்சம்ப வத்தைத் தொடர்ந்துதான் இயேசு சீடத்துவத்தின் நிபந்தனையை வலியுறுத்தினார் (மத் 16:13-24).

பகுத்தறிவாளர்களோ மதவாதிகளோ என்றுமே சிலுவையைப் பாராட்டியதில்லை (1 கொரி 1:18-23). நமது பிரசங்கபீடங்களில் அவ்வப் போது சிலுவை என்ற சொல்லைப் பயன்படுத்தினாலும், பெருவாரியான கிறிஸ்தவருக்குச் சிலுவைச் சுமத்தலைப் பற்றிய தெளிவான அறிவு இன்னும் கிட்டவில்லை என்பதே என் கருத்து.

### *பரிகசிப்பும் கொல்லப்படுதலும்*

கைதட்டி சிரிக்கும் கூட்டத்தினூடே சிலுவையின் குறுக்குத் தடியைச் சுமந்துகொண்டு கொல்லப்படும் இடத்திற்குச் செல்லுதலே "சிலுவையை எடுத்துக்கொண்டு" என்பதின் பொருளாகும். இயேசுவை மெய்யாகவே பின்பற்றினால் கேலிக்கும் நிந்தைக்கும் ஆளாகி, தேவையானால் இரத்தச் சாட்சியாய் மரிக்கவும் நாம் ஆயத்தமாயிருக்கவேண்டும். விசுவாசிகளான நொடியிலிருந்து இறையரசுக்காக உயிரைப் பணயம் வைத்தாகவேண்டும். இயேசு எருசலேம் நகருக்கு வெளியே சிலுவையிலறையப்பட்டார். எபிரேய நிருப ஆக்கியோன் தனது வாசகருக்கு இப்படி எழுதினான்: "ஆகையால் நாம் அவரது நிந்தையைச் சுமந்து, பாளயத்திற்குப் புறம்பே அவரிடம் புறப்பட்டுப் போகக்கடவோம்" (எபி 13:12,13). இதை வாசித்த அந்நாள் யூத விசுவாசிகளுக்குத் தங்கள் யூதச் சமுதாயத்தை விட்டுத் தாங்கள் விலக்கப்படுவதையே இது குறித்திருக்கும். இன்றும் மற்ற மார்க்கங் களிலிருந்து கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளும் பலரின் நிலையும் இதுவே.

சுய வெறுப்பைப் பற்றிப் பேசியவுடன் இயேசு வெட்கமில்லாமல் அவருக்காய்ச் சாட்சி கூறுவதை நாம் தியானித்துக் கொண்டிருக்கும்

வசனப்பகுதியில் வலியுறுத்துவதைக் கவனியுங்கள். “என்னைக் குறித்தும் என் வார்த்தைகளைக் கூறித்தும் எவன் வெட்கப்படுகிறானோ, அவனைக் குறித்து மனுமகனும் தமது மகிமையோடும் பிதாவின் மகிமையோடும் பரிசுத்த தூதர்களின் மகிமையோடும் வரும்போது வெட்கப்படுவார்’’ (லூக் 9:26). நமது தலைமுறை “விபச்சாரமும் பாவமும் நிறைந்த சந்ததி’’ ஆகும் (மாற் 8:38). தயங்காது சாட்சி சொல்லிக்கொண்டிருக்க வேண்டுமானால் நாம் உள்ளும் புறம்பும் பல சக்திகளுக்கு எதிராகச் செயல்பட வேண்டும். இலகுவான சிலுவை என்று ஒன்றில்லை! “காரணமில்லாமல்’’ கிறிஸ்துவின் காரணத்திற்காய் நாம் உலகத்தால் பகைக்கப்படுவோம் (யோ 15:18-25). துன்புறுத்தலைத் தவிர்த்துவிடுவதால் நமது உடலை ஒருவேளை காத்துக்கொண்டாலும், நித்திய பலனை இழந்துவிடுவோமே (லூக் 9:24). “நமது ஜீவனைக் காக்க விரும்பி, நமதையும் இழந்துவிடுகிறோம்; பிறதையும் இழந்துவிடுகிறோம்’’ என்று இச்சத்தியத்தை பக்தன் லியோனார்டு ரேவன்ஹில் வேறுவிதமாய்ச் சொன்னார்!

### *சமாதானமா, பட்டயமா?*

“சிலுவை’’ எனும் சொல் புதிய ஏற்பாட்டில் முதன்முறையாக மத்தேயு 10:38இல் வருகிறது. கிறிஸ்துவுக்காகச் சாட்சிபகர விரும்புபவன் எவ்விதம் தனது நெருங்கிய உறவினரது விருப்பத்திற்கும் எதிராகச் செல்ல வேண்டியதிருக்கும் என்பதை பற்றிப் பேசப்பட்ட இடமே இப்பகுதி. வசனங்கள் 27 முதல் 39 வரை கவனமாய் வாசித்துப் பாருங்கள். அவர்கள் தங்கள் குடும்பத்தினரைப் பிரியப்படுத்தப் பின்தங்கியிருந்தால் உலகம் எத்தனையோ பெரிய மிஷனரிகளை கண்டிருக்காது. ஒருவேளை முழுநேரப் பணியில் இறங்காவிட்டாலும் முழுமுச்சாய் ஆத்துமாதாயத் திட்டங்களில் தங்கள் பிள்ளைகள் பங்குபெறுவதைக்கூட அநேகப் பெற்றோர் விரும்புவதில்லை. இவ்விதச் சூழலில் கிறிஸ்துவின் “பட்டயம்’’ வேதனை தரும் வகையில் செயல்படத்தான் செய்யும் (வச 34).

கிறிஸ்துவின் இறுதிப் பேராணையை நிறைவேற்றும்படி அவர்மீது நமக்குள்ள நேசத்தோடு பிற பாசங்களை ஒப்பிடும்போது அவை வெறுப்புக்கே சமமாகும்! (லூக் 14:26; மத் 10:37). சுவிசேஷம் பரவ நாம் எவ்வளவு தியாகம் செய்ய ஆயத்தமோ அந்த அளவிற்குத்தான் நாம் சுவிசேஷத்தை நேசிக்கிறோமென்றார் ஒரு பக்தன்.

### *தள்ளப்படுதலும் வேதனையும்*

இயேசுவைப் பின்பற்ற விரும்புபவன் “தன்’’ சிலுவையை எடுத்து வரவேண்டும். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான கடின பாதையைக் கடவுள் நியமித்துள்ளார். அதிலிருந்து தப்பியோட நாம் முயலக்கூடாது.



“தன் இளம்பிராயத்தில் நுகத்தைச் சுமக்கிறது மனிதனுக்கு நல்லது. கர்த்தரே அதை தன் மேல் வைத்தாரென்று அவன் தனித்திருந்து மவுனமாயிருக்கக் கடவன்... அவர் சஞ்சலப்படுத்தினாலும் தமது மிகுந்த கிருபையின்படி இரங்குவார்’’ (புல 3:27-33). சிலுவையென்பது நமக்குத் தாழ்மைப்படுத்துகிற, நமக்கு வெட்கத்தை கொண்டுவருகிற, எளிதில் அகலாத, அல்லது நமது பழைய சுபாவத்திற்கு வேதனையான ஒரு பரீட்சையாயிருக்கலாம். அது நமது இருதயத்தில் குடிகொண்டிருக்கும் பெருமைக்குச் சாட்டையடியாயிருக்கும்.

சிலுவையானது சிட்சையையும் குறிக்கும். “நீங்கள் சிட்சையைச் சகிக்கிறவர்களாயிருந்தால் தேவன் உங்களைப் புத்திரராக எண்ணி நடத்துகிறார்’’ என்று பொருள் (எபி 12:2,7). பலவீனத்தில்தான் நாம் தேவனது வல்லமையை நன்கு அனுபவிக்கிறோம் “இயேசு பலவீனத்தால் சிலுவையில் அறையப்பட்டிருந்தும், தேவ வல்லமையால் பிழைத்திருக்கிறார்; அப்படி நாங்களும் அவருக்குள் பலவீனராயிருந்தும், உங்களிடமாய் விளங்கிய தேவ வல்லமையினால் அவரோடு பிழைத்திருப்போம்’’ (2 கொரி 13:4).

### *தினமும் சிலுவை*

சிலுவை சுமத்தல் என்பது ஏதோ நமக்கு நிகழும் ஓரிரு சம்பவங்களல்ல; அதுவே நமது வாழ்வாகிவிடவேண்டும். சிலுவையை “அனுதினமும்’’ எடுத்துக்கொள்ளவேண்டும்! நாம் நமது தினசரிக் கடமைகள், பொறுப்புகளிலும் பிரச்னைகளைச் சந்தித்துக்கொண்டேயிருக்க நேரிடலாம். “பாவிகளின் விபரீதம்’’ நமது பங்காகும். நம்மைப் பிறர் குத்திக்கொண்டேயிருப்பர். ஆனால் நாம் நமது ஆத்துமாவில் சோர்ந்து தைரியமிழந்துவிடக்கூடாது. பாவத்திற்கு விரோதமாய்ப் போராடுவதில் இரத்தம் சிந்தவும் வேண்டியதிருக்கும் (எபி 12:3,4).

### *சிலுவையும் கிரீடமும்*

சிலுவையானது கிறிஸ்துவின் வாழ்வின் முடிவல்ல. அவர் தமது சிலுவைப்பாதையில் நடந்து முடித்தபோது மகிமையினாலும் கனத்தினாலும் முடிசூட்டப்பட்டார். அதே பாதையில் நாம் அவரைப் பின்பற்றும்போது,

*அச்சிலுவையை நான் பாராட்டுவேன்;*
*ஜெயச்சின்னமடையும் வரை;*
*நான் சிலுவையைப் பற்றிக்கொண்டு*
*அதைக் கிரீடத்திற்காய் மாற்றுவேன்!*

எனப் பாடிக்கொண்டே செல்லலாம்!

‘’ “”’—

# 4

# ஆராதனையின் அடுத்த பக்கம்

மனுக்குலத்தின் வாழ்விலும் சபைச் சரித்திரத்திலும் அனந்த பாக்கியமுள்ள நாட்கள் இவையே. படைப்பை அடுத்துப் பராபரன் தொடங்கிய சீர்திருத்தப்பணி உச்சநிலையை அடையப்போகிறது. “சீர்திருத்தக் காலம்” முடிவடையும் தருவாயில் இருப்பதால் கர்த்தராகிய இயேசுவும் அதிசீக்கிரம் வரவிருக்கிறார். அகிலவுலகிலும் இறைமக்கள் “கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்து புத்துணர்வின் காலங்களை” அனுபவித்துக்கொண்டிருக்கின்றனர் (அப் 3:19-21). தான் வெளியே விட்டுவிடப்படக்கூடாதென விரும்பும் எவனும் தனது சொந்த வழிகளிலிருந்து கர்த்தரது வழிகளுக்குத் திரும்பிக்கொண்டே இருக்க வேண்டும்.

“எல்லாம்” சீர்திருத்தப்படவேண்டுமெனத் தேவன் செயல்பட்டுக்கொண்டிருக்கும்போது, மனிதரோ தங்களுக்குப் பிரியமானவற்றை மட்டும் பிடித்துக்கொள்கின்றனர். ஏதோவொரு சத்தியம் அல்லது அனுபவத்தை மட்டுமே பிடித்துக்கொண்டு மற்ற சத்தியங்களையும் அனுபவங்களையும் விட்டுவிட்ட சோகச் சம்பவங்களால் சரித்திரம் நிறைந்திருக்கிறது. திரும்பப் பெறப்பெற்ற அந்தவொரு சத்தியத்திலும், அதின் ஒரு பக்கத்திலேயே திளைத்திருந்து அடுத்த பக்கத்தையோ விட்டுவிடுகின்றனர். இதோவோர் எடுத்துக்காட்டு: பண்டகசாலைத் தசமபாகப் பழக்கம் தீர்க்கன் மல்கியாவின் காலத்தில் மறக்கப்பட்டிருந்தது. இது தேவனையே கொள்ளையடிப்பதற்குச் சமமென அவன் மக்களைக் கடிந்துகொண்டான். ஆனால் அதற்கடுத்த காலங்களில் உருவெடுத்த பரிசேய மார்க்கத்தினரோ தசமபாகப் பிரமாணத்தின் எழுத்தைப் பிடித்துக்கொண்டு இத்திருச்சட்டத்தின் உட்கருத்தையோ விட்டுவிட்டார்கள். இயேசுவின் நாட்களில் இப்பரிசேயர் தசமபாக வித்தகர்களாயிருந்தனர். “புதினா, சோம்பு, சீரகம்” ஆகியவற்றில் தசமபாகம் செலுத்திவிட்டு “நீதி, இரக்கம், விசுவாசம்” ஆகியவற்றையோ தவற விட்டுவிட்டனர். பின்னுள்ள மூன்றைத்தான் முக்கியமானவைகளென இயேசு குறிப்பிட்டு, இலகுவானவற்றை மட்டும் தெரிந்துகொண்ட அப்பிரமாணக்காரரைக் குற்றஞ்சாட்டினார். “இவைகளையும் செய்ய வேண்டும்; அவைகளையும் விடாதிருக்க வேண்டும்” என முடிவாய்ப் போதித்தார் (மத் 23:23).

இன்று எழுப்புதல், புதுப்பித்தல் அல்லது திரும்பப் பெறுதல் போன்றவற்றை வலியுறுத்தும் ஊழியங்களில் அதிகமாகப் பேசப்படும் ஒன்று ஆராதனை ஆகும். மிகவும் நன்று. ஆனால் ஆராதனையின் ஒருபக்கம் மட்டுமே வலியுறுத்தப்பட்டு அதின் மறுபக்கமோ பெரும்பாலும் அறியப்படாது அல்லது கவனிக்கப்படாது விடப்பட்டுள்ளது. மூன்று பல்லவிகள் பாடவேண்டும்; மூன்று பாடல்கள் பாடவேண்டும்; கடைசி இரு சரணங்களை கண்களை மூடிக் கரங்களை உயர்த்தி மும்முறை பாடவேண்டும்; இதுதான் ஆராதனையென்று பலரும் புரிந்திருப்பதாகும். ஆராதனையைக் குறித்து வேதம் போதிப்பதில் இது 10 சதவீதங்கூடக் கிடையாது. ஆராதனையின் அடுத்த பக்கம் யாது ?

## 1. உடலைப் படைத்தல்

அவனது மறுபிறப்பிற்கு முன்னரும் பின்னரும் அப்போஸ்தலன் பவுல் தொழுகையில் தீவிரமாயிருந்தான். பழைய ஏற்பாட்டு யேகோவாதான் தம்மைப் புதிய ஏற்பாட்டு இயேசுவில் வெளிப்படுத்தினாரென்பதை ஒத்துக்கொள்வதில்தான் அவனுக்குப் பிரச்னை. அவனது ஊழியம் முழுவதுமே ஆராதனையின் ஆவியால் நனைந்திருந்தது. ஆழமான உபதேச நிருபங்களை எழுதிக்கொண்டிருக்கும்போதே அவ்வப்போது ஆராதிக்க துடிப்புடன் துவங்கிவிடுவான். இதற்கு ரோமர் 11:33-36 ஓர் எடுத்துக்காட்டாகும். தேவனது நிறைவான நிறைவு, பூரணமான பூரணம், குறைவற்ற குறைவின்மை ஆகியவையே இப்புகழாரத்தின் கருத்தாகும். இறைவன் ஆதிமுதல் அந்தம்வரை ஏற்கனவே எல்லாவற்றிற்கும் சொந்தக்காரரானதால் நாம், சரியாய்ச் சொல்லவேண்டுமானால், அவருக்கு எதையும் “கொடுக்க” முடியாதென்பதே இப்பகுதியில் பவுலின் வாதம். அத்தேனே நகரின் மார்ஸ் மேடையில் நின்றுகொண்டு அவன், “உலகையும் அதிலுள்ள அனைத்தையும்

படைத்த கடவுள் விண்ணுக்கும் மண்ணுக்கும் ஆண்டவர்... அனை வருக்கும்... அனைத்தையும் கொடுக்கிற அவர், தமக்கு யாதொன்று தேவையானது போல, மனிதர் கைகளால் பணிவிடை கொள்ளுகிறது மில்லை'' என முழங்கினான்! (அப் 17:24,25). ''அப்படியிருக்க'' என்று அவன் தொடர்ந்து, ''உங்கள் உடல்களை... ஒப்புக்கொடுங்கள்... இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை'' என அழுத்திக் கூறுகிறான் (ரோ 12:1).

இச்சத்தியத்தின் அதிமுக்கியத்தை நீங்கள் உணர்ந்ததுண்டா? துதி யையும் தொழுகையையும் உடலின் பரிசுத்தத்திற்கு எளிதான மாற்றாக்க முடியும். ஆயி நகரில் படுதோல்வியடைந்ததையடுத்து, யோசுவா பாளையத்திலிருந்த பன்னிரு கோத்திரங்களிடையே தீவிரப் பரிசோதனை யொன்று நடத்தினான். கண்டுபிடிக்கப்பட்ட ஆகான் யூதா கோத்திரத்தைச் சேர்ந்தவனாயிருந்தது என்னே பரிதாபம்! யூதா என்றால் துதி என்று பொருள்! அவனது இச்சையெனும் பாவத்தை ''அறிக்கைபண்ணி'' அவ்விதம் தேவனாகிய கர்த்தரை ''மகிமைப்படுத்தும்படி'' யோசுவா அவனைக் கடிந்துகொண்டான் (யோசு 7:16-21). அப்பப்பா, நமது உடலின் பாவங்களை நாம் எத்தனை முறை உதட்டின் தொழுகையால் மூடி மறைக்கிறோம்!

நமது ஆராதனைக்கு உயிரும் ஊக்கமும் தருபவர் பரிசுத்த ஆவி யானவரே. ஆனால் அவர் தங்கியிருப்பது நமது பௌதீக உடல்களில்தான் என நாமறிவோமா? சதையினாலும் இரத்தத்தினாலுமான நமது உடலே ஆவியானவரின் ஆலயமென்று வேதம் திரும்பத் திரும்ப வலியுறுத்துகிறது. ஆலயமென்றால் ஆராதனையகம். எருசலேம் ஆலயத்தில் இயேசுவுக்கு வந்த கடுங்கோபம் இதையே படிப்பிக்கிறது. தங்களது பொற்கோயிலைத் தீட்டுப்படுத்திவிட்டோரை இன்றுவரை சீக்கிய சமுதாயத்தினரால் மன்னிக்கமுடியவில்லை. எல்லாவித அசுத்தத்திலிருந்தும் நமது உடல் களைக் காத்துக்கொள்வதில் நமக்கு இவ்விதத் தீவிர வைராக்கியம் உண்டோ? பரிசுத்த அலங்காரமில்லாத ஆராதனை அலங்கோலமானது. துதியானது வலியுறுத்தப்படுமளவிற்கு இன்று தூய்மை வலியுறுத்தப் படுவதில்லை. ஊனியல்பைச் சிலுவையிலறைதல் போதுமான அளவு போதிக்கப்படுவதில்லை. இப்படியே போய்க்கொண்டிருந்தால் வெற்றி யெதுவும் காணாத வறட்டுக் கூச்சல்களுக்கே நாம் பழகிவிடுவோம்.

## 2. கேள்விகேட்காத கீழ்ப்படிதல்

"Worship" என்ற சொல் ஆங்கில வேதத்தில் முதல் தடவையாக ஆதியாகமம் 22:5இல்தான் வருகிறது. ''ஆபிரகாம் தன் வேலைக்காரரை



நோக்கி, நீங்கள் கழுதையோடு இங்கே காத்திருங்கள்; நானும் பையனும் அவ்விடம் சென்று, **தொழுதுகொண்டு** திரும்பிவருவோம் என்றான்.'' தனக்குப் பிரியமான தனது ஒரே மகனைக் கர்த்தருக்குப் பலி செலுத்து வதையே இவ்விசுவாசத் தந்தை தொழுகை எனக் குறிப்பிட்டான். இதற்குச் சற்று முன்னர்தான் ஆபிரகாம் பெயர்செபாவில் ஏசல் மரத்தை நட்டு அங்கு கர்த்தரைத் தொழுதுகொண்டதைப் பார்க்கிறோம் (21:33). இது வழக்கமான ஆராதனையாகும். ஆனால், ஆராதனையின் அடுத்த பக்க மாகிய கேள்விகேட்காத கீழ்ப்படிதலையும் ஆபிரகாம் அறிந்திருந்தான். சொற்பகாலமே இப்பூவுலகில் தனக்கு மகனாயிருப்பவனை ''சதாகால முமுள்ள'' தேவனாகிய கர்த்தருக்குக் கொடுத்துவிடுவது அவனுக்கு பெரிதாய்த் தெரியவில்லை!

ஆராதனையின் இவ்வடுத்த பக்கத்திற்குப் புதிய ஏற்பாட்டில் நேர்த்தி யானதோர் எடுத்துக்காட்டு அந்தியோகியா சபையாகும். அச்சபையினர், குறிப்பாக அங்குள்ள தலைவர்கள், ஆராதிப்பதில் வல்லவர்கள். உப வாசத்துடன் ''கர்த்தருக்கு'' ஆராதனை செய்வதற்கு அவர்கள் தங்களை அர்ப்பணித்திருந்தார்கள். அப்பொழுது அவர்களது பக்திக்கு பரிசோதனை வந்தது. பரிசுத்த ஆவியானவர் பேசினார். ''உங்களை ஆசீர்வதிக்க நான் இங்கே வந்திருக்கிறேன்'' என்று அவர் சொல்லவில்லை. ஆராதனை வேளைகளில் தீர்க்கதரிசனமென்று இன்று பெரும்பாலும் சொல்லப் படுவது இதுவே. அந்தியோகியாவிலோ அது அப்படியல்ல. ''பர்னபாவையும் பவுலையும் மிஷனரிப்பணிக்குப் பிரித்து அனுப்பிவிடுங்கள்!'' பண்பான பர்னபாவும் பரவசமான பவுலும் அச்சபையாருக்கு இரு கண்கள் போன்றவர். ஆனால் உண்மையான ஆராதனையில் சுயநலத்திற்கும் சுயநாட்டத்திற்கும் இடமேது? அவர்கள் அந்தியோகியாவின் ஊர்த்தெய்வத்தையல்ல, அண்டசராசரங்களின் ஆண்டவரையல்லவா ஆராதித்துக்கொண்டிருந் தார்கள்! பூமியை அவரை அறிகிற அறிவினால் நிறைக்க எதையும் விட்டுவிடும் அளவிற்கு அவர்கள் ஆண்டவரை நேசித்தார்கள்.

ஆபிரகாம் தனிக் கீழ்ப்படிதலையும் அந்தியோகியாவினர் கூட்டுக் கீழ்ப்படிதலையும் நமக்குப் போதிக்கின்றனர். ஆபிரகாம் முழுக் கிறிஸ்தவ சமுதாயத்திற்கும் தந்தையானான்; அந்தியோகியாவினரே முதன் முறையாகக் கிறிஸ்தவரென அழைக்கப்பட்டனர். கீழ்ப்படிதலுள்ள ஆராதனைக்காரர் தேவனைக் கனம்பண்ணுகின்றனர்; அதற்குப் பிரதிபலனாகத் தேவன் அவர்களைக் கனம்பண்ணுகிறார்.

ஆராதிப்பது கிளர்ச்சி மிகுந்ததாயிருக்கலாம்; கீழ்ப்படிதலோ கிரயம் மிக்கது. மக்களது உணர்ச்சிகளைக் கிளறிவிடுவதையே நோக்காய்க்

கொண்டு தொழுகை நடத்துவோரைப் பார்த்து எனக்குச் சலித்துப் போயிற்று. "நமக்கு" நன்றாயிருப்பதற்காக ஆடிப்பாடுவதா ஆராதனை ? இவ்விதச் சுயநோக்கு நமது ஆராதனைக்கு எதிரி. தேவனை மையமாய்க் கொண்டதே உண்மையான தொழுகை. அதின் நோக்கமே தேவன்தான். எக்கிரயம் செலுத்தியும் தேவனைப் பிரியப்படுத்தவேண்டுமென்பதே அதின் ஒரே நோக்கம். இதைத்தான் இஸ்ரவேலரின் முதல் அரசன் கற்றுக்கொள்ளத் தவறினான். அவன் தேவனுக்குக் கீழ்ப்படியவில்லை. தனக்கென்று ஒரு நினைவுச் சின்னம் அமைத்தான். அவன் பிரபலம் விரும்பிப் புகழ்நாடினவன். இவையெல்லாவற்றிற்கும் மேல் பலிசெலுத்துவதிலும் தீவிரமாயிருந்தான். அவனைத் தீர்க்கதரிசி, "கர்த்தருடைய குரலுக்குக் கீழ்ப்படிவதைவிட எரி பலிகளும் பிற பலிகளும் அவருக்குப் பிரியமாயிருக்குமோ ? பலியைவிடக் கீழ்ப்படிதல் சிறந்தது" எனக் கண்டித்தான் (1 சாமு 15:12-25).

தனி நபர்களாக, குடும்பங்களாக, சபைகளாக நமது கீழ்ப்படியாமையைக் கணக்கெடுப்போம். காரியங்களைச் சரிசெய்து, எக்கிரயமானாலும் தேவனுக்குக் கீழ்ப்படியாவிடில், நமது ஆராதனைகளும் ஆரவாரங்களும் அர்த்தமற்றவையாகவே இருக்கும்.

### 3. அன்பு நிறை உறவுகள்

திருச்சட்டத்தில் மிகப்பெரிய கட்டளை எதுவென சுயநீதிக்காரனான அந்த நியாயப்பிரமாண அறிஞன் வினவியபோது, இயேசு மறுமொழியாக, "உன் தேவனாகிய கர்த்தரிடம் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆன்மாவோடும், உன் முழு மனதோடும் அன்பு செலுத்து" என்று கூறினார். கேள்வி கேட்டவனைப் பொறுத்தமட்டில் இப்பதில் நிறைவானது. ஆனால் இயேசுவைப் பொருத்தமட்டில் அவரது பதில் இன்னும் நிறைவுபெற வில்லை. எனவே அவர் தொடர்ந்து, "இதற்கு இணையான இரண்டாம் கட்டளை என்னவென்றால், உன்னிடம் நீ அன்புகூருவதுபோலப் பிறனி டத்திலும் அன்புகூருவாயாக" என்றார் (மத் 22:35-39). ஆண்டவருக்கு நிறைவேற்றவேண்டிய கடமைகளில் தீவிரங்காட்டிய அன்றையப் பரிசேயர் அயலானுக்கு நிறைவேற்றவேண்டிய கடன்களில் தவறினார். இரண்டாம் கட்டளை இரண்டாந்தரமானதல்ல. இரண்டாம் கட்டளையை இயேசு முதலாம் கட்டளைக்கு "இணையானது" என்றார்! தேவன் மீதுள்ள பாசம் ஆராதனையின் ஒருபக்கம் மட்டுமே. மனிதர் மீதுள்ள பாசமே அதின் அடுத்த பக்கம். ஏதோவொரு பக்கம் அச்சு இல்லாத ஒரு நாணயத்தைக் கற்பனை செய்துபாருங்கள்!

ஒருவரோடொருவர் அன்பில் நடந்துகொள்ளுதலே தேவனுக்குப் பலிகளைச் செலுத்துவதின் மறுபக்கம் (எபே 4:31; 5:2). மனிதரை மதிப்பதே



கடவுளுக்குப் பயப்படுவதின் மறுபக்கம் (லூக் 18:2,4). மனிதரோடு நமது சமதள உறவு சரியாயில்லாவிடில் கடவுளோடு நமது செங்குத்து உறவு சாத்தியமில்லை. இயேசுவின் அன்பில் சோகமடைந்திருந்தவன் அப்போஸ் தலன் யோவான். இயேசுவுக்கு அன்பாயிருந்தவனும் அவர் மார்பில் சாய்ந்திருந்தவனுமானவன் என்று தன்னை அவன் அறிமுகப்படுத்து கிறான் (யோ 21:20). இவன்தான் இதோ நமக்கோர் சவால் விடுகிறான்: "தான் கண்ட சகோதரனிடம் அன்புகூராமலிருக்கிறவன் தான் காணாத தேவனிடம் எப்படி அன்புகூருவான் ?" அன்று அந்த நியாயப்பிரமாணக் காரனுக்கு இயேசு அளித்த பதிலையே யோவான் திரும்பச் சொல்லுகிறான்: "கடவுளிடம் அன்புகூருகிறவன் தன் சகோதரனிடமும் அன்புகூர வேண்டும்" (1 யோ 4:20,21). கடவுளைத் துதிக்கும் நாவு மனிதரைத் தூற்றுவது எப்படி ? (யாக் 3:8-18).

இதனால்தான் கடவுளுக்குக் காணிக்கை செலுத்துமுன் புண்பட்ட சகோதரனோடு முதலாவது ஒப்புரவாகவேண்டுமென இயேசு அழுத்திக் கூறினார் (மத் 5:23,24). ஒப்புரவாகத் தாழ்மையும் சுயமறுப்பும் அத்தி யாவசியம். அது கடினந்தான். இன்னொரு மைல் போவதைவிட இன்னு மொரு மணிநேரம் போற்றித் தொழுவது சுலபம். ஆனால் இவ்விதத் தொழுகையில் வாசனை இருக்காது. அதை ஆண்டவர் அருவருக்கிறார்.

### 4. அள்ளிக்கொடுக்கும் காணிக்கை

தீர்க்கன் சாமுவேலின் பக்தியுள்ள தாய் அன்னாள் நமக்கு ஆராதனையின் மறுபக்கத்தின் இன்னொரு அம்சத்தைக் கற்பிக்கிறாள். இதோ வாசியுங்கள்: "அவள் அவனைப் பால்மறக்கப் பண்ணினபின்பு... அவனையும் கூட்டிக்கொண்டு கர்த்தருடைய ஆலயத்திற்குப் போனாள்... அவர்கள் ஒரு காளையைப் பலியிட்டு, பிள்ளையை ஏலியினிடம் கொண்டுவந்து விட்டார்கள். அப்பொழுது அவள்: இந்தப் பிள்ளைக்காக விண்ணப்பம் பண்ணினேன்; நான் கர்த்தரிடத்தில் கேட்ட என் விண்ணப் பத்தின்படி எனக்குக் கட்டளையிட்டார். ஆகையால் அவன் உயிரோடிருக்கும் சகல நாளும் அவனைக் கர்த்தருக்கே ஒப்புக்கொடுக்கிறேன். என்றாள். அவர்கள் அங்கே கர்த்தரைப் பணிந்துகொண்டார்கள்" (1 சாமு 1:24-28). ஒரு காளையைப் பலியிட்டுக் கர்த்தரைத் தொழுதுகொள்ளுவது அன்று வழக்கமான செயல். ஆனால் சொந்தப் பிள்ளையையே கொடுத்து விடுவது அபூர்வம். இதுதான் ஆராதனையின் மறுபக்கம். கிரயம் செலுத்தாத தொழுகை விரயம்!

ஒருவருக்கு இரு பிள்ளைகளிருந்தால் தேவனுக்கென்று கொடுத்துவிட ஒரு பிள்ளை கூடுதலாகவே இருக்கிறதென்ற கருத்துடையவன் நான்.

தேவன் தமது ஒரே மகனை இரத்தச்சாட்சி மிஷனரியாக அனுப்பி வைத்தார். கர்த்தர் மோசேயை நோக்கி, "இஸ்ரவேல் மக்களிடையே மனிதரிலும் மிருகங்களிலும் கருப்பையைத் திறக்கும் தலைப்பேறு அனைத்தையும் எனக்குப் பிரித்துவை : அது என்னுடையது" என்றார் (யாத் 13:1,2). தேவனது இக்கோரிக்கையைக் கிறிஸ்தவர்கள் நிறைவேற்றும்வரை, ஊழியர் பற்றாக்குறையினால் அகிலவுலக நற்செய்திப்பணி பாதிக்கப்பட்டுக் கொண்டேயிருக்கும். மிஷனரிப்பணியைக் குறித்துச் சிந்திக்கும்படி நமது குமாரர் குமாரத்திகளை நாம் உற்சாகப்படுத்துவதுகூட கிடையாது. பின்னை ஏன் *"ஐயா, உம் திருநாமம் அகிலமெல்லாம் பரவவேண்டும்"* என்று திரும்பத் திரும்பப் பாடவேண்டும் ? மாய்மால மன்னர்கள் நமக்கு நிகர் யார் ?

ஆராதனையின் இம்மறுபக்கத்தை விளக்கும் இன்னொரு நபர் இயேசுவின்மீது வாசனைத் தைலம் ஊற்றிய அப்பெண்மணி. அவள் அவரது காலடிகளைத் கண்ணீரால் கழுவினாள். அவரை முத்தம் செய்தாள். இதையெல்லாம் நாம் செய்துவிடுவோம். ஆனால் அதற்கு அடுத்த செயலே கடினமானது. தனது விலையுயர்ந்த உசிதமான தைலத்தையும் ஊற்றி விட்டாள். இதுவே ஆராதனையின் மறுபக்கம். கூடுதல் சில பாடல்களும் பல்லவிகளும் பாடுவது நமக்குப் பிரச்னையில்லை. ஆனால் பத்திலொன் றிற்குமேல் கூட்டிக் கொடுக்கச் சொல்லிவிட்டால் முறுமுறுப்பு. குதூகல மாய்ப் பாடுதல் கணக்கின்றிக் கொடுத்தலுக்கு நம்மை வழிநடத்தாவிடில் அது ஆவியற்ற ஆராதனை. "Worship" எனும் சொல் "worthship" எனும் மூலக் கருத்திலிருந்து வருகிறது! "கிறிஸ்து எனக்காய் மரித்திருப் பாரானால், அவருக்காய் நான் செய்யும் தியாகம் எதுவும் பெரிதல்ல !"

## 5. தருமச் செயல்கள்

சமூகச் சேவையை ஆன்மீக ஆராதனையிலிருந்து கிறிஸ்தவ உலகம் வேறு பிரித்துவிட்டது துர்ப்பாக்கியம். தரித்திரரின் தவிப்பைக் கவனி யாது, தந்தானைத் துதிப்பது கர்த்தருக்குக் கசடு என நாமறியாதது ஏனோ ? தீர்க்கன் ஏசாயா இவ்விதம் முழங்கினான் : "கர்த்தருடைய வார்த்தையைக் கேளுங்கள்: இனி வீண் காணிக்கைகளைக் கொண்டு வரவேண்டாம்; தூபங்காட்டுதல் எனக்கு அருவருப்பாயிருக்கிறது; நீங்கள் அக்கிரமத்தோடே ஆசரிக்கிற மாதப்பிறப்பையும், ஓய்வுநாளையும், சபைக் கூட்டத்தையும்... என் ஆத்துமா வெறுக்கிறது... நீங்கள் உங்கள் கைகளை விரித்தாலும் என் கண்களை உங்களைவிட்டு மறைக்கிறேன்.... நன்மை செய்யப் படியுங்கள்; நியாயத்தைத் தேடுங்கள்; ஒடுக்கப்பட்டவனை ஆதரித்து, திக்கற்றப் பிள்ளையின் நியாயத்தையும் விதவையின்



வழக்கையும் விசாரியுங்கள்" (ஏசா 1:13-17). சந்தைவெளிகளில் சமூகச்சேவைகளுக்கு நம்மை வழி நடத்தாத சபைக்கூடுகைகளின் நிகழ்ச்சிகளைச் சுமந்து தேவனே இளைத்துப் போனாராம். இங்கு சுட்டிக்காட்டப்பட்டுள்ள அக்கிரமங்களும் செந்நிறப் பாவங்களும் தருமக்காரியங்களில் தவறியவையே (வச 17,18).

எபிரேயர் நிருப அறியப்படா ஆக்கியோன் இச்சத்தியத்தைக் குறிப் பாய் வலியுறுத்துகிறான். "அவரது நாமத்தைத் துதிக்கும் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திர பலியை அவர்மூலமாய் எப்போதும் தேவனுக்குச் செலுத்தக் கடவோம்" (எபி 13:15). நாம் பொதுவாக இங்கு நிறுத்தி விடுவோம்.. ஆனால் நிருப ஆக்கியோன் ஆராதனையின் அடுத்த பக்கத் திற்குக் கடந்து செல்லுகிறான். அடுத்த வசனம் : "அன்றியும்..." எனத் துவங்குகிறது. "அன்றியும் நன்மை செய்யவும், தானதர்மம் பண்ணவும் மறவாதிருங்கள்; இவ்விதப் பலிகளின்மேல் தேவன் பிரியமாயிருக்கிறார்." இடைவிடாது தேவனைத் துதிக்கக் கட்டளை பெற்றிருக்கிறோம்; அதே வேளையில் எளியவரையும் நசுக்கப்பட்டோரையும் தூக்கிவிடவும் கடன்பட்டிருக்கிறோமென்ற அடுத்த பக்கத்தை "மறவாதிருக்க" நினைப்பூட்டப்படுகிறோம்.

தொழுகைப் பாடல்கள், பல்லவிகளில் பெரும்பாலானவை கிறிஸ்துவை ஆண்டவரென்றும் இராஜாவென்றும் உயர்த்துகின்றன. நியாயத்தீர்ப்பு நாளில் அதே இராஜாதான் இடப்பக்கத்தினரைப் பார்த்து, "சபிக்கப் பட்டவர்களே, என்னைவிட்டு.... நித்திய அக்கினியிலே போங்கள். பசியா யிருந்தேன், நீங்கள் எனக்கு உணவு கொடுக்கவில்லை; தாகமாயிருந்தேன், என் தாகத்தைத் தணிக்கவில்லை— மிகவும் சிறியவர்களாகிய இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்யாதிருந்தீர்களோ, அதை எனக்கே செய்யாதிருந்தீர்கள்" என்பார் (மத் 25:31-46). நமது நித்தியத்தையே நிர்ணயிக்கும் இவ்வளவு முக்கியமான காரியத்தைக் குறித்து நாம் எவ்வளவு கவலையீனமாயிருக்கிறோம் !

முதல் சபையானது இருபக்கமும் நிறைவான சபையாயிருந்தது. விசுவாசிகள் தேவனைத் "துதித்துக்" கொண்டிருந்தார்கள்; அதே வேளையில் மக்களெல்லாரிடமும் நல்லெண்ணமும் பெற்றிருந்தார்கள். அவர்கள் அப்பம் பிட்டு வந்தார்கள்; அதே வேளையில் உணவையும் உடைமைகளையும் பகிர்ந்துகொண்டார்கள். அவர்கள் ஆன்மீக ஒருமைப் பாட்டை அனுபவித்தனர்; அதே வேளையில் பொருளாதாரச் சமன்பாட் டையும் அப்பியாசித்தனர் (அப் 2:44-47). இப்படிப்பட்ட சபையைத்தான் நான் பெந்தெகொஸ்தே சபை என்றழைப்பேன். மற்றபடி அது பெயர் மாறாட்டம்.

கிறிஸ்தவமென்றால் என்னவென்பதை கிறிஸ்தவரல்லாதோருக்குச் சொல்ல அன்னை தெரசா இத்தலைமுறைக் கிறிஸ்தவருக்கிருந்தது பெரும் பாக்கியம். இம்மூதாட்டியார் பக்திவிநயத்தோடு தேவனை ஆராதிப்பவர். ஜெபிக்கவும் தேவனைத் துதிக்கவும் பல மணிநேரங்கள் முழங்காலில் செலவிடுவாராம். அதையடுத்து ஆராதனையின் மறுபக்கத்தை நிறை வேற்றத் தெருக்களுக்குச் சென்றுவிடுவார். பாதாளத்தின் வாசல்களில் செத்து அழிந்துகொண்டிருப்போரைத் தூக்கியெடுத்தார். ஆம், அவர் சொல்லாலும் செயலாலும், ஆவியோடும் உண்மையோடும் தேவனைத் தொழுதுகொள்கிறவராய் இருந்தார். "சமூகச் சேவையில்லாத ஆன் மீகச் செய்தி உடலில்லாத உயிர்; ஆன்மீகச் செய்தியில்லாத சமூகச் சேவை உயிரில்லாத உடல்" என்றார் ஒருவர். ஆமென்!

### 6. முன்மாதிரியான வாழ்க்கைமுறை

கடவுளை மகிமைப்படுத்துவதே ஆராதனையின் தூய நோக்கமாகும். மற்றெந்த நோக்கும் மாசற்றதல்ல. துதியின் வார்த்தைகள் தேவனை மகிமைப்படுத்தும் வழிகளில் ஒன்று மட்டுமே. நமது வாழ்க்கையானது நீதியான செயல்களால் நிறைந்திருந்தால் அது தேவனை வெகுவாய் மகிமைப்படுத்தும். நம்மை ஆராயும் வார்த்தைகளில் இயேசு இப்படிச் சொன்னார்: "மனிதர் உங்கள் நற்செயல்களைக் கண்டு பரலோகத்திலி ருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் ஒளி அவர்கள் முன் ஒளிர்க!" (மத் 5:16). இதைத் தொடர்ந்து பவுல், "நீங்கள் உண்டாலும் குடித்தாலும் எதைச் செய்தாலும் எல்லாவற்றையும் தேவனுடைய மகிமைக் கென்று செய்யுங்கள்" என்றான் (1 கொரி 10:31). ஆம், ஆராதனையை ஆலயத்தோடு நிறுத்திவிடக்கூடாது. அது சமையலறைக்குள்ளும் சாப்பாட்டறைக்குள்ளும் தொடரவேண்டும்! உண்ணுதலும் பருகுதலுங்கூட ஆராதனைப் பாவனைகளாகக்கூடுமானால் நமது அந்தரங்க அல்லது அம்பல வாழ்வில் எதுவுமே தவிர்க்கப்படாது. நாம் எவர் நடுவில் தேவனை மகிமைப்படுத்த வேண்டுமென மூன்று கூட்டத்தாரைப் பவுல் குறிப் பிடுகிறான்: "யூதருக்கும், கிரேக்கருக்கும், தேவனுடைய சபைக்கும் இடறலற்றவர்களாயிருங்கள்" (வச 33). இன்றையச் சூழலில் இம்முக் குழுவினர் பெயர்க் கிறிஸ்தவர், கிறிஸ்தவரல்லாதவர், மெய்க் கிறிஸ்தவர் ஆகியோரை முறையே குறிப்பர். வாழ்க்கைமுறையால் தேவனை வாழ்த்து வது வாயால் அவரை வாழ்த்துவதின் அடுத்த பக்கம். புரட்சிகரமான உள்மாற்றமின்றி முதலாமது சாத்தியமில்லை. "வேர் பரிசுத்தமாயிருந்தால் கிளைகளும் பரிசுத்தமாயிருக்கும்!"



ஏறத்தாழ தனது நிருபங்கள் எல்லாவற்றிலும் வாழ்க்கைமுறைத் தொழுகையைப் பவுல் வலியுறுத்தியுள்ளான். மாறுபாடான இவ்வுலகில் தேவனை மகிமைப்படுத்த வேறுவழியில்லை என்பதை அவன் அறிந் திருந்தான். "சொல்லினாலாவது செயலினாலாவது நீங்கள் எதைச் செய்தாலும் அதையெல்லாம் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே செய்து அவர் மூலமாய்ப் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரியுங்கள்" என்று கொலோசெயருக்கு எழுதினான் (கொலோ 3:17). முந்திய வசனத்தில் (16) "சங்கீதங்கள், கீர்த்தனைகள், ஞானப்பாட்டுகள்" ஆகியவற்றைக் குறிப்பிடுகிறான். இது ஆலயத்திற்குள்ளே தொழுகை. 17ஆம் வசனம் முதல் ஆலயத்திற்கு வெளியேயுள்ள தொழுகையை விவரிக்கிறான். மனைவியராக, கணவராக, பிள்ளைகளாக, பெற்றோராக, வேலைக்கார ராக, தலைவராக அன்றாட வாழ்க்கைச் சூழலில் ஆராதனை. மனைவிமார் "கர்த்தருக்குக்" கீழ்ப்படிகிறதுபோல் தங்கள் கணவருக்குக் கீழ்ப்படிவது ஆராதனை. "கிறிஸ்து" சபையை நேசிப்பதுபோல் கணவர் தங்கள் மனைவிமாரை நேசிப்பது ஆராதனை. பிள்ளைகள் பெற்றோருக்குக் "கர்த்தருக்குப் பிரியமாய்க்" கீழ்ப்படிவது ஆராதனை. தந்தையர் தங்கள் பிள்ளைகளைக் "கர்த்தருக்கேற்ற" கண்டிப்பில் வளர்ப்பது ஆராதனை. வேலைக்காரர் தங்கள் தலைவருக்குக் "கிறிஸ்துவைச் சேவிக்கிறது போலக்" கீழ்ப்படிவது ஆராதனை. தலைவர் தங்கள் வேலைக்காரரைப் "பரலோக எஜமானனைப்" போலக் கருணையுடன் நடத்துவது ஆராதனை (கொலோ 3:18-24; எபே 5:22; 6:9).

வாழ்க்கைமுறை ஆராதனையில் தோல்வியுற்றதாலேயே இன்று சபையானது பூமியின் மீதெங்கும் கவர்ச்சிக் குறைவான கூட்டமாக மாறிவிட்டது. இந்தியாவின் சில பகுதிகளில் கிறிஸ்தவர்கள் என்றாலே பன்றிக்கறி சாப்பிடுபவர்கள், மதுபானம் குடிப்பவர்கள், விருந்துகளில் நடனமாடுபவர்கள் என்றுதான் எண்ணப்படுகிறார்கள். வாரந்தோறும் தேவனைத் துதிக்க ஆலயத்தில் கரங்களை உயர்த்துகிறோம்; ஆனால் அவிசுவாசிகள் நாள்தோறும் குற்றஞ்சாட்டும் விரல்களை நமக்கு நேரே நீட்டித் தேவனைத் தூஷிக்கிறார்கள் (ரோ 2:24; ஏசா 52:5இ). உலகம் நம்மைப் பகைக்கத்தான் செய்யும் என்ற இயேசுவின் வார்த்தைகளை நமக்குப் போர்வையாக்கிக்கொள்ளமுடியாது. ஆம், நாம் பிரசங்கிக்கும் சத்தியத்திற்காய் அவர்கள் நம்மை வெறுக்கலாம். நமது செய்தி கவர்ச்சியற்றதாயிருக்கலாம். ஆனால் நமது செயல்களோ கவர்ச்சி நிறைந் திருக்கவேண்டும் (மத் 5:16). நமது வாழ்க்கை முறை கிறிஸ்தவரல்லா தோரை அல்லேலூயா முழக்கமிடச் செய்யவேண்டும்! கருச்சிதைப்பைச் சட்டபூர்வமாக்கிய ஒரு நாட்டின் மனச்சாட்சியை அன்னை தெரசா குற்றஞ்சாட்டியபோது, அதிபர் பில் கிளின்டன் கூறிய பதில்: "இவ்வளவு அழகாக வாழ்ந்த வாழ்க்கைக்கெதிராக விவாதிக்க முடியுமோ?"

### 7. அநியாயப் பாடுகள்

அநியாயத்தையும் அவமரியாதையாய் நடத்தப்படுவதையும் பொறுமை யோடும் மகிழ்வோடும் சகிப்பதும் ஆராதனையாகும். பேதுருவைக் கேளுங் கள்: "நீங்கள் கிறிஸ்துவின் நாமத்திற்காக நிந்திக்கப்பட்டால் பாக்கிய வான்கள்; ஏனெனில் தேவனுடைய ஆவியாகிய மகிமையுள்ள ஆவியா னவர் உங்கள் மேல் தங்கியிருக்கிறார்; அவர்களாலே தூஷிக்கப்படுகிறார்; உங்களாலேயோ மகிமைப்படுகிறார். ஆனால் உங்களில் ஒருவனும்... தீமை செய்தவனாய்ப்... பாடுபடுகிறவனாயிருக்கக் கூடாது. மாறாக, ஒருவன் கிறிஸ்தவனாயிருப்பதினால் பாடுபட்டால் வெட்கப்படாமலிருந்து, அதின் பொருட்டுத் தேவனை மகிமைப்படுத்தட்டும்" (1 பேது 4:14-16).

இயேசுவைச் சிலுவையிலறைந்தோர் அவரைக் கொலைசெய்துவிட்டோம் என்றெண்ணினர். உண்மையைக் கூறின், அவர் தம்மைத் தேவனுக்குச் "சுகந்த வாசனையான பலியாக ஒப்புக்கொடுக்க" அவர்கள் அவருக்கு உதவினர்! என்னே முரண்பாடு! இதுதான் ஆராதனையின் பரம இரகசியம். நாம் மட்டும் எதிர்க்காமல் முறுமுறுக்காமலிருந்தால் நம் மீது எறியப்படும் ஒவ்வொரு கல்லும் தேவனுக்குச் செலுத்தப்படும் தூப கலசமாகும். ஸ்தேவான் இரத்த சாட்சியாய் மரித்த காட்சியைக் கவனித்துப்பாருங்கள் (அப் 6:12,15; 7:54-60). அவனது தேவதூத முகம். திறந்த வானங்கள். தேவ மகிமையின் தரிசனம். தேவனது வலப்பக்கத்தில் இயேசு. மன்னிப்பு. ஒப்புக்கொடுப்பு. இது ஆராதனையன்றி வேறென்ன?

வெண்ணுடை அணிந்த எண்ணற்ற தொழுகைக் கூட்டத்தினரைச் சந்திக்க இப்பொழுது பரமேறுவோம். அழகாய் நிற்கும் யார் இவர்கள்? "இவர்கள் மிகுந்த உபத்திரவத்திலிருந்து வந்தவர்கள்... ஆகையால், இவர்கள் தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்பாக இருந்து, இரவும் பகலும் அவருடைய ஆலயத்திலே அவரைச் சேவிக்கிறார்கள்!" (வெளி 7:9-15).



# 5

# திருசித்தம் செய்யத் தவறுவதேன்?

திருச்சித்தத்தைக் கண்டுபிடிப்பதைப்பற்றி நாம் ஏராளம் வாசித்திருக் கிறோம், கேட்டிருக்கிறோம்; ஆனால் நாம் தவறுவது அதைக் கடைப் பிடிப்பதிலேயே. திருச்சித்தத்தை அறிந்துகொள்ளுகிறோம், ஆனால் அதை அப்பியாசிப்பதில்லை. இதைச் சுயவஞ்சகம் என்றழைக்கிறான் அப்போஸ் தலன் யாக்கோபு (யாக் 1:22). தீர்க்கன் ஏசாயாவின் அன்றைய இஸ்ர வேலரைக் குறித்த விளக்கம் இன்றையக் கிறிஸ்தவரின் உண்மையான சித்திரமாகும்: "நலமல்லாத வழியிலே தங்கள் நினைவுகளின்படி நடக்கிற கலகக்கார மக்களினத்தின்மீது நாள் முழுவதும் என் கைகளை நீட்டினேன்" (ஏசா 65:2; ரோ 10:21). தமது நேரத்தையும் வெளிப்பாடுகளையும் தேவன் நம்மீது வீணடித்துக்கொண்டிருக்கிறாரென்று இவ்வசனம் சொல்வது போலிருக்கிறது எவ்வளவு துக்கம்!

நாம் ஏன் அல்லது எப்படித் திருச்சித்தம் செய்யத் தவறுகிறோம்? பல காரணங்களில் பலமான ஏழினை இங்கு கவனிப்போம்.

### 1. சுயாதீனம் (INDEPENDENCE)

சொந்த விருப்பத்தின்படியே வாழ்வதை மனிதன் விடுதலை என் றெண்ணுகிறான். ஆனால் ஞானமோ, "மனிதனுக்குச் சரியாய்த் தோன்று

கிற வழி உண்டு; முடிவிலோ அது சாவுக்கு நடத்தும் பாதையாகிவிடும்'' எனக் கதறுகிறது (நீதி 14:12). "இறைச் சித்தம் ஒன்றையே இதய ஏக்கமாய்க் கொண்டுள்ள மனிதனே முழுச் சுதந்திரம் அடைந்துள்ளவன்'' என்று இறைவனோடு பல்லாண்டு இடைபட்டு வாழ்ந்த A. W. டோசர் போன்ற பக்தர் பகன்றனர்.

நமக்குத் தெரியுமோ தெரியாதோ, பெரும்பாலும் நாம் நமது சொந்தத் திட்டங்களுக்கான தேவனது சம்மதத்தையே ஜெபத்தில் நாடுகிறோம். நமது விருப்பங்களை ஜெபத்தில் சொல்லிவிட்டவுடன் அவற்றிற்கு அப்படியே தேவன் புனித ஒப்புதல் தந்துவிடுகிறாரென்பது நமது எண்ணம். அதைத் தொடர்ந்து பெருமையடித்துக்கொண்டு நமது திட்டங்களைச் செயல் படுத்தப் புறப்பட்டுவிடுகிறோம். இவ்வித வாழ்க்கை முறையை வேதம் மிக வன்மையாய்க் கண்டிக்கிறது: "நாங்கள் இன்று அல்லது நாளை இன்ன நகருக்குப் போய் அங்கே ஒராண்டு தங்கி வியாபாரம் செய்து, பணம் ஈட்டுவோம் எனச் சொல்லுகிறவர்களே, கேளுங்கள்: நாளை நடப்பது உங்களுக்குத் தெரியாதே. உங்கள் வாழ்வு எப்படிப்பட்டது ?... ஆதலால்: ஆண்டவருக்குச் சித்தமானால், நாங்கள் உயிரோடிருப்போம்; இன்னின்ன செய்வோம் என்று சொல்ல வேண்டும்'' (யாக் 4:13-16).

நமது கனவுகளும் குறிகளும் பலவேளைகளில் நமக்கு விக்கிரகங் களாகிவிடுகின்றன. அவைகளை அடையாவிடில் வாழ்வே அர்த்தமற்றது என்று நினைத்துவிடுகிறோம். இவ்வித மனப்பான்மையோடு ஏறெடுக்கப் படும் ஜெபம் ஒரு பரியாசமே. நமது வழியிலேயே சென்று நமது விருப்பங்களையே அனுபவிக்க தேவன் நம்மை விட்டுவிடுவார். ஆனால் நாம் அவரது பூரணச் சித்தத்தைத் தவறவிட்டு அவரது அனுமதிச் சித்தத் திலேயே அமர்ந்துவிடுகிறோமென்பதை நாம் மறந்துவிடக்கூடாது. இது நமக்கோ இறையரசுக்கோ உசிதமானதல்ல. தீர்க்கன் எசேக்கியேல் மூலம் வந்த இறைவாக்கு இங்கு பொருத்தமாயுள்ளது: "இஸ்ரவேல் வீட்டாருள் எவனாவது விக்கிரகங்களிடம் தனது மனதைப் பறிகொடுத்துவிட்டு... தீர்க்கதரிசியிடம் வந்தால், கர்த்தராகிய நான் அவனது எண்ணற்ற விக்கிரகங்களுக்கேற்ப பதில் அளிப்பேன்!'' (எசேக் 14:4).

நற்செய்திக் கூட்டமொன்றில் கிறிஸ்துவை ஆண்டவராய் ஏற்றுக் கொண்ட வணிகர் ஒருவர் தனது இல்ல நுழைவாயிலில் "மேலாளர் மாற்றம்'' (UNDER NEW MANAGEMENT) என்றெழுதித் தொங்கவிட்டாராம்! ஆம், கிறிஸ்தவ வாழ்வு என்பது சுயாட்சியிலிருந்து இறையாட்சிக்கு மாறுவதே. மனந்திரும்பிய பவுலின் முதல் கேள்வியே, "ஆண்டவரே நான் என்ன செய்யச் சித்தமாயிருக்கிறீர் ?'' என்பதே (அப் 9:6). இயல்பான நமது



சுயாதீனப் பாணியை நாம் மாற்றிக்கொள்ளாவிடில் வாழ்வில் நெடுகவே நாம் திருச்சித்தம் செய்வதில் தவறிக்கொண்டேயிருப்போம். இது நாமாகவே தன்னார்வத்துடன் செய்யவேண்டியதொன்றாகும். நமது சித்தத்தை நமது விருப்பத்திற்கு எதிராக தேவன் மாற்றமாட்டார். எனவே, "கடிவாளம் பூட்டி வாரினால் இழுத்தாலன்றி உன்னைப் பின்தொடர்ந்து வராத குதிரை போன்றோ கோவேறு கழுதை போன்றோ அறிவிலியாய் இராதே!'' (சங் 32:9). கடிவாளமும் வாறும் தேவை எனும் நிலை மாறினாலொழிய நாம் எட்டாம் வசனத்தின் வாக்கை அனுபவிக்கமுடியாது. "நான் உனக்குப் போதித்து நீ நடக்கவேண்டிய வழியை உனக்குக் காட்டுவேன்; உன்மேல் என் கண்ணை வைத்து உனக்கு ஆலோசனை சொல்லுவேன்'' (வச 8). கடவுளின் கண்பார்வையையே புரிந்துகொண்டு அதின்படி நடப்போர் பாக்கியவான்கள்!

தனித்தியங்குவதற்கு தமக்கிருந்த வல்லமையையும் அதிகாரத்தையும் தாமாகவே களைந்து வைத்துவிட்டு, "தேவனே, உமது சித்தத்தின்படிச் செய்ய, இதோ, வருகிறேன்'' என்று தம்மை அர்ப்பணித்துக்கொண்டதால் இயேசு இப்பூவுலக வாழ்வில் ஒருபோதும் தமது பிதாவின் சித்தம் செய்வதில் தவறவில்லை (எபி 10:7,9). "நானாக எதுவும் செய்ய இயலாது'' என்று சாட்சியிடுமளவுக்கு இயேசு தமது பிதாவிடம் செய்த வாக்கைக் காத்துக்கொண்டார் (யோ 5:30).

### 2. சிற்றின்பம் (INDULGENCE)

ஊனியல்பின் செயல்களில் நாம் லயித்திருந்தால் தூயாவியின் நடத்துதலைத் தவறவிடுவது திண்ணம். சிற்றின்ப நுகர்ச்சியும் ஆன்மீக வளர்ச்சியும் ஒன்றுக்கொன்று எதிரானவை. இவையிரண்டிற்குமிடையே உள்ள போராட்டம் நமது இருதயங்களில் என்றுமிருக்கும். "மாம்சத்தின்படி பிழைப்பதற்கு நாம் மாம்சத்திற்குக் கடனாளிகளல்ல. மாம்சத்தின்படி பிழைத்தால் சாவீர்கள்; ஆவியினாலே உடலின் தீச்செயல்களை அழித்தால் பிழைப்பீர்கள். மேலும் எவர்கள் தேவனுடைய ஆவியினால் நடத்தப்படு கிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள்'' (ரோ 8:12-14). நாம் வேதம் வாசிக்கலாம், ஜெபிக்கலாம், கிறிஸ்தவ வாழ்வின் பிற பயிற்சிகள் அத்தனையிலும் கிரமமாயிருக்கலாம். ஆனால் பாவ விருப்பங் களுக்கு மறுப்பு தெரிவிக்க கற்றுக்கொள்ளாவிடில், நமது வாழ்வில் தூயாவியின் நடத்துதல்களுக்கு அடிபணிவது கூடாத காரியம். நமது பாவ சுபாவத்தை நம்மிலிருந்து வேரறுக்க முடியாது; ஆனால் நாம் அதிலிருந்து ஜீவனுள்ள ஆவியானவரால் விடுபட முடியும் (ரோ 8:2).

நமது பழைய மனிதன் மரித்துவிட்டதாக நாம் இடையறாது எண்ணிக் கொள்ளவேண்டும்.. இது ஏதோ அவ்வப்போது தியானத்தில் வரவேண்டிய கருத்து அல்ல; மாறாக, எப்போதும் திடமனதாய் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டிய சத்தியம் ஆகும். உள்ளான இவ்வெற்றிதான் நமக்கு வெளியே யுள்ள மற்ற போராட்டங்களை மேற்கொள்ளுவதற்கான அடிப்படையாகும்.

உலகத்தின் போக்கில் செல்ல மறுப்பவர்களுக்கே கடவுளின் திரு வுளத்திற்கு நல்லதும் உகந்ததும் நிறைவானதுமான சித்தம் வெளிப்படும் (ரோ 12:2). எதிர்நீச்சலை விரும்பாது எதிர்ப்பே இல்லாத பாதையைத் தெரிந்துகொள்ள விழைவோர் தேவ சித்தத்திற்கு எதிராகவே சென்று கொண்டிருப்பர். உலகின் போக்கு ஒருநாளும் ஆண்டவரின் வழியோடு இசைந்து செல்லாது; ஏனெனில், ''உலகம் முழுவதும் பொல்லாங்கனுக்குள் கிடக்கிறது'' (1 யோ 5:19). முதல் நூற்றாண்டிலேயே இப்படி ஓர் அப் போஸ்தலன் எழுதினான்! அப்படியானால் தொடர்ந்து வந்த நூற் றாண்டுகளில் எந்த அளவிற்கு உலகமானது ஊழலின் உச்சத்திற்கும், பாதகத்தின் பாதாளத்திற்கும், அக்கிரமத்தின் அகலத்திற்கும் சென்றி ருக்குமெனக் கற்பனை செய்து பாருங்கள்! இதைவிட மோசமாக முடியுமோ? ''முடிவு காலத்திலுள்ள நாம்'' எவ்வளவு கவனமாயிருக்க வேண்டும்!

உலக நட்பும் உலகப் பொருட்கள் மீது சிற்றின்ப நாட்டமும் ஆன்மீக விபச்சாரமாகும். இது நம்மை இறையன்பிற்கு விரோதமான எதிரிகளாக்கி விடுகிறது (யாக் 4:3,4; 1 யோ 2:15). ''ஏனெனில் மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், வாழ்வின் பெருமையுமாகிய உலகத்திலுள்ளவை களெல்லாம் பிதாவினால் உண்டானவையல்ல, அவை உலகத்தினால் உண்டானவை. உலகமும் அதின் நாட்டங்களும் ஒழிந்துபோகும்; தேவ சித்தத்தின்படிச் செய்கிறவனோ என்றும் நிலைத்திருப்பான்'' (1 யோ 2:16,17). இப்படிச் சொல்வதால் நாம் பொருட்கள் எதையும் உடைமை கொள்ளக்கூடாதென்றோ அனுபவிக்ககூடாதென்றோ பொருளல்ல. நாம் அவைகளை வைத்திருக்கிறோமா அவைகள் நம்மை வைத்திருக்கின்றனவா என்பதே கேள்வி. பொருட்களோடு ஒட்டிக்கொள்வதும் அனுபோகங்களில் அளவுக்குமீறி நாட்டங்கொள்வதும் கண்டிக்கப்படுகிறது (1 கொரி 7: 29-31). பூவுலகில் வாழ்க்கையை நியாயமான முறையில் நாம் அனுபவிப் பதற்குத் தேவன் எதிராயில்லை. ஆனால் இகத்தின் ஆசீர்வாதங்கள் நம்மைவிட்டு எடுபடும்போது அல்லது நாம் அவற்றை விட்டுவிட அழைக்கப்படும்போது நாம் எவ்விதம் உணருகிறோமென்பதுதான் சரியான சோதனை. பிடிப்பு இறுக்கமாயிருந்தால் விடுவதும் தேவ நடத்துதலைப் பின்பற்றுவதும் கடினமாயிருக்கும்.



தேவ சித்தத்திலிருந்து நம்மைத் திசை திருப்புவதில் பண ஆசைக்கு நிகரில்லை. நடத்துதலுக்கடுத்த பிரச்னைகள் பெரும்பாலானவற்றிற்கு வேரானது இதுவே. பிலேயாம் தீர்க்கதரிசி பண ஆசைக்குச் சற்று இடங்கொடுத்தவுடன் அவனது பாதையில் வந்த தேவனது குறுக்கீட்டிற்கு அவன் குருடும் செவிடுமானான். அவனால் தூதனைப் பார்க்கவும் முடியவில்லை; ஒரு மிருகம் பேசுகிறதேயெனப் பாராட்டவும் முடியவில்லை! தேவ சித்தத்தின்படி நீங்கள் இருக்குமிடத்தில் உங்கள் அடிப்படைத் தேவைகள் தாராளமாய்ச் சந்திக்கப்பட்டுக்கொண்டிருக்கும் தருணத்தில் கூடுதல் சம்பளம், வசதி என்றெல்லாம் வருபவை குறித்து ''ஜெபித்துப் பார்ப்பதில்'' எச்சரிக்கை! வாய்ப்புகள் என்பது உங்களுக்கு வலை களாகவே இருக்கலாம். ''நான் கூடுதல் சம்பாதித்தால் திருப்பணிக்குக் கூடுதல் கொடுக்கலாமல்லவா?'' என்று தங்கள் பண நாட்டத்திற்குப் பலர் சப்பைக்கட்டு கட்டுவார்கள். ஆனால், கடவுளுக்குக் கிடைப்ப தெல்லாம் பழைய பத்து சதவீதம்தான்!

### 3. அறிவாற்றல் (INTELLIGENCE)

நாம் அறிவை வளர்த்துக்கொள்வதற்கு தேவன் எதிராளியல்ல. ஆனால் ''நித்திய வாழ்வு'' என்பதற்கு மேலாக ''அநித்திய அறிவு'' என்பதை வைக்க அவர் ஒருபோதும் அனுமதியார். அறிவுக் கனிக்குப் பதிலாக வாழ்வுக் கனியை மனிதன் பறித்துச் சாப்பிட்டிருந்தால் பரதீசை இழந்திருக்க மாட்டானே! ஆன்மீக வாழ்வற்ற ஜென்மீக அறிவு நாசமே. கடவுளுக்குமுன் அஞ்சி நடப்பதாலேயே உண்மையான ஞானம் கிட்டுகிறது (நீதி 1:7).

வாழ்க்கையின் அன்றாடக, வழக்கமான காரியங்களில் தீர்மானம் எடுக்க நாம் நமது பொது அறிவையும் தெரிந்த தகவல்களையும் பயன்படுத்த வேண்டும். ஆனால் முக்கியமான காரியங்களில் தேவ சித்தத்தை அறிந்து கொள்வதற்கு வெறும் அறிவுசார்ந்த அலசல் பாதகமாயிருக்கும். ''என் எண்ணங்கள் உங்கள் எண்ணங்கள் அல்ல; உங்கள் வழிகள் என் வழிகளும் அல்லவென்று கர்த்தர் சொல்லுகிறார். பூமியிலிருந்து வானங்கள் எவ்வளவு உயர்ந்திருக்கின்றனவோ, அவ்வளவு உங்கள் வழிகளைவிட என் நினைவு களும் உயர்ந்திருக்கின்றன'' (ஏசா 55:8,9). அவரது எண்ணங்களுக்கும் நமது சிந்தனைகளுக்குமுள்ள வேறுபாட்டைக் கடவுள் எவ்விதம் சித்தரிக்கிறார் பாருங்கள்! பெண்களிடத்தில் பிறந்தவர்களில் யோவான் ஸ்நானனைவிடப் பெரியவன் எவனுமில்லை என்றார் இயேசு. ஆனால் தன்னோடு இயேசுவை ஒப்பிட்டு அவன் சாட்சியிடுவதைக் கவனியுங்கள்: ''உன்னதத்திலிருந்து வருகிறவர் எல்லாரிலும் மேலானவர்; பூமியிலிருந்து உண்டானவன் பூமியின் தன்மையுள்ளவனாயிருந்து, பூமியைச் சார்ந்த வைகளைப் பேசுகிறான்'' (யோ 3:31).

காரியங்களைப் பகுத்தாராய்ந்து விவாதிப்பதில் தவறில்லை. இப்படிச் செய்யும்போது பிரச்னையும் கிடைக்கவேண்டிய பதிலும் தெளிவாகும். ஆனால் நமது சிந்தனா சக்தியை மட்டுமே பயன்படுத்திக்கொண்டு நெடுநேரம் தீர்மானத்தின் பள்ளத்தாக்கில் இருந்துவிடக்கூடாது. வெறும் புலனறிவு தேவனது வழிகளைப் புரிந்துகொள்ளப் போதாது. நாம் தரிசித்தோ வேறெந்த புலனறிவைக்கொண்டோ அல்ல, விசுவாசித்தே நடக்கிறோம் (2 கொரி 5:7). அப்பொழுதுதான் நமது வழிகள் எல்லாவற்றிலும் கடவுளுக்குப் ''பிரியமானவர்களாய்'' இருக்க முடியும் (வச 9).

எங்கே போகவேண்டுமென்று ஆண்டவர் காட்டிவிட்டாலும் நாம் கீழ்ப்படிந்து புறப்பட்டுச் செல்வதில்லை. ஆபிரகாமோ தேவனுக்குக் கீழ்ப்படிந்து தான் போகிற இடம் இன்னதென்று தெரியாமலே புறப்பட்டுச் சென்றான் (எபி 11:8). நமது சொந்த புத்தியைச் சார்ந்திருப்பது ஆபத்து; தேவனை நமக்குத் தெரியாத எதிர்காலத்திற்காய் நம்புவது பாதுகாப்பு. அனைத்துத் தகவல்களும் முழு விபரங்களும் தெரியும்வரை முன்செல்லத் தயங்குவோர் தேவனது படைக்குத் தகுதியல்ல. சிலுவை வீரர் யாவரும் விசுவாச வீரராவர். தங்களை நடத்துபவர் ''எவர்'' என்பது அவர்களுக்குத் தெரியும்; ''எங்கு'' அல்லது ''என்ன'' என்பதையெல்லாம்பற்றி அவர்களுக்கு அக்கறையில்லை. ''என் ஆடுகள் எனது குரலுக்குச் செவிசாய்க்கின்றன... அவைகள் என்னைப் பின்தொடர்கின்றன... அறியாத ஒருவனை அவை பின்தொடரா. அவனை விட்டு அவை ஓடிப்போகும். ஏனெனில் அவனது குரல் அவற்றிற்குத் தெரியாது'' (யோ 10:27,25).

திட்டமாய்த் தெரியாத நிலையே கிறிஸ்தவ வாழ்விற்கும் பணிக்கும் சுவாரஸ்யமூட்டுகிறது. மற்றபடி அது சுவையாயிருக்காது. எனவேதான் கிறிஸ்தற்ற வாழ்க்கையில் வேடிக்கையும் விளையாட்டும் இருந்தாலும் மகிழ்ச்சியாயிருக்காது. ''உமது வழி கடலிலும், உமது பாதைகள் திரளான தண்ணீர்களிலும் இருந்தன; உமது காலடிகள் தெரியப்படாமற்போயின'' எனச் சங்கீதக்காரனுடன் சேர்ந்து நாமும் பாடுவோம் (சங் 77:19).

நாம் பொதுவாக நமது வாழ்வை ஆன்மீகம் மற்றும் லவுகீகம் என இரு பகுதிகளாய்ப் பிரித்து, ஆன்மீகக் காரியங்களுக்கு மட்டும் இறைச்சித்தம் நாடுகிறோம்.. இது புதிய உடன்படிக்கையின் போதனைக்கு ஒத்ததல்ல (1 கொரி 10:31). தன்னை நன்கு தேவனுக்கு அர்ப்பணித்துக்கொண்டவன் உலகப்பிரகாரமாய்த் தோன்றும் படிப்பு, வேலை போன்றவற்றிற்கும் தேவ நடத்துதலை நாடுவான். இத்துறைகளில் கைதேர்ந்தவர்களிடமிருந்து கிடைக்கும் விபரங்களையும் ஆண்டவரின் அருள்நிறைவான நடத்துதலுக் காக அவர்முன் சமர்ப்பிக்க வேண்டும். இல்லையேல் நமது கப்பல் பயணம் மிகுந்த சேதத்துடனும் பெரும் இழப்புடனுமே முடிவடையும் (அப் 27:9-11,21).



## 4. பிறர் சொல் (INFLUENCE)

ஆலோசகர் அநேகர் இருந்தால் பாதுகாப்பு மிகுதியென்றும், ஒருவருக் கொருவர் அடிக்கடி புத்திசொல்ல வேண்டுமென்றும் வேதம் போதிக்கிறது. அதே வேளையில் அளவுக்குமீறி பிறரோடு ஆலோசனை பண்ணிக் கொண்டேயிருப்பதும் நம்மைக் குழப்பிவிடும். நமது மனதில் ஆண்டவர் நிச்சயமாய்ப் பேசியிருக்கிறாரென்றும், அது வேதத்திற்கு இசைந்ததாய் இருக்கிறதென்றும் நமக்குத் திட்டமாய்த் தெரிந்துவிட்டால் காரியத்தை அதோடு நிர்ணயப்படுத்திவிடவேண்டும். வேண்டுமானால் அதைச் சில ஆவிக்குரியவர்களோடு பகிர்ந்துகொள்ளலாம்; ஆனால் கர்த்தரது கட்டளை களுக்குத் தப்பித்துக்கொள்ள அப்படிச் செய்யக்கூடாது. தேவ மக்களின் ஐக்கியம் தரும் பேராசீர்வாதங்களுக்கு நன்றியுள்ளவர்களாயிருக்கும் அதே வேளையில், கீழ்ப்படியும் கிறிஸ்தவர்களைவிடக் கீழ்ப்படியாத கிறிஸ்தவர்களே அதிகம் என்பதையும் நினைவிற்கொள்ளவேண்டும். சமுதாயத்தில் தீவிரமாய்ச் செயல்படும் கீழ்ப்படியாமையின் ஆவியானது சபைக்குள்ளும் தாண்டவமாடிக்கொண்டிருக்கிறது (எபே 2:1-3; 5:6-8; கொலோ 3:5-7).

''மாம்சத்தோடும் இரத்தத்தோடும்'' அல்லது தனக்கு முன்னவர்களான அப்போஸ்தலரோடும் பவுல் முதற்கட்டத்தில் கலந்தாலோசித்திருப்பானா னால் அவனது பிரசங்கம் மற்றும் நிருபங்கள் வாயிலாக நமக்குத் தேவனது கிருபையின் சுத்த சுவிசேஷம் கிடைத்திருக்காது (கலா 1:16,17). அவன் கவனமாயிருந்திராவிடில் அவனது ஊழியம் உருவெடுத்த முதல் ஆண்டு களில் பேதுரு போன்ற அப்போஸ்தலரின் ஆரம்ப காலக் கருத்துக்கள் பவுலின் சுவிசேஷத்தைக் கலப்படமாக்கியிருக்கும். பொதுவிடங்களில் தெளிவோடு வசனத்தை அறிவிக்க வருமுன் அவனுக்கு அரபியப் பாலைவனத்தில் ஒரு சில ஆண்டுகள் இறைவனோடு அடைபட்டிருப்பது அவசியமாயிற்று.

தமது நண்பரின் சகவாசத்தையும் சீடரின் ஐக்கியத்தையும் இயேசு பெரிதும் மதித்தார். ஆனால் அவர் தமது பிதாவின் வழியில் செல்லத் தடையாக அவர்கள் எதையும் சொல்லிவிட்டால் அதை அடையாளங்காண அவர் விழிப்புடனிருந்தார். சிலுவையற்ற மார்க்கமொன்றைச் சிபாரிசு செய்த பேதுருவை அவர் எவ்வளவு வன்மையாய்க் கண்டித்தாரென நாமறிவோம்! அச்சந்தர்ப்பத்தில் மானிடக் கருத்துக்களுக்கும் தெய்வீகத் திட்டங்களுக்கும் இடையேயுள்ள முரண்பாட்டைக் கண்டுகொண்டார் (மத் 16:22,23). இன்னொரு சமயம் அவரது சொந்தச் சகோதரர் அவருக்கு ஒரு காரியத்தைச் செய்யச் சொன்னபோதும் அவர் மறுத்துவிட்டார்.

பிரபலத்திற்கும் பகட்டிற்கும் அவரை அவர்கள் உந்தித்தள்ள முயன்றபோது அவர் மறைந்திருந்து, கர்த்தருடைய வேளையை அறிந்து, திருப்பணி செய்வதின் மாட்சிமையை உணர்ந்து அமர்ந்திருந்தார் (யோ 7:2-10).

உன்னதரிடம் விசாரியாது உலகத்தாரோடு விவாதிப்பதையே பிரதான மாய்க் கொள்வது தேவனுக்குமுன் அபத்தம். “என்னை அல்லாமல் ஆலோசனைபண்ணி, என் ஆவியை அல்லாமல் தங்களை மூடிக்கொள்ளப் பார்க்கிறவர்களும், என் வாக்கைக் கேளாமல் பார்வோனின் பலத்தினால் பலமடையவும், எகிப்தின் நிழலில் ஒதுங்கவும் வேண்டுமென்று எகிப்துக்குப் போகிறவர்களுமாகிய முரட்டாட்டமுள்ள புத்திரருக்கு ஐயோ! என்று கர்த்தர் சொல்லுகிறார்” (ஏசா 30:1,2). “துன்மார்க்கருடைய ஆலோசனையில் நடவாமல்” இருப்பவனின் பாக்கியத்தைச் சொல்லித் தான் சங்கீதப் புத்தகமே தொடங்குகிறது!

தங்களது இனத்தாரோடு பேசிப் பேசிக் கொண்டிருப்பதாலேயே அநேக வாலிபரும் கன்னியரும் மிஷனரி அழைப்பிற்குக் கீழ்ப்படியாதிருக்கின்றனர். முழுநேரப் பணிக்கான எனது அழைப்பில் நாடகப் பாணி எதுவுமிருக்க வில்லை. வேலைக்கும் ஊழியத்திற்கும் நிறைய நேரமும் பலமும் தேவைப்பட்டதால் இரண்டையும் திருப்திகரமாய்த் தொடர்ந்து செய்ய முடியவில்லை. என்ஜினியர் வேலையை விட்டு எஜமானரின் அறுவடைப் பணியில் முழுமையாய்க் குதிக்கத் தீர்மானித்தேன். என் மனைவியோடு அதைப் பகிர்ந்துகொண்டபோது அவள், “நீங்கள் இன்னும் முன்னாலேயே இதைச் செய்திருக்கலாமே!” என்றாள். வேலையை “முதலாவது” ராஜினாமா செய்துவிட்டுப் “பின்பு” பெற்றோரிடம் சொல்லலாமென ஆலோசனை கூறினாள். பிரச்னையுமில்லை, பின் வருத்தமுமில்லை!

சில சமயங்களில் பிரசங்கிமாரது தனிப்பட்ட ஆலோசனைகளும் பயன் தருவதில்லை. ஒருமுறை மிஷனரி பவுல் நான்கு இளம் தீர்க்கதரிசினிகள் மற்றும் ஒரு பழம் தீர்க்கதரிசியிடம் வசமாய் மாட்டிக்கொண்டான். அவன் எருசலேமிற்குச் சென்றால் என்னென்ன பிரச்னைகள் உருவாகுமென வந்தவொரு தீர்க்கதரிசன வெளிப்பாட்டின் அடிப்படையில் அவர்களும் பவுலின் குழுவினர் யாவரும் அவனை எருசலேமிற்குச் செல்லவேண்டா மென வற்புறுத்தினர். அவர்களது தீர்க்கதரிசனத்தை ஒரு தகவல் என்று தான் பவுலால் மதிக்க முடிந்ததே தவிர அதை ஒரு நடத்துதலாக அவனால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. நல்ல காலம், முடிவில் “கர்த்தர் சித்தம் ஆகட்டும்” என அவனை விட்டனர்! பவுல் செய்தது சரியென நாமறியலாம்; ஏனெனில் பின்னர் கர்த்தர் அவனுக்குத் தரிசனமாகி,



“பவுலே, திடன்கொள்; நீ என்னைக் குறித்து எருசலேமில் சாட்சி கொடுத்ததுபோல ரோமாவிலும் சாட்சி கொடுக்க வேண்டும்” என்றார் (அப் 21:10-14; 23:11).

ஒரு கிழட்டுத் தீர்க்கன் சொன்னதைக் கேட்டுக் கர்த்தருக்குக் கீழ்ப்படியாதுபோன தேவ மனிதன் எவ்விதம் சிங்கத்திற்கு இரையானான் என்று நமக்குத் தெரியுமல்லவா? (1 இரா 13). வேறே சத்தங்களுக்கு எச்சரிக்கை!

### 5. அவசரம் (IMPATIENCE)

எல்லாமே தமது சர்வாதிகார ஆளுகைக்குள்ளிருப்பதினால் தேவன் ஆத்திரப்படுவதில்லை. சிறிதானாலும் பெரிதானாலும் நமது வாழ்வில் காரியங்களை நடத்துவது தேவனே. இவ்வித அறிவே நம்மைப் பதறாதிருக்கச் செய்யும். தேவனோடு அடியெடுத்து வைக்கப் பழகாவிடில் அவரது சித்தம் செய்யாது போய்விடுவோம். அவசரப்பட்டு நாம் அவருக்கு முந்தும்போது அவர் நம்மைப் பின்னிழுக்கமாட்டார். வேகமாய்ப் போய் முட்டி மோதிக் கற்றுக்கொள்ள விட்டுவிடுவார். “நீங்கள் மனந்திரும்பி அமர்ந்திருந்தால் இரட்சிக்கப்படுவீர்கள்; அமரிக்கையும் நம்பிக்கையுமே உங்கள் பலமாயிருக்கும் என்று... கர்த்தராகிய தேவன் சொல்லுகிறார். நீங்களோ அப்படிச் செய்ய மனதில்லாமல்: அப்படியல்ல, குதிரைகளின்மேல் ஏறி ஓடிப்போவோம் என்கிறீர்கள்; அப்படியே ஓடிப் போவீர்கள்... ஆனாலும் உங்களுக்கு இரங்கும்படிக் கர்த்தர் காத்திருப்பார்” (ஏசா 30:15-18).

ஆபிரகாமின் அவசரம் இஸ்மவேலைப் பிறப்பித்தது. தேவனது பரி பூரண சித்தத்திற்குமேல் அவரது அனுமதிச் சித்தம் தலைதூக்கியது. இன்றுவரை இஸ்மவேலர் தேவனால் இறை மக்களுக்கு இன்னலாகவே இருக்கின்றனர் (ஆதி 16:11,12).

தேவ சித்தத்திற்கிசைந்து நடக்கிறோம் என்பதற்காக எல்லாமே உடனடியாய் நடந்துவிடுமென எதிர்பார்ப்பதும் மடமை. “நீங்கள் தேவ சித்தத்தின்படிச் செய்து வாக்குப்பண்ணப்பட்டதைப் பெறும்படிப் பொறுமை உங்களுக்கு வேண்டியதாயிருக்கிறது. வருகிறவர் இன்னும் கொஞ்சக் காலத்தில் வருவார், தாமதியார்” (எபி 10:36,37). தேவாதீனத்தில் “கொஞ்சக் காலம்” என்பது ஒரு நாளாயிருக்கலாம், அல்லது ஓராயிரமாண்டாயிருக் கலாம்! நாம் செய்வது தேவனது பரிபூரண சித்தம் என்று நிச்சயித்துக் கொண்டால் அப்படியே— “விசுவாசத்தினால் பிழைத்துக்கொண்டு” — இருக்கவேண்டும் (வச 38). நமது செல்வாக்கு, சொல்வாக்கையெல்லாம் வைத்து நாமே வெளி வந்துவிடக்கூடாது. நம்மை உடைக்க அல்ல

உருவாக்கவே தேவன் இக்கட்டான சூழல்களை நமது வாழ்வில் அனுமதிக்கிறார். முடிவுவரை விசுவாசிப்போர் பாக்கியவான்கள்!

கிறிஸ்தவ வாழ்வில் முதிர்ச்சி நோக்கிச் செல்லுகையில் உடனடியான திற்கும் முடிவானதிற்கும் இடையே நாம் தெரிந்தெடுக்க அழைக்கப்படு வோம். உலகமானது உடனடியானதையே தன்னைத் திருப்திப்படுத்தத் தெரிந்தெடுக்கிறது. நாமோ கடைசியில் மகிமைப்படுதலை மனதிற் கொண்டு முடிவானதைத் தெரிந்துகொள்ளவேண்டும். பழங்காலப் பரிசுத்த வாட்டிகள் சிலரது சுருக்க சரிதை எபிரெயர் நிருப விசுவாச அத்தியாயத்தில் இடம்பெற்றுள்ளது. "பெண்கள் சாகக்கொடுத்த தங்களுடையவர்களை உயிரோடெழுந்திருக்கப் பெற்றார்கள்; வேறு சிலர் மேன்மையான உயிர்த் தெழுதலை அடையும்படி, விடுதலை பெறச் சம்மதியாமல் வாதிக்கப் பட்டார்கள்" (எபி 11:35). சுகம் பெறுவதே ஆசீர்வாதமென இன்றைய இறையியலின் வறட்டுத் தத்துவம் நமக்கு போதித்துள்ளது. ஆனால் பரமனின் நேரடிப் பிரசன்னத்திற்கு நம்மைச் தூக்கிச் செல்லும் மரணத்தின் மாட்சிமைதான் என்னே!

ஆசரிப்புக் கூடாரத்தின் மாதூயகத்தில் முற்றத்தின் சூரியவொளியோ தூயகத்தின் குத்துவிளக்கொளியோ கிடையாது. "காரிருளில் வாசம் பண்ணுவேன் என்று கர்த்தர் சொன்னார்" (1 இரா 8:12). கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து நடக்கிறோமென்பதால் எல்லாமே நமக்குத் தெளிவாகிவிடாது. கேள்விகள் இருக்கலாம்; ஆனால் சந்தேகங்களுக்கு நாம் இடமளிக்கக் கூடாது. "உங்களில் எவன் கர்த்தருக்குப் பயந்து, அவரது தாசனின் சொல்லைக் கேட்டு, தனக்கு வெளிச்சமில்லாததினால் இருட்டில் நடக் கிறானோ அவன் கர்த்தருடைய நாமத்தை நம்பி, தன் தேவனைச் சார்ந்து கொள்ளட்டும்" (ஏசா 50:10). ரேமண்ட் எட்மன் என்ற பக்தன் இதை "இருட்டின் பயிற்சி" என்றழைக்கிறார். இந்தக் குகையின் வழியாய்ச் செல்லும்போது நாம் பொறுமையாயிராவிடில் தேவ சித்தத்தை இழந்துவிடுவோம். நாம் பொறுமையாய்க் காத்திருந்தால் "சாயங்காலத் திலும் வெளிச்சமுண்டாகும் (சக 14:7).

### 6. சோம்பேறித்தனம் (INDOLENCE)

அவசரப்பட்டுத் தேவனுக்கு முந்திச் சென்றுவிடக் கூடாதென்று சொல்லும் அதே வேளையில் நமது சோம்பேறித்தனத்தினால் பின்தங்கியும் விடக்கூடாது. தமது சித்தத்தைச் செயலாற்ற எழுந்து செல்லாத சோம் பேறிக்கு அவர் அதை வெளிப்படுத்துவானேன்? சோம்பலை அப்போஸ் தலன் பவுல் மதியீனம் என்கிறான். அவனைப் பொறுத்தவரை, காலத்தைப் பயன்படுத்துவோரே கர்த்தரின் சித்தத்தைப் புரிந்துகொள்ளும் ஞான முள்ளவர்களாம் (எபே 5:15-17).



பொதுவான இறைச்சித்தம் எல்லாருக்கும் ஒன்றுதான். ஆனால் தனிப்பட்ட இறைச்சித்தமோ நபருக்கு நபர் அன்னாரது அழைப்பையும் வரத்தையும் பொறுத்து வேறுபடும். பொதுவான இறைச்சித்தத்தின்கீழ் நமது பொறுப்புகளை நிறைவேற்றுவதில் தீவிரமாயிருக்கும்போதுதான் நமக்கென்ற சிறப்பான இறைச்சித்தம் வெளிப்படும். பவுலின் இரண்டாம் மிஷனரிப்பயணத்தில் இதை விளக்கும் ஒரு சம்பவம் உண்டு. தனது குழுவினரோடு முடிந்த இடங்களிலெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்று வதில் அவன் விறுவிறுப்பாயிருந்தான். சகல நாட்டவருக்கும் நற் செய்தியைப் பிரசங்கிக்கும்படி கிறிஸ்து தந்த பேராணையில் வெளிப் படுத்தப்பட்ட பொதுவான இறைச்சித்தத்திற்கு இசைந்து இவ்விதம் செயல்பட்டுக்கொண்டிருந்தான். ஆனால் ஆசியாவில் வசனத்தைப் பிரசங்கியாதபடி அவனது குழுவினர் தடை பண்ணப்பட்டனர். அவர்கள் பித்தினியாவுக்குச் செல்ல முயன்றபோது அங்கும் செல்வதை ஆவியானவர் தடுத்தார். அவர்களோ நின்றுவிடாது சென்றுகொண்டேயிருந்து முதல் ஐரோப்பிய விசுவாசி கிடைத்த மக்கதோனியா வந்தடைந்தனர். அச்சந்தர்ப்பத்தில் அவர்களைக் குறித்த சிறப்பான இறைச் சித்தம் அதுவே (அப் 16:6-10). நின்றுகொண்டிருக்கும் வாகனத்தைத் திருப்புவது கடினம்!

தேவ சித்தத்தில் நமக்கு வெளிப்படுத்தப்பட்ட அளவுக்கே நாம் கீழ்ப்படியவேண்டிய பொறுப்புண்டு. அதில் நாம் உண்மையாயிருக்கும் போது, கடவுள் தமது சித்தத்தைப் பற்றிய இன்னும் கூடுதலும் நிறைவு மான வெளிப்பாடுகளைத் தருவார் (லூக் 12:45-48). நமது வாழ்வுக்கான சித்தம் முழுவதையும் அவர் ஒட்டுமொத்தமாய் வெளிப்படுத்திவிடு வதில்லை. அதை அவர் படிப்படியாய்ச் செய்கிறார். தீர்க்கதரிசன வரத்தில் விழிப்புணர்வு ஏற்பட்டுள்ள இந்நாட்களில், வரங்களைப் பற்றிப் பேசும் சில வட்டாரங்களில் நமது வாழ்வுக்கான முழு வரைபடத்தையும் (blueprint) பெற்றுக்கொள்ளமுடியுமென்றதொரு போதனை நிலவி வருகிறது. இது திருமறைக்கு முரணானது. தேவன் *"ஓர் அடி மட்டும்"* காட்டுவார். எதிர்காலம் நமக்கு "என்ன" வைத்திருக்கிறதென நாமறியோம்; ஆனால் எதிர்காலத்தை நமக்காக "எவர்" வைத்தி ருக்கிறாரென நாமறிவோம்!

### 7. அறியாமை (IGNORANCE)

தேவசித்தம் தவறவிடுவதில் அறியாமை என்பது ஓர் அடிப்படைக் காரணமாயிருப்பினும், அவரது வழிகளைப் புரிந்துகொள்வதிலுள்ள குறைபாடுதான் நெடுகவே எல்லா மட்டத்திலும் அவரது சித்தத்தைத் தவறவிடுவதற்குக் காரணமாய் அமையும். எனவே இறைவனை அறிகிற அறிவில் வளருவது முடிவு பெறாத பயிற்சியாயிருக்கவேண்டும்.

நித்தியத்தின் இக்கரையில் நமது அறிவு ஒருபோதும் நிறைவாகாது; ஆயினும் பரலோகில் அவர் சித்தம் செய்யப்படுவதுபோல் பூலோகிலும் செய்யப்படுவதற்குப் போதுமான அளவு நமக்குத் தமது சிந்தையை வெளிப்படுத்த தேவன் சித்தங்கொண்டுள்ளார்.

ஒரு நபரை—அவரது எண்ணங்கள், விருப்பு வெறுப்புகளை—புரிந்துகொள்ள பேச்சுத் தொடர்பு இன்றியமையாதது. கடவுளை அறிந்து கொள்வதும் அப்படியே — அவர் பேசக் கேட்பது மற்றும் அவரோடு பேசுவதின் மூலம். வேதம் தேவனது பேச்சு; ஜெபம் நமது பேச்சு. இதற்குக் கிரமமானதொரு தியானவாழ்வு தேவை.

தேவ வசனத்தால் நாம் நிறைந்திருக்கவேண்டும். திருவசனமே திருச்சித்தம். போதனை மூலமாகவும் வாழ்க்கைகள் மூலமாகவும் அவரது சிந்தை வேதத்தின் பரிசுத்த எழுத்துக்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. “இறைக் கூற்றையும் சான்றுரையையும் கவனிக்கவேண்டும்; இந்த வார்த்தையின்படியே சொல்லாவிடில் அவர்களுக்கு விடியற்காலத்து வெளிச்சமில்லை” (ஏசா 8:20). பல்வேறு காலங்களிலும் கலாச்சாரங் களிலும் கடவுள் மக்களுக்கு என்ன போதித்தார், எப்படி அவர்களோடு இடைபட்டார் என்பதே இன்று அவர் நம்மிடம் என்ன எதிர்பார்க்கிறார் என்பதை நமக்குணர்த்துகிறது. ஏனோதானோவென்றல்ல, கவனத்தோடும் கருத்தோடும் கிரமமாய் வேதத்தை ஆராய்வதே தேவனோடு சரியாய் நடைபோடுவதற்கு ஊன்றுகோலாகும். வேதத்தின் பொதுவான செய்தியைப் *(logos)* போதுமான நேரமெடுத்து நாம் அசைபோட்டால் தூயாவியானவர் நமது வழிநடத்துதலுக்கான குறிப்பான செய்தியை *(rhema)* நமக்குப் புலப்படுத்துவார்.

ஜெபம் நமது மூச்சுபோலிருக்கவேண்டும். ஜெப வாழ்வு வாடினால் பரலோக இணைப்புக்கம்பி அறுந்துவிடும். ஜெபத்தில்தான் ஆவியானவர் நமது ஆவியை உயிர்ப்பித்து நமது சிந்தனையைத் தேவ சித்தத்திற்கு இசையப்பண்ணுகிறார் (ரோ 8:26,27). முழங்காலில் நிற்கும்போது மட்டு மல்ல, நாம் ஜெப ஆவியில் தோய்ந்திருக்கும்போதெல்லாம் உன்னதத் திலிருந்து உள்ளுணர்வுகளைத் தேவனருளுவார் (அப் 10:9-13; வெளி 1:10,11). ஜெபிக்கும் கிறிஸ்தவன் தேவனோடு நெருங்கி வாழ்வதால் அவன் அவர் சித்தத்தைத் தவறவிடுவது கடினம்.

ஜார்ஜ் ட்ரூவெட் என்ற தேவ மனிதனின் வார்த்தைகளோடு இச்செய்தியை முடிக்கிறேன்: “திருச்சித்தம் அறிவதே பிரதான அறிவு; திருச்சித்தம் செய்வதே பிரமாண்ட சாதனை!”



# 6

# பாடுகளின் வார மிஷனரிப் பாடங்கள்

தேவன் தமது குமாரனை மிஷனரிப் பணிக்கென்றே இவ்வுலகிற்குள் அனுப்பினார். “பாவிகளை மீட்கவே இயேசு கிறிஸ்து இவ்வுலகிற்கு வந்தார் என்னும் வார்த்தை உண்மையானது, எல்லாரும் ஏற்றுக்கொள்ளத்தக்கது” (1 தீமோ 1:15). அவரது ஏறத்தாழ 40 மாத ஊழியத்தில் நமது ஆண்டவருக்கு வேறெதுவும் இரண்டாவதாகவே இருந்தது. முதலும் முடிவுமாக அவர் ஆத்துமாதாயகராகவே இருந்தார். அவரது பூவுலக ஊழியம் முடிவடை யும் நாட்களில் அவரது ஆத்தும வாஞ்சை உச்சக்கட்டத்தை எட்டிற்று. தொலைந்து போனோரை இரட்சிக்க அதே அவசர உணர்வுக்குள் தம்மைப் பின்பற்றினவர்களையும் நடத்த அவர் முழுமூச்சாய் முயன்றார். பாடுகளின் வாரச் சம்பவம் ஒவ்வொன்றும் மிஷனரி நற்செய்திப் பணி குறித்த முக்கிய பாடம் ஒன்றை நமக்குப் போதிக்கிறது. குருத்தோலை ஞாயிறு முதல் பெரிய வெள்ளி வரை நடந்தவற்றில் ஏழு சம்பவங்களை இங்கு கவனிப்போம்.

### 1. கட்டப்பட்டிருந்த கழுதை

“இயேசு சீடரில் இருவரை நோக்கி: உங்களுக்கு எதிரே இருக்கிற கிராமத்திற்குப் போங்கள்; போனவுடனே, அங்கே ஒரு கழுதையையும் அதனுடன் ஒரு குட்டியையும் கட்டியிருக்கக் காண்பீர்கள்; அவைகளை

அவிழ்த்து என்னிடம் கொண்டுவாருங்கள். ஒருவன் உங்களுக்கு ஏதாகிலும் சொன்னால்: இவைகள் ஆண்டவருக்கு வேண்டுமென்று சொல்லுங்கள்; உடனே அவைகளை அனுப்பிவிடுவான் என்று சொல்லி, அவர்களை அனுப்பினார்'' (மத் 21:1-3).

கிராம ஊழியத்தைக் குறித்த நேர்த்தியான சித்திரம் இது. இந்தியா கிராமங்களிலேயே வாழுகிறது. மக்கட்தொகையில் 80% கிராமத்தினரே. ‘‘கிராமங்கள் செழித்தால், நாடு செழிக்கும்'' என்றார் மறைந்த பிரதமர் மொரார்ஜி தேசாய். ஆனால் துர்ப்பாக்கியமாக மக்கட்தொகையில் 20 சதவீதத்தை மட்டும் அடக்கியுள்ள பட்டணங்களிலும் நகர்களிலுமே 80 சதவீதக் கிறிஸ்தவ ஊழியம் நடைபெறுகிறது. இந்தியாவின் 6,00,000 கிராமங்கள் பெருவாரியானவற்றில் நற்செய்திக்கு ஒரு சாட்சிகூட கிடையாது. ஏராளமான இக்கிராமங்களுக்கு ஒருமுறைகூட ஓர் ஊழியன் சென்றதில்லை.

அக்கழுதையைப் போலவே மக்களும் மூட நம்பிக்கைகளினாலும், வாழ்நாளெல்லாம் பயங்களினாலும் கட்டப்பட்டிருக்கின்றனர். சீதை சபித்து விடுவாள் எனும் புராணக் கதையை நம்பி ஒரிசாவிலுள்ள போண்டோ இனப்பெண்கள் உடையணிய மறுக்கிறார்கள். தடுப்புச் சட்டம் இருந்தாலும் குழந்தைத் திருமணங்கள், கோயில் விபச்சாரம் போன்ற மனிதாபிமான மற்ற பழக்கங்களை அரசாங்கம் நிறுத்தமுடியவில்லை. பயனற்ற கிழட்டுப் பசுக்களை அடிப்பதைவிட ஆகாரக் குறைவினால் மனிதர் சாவது மேல் எனக் கருதப்படுகிறது! நெடுங்காலத் தலைவலி, வயிற்றுவலி போன்ற வற்றால் வேதனைப்படுகிறவர்களுக்குச் சுகமளிக்கிறோமென்று பில்லி சூனிய மருத்துவர்கள் பழுத்த கம்பிகளால் உடலில் சூடுபோடும் வழக்கம் இன்றுமுண்டு. விடுதலையின் நற்செய்தி அறிவிக்கப்படாத ஒரே கார ணத்தினால் மக்கள் அனுபவிக்கும் இவ்விதக் கொடுமைகளை அடுக்கிக் கொண்டே போகலாம்.

*கட்டப்பட்ட மனிதரெல்லாம்*
*கட்டவிழ்க்கப்பட வேண்டும்*
*காயப்பட்ட மனிதரெல்லாம்*
*கல்வாரி வர வேண்டும்*
*கர்த்தர் உம்மைக் காண வேண்டும்!*

கழுதை மட்டுமல்ல, குட்டியும் கட்டப்பட்டிருந்தது. பாவமறியாத குழந்தைகளும் வேறு வழியில்லாது தங்கள் பெற்றோர் பின்பற்றும் சாபக்கேடான முறைகளுக்கு அடிமைகளாகின்றனர். எக்கிராமத்திற்குச்



சென்றாலும் உடனே ஒரு கூட்டம் சிறுவர் ஆவலாய்க் கூடிவிடுவர். இளமையிலேயே அவர்களைப் பிடியுங்கள். களைந்துவிடவேண்டியவை அவர்களிடம் அதிகமில்லையே. விண்ணரசு அவர்களுடையது என்றார் இயேசு. அவர்களுக்கு நற்செய்திப் பாடல்களையும் கதைகளையும் சொல்லிக்கொடுங்கள். அவர்கள் தங்கள் பெற்றோருக்கும் முதியோருக்கும் செய்தியைக் கொண்டு சென்றுவிடுவர். நாங்கள் சபை நிறுவியுள்ள பல கிராமங்களில் எங்களது முதல் சபையினரெல்லாம் சிறுவர்தான். ஒருபோதும் அவர்களை அற்பமாய் எண்ணவேண்டாம்.

கழுதையையும் குட்டியையும் அவிழ்த்துவர இயேசு தமது சீடரில் ‘‘இருவரை'' அனுப்பினார். கிராமப்புற நற்செய்திப்பணியில் இரண்டிரண்டு பேராகச் செல்லும் தத்துவம் என்றுமே பயனுள்ளது (லூக் 10:1). கிராம ஊழியத்திற்கு 10 அல்லது 12 பேர் சேரட்டுமென நீங்கள் காத்திருக்க அவசியமில்லை. இன்னும் ஒரு விசுவாசியைக் கூட்டிக்கொண்டு புறப்பட்டு விடுங்கள். கணவன் மனைவி ஆகிய இருவர் குழு அபாரம். பெற்றோரும் பிள்ளைகளும் சேர்ந்து ஒரு குடும்பமாகச் சென்றால்அது இன்னும் மகிமை!

எதிர்ப்புகளுக்கும் பயமுறுத்துதல்களுக்கும் அஞ்சவேண்டாம். தங் களது கிராமத்தில் நீங்கள் ஏன் இயேசு நாதரைப் பற்றிப் பிரச்சாரம் செய்கிறீர்களென சிலர் கேட்கத்தான் செய்வார்கள். ‘‘ஆண்டவர் உங்களை நேசிக்கிறார்; நீங்கள் அவருக்கு வேண்டும்'' என்று பண்பாய்ப் பதில ளியுங்கள். நற்செய்தி அறிவிக்க நமக்கு உத்தரவு உன்னதத்திலிருந் தல்லவா வருகிறது? ‘‘விண்ணிலும் மண்ணிலும் எல்லா அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் புறப்பட்டுப் போங்கள்!'' என்றார் இயேசு (மத் 28:18,19).

## 2. திறந்தவெளிப் பவனி

‘‘கழுதையையும் குட்டியையும் கொண்டுவந்து, அவைகள்மேல் தங்கள் ஆடைகளைப் போட்டு, அவரை ஏற்றினார்கள்... முன்சென்றோரும் பின்வந்தோருமான திரளான மக்கள்: தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா!... என்று ஆர்ப்பரித்தனர். அவர் எருசலேமுக்குள் வந்தபோது நகர் முழுவதும் பரபரப்புற்று, இவர் யார்? என்று கேட்டது'' (மத் 21:7-10).

சமுதாயங்களை நற்செய்தியால் பாதிக்க தெருப்பிரசங்க ஊழியம் இன்னும் மிகச்சிறந்ததொரு முறையாகும். முதல் குருத்தோலை ஞாயிறன்று

நடந்த ஊர்வலத்தினால் நகர் முழுவதிலும் பரபரப்பும் ஆச்சரியமும் உண்டானது. தேவனது புகழைப் பாடிக்கொண்டு மக்கள் வீதிகளுக்குச் சென்றனர். இன்றோ நாம் ஆலயத்தையே சுற்றிச்சுற்றி வருகிறோம். நமது ஆலயத்தின் நான்கு சுவர்களுக்குள் இன்னும் எத்தனை காலம் நாம் ஆண்டவரைச் சிறையாக்கி வைத்திருப்போம் ? ஆலய வளாகத்திற்கு வெளியே எப்போது சென்று அவரது இரட்சிப்பைப் பிரசித்தப்படுத்துவோம் ?

அக்காலத்து இரட்சண்ய சேனை சபையினர் உள்ளத்தை உருக்கும் இசையோடும் மேளதாளங்களோடும் அடிக்கடி தெருக்களிலும் சந்திகளிலும் நற்செய்திப் பவனிகள் நடத்தினர். வீணான பிரச்னை உருவாகக் கூடிய ஒருசில இடங்கள் தவிர்த்து, சிறு குழுக்களாகவாவது திறந்த வெளிகளில் நாம் பாடல் பிரசங்கங்களுடன் பவனி செல்லலாம். ஒவ்வொரு சபையும் நகரில் ஒரு பகுதியைத் தெரிந்தெடுத்து இவ்விதம் ஊழியம் செய்யலாம். பொது விடுமுறை நாட்களில் அவ்வூரிலுள்ள அனைத்து சபைகளும் சேர்ந்து பொதுப்பவனி செல்லலாம். கூட்டம் கூட்டமென்று உள்ளே உட்கார்ந்திருப்பதைவிட்டு வெளியேயுள்ள கூட்டங்களுக்குள் ஊடுருவிச் செல்லக் காலமாயிற்று (அப் 17:17).

*கிதியோன்களே புறப்படுங்கள்*
*எதிரிகளைத் துரத்திடுங்கள்*
*தீபங்களை ஏந்திடுங்கள்*
*தெருத்தெருவாய் நுழைந்திடுங்கள் !*

ஆலயத்திற்கு வெளியே திறந்தவெளியில் இறையரசின் செய்தியை முதலாவது முழங்கியது யோவான் ஸ்நானன். “யோவான் ஸ்நானன் காலமுதல் இதுவரை பரலோக இராஜ்யம் பலவந்தம் பண்ணப்படுகிறது; பலவந்தம் பண்ணுகிறவர்கள் அதைப் பிடித்துக்கொள்ளுகிறார்கள்” (மத் 11:12). தெருக்களிலும், சாலைகளிலும், சந்திகளிலும் சென்று தொலைந்து போனோரை, தொய்ந்துபோனோரை, தொடப்படாதோரை தேவனது விருந்து சாலைக்கு வருந்திக் கட்டாயமாய் அழைத்துவாருங்கள் (லூக் 14:23).

தெருப்பிரசங்க ஊழியம் கடினமானதுதான். உங்கள் ஆடைகள் தூசிபடிந்து, அழுக்கடையத்தான் செய்யும் (மத் 21:7,8). ஆனால் தேவனது கோபாக்கினையின் ஆலையைத் தனியாய் மிதித்து தமது ஆடைகளை இரத்தத்தினால் கறைப்படுத்திக்கொண்ட இரட்சகருக்காக நாம் இதைக் கூடச் செய்யக்கூடாதா ? (ஏசா 63:3).



அர்த்தமுள்ள அடையாளங்கள் மற்றும் கொள்ளை கொள்ளும் கோஷங்களைப் பல வண்ணங்களில் எழுதித் தொங்கல்களும் அட்டைகளும் தயாரித்துக்கொள்ளுங்கள். கலைத்திறன் ஆவியானவரின் ஒரு வரமாகும் (யாத் 31:1-5). தெருக்களிலுள்ள மக்களைக் கவரும் வகையில் நற்செய்தியை அறிவிக்கத் தங்கள் திறமைகளைப் பயன்படுத்த வாலிபருக்கு நாம் விடுதலை தரவேண்டும். கழுதையைக் கொண்டுவாருங்கள் என்றுதான் ஆண்டவர் சொன்னார். கிளைகளையும் உடைகளையும் தெருவில் பரப்பியது மக்களாகவே செய்தது ! பிரதான ஆசாரியர், வேதபாரகரைப் போல் சபை மேய்ப்பர்கள் தங்களது வாலிபரின் உற்சாகத்தை அணைத்துவிட முயலக்கூடாது (மத் 21:15,16). வாலிபரைத் திரட்டி நற்செய்திப்பணியில் அவர்களை ஈடுபடுத்தத் தவறியது சபையின் பெருங்குற்றங்களில் ஒன்றாகும்.

## 3. துர்ப்பிரயோகிக்கப்பட்ட ஆலயம்

“அவர்கள் எருசலேமுக்கு வந்தார்கள். இயேசு தேவாலயத்தில் நுழைந்து, ஆலயத்தில் விற்கிறவர்களையும் வாங்குகிறவர்களையும் துரத்திவிட்டு, காசுக்காரருடைய பலகைகளையும், புறா விற்கிறவர்களுடைய இருக்கைகளையும் கவிழ்த்து... என்னுடைய வீடு எல்லா இனத்தாருக்கும் ஜெப வீடு என்னப்படும் என்று எழுதியிருக்கவில்லையா ? நீங்களோ அதைக் கள்ளர் குகையாக்கினீர்கள் என்று அவர்களுக்குச் சொல்லி உபதேசித்தார்” (மாற் 11:15-17).

நமது ஆலயக்கட்டிடங்கள் ஊழல் மற்றும் வழக்கு மையங்களாகிவிட்டது ஏன் ? அவைகளின் பிரதான நோக்கத்தை நாம் மறந்துவிட்டோம். ஆலயங்களில் இடையறாது நடக்கவேண்டியது ஜெபமே. நமது ஆலயங்களுக்குப் பலவிதமான பெயர்களைக் கொடுத்துள்ளோம். ஆனால் ஏகோவாவும் ஏசுவும் ஆலயத்திற்குக் கொடுத்த பெயர் “ஜெப வீடு” (ஏசா 56:7; மாற் 11:17). இங்கும் ஒரு மிஷனரி நோக்கு இருப்பதைக் கவனியுங்கள். அது “எல்லா இனத்தாருக்கும்” ஜெப வீடாம் !

அரசன் சாலமோன் மிஷனரிப் பாரத்துடன் ஆலயத்தைப் பிரதிஷ்டை செய்தான். இஸ்ரவேலனல்லாத “அன்னியன்” ஒருவன் அங்கு பண்ணும் ஜெபத்திற்குக் கிருபையாய்ப் பதிலளிக்கும்படி பிரதிஷ்டை ஜெபத்தில் சாலமோன் தேவனிடம் வேண்டினான். “பூமியின் மக்களெல்லாம்” கர்த்தரின் நாமத்தை அறிந்துகொள்ளவேண்டுமென்பதே அவனது பாரமும் தரிசனமுமாயிருந்தது (1 இரா 8:41-43). மிஷனரி ஜெபக்கூட்டமே ஆலயத்தின் முக்கிய நிகழ்ச்சியாயிருக்கவேண்டும். வார நாட்களில் நடக்கும்

மிஷனரி ஜெபக் கூடுகைகளில் அநேகர் பங்கு பெறுவதில்லை. ஒன்று விட்டு ஒரு ஞாயிறு ஆராதனையை மிஷனரி ஜெபக்கூட்டமாய் மாற்றினால் என்ன ? பிரிய சபை மேய்ப்பர்களே, இப்படியெல்லாம் மக்களை மாற்றி விடமுடியாதெனச் சொல்லாதீர்கள். சபையையே மாற்றமுடியாவிடில் சமுதாயத்தை மாற்றுவதைப்பற்றி பேசுவானேன் ?

நற்செய்திப்பணியில் உற்சாகமற்ற சபை உறைந்துபோகும் என்றார் பண்டிதர் ஆஸ்வால்டு J. ஸ்மித். நமது கட்டிடங்களைப் பற்றிப் பெருமை யடித்தது போதும். அவைகள் வெறும் நினைவுச் சின்னங்களாகக்கூட இருக்கும்படித் தேவன் விட்டுவைக்கமாட்டார். "அவர் தேவாலயத்தை விட்டுப் புறப்படும்போது, அவரது சீடரில் ஒருவன் அவரிடம்: போதகரே, இதோ பாரும், எத்தகையக் கற்கள்! எத்தகையக் கட்டிடங்கள்! என்றான். இயேசு அவனுக்கு மறுமொழியாக: இப்பெரிய கட்டிடங்களைப் பார்க் கிறாயே, ஒரு கல்லின்மேல் ஒரு கல்லிராதபடி எல்லாம் இடிக்கப்பட்டு போகும் என்றார்" (மாற் 13:1,2). கி.பி. 70இல் ரோமானியர் இந்த ஆலயத்தை அழித்தபோது எழுத்தின்படி இயேசுவின் வார்த்தைகள் அப்படியே நிறைவேறின. எச்சரிக்கை!

இச்சம்பவத்தில் இன்னொரு முக்கியமான அடிப்படைப் படிப்பினையும் உண்டு. ஆலயத்திற்குள் புறாக்காரரும் காசுக்காரரும் வியாபாரம் நடத்திய தற்கு "மத சம்பந்த" காரணங்கள் இருந்தன. எப்படியெனில், மோசேயின் பிரமாணத்தின்படி பலிகள் செலுத்துவதற்காகவே புறாக்கள் விற்கப்பட்டன. அப்படியே கிரேக்க மற்றும் ரோமானிய நாணயங்களை ஆலய வரிக்காக மாற்றுவதற்காகவே அங்கு காசுக்காரர் செயல்பட்டுக்கொண்டிருந்தனர். அப்படியிருந்தும் அவ்வளவு ஆவேசமாக இயேசு இவ்வியாபாரங்களை எதிர்த்தது ஏன் ? ஆம், மார்க்கம் ஒருபோதும் வியாபாரமயமாகிவிடக் கூடாது. "தேவ பக்தியை ஆதாயத்தொழிலென்று எண்ணும்" பிரசங்கி மாரையும் ஊழியரையும் ஒன்று அகற்ற வேண்டும்; அல்லது நாம் அவர்களை விட்டு அகல வேண்டும் (1 தீமோ 6:5). மிஷனரிச் சுவிசேஷகராகத் தமது சீடரை இயேசு அனுப்புகையில் ஊழியத்திற்கு விலை பேசிவிடக்கூடா தென்று எச்சரித்தார். "இலவசமாய்ப் பெற்றீர்கள்; இலவசமாய்க் கொடுங்கள்" என்றார் (மத் 10:8).

### 4. கனியற்ற மரம்

"காலையில் அவர் நகருக்குத் திரும்புகையில் பசியுற்றார். வழியோரத்தில் ஓர் அத்திமரத்தைக் கண்டு அதை அணுகி, அதில் இலைகளையன்றி வேறொன்றையும் காணாமல், இனி ஒருக்காலும் காய்க்கவேமாட்டாய் என்று கூறினார். உடனே அத்திமரம் பட்டுப்போயிற்று" (மத் 21:18,19).



கனியற்ற கிறிஸ்தவன் ஒரு முரண்பாடு. கனிகொடுத்தல் என்றால் பெருக்குதல் எனப் பொருள். பிறரை மீட்கவே நாம் மீட்கப்பட்டோம்; பிறரை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதிக்கப்பட்டோம். "நீங்கள் போய்க் கனிகொடுக் கவும், உங்கள் கனி நிலைத்திருக்கவும் நான் உங்களை ஏற்படுத்தினேன்" என்றார் இயேசு (யோ 15:16). மனிதரைப் பிடிப்பதே நமது அடிப்படை அழைப்பு என்பதை மறவாதிருப்போம் (மத் 4:19). கனி கொடுப்பது நமது விருப்பத்தை அடுத்ததல்ல; அது நமது கடமை. கனியின்மை சோம்பேறித் தனத்தினால் இருக்கலாம்; ஆனால் அது "பொல்லாப்பு" என்றழைக்கப் படுகிறது (மத் 25:26).

இயேசு அவ்வத்தி மரத்தை அணுகிய காலத்திலிருந்து ஆறு வாரங் கள் கழித்தே சாப்பிடக்கூடிய ருசியான கனிகள் இருக்கும்; ஆனால் அப் பொழுது ருசியற்ற முற்கனிகள் இருந்திருக்கவேண்டும் (மாற் 11:13). முற்கனிகளின்றி இலைகள் மட்டுமே இருந்தால் அம்மரம் அவ்வாண்டு காய்க்கவே காய்க்காது. அதின் மாய்மாலத்திற்காகவே இயேசு அம் மரத்தைச் சபித்தார். இறையரசின் விரிவாக்கத்திற்காக நாம் செய்பவை களைப் பல சமயங்களில் நாம் மிகைப்படுத்தி அல்லது பொதுவாகச் சொல்லிவிடுகிறோம். கணக்கொப்புவிக்க வேண்டிய நாள் வருகிறது. ஐந்து தாலந்து அல்லது இரண்டு தாலந்து பெற்றவனைப்போல் நமக்கு தேவனருளிய ஆவிக்குரிய, உடலுக்கடுத்த, பொருளாதார ஆசீர்வாதங் களைக்கொண்டு என்ன செய்திருக்கிறோமெனக் குறிப்பாய்ச் சொல்லத் தெரியவேண்டும் (மத் 25:20,22). அதிகம் ஆசீர்வதிக்கப்பட்டவரிடம் அதிகம் எதிர்பார்க்கப்படும் (லூக் 12:48).

இச்சம்பவத்தில் இயேசு அம்மரத்தை உடனே சபித்துவிட்டார். ஆனால் இன்னொரு இடத்தில் அவர் சொன்ன அத்திமர உவமையில் கனியற்ற மூன்றாண்டுகளுக்குப் பிறகு கிருபையாக இன்னோர் ஆண்டு கூட்டிக் கொடுக்கப்பட்டது (லூக் 13:6-9). ஒருவேளை இதுவே உங்களது நாலாவது — அதாவது கடைசி — ஆண்டாக இருக்கலாம்! உங்கள் நேரத்தையும் பலத்தையும் ஆத்துமாக்களை ஆதாயம்பண்ணச் செலவிடுங்கள். இனியும் காலந்தாழ்த்தாமல் உங்களது மிஷனரி அழைப்பிற்குக் கீழ்ப்படியுங்கள். இவ்வுலகிற்கடுத்த சிற்றாசைகளை அவ்வுலகிற்காக விட்டுவிடுங்கள். தனியாள் ஆத்துமாதாயத்திலும் சுற்றுப்புற நற்செய்திப்பணியிலும்

உங்களை ஈடுபடுத்துங்கள். இன்னும் ஏனோதானோவென்றிருந்தால் மரம் வெட்டப்படும்; அல்லது தோட்டம் வேறொருவருக்குக் கொடுக்கப்படும் (மத் 21:40,41).

### 5. தியாகப் பெண்மணிகள்

பஸ்காவிற்கு இருதினங்களுக்கு முன்னர் செவ்வாயன்று கொடுக்கப் பட்ட இரு தியாகக் காணிக்கைகளைக் குறித்து சுவிசேஷங்களில் வாசிக் கிறோம் (மத் 26:2). கொடுத்த இருவருமே பெண்களாவர். கடைசியாய்த் தனக்கிருந்த இரண்டே காசுகளைக் கொடுத்துவிட்ட விதவை ஒருத்தி (மாற் 12:41-44; லூக் 21:1-4). தன்னிடமிருந்த விலையுயர்ந்த தைலத்தை இயேசுவின்மீது கொட்டிவிட்ட பெண்மணி அடுத்தவள் (மத் 26:6-13; மாற் 14:3-9). இவ்விரு செயல்களையும் இயேசு வெகுவாய்ப் பாராட்டினார்.

அழியாத படிப்பினை ஒன்று இங்குண்டு. இவ்விரு பெண்களும் தங்கள் எதிர்காலத்தைவிட ஆண்டவரைப் பெரிதாகக் கருதினர். அவ்விதவை ஏற்கனவே வறுமையிலிருந்தவள். ஆனால் “தனக்குள்ளதையெல்லாம்” அவள் போட்டுவிட்டாள். தனது எதிர்காலத்திற்காய்த் தேவனை முழு வதுமாய் நம்பித் தனக்குள்ளதை முழுவதுமாய்க் கொடுத்துவிட்டாள் — வெறுமனே தசமபாகத்தையல்ல! தைலத்தைப் பொறுத்தவரை அது ஓராண்டுக்குரிய சராசரிக் கூலியாகும். அவளது குடும்பத்தில் அது ஒரு பரம்பரைச் சொத்தாகவோ, அல்லது அவளுக்கு வரும் மணமகனுக்குப் பரிசளிக்கவோ வைக்கப்பட்டிருந்திருக்கலாம். அத்தைலப் புட்டியைத் திறந்துவிட்டால் முழு மணத்துடன் அத்தைலத்தை ஒருமுறைதான் அனுபவிக்கமுடியும். அவளுக்கோ அவளது ஆண்டவர் அவளது எதிர்காலத்திலும் சிறந்தவர். இச்செயலை இயேசு உடனே அகிலவுலக நற்செய்திப்பணியோடு இணைத்தது எத்தனை ஆச்சரியம்! “இச்சுவி சேஷம் உலகில் எங்கெங்கே பிரசங்கிக்கப்படுமோ அங்கெல்லாம் இவள் செய்ததும் இவள் நினைவாகக் கூறப்படும் என்று உறுதியாக உங்க ளுக்குச் சொல்லுகிறேன் என்றார்” (மத் 26:13).

அகிலவுலக நற்செய்திப்பணியில் உண்மையான நாட்டங்கொண்டோர் எவரும் பழைய ஏற்பாட்டுத் தசமபாக மனப்பான்மையிலிருந்து வெளி வந்தேயாகவேண்டும். நியாயப்பிரமாணமானது நம்மைக் கிறிஸ்துவிடம் வழிநடத்தும் “உபாத்தியாய்” மட்டுமே நியமிக்கப்பட்டது (கலா 3:24,25). அதாவது சிறு பிள்ளைகளைப் பத்திரமாய்ப் பள்ளிக்குக் கூட்டிக்கொண்டு



போய், அக்கம்பக்கச் சிதறல்களுக்குப் பாதுகாத்து, கவனமாய் வீட்டுக்குத் திரும்பக் கூட்டிவரும் “வழித்துணை” என்ற கிரேக்கப் பழக்கமே இங்கு குறிப்பிடப்படுகிறது! இந்தப் பாலர் பள்ளி நிலையிலிருந்து என்றுதான் வளர்ந்து முதிர்ச்சியடைவோமோ?

துக்ககரமாக, அதே நாளில், அவள் இயேசுவின் மீது தைலத்தை ஊற்றியதையடுத்து உடனே, யூதாஸ் ஸ்காரியோத் பிரதான ஆசாரியரிடம் சென்று தனது ஆண்டவரை முப்பது காசுகளுக்கு விற்றுப்போட்டான் (மத் 26:13-16; மாற் 14:9-11). அப்பெண்மணிக்கு அவளது ஆண்டவர் ஓராண்டு சம்பாத்தியத்தைவிட விரும்பப்படத்தக்கவராயிருந்தார்; யூதாசிற்கோ ஒரு மாத ஊதியமே அவனது ஆண்டவரைவிடப் பெரிதாகத் தெரிந்தது. நீங்கள் எந்த வகுப்பைச் சேர்ந்தவர்கள்? உண்மையாய்ச் சொல்லுங்கள்!

### 6. பயமற்ற சாட்சி

“பிலாத்து அவரைப் பார்த்து : அப்படியானால் நீ ராஜாவோ என்றான். இயேசு மறுமொழியாக: நீர் சொல்லுகிறபடி நான் ராஜாதான்; சத்தியத்தைக் குறித்து சாட்சி கொடுக்க நான் பிறந்தேன், இதற்காகவே இவ்வுலகில் வந்தேன் என்றார்” (யோ 18:37).

இயேசுவிற்கும் சீடருக்கும் என்னே வேறுபாடு! காட்டிக்கொடுப்பவன் தலைமையில் திரளான மக்கள் இயேசுவைப் பிடிக்க வாள்களோடும் தடிகளோடும் வந்தபோது சீடர் அனைவரும் காற்றாய்ப் பறந்தனர். வாலிபனொருவன் தனது ஆடைகளைக்கூட விட்டுவிட்டு நிர்வாணமாய் ஓடிவிட்டான் (மத் 26:56; மாற் 14:50-52). இயேசுவோ சிங்கம்போல் நின்று “நான்தான் அவர்!” என்று மும்முறை முழங்கினார் (யோ 18:4-8). பேதுரு இயேசுவை மறுதலித்தான், அவருக்கெதிராய்ச் சத்தியம் பண்ணி னான், அவரைச் சபித்தான். இயேசுவின் அஞ்சா நெஞ்சத்தின் இரகசியம் என்ன? அவர் ஏற்கனவே தம்மை நன்கு ஜெபத்தில் ஆயத்தப்படுத்தி யிருந்தார். பலவீன மாம்சத்தை மேற்கொள்ள உற்சாகமுள்ள ஆவியைப் பலப்படுத்தியிருந்தார் (மத் 26:41). இங்குதான் சீடர் தவறினர். குறட்டை விட்டுக் கோட்டைவிட்டனர். சாட்சி பகருவதில் நாம் பலவீனமாயிருப்பதற்கு அடிப்படைக் காரணம் முழங்கால் தோல்வியே. “ஜெப வேளையைத்” தவறாது கடைப்பிடித்ததாலேயே எவ்வித அச்சுறுத்தலுக்கும் ஆதிச்சபை அசையவில்லை (அப் 3:1). பவுலைப் போன்ற துணிந்த அப்போஸ்தலன் கூட தனது “தைரியத்திற்காய்” ஜெபிக்கும்படித் திரும்பத் திரும்ப விசு வாசிகளை வேண்டினான் (எபே 6:19).

இயேசுவின் தைரியத்திற்கு இன்னொரு காரணம் அவர்மீதிருந்த ஆவியின் அபிஷேகமாகும். மிஷனரிப் பணியும் நற்செய்தி ஊழியமும் பிசாசின் வல்லமைக்கெதிரான நேரடிப் போராட்டங்களாம். பலத்தினாலு மல்ல, பராக்கிரமத்தினாலுமல்ல, சேனைகளின் கர்த்தரின் ஆவியினாலேயே பாதாளத்தின் வாசற்கதவுகளை மோதியுடைத்து சிறைப்பட்டோரை விடு விக்க முடியும் (லூக் 4:17-21). ஆன்மீகப் போராட்டத்தை மூளையறிவு, பேச்சுத்திறன், தொழில் நுட்பம், செல்வாக்கு, பணபலம் போன்றவை கொண்டு மேற்கொள்ள முனைவது மடமையிலும் மடமை.

விசுவாசத்திற்காகத் தளராது போராடவும், சுவிசேஷத்தைத் தயங்காது பறைசாற்றவும் வாலிபன் தீமோத்தேயுவை உற்சாகப்படுத்தியபோது, "பொந்தியுபிலாத்துவின் முன்னின்று நல்ல அறிக்கையைச் சாட்சியாக விளங்கப்பண்ணின கிறிஸ்து இயேசுவை" பவுல் அவனுக்கு நினைப் பூட்டினான் (1 தீமோ 6:12-14). இயேசு மரிக்கவும் ஆயத்தமாயிருந்ததால் எதற்கும் அஞ்சவில்லை. தம்மைப் பின்பற்றுவோரிடம் அவர் வைத்த எதிர்பார்ப்பு இதுவே: "தன் உயிரைக் காக்கிறவன் அதை இழந்து போவான்; எனக்காகத் தன் உயிரை இழந்துபோகிறவனோ அதைக் கண்டடைவான்" (மத் 10:32,39).

*உமக்காகத்தானே ஐயா – நான்*
*உயிர் வாழ்கிறேன் ஐயா*
*என் உடலும் உள்ளமெல்லாம் – அன்பர்*
*உமக்காகத்தானே ஐயா*

## 7. சிலுவைக் கள்ளன்

"சிலுவையில் அறையப்பட்டிருந்த குற்றவாளிகளில் ஒருவன்... அவரை இகழ்ந்தான்... மற்றவன்... இயேசுவை நோக்கி: ஆண்டவரே, நீர் உமது இராஜ்யத்தில் வரும்போது அடியேனை நினைத்தருளும் என்றான். இயேசு அவனை நோக்கி: இன்றைக்கு நீ என்னுடன் பரதீசிலிருப்பாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார்" (லூக் 23:39-43).

அவரைக் கேட்கவும் அவரால் குணமடையவும் பெருங்கூட்டம் அவரை எப்பொழுதும் நெருக்கிக்கொண்டிருந்தாலும் இயேசு தனி நபர்களையும் அவர்களது தேவைகளையும் ஒருபோதும் கவனியாது விடவில்லை. நிக்கொதேமுவுக்கும் சகேயுவுக்கும் நேரம் கொடுத்தார். தொழுவத்திலிருந்த தொண்ணூற்றொன்பது ஆடுகளைவிடத் தொலைந்துபோன ஓர் ஆட்டைப் பற்றியே அவருக்குக் கவலை அதிகம். முழுநேர ஊழியத்திலிருந்தாலும்



இல்லாவிட்டாலும் ஒவ்வொரு கிறிஸ்தவனும் தன் வாழ்நாள் முழுவதும் "தனியாள்" ஆத்துமாதாயகனாய் இருக்கவேண்டும். எந்த நேரமும் ஆத்து மாதாய நேரமாம்; எவரும் ஓர் ஆத்துமாவாம். சிலுவைக் கள்ளனை ஆதாயப்படுத்தியதின் மூலம் இக்கருத்தையே இயேசு நிலைப்படுத்தினார்.

தனியாள் ஆத்துமாதாயத்தின் அளவிலா சாத்தியத்தை நாம் சரிவர உணராது பொதுமேடைக் கூட்டங்களில் ஏராளம் நேரம், பணம், பலத்தை வீணடிக்கிறோம். 100 பேர் கொண்ட சபையில் ஒவ்வொருவரும் ஒரு மாதத்தில் இன்னொருவரைச் சந்தித்துக் கிறிஸ்துவிடம் கொண்டுவந்து அவரையும் ஆத்துமாதாயகராய் மாற்றினால் அடுத்தமாதம் அச்சபையில் 200 பேர் இருப்பார்கள். ஜனவரி மாதம் துவங்குகிறோம் என வைத்துக் கொள்வோம். பெப்ருவரியில் எண்ணிக்கை 200 ஆகும், மார்ச் 400, ஏப்ரல் 800, மே 1600, ஜூன் 3200, ஜூலை 6400, ஆகஸ்டு 12,800, செப்டம்பர் 25,600, அக்டோபர் 51,200, நவம்பர் 1,02,400, டிசம்பரில் அது 2,04,800 எனப் பெருகியிருக்கும்! இதில் பாதிப்பேர் பின்வாங்கி விட்டனர் என எடுத்துக் கொண்டாலும், மிச்சம் எப்படியும் 1,00,000 பேர் இருப்பர்! ஆடிட்டோரியம் வாடகை, சுவரொட்டி அச்சடிப்புக் கூலி, ஸ்டார் ஹோட்டல் செலவு, இப்படி ஒன்றுமில்லாமல் இவ்விதம் சபை வளர்வதைச் சிந்தித்துப் பாருங்கள். பொதுக் கூட்டங்களுக்கு ஒருவேளை அரசு தடை விதிக்கலாம்; ஆனால் தனியாள் ஆத்துமாதாயப் பணியை யார் தடுத்து நிறுத்தமுடியும்?

தனியாள் ஆத்துமதாயப் பணியில் மறுமலர்ச்சி உண்டாவதே புதிய ஏற்பாட்டுக் கிறிஸ்தவத்தைத் திரும்பக் கண்டுபிடிப்பதாகும் என்று மிஷனரி சுவிசேஷகர் T. L. ஆஸ்போர்ன் அழுத்திக் கூறுகிறார். நாம் எதிர்பார்த் திருக்கும் முடிவான எழுப்புதல் இதுவே. அழியும் ஆத்துமாக்களுக்குச் சிலுவைச் செய்தியை அறிவிக்க நாம் ஒவ்வொருவரும் நம்மை அர்ப் பணித்தால் சிலுவையிலறையப்பட்ட இரட்சகர் "தமது ஆத்தும வருத் தத்தின் பலனைக் கண்டு திருப்தியாவார்!" (ஏசா 53:11).

## 7

# விளைச்சல் குறைவதேன்?

இறையரசிற்கான ஆத்தும அறுவடையின் இறுதிக் கட்டத்தில் நாம் இருக்கிறோமென்பது மறுக்க முடியாதது. என்றுமில்லாத எண்ணிக்கையில் மக்கள் கிறிஸ்துவிடம் வந்துகொண்டிருக்கின்றனர். கடைசி நாட்களின் அருள்மாரியானது கணக்கிலடங்கா ஆத்துமாக்களைச் சபைக்குள் வாரிக்கொண்டுவருமென்ற வேதாகமத் தீர்க்கதரிசனத்தின் நிறைவேறுதலே இது (அப் 2:16,17,21).

ஆனால் அகிலவுலகின் மக்கட்தொகைப் பெருக்கத்திற்குத்தக்கதாய்க் கிறிஸ்தவம் வளரவில்லையென்பது கரிசனைக்குரியதாகும். சபைகளும் சங்கங்களும் தங்களது நற்செய்திப் பணிமுயற்சிகளைப் பன்மடங்காக்கிக் கொண்டிருந்தாலும் இந்த இருபது ஆண்டுகளில் மக்கட்தொகை பெருக்கத்தோடு ஒப்பிடுங்கால் சபை வளர்ச்சியின் சதவீதம் குறைந்து கொண்டே வருகிறது. லண்டனிலுள்ள கிறிஸ்தவ ஆராய்ச்சி இயக்கத்தின் புள்ளிவிபரக் கணக்கின்படி 1980-1985இல் கிறிஸ்தவர்களின் பெருக்கம் மக்கட்தொகைப் பெருக்கத்தில் 31 சதவீதமாகவும், 1986-1990இல் அது 27ஆகவும், 1991-1995இல் 23ஆகவும், 1996-2000இல் 21ஆகவும் இருந்து வருகிறது. இது நம்மைச் சோர்புறச்செய்யாமல், அசதியான திருப்திக்குள் நாம் சென்றுவிடாதபடி நமக்குச் சவாலிட்டு நம்மையும் நமது பணிகளையும் ஆராய்ந்து பார்க்க நம்மை நடத்தவேண்டும்.



ஒரு மிஷனரி இயக்கத் தலைவன் என்ற வகையில், வேதத்தையும் இந்தியாவிலுள்ள பல்வேறு மிஷனரிக் களங்களின் நேரடி அறிவையும் கொண்டு சிந்திக்குங்கால், எதிர்பார்த்த அளவு அறுவடை இல்லாததற்குக் குறைந்தது பத்து காரணங்கள் எனக்குத் தென்பட்டன. எபிரேய மக்கள் பெரும்பாலும் விவசாயிகளாயிருந்தபடியால் தமது அரசின் விரிவாக்கச் சத்தியங்களை அவர்களுக்குப் போதிக்கக் கடவுள் விவசாயம் சம்பந்தப்பட்ட ஒப்புமைகளையே கையாண்டார். அறுவடை குறைவாயிருப்பதற்கான காரணங்கள் இதோ—

### 1. நேர்த்தியற்ற விதை

எதை விதைக்கிறோமோ அதையே அறுப்போம். விதையின் தரம் விளைச்சலின் அளவை நிர்ணயிக்கும். விதைக்கிறவனின் உவமையை விளக்குகையில் இயேசு, ‘‘விதையானது இறைவார்த்தை’’ என்றார் (லூக் 8:11). இன்றையப் பிரசங்கங்கள் பலவற்றில் நற்செய்தியின் சாராம்சம் பரிதாபமான அளவு குறைந்துவிட்டது. சுத்த சுவிசேஷத்திற்குப் பதிலாக கதைகளும் சொந்த அனுபவங்களுமே கூறப்படுகின்றன. மக்கள் ‘‘சத்தியத்திற்குச் செவிசாய்க்க மறுத்துக் கட்டுக்கதைகளை நாடிச் செல்லும்’’ காலத்தை முன்னறிந்த அப்போஸ்தலன் பவுல் இளம் பிரசங்கி தீமோத்தேயுவுக்கு ‘‘திருவசனத்தைப் பிரசங்கி’’ என அறிவுறுத்தினான் (2 தீமோ 4:2,4).

மக்களது விருப்பத்திற்கேற்றாற்போல் நற்செய்தியானது கலப்படம் பண்ணப்படுகிறது. நகர்களில் நடக்கும் நற்செய்திப் பெருங்கூட்டங்கள் பலவற்றில் மக்கள் சிரிக்கவைக்கப்படுகின்றனரேவொழிய சுவிசேஷத்தைச் சிந்திக்க வைக்கப்படவில்லை. பொருளாதாரத்தையே பிரதானமாய்க் கொண்டுள்ள நாடுகளின் கண்டுபிடிப்பாகிய சுகபோகவாழ்வு உபதேசம் சபைக்குள் ஈசாக்குகளைவிட இஸ்மவேல்களை நிறைய கொண்டுவந்து விட்டது. தனது திட்டங்களிலேயே கருத்தும் மக்களது பணப்பையிலேயே கண்ணும் கொண்டுள்ள சுவிசேஷகனால் சுவிசேஷத்தைச் சுத்தமாய்ப் பிரசங்கிக்க எப்படி முடியும்? (2 பேது 2:14ஆ,15).

எதிர்ப்பு நிறைந்த இடங்களில் நற்செய்தியறிவிக்கச் செல்லும்போது மிஷனரிகள் அடிக்கடி பயத்தினால் பலமிழக்கின்றனர். ஊழியர்கள் சுவிசேஷத்தை உள்ளவாறு பிரசங்கிக்கத் தயங்கும் இன்னொரு வினோதமான சூழலும் உண்டு. பழங்குடியினர் கிராமமொன்றில் அக் கிராமத் தலைவன் எங்களை அன்புடன் வரவேற்றான். நாங்கள் கடவுளைப் பற்றிப் பேசவே அங்கு வந்திருக்கிறோமென்று சொன்னதும் அவ்வூர்க் கோயில் பூசாரி அங்குள்ள விக்கிரகத்திற்கு முன்னதாகவே மக்களைக்

கூடிவரச் செய்து கோயில் மேடையில் எங்களை உட்காரவைத்தான். நாங்கள் பாடுவதற்கு அக்கோயிலிலுள்ள இசைக்கருவிகளையும் எடுத்துக் கொடுத்துவிட்டான். உடன் ஊழியர் என்னைப் பேசச் சொன்னபோது என் தொண்டை எப்பொழுதுமில்லாதவாறு அடைத்தது. கிறிஸ்து ஒருவரே வழியென்று சொல்லி அங்கிருந்த விக்கிரகாராதனைக்கார நண்பர்களைப் புண்படுத்த நான் விரும்பவில்லை! இதுதான் மனிதரைப் பிரியப்படுத்தத் தவறிவிடுவோமோ என்ற பயம் (கலா 1:9,10). கிறிஸ்தவரல்லாத உயர் அதிகாரிகள் சுவிசேஷப் பிரசங்கபீடங்களருகே அமர்த்தப்பட்டிருக்கையில் சுவிசேஷகர் பலர் இதுபோன்ற இக்கட்டான நிலையைச் சந்திப்பர். நற்செய்தியை அறிவிக்கும்படி தனது வாயைத் “தைரியமாய்த்” திறக்கத் தனக்காய் ஜெபிக்கும்படி பவுல் போன்ற பிரசங்க வீரன் மக்களைக் கேட்டுக்கொண்டது ஆச்சரியமல்லவே (எபே 6:19). “இயேசு உங்களை நேசிக்கிறார்!” மற்றும் “இயேசு உங்களை ஆசீர்வதிக்கிறார்!” என்றுதான் நான் அன்று மாலை அக்கிராமத்தில் பிரசங்கிக்க முடிந்தது. ஆனால் இது சுவிசேஷம் அல்லவே!

## 2. கெட்ட நிலம்

விதை நேர்த்தியாயிருக்க வேண்டுமென்பது கட்டாயமெனினும் அது மட்டும் நல்ல விளைச்சலைக் கொடுத்துவிட முடியாது. நிலத்தின் தன்மையும் முக்கியம். விதைக்கிறவன் உவமையில் இயேசு வழியருகே யுள்ள நிலம், கற்பாறையான நிலம், முள் நிறைந்த நிலம், முப்பது மடங்கு விளைநிலம், அறுபது மடங்கு விளைநிலம், நூறு மடங்கு விளைநிலம் என்று ஆறு வகை நிலங்களை வரிசைப்படுத்தினார் (மத் 13:3-8).

நமது நற்செய்திப்பணி முயற்சிகளில் நாம் சாதகச் சிந்தையுடனிருப்பது அவசியமெனினும் நிலத்தின் தன்மைகளை மறந்துவிடக்கூடாது. எல்லா இடங்களிலும் ஒன்றுபோல் கனி கிடையாவிட்டால் சோர்ந்து போகக்கூடாது. ஏறக்குறைய முழுக் கிராமமும் சுவிசேஷத்தை ஏற்றுக்கொண்டுவிட்டதால் அன்றைய மிஷனரிகளால் நாசரேத் எனப் பெயரிடப்பட்ட கிராமத்திலிருந்து நான் வருகிறேன். ஆனால் அதற்கு அடுத்த கிராமமாகிய ஆழ்வார்திரு நகரி இன்றுவரை இந்துக்களின் ஆதிக்கத்திலேயே இருந்துவருகிறது!

சபையானது பிந்திவிட்டது என்பதையும் நினைவிற்கொள்ளவேண்டும். ஒரு கிறிஸ்தவ மிஷனரி கால்வைக்குமுன் தொலைதூரமான இடங் களுக்கும் சாத்தானின் சேவகர்கள் சென்றுவிட்டனர். சுவிசேஷத்திற்கான முதல் எதிர்ப்பு பொதுவாக மந்திரவாதிகளும் சூனியக்காரர்களுந்தான்.



முதற் குழு மிஷனரிகளை முதலாவது எதிர்த்தது ஒரு மாயவித்தைக் காரன்தான் (அப் 13: 4-8). “கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தின் ஒளி அவிசுவாசிகளுக்குப் பிரகாசமாயிராதபடி இவ்வுலகின் தெய்வம் அவர்களுடைய மனதைக் குருடாக்கிவிட்டது” என்று இந்நிலையை மிஷனரி பவுல் விளக்குகிறான் (2 கொரி 4:3,4). பணிக்களங்களிலுள்ள லீதியாக் களின் இருதயங்களை ஆண்டவர் “திறக்கும்படி” நாம் ஊக்கமாய் மன்றாடவேண்டும் (அப் 16:14). சிறுவரும் பெண்டிருமே சுவிசேஷத்தை விசுவாசிப்பதில் முந்திக்கொள்கின்றனர் என்பதே பொதுவாக பணிக்களங் களில் கண்டறிந்தது. சிறுவர் ஊழியத்தின் நேரடி விளைவாகப் பல சபைகள் உருவாகியுள்ளன.

நிலத்தின் தன்மைக்காய் ஜெபிக்கையில் நாம் உரிமைபாராட்ட பொருத்தமான சில வாக்குகளுண்டு. சகரியா 4:7, “மாபெரும் மலையே, நீ எம்மாத்திரம்? செருபாபேலுக்குமுன் நீ சமவெளியாவாய்!” எரேமியா 23:29, “என் வார்த்தை நெருப்பைப் போலவும், பாறையை நொறுக்கும் சம்மட்டியைப் போலவும் இருக்கிறதல்லவோ?”

## 3. குறைவான விதைப்பு

அறுவடை சம்பந்தப்பட்ட பொது அறிவுத் தத்துவங்களிலொன்றைப் பவுல் 2 கொரி 9:6இல் குறிப்பிட்டுள்ளான்: “சிறுக விதைக்கிறவன் சிறுக அறுப்பான்; பெருக விதைக்கிறவன் பெருக அறுப்பான்.” ஆதிக் கிறிஸ்தவர்களின் திரளான ஆத்தும அறுவடையின் முக்கிய இரகசியம் அவர்கள் “எங்கும்” சென்று நற்செய்தியைப் பறைசாற்றியதே (மாற் 16:20).

இந்தியாவில் மிஷனரி நற்செய்திப் பணியைப் பொருத்தளவில் நாம் இன்னும் போதுமான அளவு விதைக்கவில்லை என்பதே எனது கருத்து. இதற்குக் குறைந்தது மூன்று காரணங்களுண்டென நான் எண்ணுகிறேன்.

*உற்சாகமின்மை:* கிறிஸ்தவர்களில் பெரும்பாலானோர் இன்னும் நற்செய்திப்பணியில் ஈடுபடவில்லை. முழுச் சபையும் முழுச் சுவிசேஷத்தை முழுவுலகிற்கு எடுத்துச்செல்லவேண்டும். பணிக்காய்த் தங்களை அர்ப்பணிப்போரிடையேயும் உற்சாகம் குறைவுதான். ஆத்துமாதாயத்தில் விடாது விறுவிறுப்பாயில்லாவிடில் அதிகமாய் ஒன்றும் சாதிக்கமுடியாது. தங்கள் இதயங்களிலிருக்கும் இறைவார்த்தைகள் எலும்புகளுக்குள் அடைபட்டிருக்கும் நெருப்பு போல் இருக்கின்றன என்பதே தீவிர ஆத்து மாதாயகரின் சாட்சியாகும். கடினமான அல்லது அச்சுறுத்தும் சூழ் நிலைகளும் அவர்களை அமைதிப்படுத்த முடியாது (எரே 20:9).

*பாதகச் சிந்தை:* நற்செய்தியை அறிவிக்க “அழகிய பாதங்கள்” எங்கும் விரைய முடியாதபடி எதிர்மறைச் சிந்தை அவைகளை முடமாக்கும். நம்மால் முடிந்த அத்தனையையும் நாம் செய்துவிட்டு விளைவைக் கடவுளின் கரத்தில் விட்டுவிடவேண்டும். எல்லாமே நமக்குத் தெரிந்து விட்டால் விசுவாசத்தை அப்பியாசிக்க அவகாசமில்லையே! ஆத்தும அறுவடையில் தெய்வீக வல்லமையின் செயல்பாட்டை ஞானப் பிரசங்கி அழகாய் வருணித்துள்ளான்: “ஏழுபேருக்கும் எட்டுபேருக்கும் பங்கிட்டுக் கொடு; உலகில் என்ன ஆபத்து நேரிடுமோ உனக்குத் **தெரியாது...** காற்றின் போக்கையோ கருவுற்ற பெண்ணின் வயிற்றில் எலும்புகள் உருவாகும் விதத்தையோ நீ **அறிய இயலாது**; அவ்வாறே எல்லாவற்றையும் செய்கிற கடவுளுடைய செயல்களையும் நீ **அறிய மாட்டாய்**. காலையிலே உன் விதையை விதை; மாலையிலே உன் கையைச் சோர்படைய விடாதே; அதுவோ இதுவோ, எது பயன் தருமோ என்றும், அல்லது இரண்டுமே நல்விளைச்சலைத் தருமோ என்றும் நீ **அறிய மாட்டாயே**” (பிர 11:2,5,6).

*விருப்புவெறுப்பு:* அடுத்த நாட்டைக் குறித்த வெறுப்புணர்வினால் நினிவேக்குச் செல்ல யோனா மறுத்தான். தனது இனத்தைக் குறித்த பெருமையினால் கொர்நேலியுவின் இல்லத்திற்குச் செல்ல பேதுரு தயங்கினான். நற்செய்திப் பணிக்களங்களில் இவ்விதம் நமது விருப்பு வெறுப்பு தலைதூக்குமானால் விதைப்பு குறையும்; நல்ல விளைச்சலுக் கான வாய்ப்புகள் பல இழக்கப்படும்.

### 4. பொருத்தமற்ற செயல்முறைகள்

அனைத்து மக்களினங்களுக்கும் நமது செய்தி ஒன்றே; ஆனால் அவர்களது நிலை மற்றும் கலாச்சாரத்திற்கேற்றவாறு நமது செயல்பாட்டு முறைகளை மாற்றிக்கொள்ளவேண்டும். அப்போஸ்தலன் பவுலை நிகரற்ற தொரு மிஷனரியெனலாம். அவன் யூதக் கூட்டத்தாரோடு பேசும் போதெல்லாம் அவர்களது பழைய ஏற்பாட்டிலிருந்து அடிக்கடி மேற்கோள் காட்டினான். ஆனால், எடுத்துக்காட்டாக, அத்தேனே நகரிலிருந்த சிலை வணக்கத்தாரோடு பேசும்போது அவர்களது கோயில் ஒன்றில் எழுதியிருந்த ஒரு வாசகத்தையே தனது பிரசங்க வாக்கியமாய் எடுத்துக்கொண்டான் (அப் 17:22,23). விதை ஒன்றாயினும், நிலத்தின் தன்மைக்கும் அப்பகுதியின் தட்டவெட்ப நிலைக்கும் ஏற்றாற்போல் விவசாயிகள் சாகுபடி முறைகளை மாற்றிக்கொள்வது நாமறிந்ததே.

திருமுழுக்கு எடுப்பதற்குமுன் வளையல்களைக் கழற்றிவிடவேண்டு மென்று ஒரு கூட்ட கிராமப் பெண்களை மிஷனரிகள் வற்புறுத்தியதால்



ஒரு மக்களினத்தையே கிட்டத்தட்ட இழந்துவிட்டோம். கணவன் இறந்தால் தான் மனைவி வளையல்களைக் கழற்றியெறிவாளென்ற அவ்வட்டாரக் கலாச்சாரத்தை அந்த வைதீகப் பெந்தெகொஸ்தே ஊழியர்களால் புரிந்து கொள்ளமுடியவில்லை. பழக்கங்கள் கலாச்சாரத்தையடுத்தவையா அல்லது மத சம்பந்தப்பட்டவையா என்ற வேறுபாட்டைப் புரிந்துகொள்ள நமக்குத் தெரியவேண்டும். இங்குதான் ஞானத்தைப் போதிக்கும் வசனம், அறிவை உணர்த்தும் வசனம், ஆவிகளைப் பகுத்தறிதல் ஆகிய வரங்களை நாம் அப்பியாசிக்கவேண்டும் (1 கொரி 12:9,10).

தாய்மொழியைப் போலவே மக்களுக்குத் தாய்க் கலாச்சாரத்திலும் பற்றுண்டு. புதிய இடங்களில் நற்செய்தியறிவிக்கும்போது கலாச்சாரக் கண்ணோட்டம் எவ்வளவு முக்கியம் என்பதற்கு எருசலேம் சங்கக் கூடுகை அபாரமானதோர் எடுத்துக்காட்டு (அப் 15). விவாதம் தீவிரமாகிக்கொண் டிருக்கையில் ஞான வரத்தையும் அறிவு வரத்தையும் அப்போஸ்தலன் யாக்கோபு செயல்படுத்தி, “கடவுளிடம் திரும்பும் பிறவினத்தாருக்கு நாம் சிரமம் கொடுக்கலாகாது” என்று முடிவுரை கூறினான் (வச 19). அதனால் புதிய விசுவாசிகள் ஊக்கமடைந்து மகிழ்ச்சியுற்றார்கள் (வச 31).

### 5. பருவமழை தவறுதல்

விதை தெரிந்தெடுத்தல், நிலம் உழுதல், உற்சாகமாய் விதைத்தல், பொருத்தமான சாகுபடி முறைகளைக் கையாளுதல் போன்றவையெல்லாம் விவசாயத்தில் மனிதனின் பொறுப்பாகும். ஆனால் கடவுள் வானங்களைத் திறந்து மாரியைப் பொழியாவிடில் இவை யாவும் வீணும் வியர்த்தமுமாகும். “உனது ஆற்றலாலும் அல்ல, வலிமையாலும் அல்ல; எனது ஆவியாலேயே ஆகும்” என்பதே ஆத்தும அறுவடைப் பணியில் ஈடுபட்டுள்ள நமக்கு ஆண்டவர் அருளும் வாக்காகும் (சக 4:6).

“உன்னதத்திலிருந்து நம்மீது ஆவி ஊற்றப்படும் வரை” நிலத்தில் முட்செடிகளும் முட்புதர்களுமே ஓங்கி வளருமெனக் கண்டறிந்தான் தீர்க்கன் (ஏசா 32:13,15). கடவுள் வானத்தின் பலகணிகளைத் திறக்கும்படி முழங்காலிட்டு மன்றாடத் தீர்க்கன் ஓசியா இறை மக்களை அறைகூவி அழைத்தான். “கர்த்தர் வந்து உங்கள் மேல் நீதியைப் பொழியுமட்டும் அவரைத் தேடக் காலமாயிருக்கிறது” (ஓசி 10:12).

தேவ மக்களிடையே உருவாகும் எழுப்புதலின் வெளிக்கொட்டுதலே இயற்கையான நற்செய்திப் பணியாகும். எனவேதான், “ஆண்டவரே, சபையை வளைத்து சமுதாயத்தை வளமாக்கும்” என்று வேல்ஸ் நாட்டு

எழுப்புதல் வீரன் ஈவான் ராபர்ட்ஸ் ஜெபித்தார். சபைதான் சமுதாயத்தின் ஆசீர்வாதத்திற்கான திறவுகோலை வைத்திருக்கிறது என்று 2 நாளாகமம் 7:14 எவ்வளவு தெளிவாய்க் கூறுகிறது! முதலாவது திருமலையின் மீதிருக்கும் இறைமக்கள்மீதும், அடுத்து அதைச் "சுற்றியிருக்கும்" பொது மக்கள் மீதும் ஆசீர்வாதமான மழை பெய்யுமாம்! (எசேக் 34:26). "நோயுற்ற சபை செத்துக்கொண்டிருக்கும் உலகைக் காப்பாற்ற முடியாது" என்று எழுப்புதல் வீரர் லியோனார்டு ரேவன்ஹில் அடிக்கடி கூறுவது நினைவிற்கு வருகிறது. எனவே நற்செய்தி ஊழியத்தில் தீவிரமாய் இறங்கியிருக்கும் போது உயிர்மீட்சிப் பணிகளையும் மறந்துவிடக்கூடாது. வழக்கமான முறையில் நாற்பது ஆண்டு பிடிக்கும் ஒரு வேலையை எழுப்புதல் காலத்தில் நாற்பதே நாட்களில் முடித்துவிடலாம். காலால் நீர்ப்பாய்ச்சுவதற்கும் வானத்தின் மழை நீர் கொட்டுவதற்குமுள்ள வேறுபாடு அது (உபா 11:10-12).

### 6. போதிய நீர்ப்பாய்ச்சலின்மை

தாய்ப்பால் குழந்தைக்கு எப்படியோ அப்படியே மழைநீர் பயிருக்கு. ஆனாலும் கிரமமாய் நீர் பாய்ச்சுவது பொதுவான தேவை. இது ஊழியத்தில் தொடர்பணியைக் குறிக்கும். "நான் நட்டேன், அப்பொல்லோ நீர்பாய்ச்சினான், கடவுளே விளையச் செய்தார்" என்று பவுல் சாட்சியிட்டான் (1 கொரி 3:6). நடுதலும் அறுத்தலும் உணர்ச்சி ததும்பும் அனுபவங்களாயிருக்கும்; ஆனால் நீர் பாய்ச்சுவது போரடிக்கலாம். இருப்பினும் அதின் முக்கியத்துவத்தை மறுக்க முடியுமோ?

தங்களது முதல் மிஷனரிப் பயணத்தையடுத்து, பர்னபாவிடம் பவுல், "நாம் கர்த்தருடைய வசனத்தை அறிவித்த அனைத்து நகரங்களுக்கும் திரும்பிப்போய் அங்குள்ள சகோதர சகோதரிகள் எப்படியிருக்கிறார்களென்று கவனிப்போம், வாரும்" என்றான் (அப் 15:36). இதுதான் ஒரு மேய்ப்பனின் இதயமாம். இன்றைய மிஷனரிப்பணிச் சூழலில் விதைப்பதற்கென்றே ஒரு மிஷனரிக் குழுவையும் நீர்ப்பாய்ச்சுவதற்கு வேறொரு குழுவையும் அனுப்பிவைக்க அத்தனை ஊழியர் கிடையாது. துவக்க காலத்திலாவது மிஷனரிகளே ஆத்துமாதாயகராகவும் ஆயராகவும் செயலாற்ற வேண்டியதிருக்கிறது. அறுவடையின் மிகுதியைக் குறித்துத் தமது சீடருக்குச் சவால் விடுகையில் சோர்ந்துபோய்ச் சிதறப்பட்டிருக்கும் ஆடுகள் போன்ற திரள்கூட்ட மக்களைக் கவனிக்க "மேய்ப்பர்கள்" வேண்டுமென்றார் இயேசு (மத் 9:36-38). தொலைந்துபோன ஆத்துமாக்களை நாடிச் செல்வோரைக் காணாமற்போன ஆட்டைத் தேடிச் சென்ற "மேய்ப்பனுக்கு" அவர் ஒப்பிட்டார் (லூக் 15:4-7).



தங்களது ஊழியருக்கு மிஷனரி இயக்கங்கள் குறிகளை நியமிக்கும் போது, "புதிய" கிராமங்களைச் சந்திக்கவேண்டுமென்ற அழுத்தம் அவர்கள் தொடர்பணிக்காய்ப் போதுமான நேரம் செலவழிக்க முடியாமற் செய்து விடுகிறது. ஊழியர் பற்றாக்குறை இன்னொரு காரணம். ஞாயிறு ஆராதனையிலும் வாரநாட்கள் கூட்டங்களிலும் வாரந்தோறும் வசனம் கேட்டும் உடன் விசுவாசிகளோடு ஐக்கியப்பட்டும் இருக்கும் கிறிஸ்தவர்கள் நடுவிலேயே பின்மாற்றம் சர்வசாதாரணம். அப்படியிருக்கையில் கன்னி நிலங்களிலுள்ள புதிய ஆத்துமாக்களின் நிலையைச் சிந்தித்துப்பாருங்கள்!

### 7. களை முளைத்தல்

விண்ணரசை விளக்க விதைக்கிறவனின் உவமையை அடுத்து இயேசு இன்னொரு விவசாய உவமையைச் சொன்னார். "விண்ணரசு தன் நிலத்தில் நல்ல விதையை விதைத்தவனுக்கு ஒப்பாயிருக்கிறது. அவனது ஆட்கள் தூங்கும்போது அவனுடைய பகைவன் வந்து கோதுமைகளுக்கிடையே களைகளை விதைத்துவிட்டுப் போய்விட்டான்" (மத் 13:24,25). நாம் நற்செய்திப்பணியில் தீவிரங்காட்டுகையில் பிசாசும், கூடுதலாக இல்லா விடினும், அதே அளவு வேகமாய்ச் செயல்படுகிறான். தனக்கு எஞ்சிய காலம் சொற்பமே என்றறிந்த அவன் பயிரை நாசமாக்கத் தன்னாலியன்ற அத்தனையையும் செய்கிறான். கிறிஸ்தவத்திற்கெதிரான சக்திகள் தலை தூக்குதல், பொய்த் தத்துவங்கள் பரவுதல், எதிர்ப்பக்கத்தில் அற்புத அடையாளங்கள் நடைபெறுதல், இப்படிப் பலவிதங்களில் பிசாசின் எதிர்ச்செயல்கள் வெளிப்படும். இவைகளெல்லாம் ஆர்வத்துடன் வசனம் கேட்போரையும் இளம் விசுவாசிகளையும் குழப்பிவிடும். எகிப்தின் மந்திரவாதிகளின் சர்ப்பங்களை விழுங்குமளவு கடவுளின் வல்லமை வெகுவாய் வெளிப்படவும், புதிய விசுவாசிகள் விசுவாசத்தில் உறுதியாயிருக்கவும் ஜெபியுங்கள்.

எபேசு நகரில் பவுல் செய்த மூன்று மாத ஊழியத்தை அநேக ஆத்துமாக்களின் இரட்சிப்பினால் ஆண்டவர் கனம்பண்ணினார். அப்பொழுது களைகள் முளைக்கத் துவங்கின. விசுவாசியாத சிலர் மனதில் கடினப்பட்டு நற்செய்திக்கு விரோதமாய்ப் பேச ஆரம்பித்தார்கள். இது புதிய விசுவாசிகளை அசைத்துவிட்டது. தனது "மூன்று மாத" ஊழியக் கனிகளைப் பாதுகாக்கப் பவுல் அந்நகரில் "இரண்டு ஆண்டுகள்" தங்கியிருந்து "தினமும்" சீடர்களுக்கு விளக்கங்கள் கூறவேண்டிய திருந்தது! (அப் 19:8-10).

பணிக்களங்கள் பரந்தும் பணியாளர்கள் குறைந்தும் இருக்கும் நிலையில் புதிய சபைகளில் பலவற்றை மாதமொருமுறைதான் மிஷனரி

களால் சந்திக்க முடிகிறது. கூடவேயிருந்து ஆடுகளைப் பாதுகாக்க ஒருவருமில்லாத சூழலைப் பிசாசானவன் சாதகமாய்ப் பயன்படுத்தி புகுந்து விளையாடுகிறான். பணியாட்கள் தூங்கும்போது அல்லது தூரச் செல்லும் போது அவன் களைகளை விதைத்துவிடுகிறான்.

## 8. பூச்சித் தொல்லை

பயிரை அறுக்கவேண்டிய கட்டத்தில் பூச்சிகள் படையெடுத்துவிட்டால் எவ்வளவு கவலையாகிவிடும். இருப்பினும், நமது சாதனைப் பெருமிதங் களையும் பணிக்களச் செய்தியறிக்கைகளில் மிகைப்படுத்துதலையும் தலைதட்ட ஆண்டவர் இவ்விதம் பயிர் பாழாக அனுமதிக்கிறாரென்றே நான் நம்புகிறேன். பருவப் பலன்களை நாசமாக்கும் வெட்டுப்புழுக்கள் மற்றும் வெட்டுக்கிளிகளை ஆண்டவர் "**நான்** உங்களிடம் அனுப்பிய **என்** பெரிய சேனை" என்றழைக்கிறார் (யோவேல் 2:25).

குறுக்கு நோக்குகளைக் கடவுள் கண்டிக்கிறார். பணங்கொடுத்து நமது ஊழியங்களைத் தாங்குவோருக்கு அறிக்கை அனுப்புவதே நமது பிரதான நோக்கமாயிருக்குமானால் ஆத்துமாக்களின் இரட்சிப்பிற்காய் அன்று இரத்தத்தைத் சிந்திய கிறிஸ்து இன்று கண்ணீர் வடிப்பார். சங்கங்கள் மற்றும் இயக்கங்களின் அமைப்புகளெல்லாம் இறையரசைக் கட்டுவதற்கான சாரம்தான் என்பதை மறந்துவிடக்கூடாது. இயக்கத்தை மேம்படுத்துவது நமது முக்கிய நோக்காயிருக்கக்கூடாது. இல்லையேல் நாம் சொந்த சாம்ராஜ்யங்களைக் கட்டுகிறவர்களாகிவிடுவோம். அறு வடைச் செய்திகளைக் கிறிஸ்தவர்கள் அறிந்து ஆண்டவரைத் துதிக்கவும் களங்களின் பிரச்னைகள் மற்றும் சலால்களுக்காய் ஜெபிக்கவும் எளிய தோர் அறிக்கை முறையைக் கையாளுவதில் தவறில்லை. ஆனால் மக்கள் மனதில் உண்மையற்ற எண்ணங்களைப் பதிக்கும் மிகைப்படுத்துதல், மாற்றிச் சொல்லுதல் போன்றவை கடவுளால் நியாயந்தீர்க்கப்படும். களப் பணியாளரிடையேயும் இயக்க முன்னேற்றப் பணியாளரிடையேயும் நேர்மை காணப்பட ஜெபியுங்கள்.

## 9. வேலையாட்கள் பிரச்னைகள்

தமது அரசின் விரிவாக்கத்திற்குக் கடவுளின் முறை மனிதனே. *"யாரை* நான் அனுப்புவேன் ? *யார்* நமது காரியமாய்ப் போவான் ?" கொரிந்து நகர் விசுவாசிகளுக்குப் பவுல், "நாங்கள் தேவனுக்கு உடன் வேலை யாட்களாயிருக்கிறோம்; நீங்கள் தேவனுடைய பண்ணையும், தேவனுடைய



மாளிகையுமாயிருக்கிறீர்கள்" என்றெழுதினான் (1 கொரி 3:9). மிஷனரி ஊழியத்தில் ஈடுபட்டுள்ள பணியாட்களைக் குறித்த மூன்று முக்கிய பிரச்னைகளைக் குறிப்பிடலாம்.

*திறமையின்மை:* சபையானது தனது ஊழியரில் திறமை வாய்ந்தவர் களை உள்ளூர் ஊழியங்களுக்கென்று வைத்துக்கொண்டு மற்றவர் களையே முன்னோடி மிஷனரிப்பணிக்கு அனுப்பிவைக்கிறது. இது அப்போஸ்தல முறையல்ல. சரித்திரத்தைக் கவனிக்குங்கால், பவுலும் பர்னபாவும் அந்தியோகியாவிலுள்ள உள்ளூர்ச் சபையில் மிகவும் முக்கிய மாய்த் தேவைப்பட்ட ஊழியராயிருந்தனர். ஆனால் அவர்களது உடன் ஊழியர் ஆவியானவரின் சத்தத்திற்குக் கீழ்ப்படிந்து அவர்களை புதுக் களப்பணிகளுக்கு அனுப்பிவைத்தனர் (அப் 13:1-4). தேவனது திட்டத்தில் அப்போஸ்தலராகிய மிஷனரிகள் முதலாவது வருகின்றனரென்பதை நாம் மறந்துவிடுகிறோம் (1 கொரி 12:28). எந்த ஊழியமும் மற்றதைவிட உயர்ந்தது தாழ்ந்தது என்றில்லையெனினும், மிஷனரிப் பணியைவிட சபை மேய்ப்பு ஊழியமே மேன்மையானது எனும் பரவலான கருத்து வேதத்திற்கு முற்றும் முரணானது.

*ஒற்றுமையின்மை:* எனது மிஷனரிப் பயணங்களிலெல்லாம் ஊழியரி டையே உறவுப் பிரச்னைகளில்லாத ஒரு பணிக்களத்தையும் கண்டிலேன். வரங்களின் வேறுபாடுகளைப் புரிந்துகொள்ளத் தவறுவது இந்நிலைக்கு ஒரு காரணம். விதைக்கிறவனும் அறுக்கிறவனும் ஒருமிக்க மகிழ்ச்சி யடைவது கடவுளுக்குக் களிப்பு (யோ 4:36-38). மாற்குவைத் தங்களோடு தொடர்ந்து உடன் ஊழியனாய் வைத்துக்கொள்ளலாமா கூடாதா என்ற சிறு காரியத்தில் முதல் மிஷனரிக்குழு இரண்டாய் உடைந்தது (அப் 15:36-41). ஒன்றுபட்டால் எவ்வளவு பலம் உண்டென்பதைக் கிறிஸ்தவர் களாகிய நாம் இன்னும் உணரவில்லை. ஒரு குதிரை இரண்டு டன் எடை இழுத்தால் இரண்டு குதிரைகள் இருபத்து மூன்று டன் எடை இழுக்க முடியுமாம்!

*சுறுசுறுப்பின்மை:* துவக்க உற்சாகத்தை நெடுகவே காத்துக்கொள்ள பெரும்பாலான ஊழியருக்கு முடிவதில்லை. தங்களது நடுவயதில் மிஷனரிகள் பலரது வேகம் குறைகிறது. விசுவாசத்திற்குப் பதிலாக விவாதம் எழும்புவதால், அவர்கள் பல்வேறு சாக்குப்போக்குகளைக் கூறத் துவங்கு வார்கள். "காற்றைக் கவனிக்கிறவன் விதைக்கமாட்டான்; மேகங்களை நோக்குகிறவன் அறுக்கமாட்டான்" (பிர 11:4). "அறுப்புக் காலத்தில் தூங்குகிறவன் இகழ்ச்சியுண்டாக்கும் மகன்" (நீதி 10:5). மிஷனரிகள்

பணியில் குறையும்போது பேச்சில் கூடுவர். “கடும் உழைப்பு எப்போதும் பயன் தரும்; வெறும் பேச்சினால் வருவது வறுமையே” (நீதி 14:23).

### 10. பொறுமையற்ற செயல்கள்

எல்லாமே உடனடி எனும் இக்காலத்தில் நற்செய்திப்பணியிலும் உடனடிக் கனிகள் கிடைக்காவிடில் நாம் சோர்ந்துபோகிறோம். நமது முயற்சியின் பலனைக் காண “அநேக நாட்கள்” காத்திருக்கவேண்டுமென்பதை மறந்துவிடுகிறோம் (பிர 11:1). “இதோ, பயிரிடுகிறவன் நிலத்தின் நல்ல விளைச்சலை எதிர்பார்த்து முன்மாரியும் பின்மாரியும் பொழியுமளவும் பொறுமையோடு காத்திருக்கிறான். நீங்களும் பொறுமையோடிருங்கள்” (யாக் 5:7).

ஊழிய நிறுவனங்கள் நியமிக்கும் குறிகள், ஊழியத்தைத் தாங்குவோரின் பெரிய எதிர்பார்ப்புகள் மற்றும் கனி நிறைந்த களங்களோடு ஒப்புமை ஆகியவற்றால் மிஷனரிகள் ஒருவித மன அழுத்தத்திற்குள் வரும்போது எண்ணிக்கை காட்டும்படி மனந்திரும்பாத சிலருக்கும் திருமுழுக்கு கொடுக்க முனைந்துவிடுகின்றனர். இதனால் புதிய சபைகளில் ஈசாக்குகளைவிட இஸ்மவேல்கள் பெருகிவிடுவர். ஏற்கனவே சபையிலிருக்கும் பெயர்க் கிறிஸ்தவம் போதாதா?

கரு வளர்ச்சிக் காலத்தை விஞ்ஞானம் குறைக்க முடியாது. மரியாளின் வயிற்றில் இயேசு கருவாகியது இயற்கைக்கப்பாற்பட்ட வல்லமையினால் எனினும் கரு வளர்ந்து குழந்தை பிறக்க வழக்கமான நாற்பது வாரங்கள் ஆயிற்றே! நமது நற்செய்திப்பணி முறைகளில் விஞ்ஞான அறிவைப் பயன்படுத்துவதில் தவறில்லை. ஆனால் இது கடவுளது நித்திய வழிகளை மாற்றமுடியாது. இறைப்பணியில் உடனடி அறுவடை எதிர்பார்ப்பை அகற்றுங்கள்.

### களங்கள் செல்லும் முழங்கால்கள்!

அறுவடைக் குறைச்சலுக்கு மேற்குறிப்பிட்ட காரணங்கள் மிஷனரிப் பணியின் ஜெபப் பலிபீடத்திற்கு விறகாகவே அடுக்கப்பட்டுள்ளன. மிஷனரிகளுக்காக இன்னும் கூடுதல் தெளிவுடன் ஜெபிக்க இப்பாணியில் உங்கள் கற்பனைகளை நீங்களே நீட்டிக்கொள்ளலாம். இதோ, மிஷனரிப் பணிக்களங்களுக்கு உங்கள் முழங்கால்களிலேயே செல்ல உங்களுக்கோர் வாய்ப்பு!



## 8

# கர்த்தரின் சேனைகள்

*(ஆசீர்வாத இளைஞர் இயக்கத்தின் மிஷனரிகளுக்கு 1998இல் ஆசிரியர் கொடுத்த ஒரு செய்தி)*

தேவனது பெயர்களில் பழைய ஏற்பாட்டில் அடிக்கடி பயன்படுத்தப் பட்டுள்ளவற்றில் ஒன்று ‘‘சேனைகனின் கர்த்தர்’’ என்பதாகும். இக்கோணத்தில் பலமுறை நாம் அவரைக் குறித்துப் படித்திருக்கிறோம். இப்பொழுது ‘‘கர்த்தரின் சேனைகளைச்’’ சற்று கவனிப்போம்.

இருக்கும் சபைகளை உயிர்ப்பித்து சபை இல்லாத இடங்களில் சபைகளை உருவாக்கும் பணிக்கு ஆசீர்வாத இளைஞர் இயக்கத்தில் நாம் நம்மை அர்ப்பணித்துள்ளோம். வேறு வார்த்தைகளில் சொன்னால், இறையரசுக் கட்டுமானப் பணியில் இறைவனோடு நாம் உடன் பங்காளிகளாயிருக்கிறோம். கட்டுதலும் போரிடுதலும் சேர்ந்தே செல்லும் (மத் 16:18; நெகே 4:17). மதிலைத் திரும்பவும் கட்டியெழுப்ப இஸ்ரவேலருக்கு ஐம்பத்திரண்டே நாட்கள்தான் நீடித்தன; ஆனால் அவர்கள் பாதியில் சோர்படைந்தனர். அவர்களது தரிசனத்தை நெகேமியா புதுப்பிக்கவேண்டியதிருந்தது (நெகே 4:19,20). அப்படியே ஆலயம் கட்டடப்பட்டுக் கொண்டிருக்கையில் ‘‘பலத்தினாலுமல்ல, பராக்கிரமத்தினாலுமல்ல, என்னுடைய ஆவியினாலேயே ஆகும் ... செருபாபேலின் கரங்களே இந்த ஆலயத்திற்கு அடித்தளமிட்டன; அவைகளே இதை முடித்துத் தீர்க்கும்’’ எனச் செருபாபேலைச் ‘‘சேனைகளின் கர்த்தர்’’ உற்சாகப்படுத்தினார் (சக 4:6,9).

கிறிஸ்தவரை உயிர்ப்பித்து கிறிஸ்தவரல்லாதோரைச் சந்திக்கும் பணிக்குத் தங்களை அர்ப்பணித்துக்கொண்ட ஒரு சேனையே ஆசீர

வாத இளைஞர் இயக்கமாகும். இடையில் மனச்சோர்பையும் மனச் சிதறலையும் தவிர்த்து நமது பணியை வலுப்படுத்த நமது அடிப் படைகளை திரும்பத் தெளிவுபடுத்திக்கொள்ளுவோம். நமது படை யின் பன்னிரு அம்சங்களை இங்கு கவனிப்போம்.

### 1. நமது தளபதி: கிறிஸ்து

நமது வாழ்வும் பணியும் கர்த்தருக்குக் கீழ்ப்படிதலால் அலங் கரிக்கப்பட்டிருக்கவேண்டும். தனித்தும் குழுவாகவும் கீழ்ப்படிதல் அவசியம். பலியைவிடக் கீழ்ப்படிதலே உத்தமம் (1 சாமு 15:22). இறைப்பணியைவிட இறைச்சித்தமே முக்கியம் (மத் 7:21-23). தேவனது நித்திய ஏக்கங்களை நிறைவேற்றுவதற்குப் பதிலாக நமக்கு வேலை திருப்தி என்பதற்காகவே ஊழியம் செய்வதும் சாத்தியம். எந்த அளவிற்குக் கிறிஸ்துவின் ஆளுகைக்கு அடிபணிகிறோமோ அந்த அளவிற்குத்தான் சாத்தான்மீது அதிகாரம் செலுத்த முடியும். போலிச் சீடரைப் பிசாசு உரிந்துவிடுவான் (அப் 19:13-16). தேவனுக்குப் பயப்படுகிறவன் மனிதருக்குப் பயப்படான். அவன் சிங்கம்போல் தைரியமாயிருப்பான் (நீதி 28:1). கிறிஸ்துவின் கர்த்தத்துவத்தின்கீழ் கொண்டுவரப்படாத நமது வாழ்க்கைப்பகுதி எதுவும் பிசாசுக்குப் பதுங்குமிடமாகும் (யாக் 4:7; எபே 4:27). நமது சேனையதிபருக்குக் கண்மூடித்தனமாய்க் கீழ்ப்படிதல் பாதுகாப்பானது, வெற்றிக்கு வழி வகுப்பது; ஏனெனில் அவர் தவறாத சர்வ ஞானி.

### 2. நமது கொடி: அன்பு

நம்மீது பறக்கும் கர்த்தரின் கொடி நேசமாகும் (உன் 2:4). அன்பெனும் தென்றல் வீசாவிட்டால் மூச்சுத் திணறும். பெந்தெ கொஸ்தேக்கும் ஆதிச்சபையின் அமோக வளர்ச்சிக்கும் இரகசியம் ஒருமனமே. ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு; துண்டுபட்டால் இல்லை வாழ்வு. விசுவாசிகளின் ஒற்றுமையே ஆண்டவரின் விண்ணப்பமும் அப்போஸ்தலரின் விருப்பமுமாயிருந்தது (யோ 17:21,23; பிலி 2:1,2). தன்னலமும் மாய்மாலமுமே பெரும்பாலான உறவுப் பிரச்னை களுக்குக் காரணமாகும். கடவுள் அன்பாயிருக்கிறார்; அவரில் அன்பாயிருக்கிறவன் மற்றவர்கள்மீதும் அன்பாயிருக்கவேண்டு மென்பதே இன்றைக்குரிய அன்றையச் செய்தியாகும். ஒற்றுமை என்றால் ஒன்று போலிருத்தல் என்று பொருள்படாது. நமது வேறு பாடுகளை மூடி வைத்துவிட்டு வேலையை முடித்துவிடுவோம். கொடியானது நாட்டின் அடையாளச் சின்னமாகும். நமது அன்பைக் கவனித்தே உலகமானது நாம் கிறிஸ்தவர்களென அடையாளங்காணும் (யோ 13:34,35). யுத்தக்களத்தில் வீரர்கள் ஒருவரையொருவர் கவனி யாதிருப்பதெப்படி?



### 3. நமது இசை: ஆராதனை

எதிரிகளுக்கு விரோதமாய் அணிவகுத்துச் செல்கையில் பக்தி யுள்ள அரசர்கள் படைவீரருக்கு முன் பாடகர்களை நிறுத்தினார்கள் (2 நாளா 20:21). ஆண்டவரை உயர்த்தும்போது சத்துருவை இறக் குகிறோம். ஆராதனை முழக்கத்திற்குமுன் தாக்குப்பிடிக்கக்கூடிய தடங்கல்கள் ஏதுமில்லை (யோசு 6:5). தொழிலாட்களை அமர்த்து முன் தொழுகைக்காரரையே பிதாவானவர் தேடுகிறார் (யோ 4:23,35). முன்னதாகவே வெற்றியைப் பறைசாற்றிவிடுவதே துதியாகும். சாதகச் சிந்தையுடன் முன்செல்ல அது நம்மை ஊக்குவிக்கிறது. அழகிய பாதங்கள் கொண்ட செய்தியாளனின் முழக்கமே ''உன் தேவன் அரசாளுகிறார்!'' என்பதே (ஏசா 52:7; ரோ 10:15). நமக்கு முன்னி ருக்கும் வேலை மலை போன்றதுதான்; அதற்காய்த் தொழுகையைப் பலியாக்கிவிடக்கூடாது. துதியின் ஆர்ப்பரிப்பினாலேயே மலையானது சமபூமியாகும் (சக 4:7). துதிப்போம், அல்லேலூயா பாடி!

### 4. நமது கட்டுப்பாடு: பரிசுத்தம்

உண்மை, நேர்மை எல்லாம் இன்று கிறிஸ்தவ ஊழியங்களில் அபூர்வமாகி வருகின்றன. மாய்மாலம், ஊழல் ஆகியவை வழக்கமாகி விட்டன. தமது சிநேகிதர் வீட்டிலேயேதான் நமது கர்த்தர் காயப் பட்டுக்கொண்டிருக்கிறார் (சக 13:6). பரிசுத்தமே நமது கோஷ மாகட்டும். ''கர்த்தருக்குப் பரிசுத்தம்'' என்பது அடுப்படிப் பானைகள் மீதும் (kitchen pots), பலிபீடப் பாத்திரங்கள் மீதும் (Church life), குணிரைகளின் மணிகள்மீதும் (Ministerial life) பொறிக்கப்படட்டும் (சக 4:20,21). ''சேனைகளின் கர்த்தர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர்'' என்ற ஆரவாரிப்பின் நடுவில்தானே நமக்கு மிஷனரி அழைப்பு வந்தது! (ஏசா 6:3,8). பிசாசு போலி அற்புதங்களைச் செய்துவிடுவான்; ஆனால் அவனால் பரிசுத்தமான மக்கள் போன்ற நகல் எடுக்க முடியாது. ''பரிசுத்த மனிதன் எவனும் கடவுள் கையிலுள்ள பயங்கர ஆயுதம்'' என்று முழங்கினார் பழம் பரிசுத்தர் ஒருவர். பரிசுத்த மில்லையேல் நமது வாழ்க்கை தோட்டா இல்லாத துப்பாக்கி அல்லது கூர்மை இல்லாத வாள் போன்றதுதான்.

### 5. நமது போஷகர்: தேவன்

ஊழியம் வளர வளர நமது பொருளாதாரத் தேவைகளும் பெருகு கின்றன. நமக்குக் கிரமமாகவும் தாராளமாகவும் காணிக்கை அனுப்பும் ஆயிரக்கணக்கான கிறிஸ்தவ நண்பர்களுக்காய்த் தேவனைத் துதிக் கிறோம். ஆனால் இவர்களெல்லாம் வாய்க்கால் மட்டுமே என்பதையும் தேவனே ஊற்றுக்காரணர் என்பதையும் மறந்துவிடக்கூடாது. தேவை சிறிதாயினும் பெரிதாயினும் உன்னதத்தையே நோக்கிப் பார்க்க

வேண்டுமென்பது கர்த்தரின் பணியில் அரிச்சுவட்டுப் பாடமாகும். ''வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தரிடத்திலிருந்து எனக்கு ஒத்தாசை வரும்'' (சங் 121:2). ''என் தேவன் உங்கள் குறைவையெல்லாம் நிறைவாக்குவார்'' என்று உறுதி கூறினான் பவுல் (பிலி 4:19). நமது தேவைகளுக்காய்த் தேவனை நோக்கிப் பார்க்கத் தவறினால் பணம் சேகரிக்க வியாபார முறைகளைக் கையாளத் தொடங்கி விடுவோம். ஒருவேளை தேவன் வறட்சியான காலங்களை நமக்கு அனுமதிப்பாரானால் அதிலும் நாம் கற்றுக்கொள்ள வேண்டியவை ஏராளமிருக்கும். படைவீரர்களின் தேவைகளைச் சந்திப்பது அரசின் கடமையன்றோ? அப்படியானால் நமது சேனையதிபனை நாம் நம்ப முடியாதோ?

### 6. நமது ஆயுதம்: வேதம்

எபேசியர் 6:14-17இல் வரிசைப்படுத்தப்பட்டுள்ள ஆறு ஆயுதங்களில் ''தேவ வசனமாகிய ஆவியின் பட்டயம்'' ஒன்றுதான் எதிரியைத் தாக்குதலுக்கானது. திருவசனத்திற்கு மிஞ்சிப் பேசப் பிசாசிடம் ஒன்றுமில்லை (மத் 4:3-11). படைவீரர்கள் நன்கு சாப்பிட்டுத் திடகாத்திரமாயிருக்கவேண்டும். தேவ வசனமே நமது அனுதின மன்னா. நமது தினசரி வேலை எதுவும் வேதத் தியானத்திற்குப் போட்டியாய் வரக்கூடாது. நமது ஊழிய முறைகள் யாவும் வேதத் தத்துவங்களிலேயே வேரூன்றியிருக்கவேண்டும். இல்லையேல் அவை புயலையும் வெள்ளத்தையும் சமாளிக்க முடியாது (மத் 7:24-27). வசனத்திற்கு மாறுபாடாகவோ மீறியோ செல்லத் துணியாதிருப்போம். எவ்வளவு என்பதல்ல, எப்படிச் செய்கிறோமென்பதே காரியம். பலன்கள் அதிகமாயிருக்கவேண்டுமென்ற உற்சாகத்தில் பெலிஸ்தியரின் முறைகளைக் கையாளாதிருப்போம். திருவசனத்தின் இருபக்கக் கூர்மை நமது உள்ளிந்திரியங்களை ஊடுருவி நம்மைக் கழுவி நம்மை நேராய் நிற்கச் செய்யட்டும் (எபி 4:12).

### 7. நமது பலம்: பரிசுத்தாவியானவர்

பரிசுத்தாவியின் வல்லமையால் சாட்சி பகருதல் என்பதே ஆசீர்வாத இளைஞர் இயக்கத்தின் அடையாளச் சின்னத்தில் பொறிக்கப் பட்டுள்ளதாகும். அப்போஸ்தலர் 1:8 நமது ஊழியத்தின் அடித்தளத் தரிசன வசனமாகும். ஆவியில் ஆரம்பம் பண்ணியதை மாம்சத்தில் முடிக்கும் மடமைக்கெதிராய் நம்மைத் தற்காத்துக்கொள்ளவேண்டும் (கலா 3:3). ஆரம்பத்தில் பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெற எவ்வளவு வாஞ்சித்தோமோ அதேபோல் எப்பொழுதும் ஆவியினால் நிறைந்திருக்கவும் கவனம் செலுத்தவேண்டும் (எபே 5:18).



இயற்கைக்கப்பாற்பட்டது இறைப்பணியில் இயற்கையாயிருக்க வேண்டும். அற்புத அடையாளங்களுக்காய் ஆதிச்சபை ஏறெடுத்த ஜெபமே நமக்கு மாதிரியாயிருக்கவேண்டும் (அப் 4:24-31). ஆவியின் வரங்கள் வலியுறுத்தப்பட்டு அப்பியாசிக்கப்படவேண்டும். அவைகளெல்லாம் டாம்பீகமல்ல, இன்றியமையாத் தேவை! நமது கூட்டங்கள், நிகழ்ச்சிகள் யாவற்றிலும் ஆவியானவர் நம்மை அசைக்க அவருக்கு முழு விடுதலை கொடுக்கவேண்டும். ஆவியானவரைத் துக்கப்படுத்தும் அல்லது அவித்துப்போடும் எதையும் சகித்துக் கொள்ளக்கூடாது. ஆவி இருந்தால் நாம் வீர சேனை; ஆவியில்லையேல் நாம் உலர்ந்த எலும்புகள், அவ்வளவுதான் (எசேக் 37:1,2,9,10).

### 8. நமது ணிட்டம்: நடத்துதல்

ஒவ்வொரு படையிலும் பல அணிகள் இருக்கும். எல்லா அணிகளுக்கும் ஒரேவித வேலையிராது. அந்தந்த அணிக்கென்று தளபதி குறிப்பிட்டுள்ள பணியையே அது நிறைவேற்றவேண்டும். இத்தத்துவம் இன்று கிறிஸ்தவ ஊழியங்களில் மறக்கப்பட்டுள்ளது துக்கம். எல்லாரும் எல்லாவற்றையும் செய்ய முயலுகின்றனர். ''ஆண்டவரே, நான் என்ன செய்ய நீர் சித்தமாயிருக்கிறீர்?'' என்ற கேள்வியோடு அப்போஸ்தலன் பவுலின் ஊழியம் தொடங்கியது (அப் 9:6). ஒவ்வொரு ஊழியத்திற்கும் நியமிக்கப்பட்ட தடமும் வரம்பும் உண்டு. நமக்கென்று போடப்பட்டுள்ள கோடுகளைத் தாண்டக்கூடாது (ரோ 12:3; யோவேல் 2:7,8). கடந்த கால அனுபவங்களும் நமது அறிவும் நமக்கு ஒரு வழிகாட்டியாய் இருக்கலாம்; ஆனால் அவைகள் நமக்கு வழிநடத்துதலாய் மாறமுடியாது. தேவனது சிந்தையைப் புரிந்து கொண்டு அவரிடமிருந்து ஆணைகளைப் பெற அவசரப்படாமல் பொறுமையாய் ஜெபத்தில் அவர்முன் காத்திருக்கவேண்டும். யுத்தங்களுக்குச் செல்லுமுன் தாவீது கர்த்தரிடம் விசாரித்தான் (1 சாமு 23:2,4; 30:8; 2 சாமு 2:1; 5:19,23). நமது தலைவர்களுக்கு வழிநடத்துதல் கிடைக்கவில்லையென்றால் நமது ஊழியத்திற்கு எதிர்காலமில்லை.

### 9. நமது பாதுகாப்பு: விசுவாசம்

சாத்தானின் நிழலிலிருந்து ஆத்துமாக்களை விடுவிக்க நாம் முயலும்போது அவன் நம்மை அழித்துப்போட குறி வைக்கிறான். ''எல்லாவற்றிற்கும் மேலாக விசுவாசம் எனும் கேடகத்தை'' நாம் பிடித்துக்கொள்ளாவிட்டால், தீய சக்திகளின் அம்புகளுக்கு நாம் பலியாவது திண்ணம் (எபே 6:16). நமக்காய் மரித்த, உயிர்த்த,

உன்னதத்ணில் வீற்றிருக்கிற இயேசுவைத் தேவ குமாரன் என்று விசுவாசிப்பதே உலகை வெல்லும் வெற்றியாகும் (1 யோ 5:4,5). நம்மைப் பயமுறுத்தும் எல்லாச் சூழல்களிலும் ''கர்த்தர் நம் பக்கம் இருந்தால் நமக்கு விரோதமாய் இருப்பவன் யார்?'' என அறிக்கை யிடுவோம் (ரோ 8:31). பூமியிலேயோ அதற்கு மேலேயோ கீழேயோ இருக்கும் எந்தச் சக்தியும் கிறிஸ்துவின் அன்பைவிட்டு நம்மைப் பிரிக்கமுடியாது. எல்லாவற்றிலும் நாம் அவராலே முற்றும் வெற்றி பெறுகிறவர்களாயிருக்கிறோம் (ரோ 8:37-39). கர்த்தரே நமது கோட்டையும் அடைக்கலமுமானவர். ஆனாலும் ஆள் சேதமில்லாத யுத்தமில்லை. ''இரத்தச்சாட்சிகளின் இரத்தமே சபையின் வித்து.'' துன்புறுத்தப்படும்போதெல்லாம் சபை வளரத்தான் செய்திருக்கிறது. நிலத்தில் விழும் ஒரு விதை எவ்வளவு விளைச்சலைத் தருகிறது!

### 10. நமது எதிரி: சாத்தான்

சாத்தான்தான் நமது எதிரி என்பது அவ்வளவு தெளிவாய்த் தெரிந்தாலும் பல நேரங்களில் நாம் உடன் கிறிஸ்தவர் மற்றும் ஊழியருக்கு எதிராகவே போரிடுகிறோம். நமக்கிருக்கும் கர்த்தர் ஒருவரே; அப்படியே நமக்கிருக்கும் எதிரியும் ஒருவனே. நாம் ஒன்றித்திருக்கவேண்டுமென்பதற்கு அதுவும் ஒரு காரணமன்றோ? இரண்டாவதாக, யுக யுகமாய் மக்களை, அதிலும் தெரிந்துகொள்ளப் பட்டவர்களையும், வஞ்சித்துவந்திருக்கும் சாத்தானைக் குறைவாய் எடைபோட்டுவிடக் கூடாது. இயேசு தமது சீடரிடம் திரும்பத் திரும்ப ''விழித்திருங்கள்'' என எச்சரித்தார். எதிர்பாராத வேளையில் எதிர் பாராத திசையிலிருந்து தாக்குவது பிசாசுக்கு வாடிக்கை. பீறிப்போடும் ஓநாய்களுக்குத் தப்ப நமக்குப் பிற விசுவாசிகளும், மேய்ப்பர்போல் நம்மை நடத்தும் தலைவர்களும் தேவை (பிர 4:12; எபி 13:17). கடைசியாக, தேவனுக்கு விரோதமான பகையாகிய உலகச் சிந்தை யிலிருந்து நாம் நம்மைத் தற்காத்துக்கொள்ளவேண்டும் (யாக் 4:4). தேவ மக்களிடையே மிகவும் பலசாலிகளைக்கூட வீழ்த்திவிடப் பிசாசு பயன்படுத்தும் பண ஆசையைக் குறித்து எச்சரிக்கையாயிருப்போம்!

### 11. நமது கூட்டாளிகள்: பிற ஊழியங்கள்

மிஷனரிப்பணியில் பிற இயக்கங்களோடு பங்காளித்துவம் என்று வெறுமனே மாநாடுகளில் பேசிப் பயனில்லை. ஒருவன் விதைக்கவும் மற்றவன் அறுக்கவும் அழைக்கப்படுகிறான். விளைந்த தானியம் ஒரே களஞ்சியத்திற்குத்தான் செல்வதால் விதைப்பவனும் அறுப்பவனும் சேர்ந்து மகிழுகிறார்கள் (யோ 4:36-38). தேவன் விளையச்செய்யா விடில் நடுகிற பவுலாலும் நீர்ப்பாய்ச்சுகிற அப்பொல்லோவாலும் ஒன்றும் சாதிக்க முடியாது (1 கொரி 3:6). எந்தவொரு சபைக்கும் குழுவுக்கும் முழுச் சத்தியமும் கிடைத்துவிடவில்லை; ஆதலால் ஒருவரிடமிருந்து ஒருவர் கற்றுக்கொள்ள வேண்டும். ஒவ்வொரு



ஊழியத்திலும் பலமான அம்சங்களும் பலங்குன்றிய காரியங்களும் உண்டு. யோவாப் தன்னைச் சீரியருக்கெதிராகவும் தனது சகோதரன் அபிசாயை அம்மோனியருக்கெதிராகவும் யுத்தத்தில் நிறுத்திக் கொண்டான். அவன் அபிசாயைப் பார்த்து, ''என்னைவிடச் சீரியர் பலங்கொண்டால் நீ எனக்குத் துணை நில்; உன்னைவிட அம்மோன் புத்திரர் பலங்கொண்டால் நான் உனக்குத் துணை நிற்பேன்'' என்று உற்சாகப்படுத்தினான் (1 நாளா 19:10-13). நற்செய்திப்பணிக்கு இந்தியாவிலுள்ள சவால்களைத் தனித்துச் சமாளிக்க எந்தவோர் ஊழியத்தாலும் முடியாது. மட்டுமல்ல, கூட்டுச்சேர்ந்து பணியாற்றி னால் ஒருவர் செய்ததையே செய்வதையும், ஒருவர் செய்வதில் குறுக்கிடுவதையும் தவிர்க்கலாம்.

### 12. நமது இலக்கு: இறையரசு

கிறிஸ்துவின் நாமத்தைச் சொல்லிக்கொண்டு இன்று சுய சாம்ராஜ் யங்கள் பல கட்டப்படுகின்றன. ஊழியத்தில் நமது உள்நோக்கங்கள் புனிதமானவையா, அவை சுயநோக்கு அற்றிருக்கின்றனவா எனத் தேவனறிவார். ''முதலாவது இறையரசை நாடுங்கள்'' என்று இயேசு போணித்தார் (மத் 6:33). கீழ்த்தரமான நோக்கங்களைக் களைந்து விடுவோம். தேவனுக்காய், நமக்காயல்ல பெரிய காரியங்களைச் செய்வோம்! கீழ்க்கண்ட கேள்விகளை நமது செயல்பாடுகள் குறித்துக் கேட்டுப்பார்த்தால் நமது குறியானது இலக்கை நோக்கிச் சரியா யிருக்கும். இச்செயல் இறையரசின் தத்துவம் எதற்கும் மாறுபாடா யிருக்கிறதா? இது இறையரசிற்கு இலாபமாயிருக்குமா? இது இறையரசின் சத்தியங்களை நிலைபறுத்துமா? இது இறையரசின் குடிமகன் எவனுக்கும் இடையூறாய் இருக்குமா? ''நன்றாய்ச் செய் தாய்'' என்று முடிவிலே அரசர் என்னைப் பாராட்டுவாரா? இறையரசைக் குறித்த ஒரு விண்ணப்பமும் ஒரு போற்றுதலும் கர்த்தருடைய ஜெபத்திலுண்டு: ''உமது இராஜ்யம் வருவதாக ... இராஜ்யம் உம்முடையதே!'' இராஜ்யங்கள் அனைத்தும் கர்த்தருடையதாய் மாறும்வரை கர்த்தரின் சேனைகள் அமர்ந்திருப்பதில்லை. முடிவுவரை நாம் உண்மையாயிருப்போம். நாம் அவரோடு அரசாளுவோம்.

நல் மீட்பர் பட்சம் பல்லும்,
இரட்சண்ய வீரரே!

ராஜாவின் கொடியேற்றி
போராட்டம் செய்யுமே;

சேனாதிபதி இயேசு
மாற்றாரை மேற்கொள்வார்;

நின் வெற்றிக் கிரீடம் சூடி
செங்கோலும் ஓச்சுவார்!

## ௯

# துன்புறுத்தப்படுவோர் பாக்கியவான்கள்!

துன்புறுத்தப்படுதல் புதிதல்ல. ஆதிக் காலத்திலேயே இரத்தச்சாட்சி மரணம் வந்துவிட்டது. மரித்த முதல்வன் மரித்தது மதத்திற்காகவே! அகிலவுலக மிஷனரி ஆராய்ச்சிப் பத்திரிகையின்படி, 1997இல் மட்டும் 1,60,000 கிறிஸ்தவர்கள் கொலை செய்யப்பட்டுள்ளனர். இது பெரும்பாலும் பூமத்திய ரேகைக்கு மேல் 10 டிகிரிக்கும் 40 டிகிரிக்கும் இடையிலுள்ள நாடுகளிலேயே நடந்துள்ளது. சந்திக்கப்படாத மக்களில் 97 சதவீதத்தினர் இங்குதான் வாழ்கின்றனர். இந்நாடுகளில் பல சுவிசேஷத்திற்குக் கதவடைத்துள்ளன. ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ், சீனா, ஈராக், லாவோஸ், மொராக்கோ, வட கொரியா, பாக்கிஸ்தான், துருக்கி, அரபு நாடுகள் மற்றும் வியட்நாம் ஆகியவை இங்கு உள்ளடங்கும்.

இந்தியாவில் அவரவர் தங்கள் மதத்தைப் பின்பற்றவும், பறைசாற்றவும், பரப்பவும் மதச் சுதந்திரம் இருந்தாலும், நமது துணைக்கண்டத்தில் சமீபத்தில் நடந்துள்ள சில சம்பவங்கள் சுவிசேஷத்திற்குப் பரவலாக எழும்பியுள்ள எதிர்ப்பையே நிச்சயமாய்ச் சுட்டிக்காட்டுகின்றன. மக்களின் கண்திறப்பிற்கும் நாட்டின் முன்னேற்றத்திற்கும் கிறிஸ்துவின் சுவிசேஷம் என்ன செய்துள்ளதென்பதை நமது நாட்டவரில் ஒரு பகுதியினர் மறந்துவிட்டது துக்ககரமானதே. நமது முதல் குடியரசுத் தலைவர் Dr. ராஜேந்திரப்



பிரசாத் கூறியது: ‘‘கிறிஸ்தவ மிஷனரிகள் ஆதிவாசிகள் நடுவில் பணியாற்றி மிகுந்த தியாகவுணர்வுடன் கல்வியறிவைப் பரப்பி அவர்களது வாழ்க்கைத் தரத்தைப் பொதுவாய் உயர்த்தியுள்ளனர்.’’

துன்புறுத்தலுக்குப் பொதுவான காரணங்கள் நான்கு: *1. மத சம்பந்த காரணங்கள்:* நற்செய்தி பரவுதலைப் பிற மத வெறியர்கள் தடுக்கின்றனர். கிறிஸ்து ஒருவரே நித்திய இரட்சிப்பிற்கு வழியென்றும் அவரை விசுவாசியுங்களென்றும் பறைசாற்றும் கிறிஸ்தவர்களை அவர்கள் தாக்குகின்றனர். சீர்திருத்தக் காலங்களில் ரோமன் கத்தோலிக்கரால் வேத விசுவாசிகள் கொடுமையாய் நடத்தப்பட்டதும் இப்பிரிவில் சேரும். *2. அரசியல் காரணங்கள் :* கிறிஸ்தவர்களது செயல்பாடுகள் சில வேளைகளில் தேசத்துரோகமாய்க் கணிக்கப்படுகிறது. தங்கள் மனசாட்சிக்கும் வேத போதனைக்கும் மாறான சட்டங்களுக்குக் கிறிஸ்தவர்கள் கீழ்ப்படிய மறுக்கும் வேளைகளில் இச்சூழல் உருவாகிறது. ஆண் குழந்தைகளைக் கொன்றுவிட எபிரேயத் தாதிமார் மறுத்ததும், பொற்சிலையை வணங்க அனனியா, அசரியா மற்றும் மிசாவேல் மறுத்ததும் இதற்கு எடுத்துக்காட்டுகள். *3. இனவெறிக் காரணங்கள் :* ஹிட்லரின் இனவெறி யூதர்களை ஆயிரக்கணக்கில் கொன்று வீழ்த்த அவனை வழிநடத்தியது. *4. தத்துவங்களையடுத்த காரணங்கள் :* சர்வாதிகாரிகள் தங்கள் தத்துவங்களுக்குக் கிறிஸ்தவ விசுவாசத்தை முரண்பாடாகவே கண்டனர். பொதுவுடமைக் கொள்கை இதற்கோர் எடுத்துக்காட்டு.

துன்புறுத்தப்படல் கடவுளுக்கு ஆச்சரியமானதல்ல. நமக்கும் அது ஆச்சரியமாயிருக்கக் கூடாது. சிலுவையை இயேசு கொல்கொதாவுக்குச் சுமந்து செல்கையில் அவருக்காய்ப் புலம்பிய பெண்களைப் பார்த்து அவர், ‘‘எருசலேம் மகளிரே, நீங்கள் எனக்காக அழவேண்டாம்; மாறாக உங்களுக்காகவும் உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுங்கள். பச்சை மரத்திற்கு இவைகளைச் செய்தால் பட்ட மரத்திற்கு என்னதான் செய்யமாட்டார்கள்’’ என்றார் (லூக் 23:26-31).

‘‘உலகம் உங்களைப் பகைத்தால், அது உங்களைப் பகைக்கிறதற்குமுன் என்னைப் பகைத்ததென்று அறியுங்கள்... பணியாளன் தன் தலைவனை விடப் பெரியவன் அல்ல என்று நான் உங்களுக்குச் சொன்ன வார்த்தையை நினைத்துக்கொள்ளுங்கள். என்னை அவர்கள் துன்புறுத்தினார்களென்றால் உங்களையும் துன்புறுத்துவார்கள்’’ என்று இயேசு ஏற்கனவே தமது சீடருக்குச் சொல்லியிருந்தார் (யோ 15:18,20). தான் துன்புறுத்தல்களை எப்படிச் சகித்தானென்று தீமோத்தேயுவுக்கு எழுதிய பின்னர் பவுல், ‘‘கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் வாழ விரும்புவோர்

அனைவரும் இன்னலுறுவர்'' என்று முடிவாய்ச் சொன்னான் (2 தீமோ 3:10-12). நிலைமையானது ''மேலும் மேலும்'' கெடும் என்றும் அவன் முன்னறிவித்தான் (வச 13). நாம் துன்புறுத்தப்படாவிட்டால்தான் ஆச்சரியப்படவேண்டும்! ''கிறிஸ்து வைப் போல் குற்றமற்றவர் யார்? அவரைவிட அதிகமாய்த் துன்புறுத்தப்பட்டவர் யார்? உலகம் இன்னும் உலகந்தான்!'' என்றார் ஜான் பிளேவேல் என்ற பக்தன்.

கடவுள் ஏகாதிபத்தியர் என்ற அடிப்படைச் சத்தியத்தையும் நாம் மறந்துவிடக்கூடாது. கிறிஸ்துவே மன்னாதி மன்னர், கர்த்தாதி கர்த்தர். அவரது அறிவும் அனுமதியுமின்றி அவரது மக்களுக்கு ஒன்றும் நடக்காது. நமது தலைமுடியெல்லாம் எண்ணப்பட்டிருக்கிறது (மத் 10:30). கடவுளின் உள்ளங்கையில் நாம் வரையப்பட்டிருக்கிறோம் (ஏசா 49:16). நன்மை யாகவோ தீமையாகவோ தோன்றும் யாவும் கடவுளை நேசிப்போருக்கு மொத்தத்தில் நன்மையாகவே முடியும் (ரோ 8:28). நமக்கு விரோதமாய்த் தீட்டப்படும் திட்டங்களையெல்லாம் சர்வ வல்லவர் நமக்கு நன்மையாய் மாற்றிவிடுவார். கடவுள் துன்புறுத்தலை இருகாரணங்களுக்காய் அனுமதிக் கிறார்: ஒன்று சபைக்காய், அடுத்தது சமுதாயத்திற்காய்.

### 1. திருச்சபை பரிசுத்தப்படுதல்

பெந்தெகொஸ்தே நாளன்று சபை பிறந்ததையடுத்து இரட்சிக்கப்படும் ஆண்களும் பெண்களுமே சபையில் சேர்க்கப்பட்டுவந்தனர் (அப் 2:47ஆ). ஆனால் நாளாவட்டத்தில் மக்கள் பல்வேறு காரணங்களுக்காய்க் கிறிஸ்த வத்தைத் தழுவலாயினர். இன்றையச் சபைகள் பலவற்றில் இரட்சிக்கப் பட்டவரை விட இரட்சிக்கப்படாதவரே எண்ணிக்கையில் அதிகமாயி ருப்பது அதின் துக்ககரமான விளைவு.

சாத்தான் திருச்சபையை இருவிதங்களில் தாக்குகிறான்—ஒன்று வெளியேயிருந்து எதிரியாக; அடுத்து உள்ளேயிருந்து நண்பனாக! இவ்விரு முறைகளை அவன் மாற்றிக்கொண்டேயிருப்பான். இரண்டாம் முறையே முதலாமவதைவிட ஆபத்தானது. பேரரசன் கான்ஸ்டன்டைன் கிறிஸ்த வத்தை ரோமப் பேரரசின் அதிகாரப்பூர்வ மார்க்கமாக்கியபோது, அவன் சபையை நாட்டிற்கு மணமுடித்துவிட்டான் என்றே சொல்லவேண்டும். மனம் மாறியதால் அல்ல, சலுகைகளை நாடி பலர் கிறிஸ்தவராயினர். இதனா லேயே வறட்டுச் சடங்காச்சாரப் பெயர்க் கிறிஸ்தவம் தோன்றிற்று. ஆயுதமணிந்த தீவிரவாதக் கும்பலொன்று நமது ஞாயிறு ஆராதனை யொன்றில் நுழைந்து, கிறிஸ்து ஒருவரே மோட்சம் செல்ல ஒரே வழி என்று சொல்வோரெல்லாம்—நிசமாகவே—சுட்டுக்கொல்லப்படுவர் என்று



அறிவிப்பு விடுக்குமானால் எத்தனைபேருக்கு தங்கள் விசுவாசத்தில் உறுதியாய் நிற்கத் தைரியமிருக்கும்? ''நீங்கள் எவ்வளவு காலம் இரு மனதோடு தட்டுத்தடுமாறி நடப்பீர்கள்? ஆண்டவர்தாம் கடவுள் என்றால் அவரைப் பின்பற்றுங்கள்; பாகால்தான் என்றால் அவன் பின்னே செல்லுங்கள்'' என்று பின்மாற்றத்திலிருக்கும் பெயர்க் கிறிஸ்தவ சபைக்குக் கடவுள் விடும் சவாலையே துன்புறுத்தல் எனலாம் (1 இரா 18:21). எம்மதமும் சம்மதம் என்று நம்பும் அங்கத்தினரின் எண்ணிக்கை கூடக்கூட சபையின் பலம் குறைந்துகொண்டே போகும்.

திருச்சபையானது கறைதிரையோ, வேறு எக்குறையோ இல்லாமல் தூய்மையும் மாசற்றதுமாய் மாட்சியுடன் தம்முன் விளங்குமாறு கிறிஸ்து தமது மணப்பெண்ணான சபையைக் கழுவித் தூயதாக்கும் பணியில் தீவிரங்கொண்டுள்ளார் (எபே 5:25-27). தங்கத்தைவிட விலையுயர்ந்த நமது விசுவாசத்தைத் துன்புறுத்தலெனும் நெருப்பானது புடமிடுகிறது (1 பேது 1:6,7). கிறிஸ்துவின் பணிகளில் ஒன்றைத் திருமுழுக்கினன் யோவான் இப்படிச் சித்தரித்தான்: ''அவர் சுளகைத் தம் கையில் கொண்டு கோதுமையையும் பதரையும் பிரித்தெடுப்பார்; தம் கோதுமையைக் களஞ்சியத்தில் சேர்ப்பார்; ஆனால் பதரையோ அணையா நெருப்பிலிட்டுச் சுட்டெரிப்பார்'' (மத் 3:12).

துன்புறுத்தலின் காலங்களிலும் அவற்றைத் தொடர்ந்தும் இறைமக்கள் ஜெபத்திலும், தொழுகையிலும், வேதத் தியானத்திலும் வலுவடைகின்றன ரென்பதே சபைச் சரித்திரத்தின் சான்று. ''நான் நேசிக்கிறவர்களைக் கடிந்து தண்டித்துத் திருத்துகிறேன். ஆகவே நீ ஆர்வங்கொண்டு மனந்திரும்பு'' என்ற கிறிஸ்துவின் வார்த்தைகளால் வெதுவெதுப்பான சபை எச்சரிப்பு பெறுகிறது (வெளி 3:19).

கிறிஸ்தவரிடையே பிரிவினை என்பது பயங்கர துர்ச்செய்தி. துன்புறுத்த லெனும் புயல் சபையின்மீது வேகமாக வீசும்போதுதான் அதின் ஊழியரும் மக்களும் ஒருவருக்கொருவர் எதிரி தாங்களல்ல, உண்மையான விரோதி கள் தங்கள் ஆண்டவரையும் அவரது காரியங்களையும் எதிர்ப்பவர்களே என்று உணரத் துவங்குகின்றனர். எபேசியர் 4: 4-6இலுள்ள ''ஒரே கர்த்தர்'' மற்றும் ''ஒரே பிதாவானவர்'' போன்ற ஏழு ஒருமனப்பாட்டு அம்சங்களோடு ''ஒரே விரோதி'' என்பதையும் சபை கூட்டிக்கொள்ளுகிறது! நமது கொள்கை களிலும் செயல்களிலுமுள்ள சிறுசிறு வேறுபாடுகளை மறந்து உலகிற்கு முன் நாம் எவ்விதம் ஒன்றுபட்டு நிற்கவேண்டுமென்பதற்கு இது இன் னொரு சவாலாகிறது.

குஜராத் மாநிலத்தில் நமது ஆலயங்கள் எரிக்கப்பட்டது சங்கீதம் 74இலுள்ள ஜெபக்கதறலை நமக்கு நினைவுபடுத்துகிறது. "தேவனே, உமது மேய்ச்சலின் ஆடுகள்மேல் உமது கோபம் ஏன் புகைகிறது?... எதிரிகள் உமது தூயகத்தில் அனைத்தையும் பாழ்படுத்திவிட்டார்கள்... நாட்டிலுள்ள ஆலயங்களையெல்லாம் சுட்டெரித்துவிட்டார்கள்" (வச 1,3,8). இச்சங்கீதத்தில் புதைந்திருக்கும் வெட்ககரமான அறிக்கை யொன்றைக் கவனியுங்கள்: "எங்களுக்கிருந்த **அடையாளங்களைக்** காணோம்; **தீர்க்கதரிசியும்** இல்லை" (வச 9). இன்றைய இந்தியத் திருச்சபையைப் பொருத்தமட்டில் இது எவ்வளவு உண்மை! நமது சுகமளிக்கும் கூட்டங்களைக் குறித்து நாம் எவ்வளவு தம்பட்டமடித்துக் கொண்டாலும் நமது தெருக்களிலும் சந்திகளிலும் நெடுங்காலமாய்க் கிடக்கும், யாவருக்கும் தெரிந்த, ஒரு தொழுநோயாளியோ, முடவனோ பூரண சுகம் பெற்றதை நாம் இன்னும் காணவில்லையே. அப்படி ஓர் அற்புதம் நடந்தால் விளம்பரமே தேவையிருக்காதே! துன்புறுத்தப்பட்ட ஆதிச்சபை எதிரிகளின் வாயடைக்கும் அற்புத அடையாளங்களுக் காகவே ஜெபித்தது (அப் 4:29,30). தனி நபருக்குக் கிட்டும் சொந்த ஆசீர்வாதங்களை முன்னறிவிக்கும் தீர்க்கதரிசிகளின் கும்பல் இன்று பெரிது. ஆனால் அரசர்களுக்கும் ஆளுநர்களுக்கும் நேருக்குநேர் சவாலிடும் எலியா அல்லது திருமுழுக்கினன் யோவான் போன்ற தீர்க்கதரிசிகள் இல்லையோ? "தேவனே, எதுவரைக்கும் சத்துரு இகழ்ந் துரைப்பான்?" (சங் 74:10).

## 2. திருவசனம் பரவுதல்

கிறிஸ்துவின் பிரிவு வார்த்தைகளைச் சரித்திராசிரியன் லூக்கா அப்போஸ்தலர் 1:8இல் பொறித்து வைத்துள்ளான்: "பரிசுத்த ஆவி உங்கள் மேல் வரும்போது நீங்கள் வல்லமை பெற்று... உலகின் கடையெல்லை வரை எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்." "சாட்சி" எனத் தமிழாக்கப்பட்ட கிரேக்கச் சொல் "இரத்தச்சாட்சி" என்ற மூலப்பொருளை அடக்கியுள்ளது. எருசலேமில் துவங்கி உலகின் தொலைவிடங்களெங்கும் தைரிய சாட்சிகளாய்த் தமது சீடர்கள் செல்லவேண்டுமென்ற நோக்கத்திற்காகவே கிறிஸ்து அவர்களை அபிஷேகித்தார். அவர்களோ சபையின் அமோக வளர்ச்சியில் ஆனந்தங்கொண்டு எருசலேமிலேயே இருந்துவிட்டனர் (அப் 2:46,47). அவர்களை அங்கிருந்து வெளிக்கிளப்ப துன்புறுத்தலை அனுப்புவதே தேவன் கண்ட ஒரே வழியாயிற்று. "அக்காலத்தில் எருசலே மிலுள்ள சபைக்கு மிகுந்த துன்பம் உண்டாயிற்று... அனைவரும் யூதேயா, சமாரியாவில் நாட்டுப்புறமெங்கும் சிதறடிக்கப்பட்டுப்போயினர்" (அப் 8:1). அப்போஸ்தலர் 1:8இல் தனக்கு ஆண்டவர் தந்துள்ள திட்டத்தைச் சபை



மறக்கும்போதெல்லாம் அவர் அப்போஸ்தலர் 8:1இன் பிரம்பு கொண்டு அதற்கு நினைப்பூட்டுவார்!

சபையில் ஏறத்தாழ 99 சதவீத அங்கத்தினர் நற்செய்திப்பணியில் நேரடி ஈடுபாடு கொள்ளாதவர்களாகவே இருக்கின்றனர். வேலையில்லா தோரின் யூனியன்களாவே அனேக சபைகள் திகழ்கின்றன. "யாரும் எங்களை வேலைக்கு அமர்த்தவில்லை" என்று சாக்குப்போக்கு சொல்லிக் கொண்டு அவர்கள் சோம்பேறிகளாயிருக்கின்றனர். இப்படிப்பட்டவர் களைத்தான் துன்புறுத்தலானது சந்திக்கப்படாதோரின் உலகிற்குள் சிதறியடிக்கிறது. "சிதறிப்போனவர்கள் எங்கும் திரிந்து சுவிசேஷ வசனத்தைப் பிரசங்கித்தார்கள்" (அப் 8:4). பாட்டிலிலிருந்து உப்பானது ஆகாரத்தின்மேல் தூவப்படாவிட்டால் உப்பினால் பயனென்ன?

புத்த மதத்தினரின் வளர்ச்சியாகிய 1.7 சதவீதம், இந்துக்களின் 2.2 சதவீதம், மற்றும் முகமதியரின் 2.7 சதவீதம் ஆகியவற்றோடு ஒப்பிடும் போது 6.9 சதவீத வளர்ச்சியுள்ள கிறிஸ்தவமே உலகில் அதிவிரைவாய்ப் பரவும் மார்க்கமாகும். இதைப் பார்த்துக்கொண்டு சுவிசேஷத்தின் எதிரிகள் சும்மா நிற்க முடியாது. "சபை" என்ற சொல் முதலாவது சொல்லப்பட்ட இடத்திலேயே "நான் என் சபையைக் **கட்டுவேன்**, பாதாளத்தின் வாசல்கள் அதை **மேற்கொள்ளுவதில்லை**" என்ற கிறிஸ்துவின் அசையா வாக்கு அருளப்பட்டுள்ளது (மத் 16:18). சபையானது தாக்குகிறது; சாத்தான் தடுக்க முயற்சிக்கிறான். துன்புறுத்தலென்பது எப்போதுமே ஓர் எதிர்ச் செயல்தான். "இது மேலும் மக்களிடையே பரவாமலிருக்குமாறு, இதுமுதல் ஒருவரோடும் இந்த நாமத்தைக் குறித்துப் பேசக்கூடாதென்று நாம் அவர்களை உறுதியாய்ப் பயமுறுத்தவேண்டுமென்று" அப்போஸ்தலருக்கு எதிராக சுவிசேஷத்தின் எதிரிகள் சொல்லிக்கொண்டார்களாம் (அப் 4:17).

இரத்தசாட்சிகளின் இரத்தமே சபையின் வித்து. "ஓர் ஊழியனின் சாம்பலிலிருந்து கடவுள் அநேக உத்தம ஊழியரை எழுப்பிவிடுவார்" என்று வேத வியாக்கியானி மேத்யூ ஹென்றி நம்மை ஊக்குவிக்கிறார்! மிஷனரி கிரஹாம் ஸ்டுவர்ட் ஸ்டெயின்ஸ் (58) மற்றும் அவரது இருமகன்கள் பிலிப் (9), தீமோத்தேயு (6) ஆகியோர் ஒரிசாவில் 1999 ஜனவரி 22-23 இரவில் தீக்கிரையாக்கப்பட்டது திரளான மணிகளைப் பிறப்பிப்பதற்காக தரையில் விழுந்த கோதுமை மணிகள் செத்ததாகும். இம்மாநிலத்தில் ஏற்கனவே மதமாற்றத் தடுப்புச் சட்டம் அமுலிலிருந்தும் தீவிரமாய் வளர்ந்துவரும் திருச்சபையானது என்றுமில்லாத அளவு அறுவடையைக் காணப் போகின்றது. "இறைவனது நெருப்பை மனிதனது துன்புறுத்தலெனும் தண்ணீர் கொண்டு அணைக்கவே முடியாது" என்று பக்தன் A. W. டோசர் தமது ஞானத்தில் எழுதினார்.

தமிழ்நாட்டிலும் கேரளத்திலுமுள்ள திருச்சபையே இந்தியாவிலேயே திறம்பட்டது எனலாம். கிறிஸ்துவின் பன்னிரு திருத்தூதுவரில் ஒருவராகிய தோமா கேரளத்தில் ஊழியஞ்செய்து தமிழகத்தில் கொலைசெய்யப்பட்டது இதற்கொரு இரகசியமாயிருக்கலாம். இவ்விரு மாநிலங்களும் இந்தியா வெங்கும் எத்தனை வாலிபர், நங்கையரை மிஷனரிகளாய் அனுப்பிவைத் துள்ளது என்று பாருங்கள்! சிறைக் கதவுகளுக்குப் பின்னாலிருந்து பவுல் பேசுவதைக் கவனியுங்கள்: "சகோதரரே, எனக்கு நேர்ந்தவையெல்லாம் நற்செய்தி பரவுவதற்கு ஏதுவாயினவென்று நீங்கள் அறியவேண்டுமென விரும்புகிறேன். ஏனெனில் கிறிஸ்துவுக்காகவே நான் சிறைப்பட்டுள்ளேன் என்பது அரண்மனையெங்குமுள்ளவர்க்கும் மற்ற யாவருக்குமே தெளி வாயிற்று. என் சிறை வாழ்வினால் சகோதரர் சகோதரிகளுள் பெரும்பாலா னோர் ஆண்டவரை உறுதியாக நம்பித் திருவசனத்தை அச்சமின்றி எடுத்து ரைக்க மேலும் துணிவு பெற்றிருக்கிறார்கள்" (பிலி 1:12-14). இந்தியாவில் இதுவே நடக்கட்டும் என்று ஆமென் சொல்லுவோம்!

துன்புறுத்தல் இன்னும் முழு அளவில் இந்தியாவின் தென் மாநிலங் களுக்கு வரவில்லை. முதல்வரிசைப் பிரசங்கிமார், சுவிசேஷகர் மற்றும் கிறிஸ்தவத் தலைவர்கள் தெற்கிலேயே தங்கிக்கிடக்கின்றனர். சென்னை யில் 1995இல் நடந்த இரண்டாம் அகில இந்திய சபை வளர்ச்சி மாநாட்டில் வெளிவந்த அதிமுக்கிய புள்ளி விபரத்தைக் கவனியுங்கள்: "கிறிஸ்தவ ஊழியரில் 90 சதவீதத்தினர் 22 சதவீத மக்களையே குறிவைக்கின்றனர்; 10 சதவீதத்தினர் மட்டுமே நாட்டில் மீதமுள்ள 78 சதவீத மக்கட்தொகை யினரிடையே ஊழியஞ்செய்கின்றனர்." "தென்னகக் கிறிஸ்தவருக்கு யானைக்கால் வியாதி பிடித்திருக்கிறது. அவர்கள் வடக்குநோக்கிச் செல்லாவிட்டால் இந்தியாவிற்கு எதிர்காலமில்லை" என்று பல்லாண்டு கட்கு முன்னர் சாது சுந்தர்சிங் சொன்னது சரிதானே! ஜெபிப்பதும் கொடுப் பதும் செல்லுவதற்கு மாற்றாகாது. துன்புறுத்துதல் ஒன்றுதான் நாம் புரிந்து கொள்ளக்கூடிய ஒரே மொழியோ?

துன்புறுத்தலைக் கடவுள் ஏன் அனுமதிக்கிறாரென்பதற்கு இரு கார ணங்களை ஆராய்ந்த நாம் அடுத்து துன்புறுவோருக்கு நமது இரட்டைக் கடமையென்னவெனக் கவனிப்போம்.

## 1. ஜெபம்

துன்புறுவோருக்கும் அதே வேளையில் துன்புறுத்துவோருக்கும் ஜெபிக்க வேதம் நமக்குப் போதிக்கிறது.



### *அ) துன்புறுவோருக்காக ஜெபம்*

ஒருவன் கிறிஸ்துவின் மேலுள்ள தனது விசுவாசத்தில் எவ்வளவுதான் திடமாயிருந்தாலும் தீவிர பயமுறுத்தல்களும் கருணையற்ற துன்புறுத்தல் களும் பெருகும்போது அவன் அசையாமல் நிற்பது அவ்வளவு சுலபமல்ல. "சிறை வாழ்வையும் இன்னல்களையும் குறித்து நான் கவலைப்படேன்" என்று ஒருமுறை எபேசு சபைத் தலைவர்களுக்கு முன் வீரமாய்ப் பேசிய பவுல், பின்னர் அவ்வூர் விசுவாசிகளுக்கு எழுதும்போது, நற்செய்தியை அறிவிக்கவேண்டிய விதமாய் அறிவிக்கத் தனக்குத் "துணிவும்" சரியான "வாக்கும்" கொடுக்கப்படத் தனக்காக ஜெபிக்க மன்றாடினான் (அப் 20:23,24; எபே 6:19,20). பேதுரு சிறையிலடைக்கப்பட்டிருந்தபோது சபையானது அவனுக்காக இடைவிடாது ஊக்கமாய் ஜெபித்துக்கொண் டிருந்தது (அப் 12:5).

"சாப்பிட விரும்புவதுபோல் இரத்தசாட்சிகளைச் சாக விரும்பச் செய்தது தெய்வீகப் பிரசன்னமே" என்றெழுதினார் தாமஸ் புரூக்ஸ்! சபையின் ஜெபத்தைக் கேட்டு ஆண்டவர் பேதுருவைச் சிறைச்சாலையிலிருந்து விடு விக்கத் தமது தூதனை அனுப்பினார். இக்கட்டான சமயங்களிலும் ஆபத்து நிறைந்த சூழல்களிலும் துன்புறுத்தலுக்குட்படுவோருக்கு நமது ஜெபங்கள் என்ன செய்யக்கூடுமென்பதைக் குறைவாய்க் கணித்துவிடக்கூடாது. இரத்தச்சாட்சி மரணத்திற்கு முன் சவாலிடப்பட்டபோது போலிகார்ப் என்பவர், "எண்பத்தாறு ஆண்டுகள் நான் கிறிஸ்துவைச் சேவித்துள்ளேன்; அவர் எனக்கு ஒரு தீங்கும் செய்யவில்லை. அப்படியிருக்கும்போது என் இராஜாவும் இரட்சகருமானவரை நான் தூஷிப்பதெப்படி?" என்று பதிலு ரைத்தார். "எனக்கு இரண்டு தலைகளிருந்தால் கிறிஸ்துவுக்காய் அவை இரண்டுமே வெட்டப்படவேண்டுமானாலும் நான் விட்டுவிடுவேன்" என்றார் ஹென்றி வாஸ். 1993இல் பாக்கிஸ்தான் சிறையொன்றில் தூக்கிலிடப் படுமுன் தாஹிர் இக்பால், "நான் தொங்கவேண்டிய கயிற்றை முத்தம் செய்ய ஆயத்தம், ஆனால் ஒருபோதும் எனது விசுவாசத்தை மறுதலிக்க மாட்டேன்" என்று முழங்கினான். *Foxe's Book of Martyrs* எனும் நூலை ஒவ்வொரு கிறிஸ்தவனும் வாசிக்கவேண்டும். அந்தகார சக்திகளை இரத்தச் சாட்சிகள் தங்களது அற்பமான சக்தியைக் கொண்டு நிர்மூலமாக்கினர். துன்புறுவோருக்கு நமது ஜெபங்கள் எவ்வளவாய்த் தேவை, பாருங்கள்!

சமுதாயக் கட்டுப்பாடு நிறைந்த இந்தியாவைப் போன்றதொரு நாட்டில் புதிய விசுவாசிகள் தங்கள் இனத்தாரிடமிருந்தும் அயலகத்தாரிடமிருந்தும் நெடுகவே எதிர்ப்புகளையும் துன்புறுத்தல்களையும் சகித்து வாழவேண் டியதிருக்கிறது. சில பகுதிகளில் கிறிஸ்தவர்களாகிவிட்ட புது விசுவாசி

களை ஊரின் பொதுக்கிணற்றில் தண்ணீர் இறைக்கக்கூட விடாது, சமுதாயத்தைவிட்டே அகற்றிவைக்கின்றனர். வெகுசில கிறிஸ்தவர்களே யுள்ள புதிய பணிக்களங்களில் விசுவாசிகளான வாழ்க்கைத் துணைகளைக் கண்டுபிடிப்பது இன்னொரு பிரச்னை. பொதுவுடமை நாடுகளில் மறைந் திருக்கும் கிறிஸ்தவர்கள் இருப்பதுபோல் முகமதிய மற்றும் இந்து நாடு களில் இரகசியக் கிறிஸ்தவர்கள் உண்டு. பயந்தே வாழும் இந்த நமது சகோதர சகோதரிகளுக்காய் மறக்காது ஜெபிப்போம்.

*ஆ) துன்புறுத்துவோருக்காக ஜெபம்*

நமதாண்டவர் தமது முதல் வெளிப்பிரசங்கத்திலேயே “உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக் காகவும் ஜெபம் பண்ணுங்கள்” என்று நமக்குப் போதித்துள்ளார் (மத் 5:44). சிலுவையிலிருந்து அவர் மொழிந்த முதல் வார்த்தையே தம்மைச் சிலுவையிலறைந்தோருக்கான ஜெபமே: “பிதாவே, இவர்களுக்கு மன்னியும்; தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே” (லூக் 23:34). சபையின் முதல் இரத்தச்சாட்சியாகிய ஸ்தேவான் கல்லெறியப்பட்டு இரத்தம் சிந்திக்கொண்டிருக்கையில், “ஆண்டவரே, இவர்கள்மேல் இந்தப் பாவத்தைச் சுமத்தாதேயும்” என்று சத்தமாய் ஜெபித்தான் (அப் 7:60).

அதிகமாய் எதிர்க்கும் நபர்களே சீக்கிரம் மனந்திரும்பி வல்லமையாய் வசனத்தைப் பறைசாற்றுபவர்களாய் மாறிவிடுகிறார்களென்பதே அடிக்கடி பணிக்களங்களில் கண்டறிந்த உண்மையாகும். துன்புறுத்துவோருக்காய் நாம் செய்யும் ஜெபங்களின் விளைவுதான் இது. ஸ்தேவானின் ஜெபம் வாலிபன் சவுலை ஆழமாய்த் தொட்டது. கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தின இவன் நற்செய்தியைப் பிரசங்கிக்கிறவனாய் மாறியபோது, வியப்பில் ஆழ்ந்த மக்கள், “எருசலேமில் இயேசுவின் பெயரை அறிக்கையிடுகிறவர் களை ஒழிக்க முற்பட்டவன் இவனல்லவா?” என்றனர் (அப் 9:21; 22:19,20). சீர்திருத்தவாதியும் வேதாகம மொழிபெயர்ப்பாளருமான வில்லியம் டின்டேல் (1494-1536) கழுத்து நெறிக்கப்பட்டு தீக்கிரையாக்கப்படுமுன் இப்படி ஜெபித்தார்: “ஆண்டவரே, இங்கிலாந்து நாட்டு மன்னரின் கண்களைத் திறந்தருளும்.” கடவுள் அவரது ஜெபத்தைக் கேட்டார். மன்னன் வேதாக மத்தை மொழிபெயர்க்க ஆணையிட்டான். King James Version என்ற மொழியாக்கத்தை அறியாதவர் யார்?

கிறிஸ்தவர்கள் தாக்கப்படுவதற்கு எதிராக உண்ணாவிரதப் போராட் டங்களும் ஊர்வலங்களும் நடத்துவது சரியா என்றொரு கேள்வியுண்டு.



இதற்குப் பதில் சொல்லுகையில் ஒருசில காரியங்களை நினைவிற்கொள்ள வேண்டும். சுவிசேஷத்தை எதிர்ப்போர் விரோதிகளல்ல; அவர்கள் நமது விரோதியாகிய சாத்தானுக்குப் பலியானவர்கள். அவர்கள் செய்வதெல்லாம் அறியாமையினாலேயே என்றே முடிவில் நாம் கண்டறிவோம். கிறிஸ்துவைச் சிலுவையிலறைந்தவர்களைக் குறித்துக் கிறிஸ்துவும் அவரது அடியார் களும் அவர்கள் “அறியாமையினாலேயே” அப்படிச் செய்தார்களெனக் கணித்தார்கள் (லூக் 23:34; அப் 3:17). காலம் செல்லச் செல்ல இவ்வுலகின் அதிபதியானவன் கூடுதல் வேகத்துடன் மக்களின் கண்களைக் குருடாக்கி அவர்களை ஆட்டிப்படைத்து வருவதால் எல்லாத் தலைமுறைகளிலும் நிலைமை இதுவே (1 தெச 2:14ஆ-16).

எபேசியர் ஆறாம் அத்தியாயத்திலுள்ள ஆன்மீகப் போராட்டப் பகுதி மிஷனரி ஊழியத் தாக்குதல்களை அடுத்தது. நற்செய்தியைப் பறைசாற்ற முன்செல்ல எப்பொழுதும் ஆயத்தமாயிருப்பதைக் காலணிகள் குறிப்பிடு கின்றன. திருவசனமாகிய நமது செய்தியே போர்வாள். ஒரு மிஷனரி ஜெபத்திற்கான வேண்டுகோளோடு முடியும் இவ்வசனப் பகுதி “நாம் மாம்சத்தோடும் இரத்தத்தோடும் (அதாவது, மனிதர்களோடு) போராடு வதில்லை” எனத் துவங்குகிறது (எபே 6:12-20). சபை மீது வரும் எந்தத் தாக்குதலையும் அசுத்த ஆவிகளின் நேரடிச் செயலாகவே காணவேண்டும். ஆவிமண்டலச் சக்திகளை ஆட்கள் பலம் அல்லது உடல் வலிமை கொண்டு முறியடிக்க முடியாது. நாட்டின் தலைவர்களுக்கு நமது வேதனை களை எடுத்துக்கூறுதல், மற்றும் கிறிஸ்தவப் பண்பாட்டுடன் எதிர்ப்பு அணிவகுப்புகள் நடத்துதல் போன்றவற்றிற்கெல்லாம் ஓரிடம் உண்டு. ஆனாலும், பொதுவிடங்களில் உண்ணாவிரதப் போராட்டம் நடத்துவதை விட மறைவிடங்களில் உபவாச ஜெபக்கூட்டம் நடத்துவது கூடுதல் பலன் தரும். அப்போஸ்தல நடபடிகள் புத்தகத்தைத் திரும்பக் கவனமாய் வாசிப்பது நம்மைச் சீரான நிலையில் நிறுத்தும்.

திருச்சபையானது துன்புறுத்தலினால் வியாகுலப்படும்போது திருச் சபையின் ஆண்டவர் துன்புறுத்துவோரைப் பார்த்து நகைக்கிறார். இது நமக்குப் பேருக்கம். கடவுளின் நகைப்பைக் குறித்து வேதத்தில் மூன்று முறைதான் வாசிக்கிறோம் (சங் 2:4; 37:13; 59:8). அது எப்பொழுதுமே தனி நபர்கள் அல்லது நாடுகள் அவருக்கு விரோதமாக முரட்டாட்டம் பண்ணுதலையும், தீய சக்திகள் முறிக்கப்படுதலையும் அடுத்தே வருகிறது.

துன்புறுவோருடன் நம்மை அடையாளப்படுத்திக்கொள்ளுதல் நமது அடுத்த பொறுப்பாகும்.

## 2. பங்குபெறுதல்

உடலின் ஒப்புமை போல் சபையின் ஒருமைப்பாட்டை விளக்க வேறில்லை. அது உள்ளூரிலுள்ள சபையானாலும் சரி, உலகெங்குமுள்ள சபையானாலும் சரி, ஓர் உறுப்பு வேதனைப்பட்டால் எல்லா உறுப்புகளும் அதனுடன் சேர்ந்து வேதனைப்பட வேண்டும் (1 கொரி 12:26). "சிறைப்பட்டவர்களோடு நீங்களும் சிறைப்பட்டிருப்பதாக எண்ணி அவர்களை நினைத்துக்கொள் ளுங்கள். துன்புறக்கூடிய உடல் உங்களுக்கும் உள்ளதால் துன்புறுத்தப் படுபவர்களை மறவாதீர்கள்" என்று எபிரேயர் நிருப ஆக்கியோன் வேண்டிக் கொண்டான் (எபி 13:3). துன்புறுவோரோடு நாம் நம்மை அடையாளப் படுத்திக்கொள்ளுதல் சுவிசேஷத்தின் உக்கிராணத்துவப் பொறுப்பிலிருந்து பிரிக்கமுடியாததொன்றாகும். துன்புறுத்தப்படும் கிறிஸ்தவரோடு நிற்பது துன்புறுத்தப்பட்ட கிறிஸ்துவுக்காய் நிற்பதாம்! தமக்கு வலப்பக்கத்தில் நிற்போரைப் பார்த்து இறுதித் தீர்ப்பின் நாளில் விண்ணரசர், "நான் சிறையிலிருந்தேன், என்னைத் தேடி வந்தீர்கள்... மிகச் சிறியோராகிய என் சகோதரர்களுள் ஒருவருக்கு நீங்கள் செய்ததையெல்லாம் எனக்கே செய்தீர்கள் என உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்பார் (மத் 25:34,36,40).

மிஷனரி இயக்கங்களோடு தொடர்புகொண்டு துன்புறுத்தலுக்கு ஆளாகியுள்ள இளம் சபைகளைச் சந்தித்து விசுவாசிகளை ஊக்குவியுங்கள். அவர்கள் இந்தப் போராட்டத்தில் தனித்து விடப்படவில்லை என்பதை உணரட்டும். தனது காலத்தில் துன்புற்ற கிறிஸ்தவருக்குப் பேதுரு அப்போஸ்தலன் நினைவூட்டியது நமக்கு உதவியளிக்கும்: "அன்புக் குரியவர்களே, துன்பத் தீயில் நீங்கள் சோதிக்கப்படும்போது, ஏதோ எதிர்பாராதது நேர்ந்துவிட்டதென வியக்காதீர்கள்... உலகெங்கிலுமுள்ள உங்கள் சகோதர சகோதரிகள் உங்களைப் போலவே துன்பங்களுக்கு உள்ளாகிறார்கள் என்பதை நீங்கள் அறிந்திருக்கிறீர்கள் அல்லவா?" (1 பேது 4:12; 5:9). தொலைவிடங்களில் துன்புறுத்தப்படும் மிஷனரி களுக்குத் தனிக் கடிதங்கள் அனுப்பி அவர்களை உற்சாகப்படுத்துங்கள். தான் எவ்விதம் சில கிறிஸ்தவர்களால் ஊக்குவிக்கப்பட்டானென்று சிறைவாசம் செய்துகொண்டிருந்த மிஷனரி பவுல் நன்றியுடன் இவ்விதம் எழுதினான்: "ஒநேசிப்போருவின் வீட்டாருக்கு ஆண்டவர் இரக்கம் காட்டுவாராக! ஏனெனில் அவர் பன்முறை என் உளம் குளிரப்பண் ணினார். விலங்கிடப்பட்டிருக்கும் என்னைக் குறித்து அவர் வெட்க மடையவில்லை. அவர் உரோமைக்கு வந்தபோது ஆர்வமாக என்னைத் தேடிக் கண்டுபிடித்தார்" (2 தீமோ 1:16,17). நமக்கு விருப்பம் மட்டு மிருந்தால் துன்புறுவோரின் இன்னல்களில் "பற்பல உதவிகளைச்" செய்ய நிறைய வாய்ப்புண்டு (வச 18).



துன்புறுத்தப்படும் கிறிஸ்தவரைக் குறித்துக் கரிசனையற்றிருப்பது கடவுளுக்கு விரோதமான பாவமாகும். உங்கள் சபையில் நீங்கள் பெற்று வரும் ஆசீர்வாதங்களிலும் அனுபவிக்கும் பரவச ஆராதனைகளிலுமே திளைத்து உங்கள் கண்கள் மங்கிப்போகாதபடிப் பார்த்துக்கொள்ளுங்கள்! "சீயோனில் நிர்விசாரமாயிருக்கிறவர்களுக்கு ஐயோ!... அவர்கள் தம்புரை வாசித்துப் பாடி, தாவீதைப்போல் புதிய இசைக்கருவிகளைக் கண்டுபிடிக்கின்றார்கள்... ஆனாலும் (தங்கள் சகோதரன்) யோசேப்புக்கு நேரிட்ட ஆபத்துக்குக் கவலைப்படாமற்போகிறார்கள்" (ஆமோஸ் 6:1,5,6).

### துன்புறுத்தப்படுவோர் பாக்கியவான்கள்!

கிறிஸ்துவின் பெயருக்காகவும் அவரது நற்செய்திக்காகவும் இன்னலு றுவோருக்கு மகுடப் பரிசுகள் காத்திருக்கின்றன. தனது மிஷனரிப் பணிக்கால முடிவில் பவுல், "இந்நற்செய்திக்காகவே நான் குற்றம் செய்த வனைப்போலச் சிறையிலிடப்பட்டுத் துன்புறுகிறேன். ஆனால் கடவுளின் வார்த்தையைச் சிறைப்படுத்தமுடியாது... நாம் அவரோடு இறந்தால் அவரோடு வாழ்வோம்; அவரோடு பாடுகளைச் சகித்தால் அவரோடு ஆட்சிசெய்வோம்" (2 தீமோ 2:9,11,12). இவ்விதக் குதூகல நம்பிக்கை யுள்ளவர்களைக் குறித்து, "மேன்மையான உயிர்த்தெழுதலை அடையும்படி, விடுதலை பெற மறுத்து, வதையுண்டு மடிந்தனர்" என்றெழுதப்பட்டிருக் கிறது (எபி 11:35). "கிறிஸ்து எனக்காக மரித்திருப்பாரானால் நான் அவருக்காகச் செய்யும் எந்தத் தியாகமும் பெரிதல்ல" என்பதே இவ்விசு வாச வீரர்களை உந்தித்தள்ளிய விசையாகும்.

நம்மைத் துன்புறுத்துவோருக்காக ஜெபித்து அவர்களை ஆசீர்வதிப்பது நமது கடமையெனினும், அவர்கள் மனந்திரும்பாவிட்டால் ஆண்டவர் அவர்களைத் தண்டித்தே தீருவார். வேதத்தின் இறுதிப் புத்தகம் சொல்வதைக் கவனியுங்கள்: "விண்ணகமே, பரிசுத்த அப்போஸ்தலர்களே, தீர்க்கதரிசிகளே, அவளை (பாபிலோன் நகரை) முன்னிட்டு மகிழ்ந்து கொண்டாடுங்கள்; கடவுள் உங்கள் சார்பாக அவளுக்குத் தண்டனைத் தீர்ப்பு வழங்கிவிட்டார்... தீர்க்கதரிசிகள், பரிசுத்தவான்களின் இரத்தக் கறையும், ஏன் மண்ணுலகில் கொல்லப்பட்ட அனைவருடைய இரத்தக் கறையுமே அவளிடம் காணப்பட்டது" (வெளி 18:20,24).

எல்லாருமே இரத்தச்சாட்சிகளாய் மடிய வேண்டுமென்பதல்ல. ஆனால் சீன நாட்டுக் கம்யூனிசக் கொடுமையில் சித்திரவதை செய்யப்பட்ட வாட்ச்மேன் நீ என்பவரின் வார்த்தையில், "நமக்குத் துன்புற மனதிருக்கவேண்டும்!" ஏனென்றால், "கிறிஸ்துவிடத்தில் விசுவாசிக் கிறதற்கு மட்டுமல்ல, அவருக்காய்ப் பாடுபடவும்" நாம் அழைக்கப் பட்டுள்ளோம்! (பிலி 1:29).

# 10

# கிறிஸ்தவமே தானதர்மம்தான்!

கிறிஸ்தவமே தானதர்மம்தான்!

இதுபோன்றதொரு கூற்றைப் பதினைந்து ஆண்டுகட்கு முன்னர் நான் கேட்டிருந்தால் இது ஒரு துர்வுபதேசமென்று கடுமையாய் எதிர்த்திருப்பேன். ஆனால் அடுத்தடுத்து எனது கண்களில் கடவுளின் தொடுதலைப் பெற்று வருவதால் இக்கூற்று முழுக்க முழுக்க வேதத்தின்படியானதே என உணரத் துவங்கியுள்ளேன். என்னைத் தவறாய்ப் புரிந்துகொள்ளவேண்டாம். தானதர்மமே கிறிஸ்தவம் என்று நான் சொல்லவில்லை; கிறிஸ்தவமே தானதர்மம் என்கிறேன்.

தனது நிருபத்தில் அப்போஸ்தலன் யோவான் எழுதியதின் அடிப் படையில் (1 யோ 4:7-21), ஜெரமி டெய்லர் எனும் பக்தன், "கடவுள்தாமே அன்பாயிருக்கிறார்; எனவே நமக்குள் குடிகொண்டிருக்கும் தானதர்ம உணர்வு ஒவ்வொன்றும் தெய்வீக சுபாவத்தில் நமது பங்கேற்பாகும்" என்றார். அதே பாணியில் லேட்டிமர் என்ற வேதப் பண்டிதர், "கிறிஸ்துவின் இதயத் துடிப்பே தானதர்மம்தான்" என்றார். புனிதமான பக்திக்கு அப் போஸ்தலன் யாக்கோபு தரும் வரையறை இதோ: "அனாதைகளும் விதவைகளும் அனுபவிக்கும் துன்பத்தில் அவர்களைக் கவனித்தலும், உலகத்தால் கறைபடாதபடி தன்னைக் காத்துக்கொள்ளுதலும்" (யாக்



1:27). மட்டுமல்ல, தானதர்மச் செயல்களில்லாத விசுவாசம் செத்தது என்றும் அவன் வாதாடினான் (யாக் 2:14-20). தமது மக்களிடம் ஆண்டவர் அடிப்படையாக எதிர்பார்ப்பது "இரக்கம் கொள்வதில் நாட்டமே" என்று பின்வாங்கிப்போன இஸ்ரவேல் மக்களுக்குத் தீர்க்கன் மீகா நினைப் பூட்டினான் (மீகா 6:8). விசுவாசம், நம்பிக்கை, அன்பு ஆகிய மூன்று பிரதான குணநலன்களில் அன்பே பெரியதாம்! (1 கொரி 13:13).

இன்றைய சராசரிக் கிறிஸ்தவன் எவனுக்கும் ஆன்மீகப் பயிற்சிகளைக் குறித்துப் போதுமானதிற்கும் மேல் போதனை கிடைக்கிறது. ஆனால் அவனது சமூகக் கடமைகளைக் குறித்து அவன் சவால் பெறுவதில்லை. ஆன்மீகப் பயிற்சிகளும் சமூகக் கடமைகளும் சரிசமமான முக்கியத்துவம் வாய்ந்தவை. கடவுளை முழு இருதயத்தோடு நேசிக்கவேண்டுமென்ற முதலும் பெரிதுமான கட்டளையைப் போலவே நமது அயலகத்தாரை நேசிக்கவேண்டுமென்ற கட்டளையும் முக்கியமானது (மத் 22:37-39). நமக்கு அயலான் யார் என்பதை விளக்க இயேசு நல்ல சமாரியன் கதையைச் சொன்னார் (லூக் 10:29-37). நமது அயலானை நேசிக்கவேண்டுமென்பது "இரண்டாம்" கட்டளையாய்ச் சொல்லப்பட்டிருகிறதென்பதால் அது முக்கியத்துவத்தில் "இரண்டாந்தரமானதாய்" ஆகிவிடாது. திருச்சட்டம் மற்றும் தீர்க்கதரிசனம் முழுமையும் இவ்விரு கட்டளைகளுக்குள்ளேயே அடங்கியிருக்கின்றனவென்று இயேசு கூறியபோது, ஒன்றில்லாது அடுத்த தில்லை என்றும் ஒன்றைப் புறக்கணித்தால் நாம் சமநிலை இழந்து விடுவோம் என்றும் நாம் புரிந்துகொள்ளவேண்டுமென்றே அவர் எதிர்பார்த்தார் (மத் 22:40). நாணயத்தின் மறுபக்கத்தைப் பார்க்கத் தவறுவதே கிறிஸ்தவத்தின் முதல் வலிமைக் குறைவு.

கிறிஸ்தவ வாழ்வு மற்றும் பணியின் அடிப்படையான ஏழு ஆன்மீகப் பயிற்சிகளைத் தானதர்மத்தோடு அவை எப்படிச் சம்பந்தப்பட்டவை என ஆராய்ந்து படிப்போம்.

### 1. மனந்திரும்புதலும் தானதர்மமும்

மனந்திரும்புதல்தான் கிறிஸ்துவின் மூலவுபதேசங்களில் முதலான தாகையால் அதில் துவங்குகிறோம் (எபி 6:1). திருமுழுக்கினன் யோவானை மனந்திரும்புதல் பிரசங்கியாகப் புதிய ஏற்பாட்டின் ஆரம்பப் பக்கங்கள் அறிமுகப்படுத்துகின்றன. மனந்திரும்புதலுக்கேற்ற கனிகளைக் கொடுங்கள்" (அதாவது, மனம் மாறியவர்கள் என்பதை அதற்கேற்ற செயல்களால் காட்டுங்கள்) என அவன் திரள்களுக்குமுன் முழங்கியபோது, மக்கள் அவனைப் பார்த்து, "அப்படியானால் நாங்கள் என்ன செய்ய

வேண்டும்?'' என்று வினவினர். அவர்களை உலுக்கிய அவனது உடனடிப் பதில்: ''இரண்டு ஆடைகளை உடையவன் இல்லாதவனுக்குக் கொடுக் கட்டும்; ஆகாரம் உடையவனும் அப்படியே செய்யட்டும்!'' (லூக் 3:8-11). ஒப்புக்கொடுத்தலுக்கான அழைப்பிற்கு முன்வருபவர்களுக்கு இன்றையச் சுவிசேஷகர் எவரும் இப்படிப் பதில் கொடுப்பாரா? உடையில்லாதோரை உடுத்துவிக்கவும் உணவில்லாதோருக்கு உணவளிக்கவும் நமது சுவிசேஷ செய்திகளில் அழைப்பே கிடையாது. மனந்திரும்புதலென்றாலே சினிமா, சிகரெட், குடி இப்படிப்பட்டவைகளை விட்டுவிடுவதென்றே மக்கள் புரிந்திருக்கிறார்கள். தற்பரிசோதனைக் கேள்விப்பட்டியல்களிலும் தான தர்மத்தைப்பற்றிப் பேச்சில்லை. செய்யத் தகாதவைகள் எனும் பாவங்களை அளவுக்குமீறிக் கண்டனம்பண்ணி, செய்யத் தவறியவைகள் எனும் பாவங்களை அறவே கவனியாது விட்டுவிட்டோம். ஆனால் ஆங்கிலிக்கன் திருச்சபையின் ஜெபப் புத்தகத்திலுள்ள பொதுவான பாவ அறிக்கையில் செய்யத் தவறியவைகளெனும் பாவங்களே முதலாவது குறிப்பிடப்பட் டுள்ளன: ''செய்யத் தக்கவைகளைச் செய்யாமல், செய்யத் தகாதவை களையே செய்து வந்தோம்.''

யுகங்களின் அடிப்படையில் யோவான் ஸ்நானனின் உபதேசம் நமக்குரியதல்லவென்று அதைத் தள்ளிவிட முடியாது. ''யோவான் வரைக்கும்'' பழைய உடன்படிக்கையின் சத்தம் ஒலித்தது; புதிய உடன் படிக்கை கிறிஸ்துவின் மரணத்திற்குப்பின் அமுலுக்கு வந்தது (மத் 11:13; 26:28). எனவே யோவான் இரு உடன்படிக்கைகளுக்கும் ஓர் இணைப்பு போல் இரு உடன்படிக்கைகளுக்கும் இடைக்காலத் தீர்க்கதரிசியாய்ச் செயல்பட்டான். தானதர்மத்திற்கான அழைப்பை மனந்திரும்புதலின் செய்தியிலிருந்து எக்காலத்திலும் பிரிக்கமுடியாதென்பதற்கு இதோ சில எடுத்துக்காட்டுகள்—

யோபுவைப் போல நீதிமான் மண்ணுலகில் ஒருவனுமில்லையெனக் கடவுள் அவனைக்குறித்துச் சாட்சியிட்டார் (யோபு 1:8). தனது வாழ்வில் நீதி நெறியைச் செயலாற்றிய விதத்தை அவன் இவ்விதம் விளக்குகிறான்: ''நீதியை அணிந்தேன்; அது என் ஆடையாயிற்று; நியாயம் எனக்கு மேலாடையும் பாகையும் ஆயிற்று... கதறிய ஏழையையும், அனாதைப் பிள்ளையையும், உதவியற்றவனையும் காப்பாற்றினேன்... விதவையின் உள்ளத்தைக் களிப்பால் பாடச் செய்தேன்... நான் குருடனுக்குக் கண்ணும் சப்பாணிக்குக் காலுமாயிருந்தேன். ஏழைகளுக்கு நான் தந்தையாக இருந்தேன்; அறிமுகமற்றோரின் வழக்குகளுக்காக வாதிட்டேன். கொடியவரின் பற்களை உடைத்தேன்; அவரின் பற்களுக்கு இரையான வரை விடுவித்தேன்'' (யோபு 29:12-17).



மன்னன் நேபுகாத்நேச்சாருக்கு வரவிருந்த அழிவைக் குறித்த சொப்பனத்தை அவனுக்கு விளக்கிச் சொன்ன பின்னர் தானியேல் அவனைப் பார்த்து, ''அரசரே, நான் சொல்லும் ஆலோசனையை நீர் ஏற்றுக்கொண்டு நீதியைச் செய்து உமது பாவங்களையும், ஒடுக்கப் பட்டோருக்கு இரக்கம் காட்டி உமது அக்கிரமங்களையும் போக்கிக் கொள்ளும்'' என்றான் (தானி 4:27). மனந்திரும்புதலின் முக்கிய அம்சமாகத் தானதர்மத்தைத் தீர்க்கதரிசி மன்னனுக்குச் சுட்டிக்காட்டியது ஆச்சரிய மாயில்லையா? அரசனின் வாழ்க்கைப் பாணியின் அடிப்படைக் கோளாறைத் தீர்க்கதரிசி தீர்க்கமாய்த் தெளிவுபடுத்தினான்.

வியாதி என்னவென்று கண்டுபிடிப்பதே மருத்துவப் பணியில் முதற் படியாகும். மருத்துவனான லூக்கா தனது தொழிலறிவுக்கேற்ப இரு அதிகாரிகளின் வாழ்க்கையின் அவல நிலைக்கு வேரான காரணத்தைத் தனது சுவிசேஷத்தில் அழகாய் எடுத்துரைக்கிறான். ஒருவன் செல்வம் படைத்திருந்த ஓர் இளம் வழக்கறிஞன். தனது சிறுவயது முதல் திருச்சட்டங்கள் யாவற்றையும் தான் கடைப்பிடித்துவந்ததாக அவன் பெருமையடித்துக் கொண்டபோது, இயேசு அவனைப் பார்த்து, ''இன்னும் உன்னிடம் ஒரு குறையுண்டு; உனக்குள்ள யாவற்றையும் விற்றுத் தரித்திரருக்குக் கொடு... பின்பு என்னைப் பின்பற்றி வா'' என்றார் (லூக் 18:18-22). அவன் ''மிகவும்'' துக்கமடைந்தான்; ஏனெனில் அவன் ''மிகுந்த'' செல்வம் உடையவனாயிருந்தான்! (வச 23). அடுத்த அத்தி யாயத்திலேயே சகேயுவை லூக்கா அறிமுகப்படுத்துகிறான். ''ஆண்ட வரே, என் உடைமைகளில் பாதியை ஏழைகளுக்குக் கொடுத்துவிடு கிறேன்'' என்று அவன் இயேசுவிடம் சொன்னபோதுதான் அவர் அவனிடம், ''இன்று இந்த வீட்டிற்கு இரட்சிப்பு வந்தது'' என்று சொல்லி அவனை ஆசீர்வதித்தார் (லூக் 19:8,9).

## 2. ஜெபமும் தானதர்மமும்

ஜெபங்கள் பதிலளிக்கப்படாததற்குக் காரணங்களைக் கூறும்போது ஏசாயா 1:15ஐக் குறிப்பிட நாம் தவறுவதில்லை. ''நீங்கள் உங்கள் கைகளை விரித்தாலும், என் கண்களை உங்களைவிட்டு மறைக்கிறேன்; நீங்கள் மிகுதியாய் ஜெபம்பண்ணினாலும் கேளேன்; உங்கள் கைகள் இரத்தக் கறையால் நிறைந்திருக்கின்றன.'' இதையடுத்து, நமது பாவங்கள் கடுஞ்சிவப்பாயிருந்தாலும் கடவுள் அவற்றை மன்னிக்க அருளியுள்ள வாக்குத்தத்தம் சொல்லப்பட்டுள்ள 18ஆம் வசனத்திற்குச் சென்று விடுவோம். 15ஆம் வசனத்தை வாசித்துவிட்டு கடவுளின் முகத்தை மறைக்கும் நமது பாவங்கள் பட்டியலிடப்பட்டுள்ள 16ஆம் 17ஆம்

வசனங்களைக் கவனியாது 18ஆம் வசனத்திற்கு தாவிவிடுவதே நமது தவறு. தமது மக்களின் துர்ச்செயல்களைச் சுட்டிக்காட்டிய பின்னர் கடவுள் அவர்களை, "நன்மை செய்யப் படியுங்கள்; நியாயத்தைத் தேடுங்கள்; ஒடுக்கப்பட்டவனை ஆதரித்து, திக்கற்ற பிள்ளையின் நியாயத்தையும் விதவையின் வழக்கையும் விசாரியுங்கள்" என்று கூவியழைக்கிறார். ஜெபக்கூட்டங்களும் ஜெப முகாம்களும் பெருகிவருவதைக் குறித்து நாம் மகிழ்ந்தாலும், தான தர்மத்தைக் குறித்துப் பேச்சே இல்லையே என்பது நம்மை மனமடிவாக்கவேண்டும். "மிகுதியாய்" ஜெபம்பண்ணி னாலும் "கொஞ்சமாய்த்தான்" பதில் பெறுகிறோம். ஏழைகளுக்காய்ப் போராடி அவர்களுக்கு நீதி நியாயம் கிடைக்க உழைப்பதே இந்நிலைக்குப் பரிகாரமாகலாம். வினோதமாய்த் தெரிகிறதோ? அதுதான் வேதம்!

மலைப்பிரசங்கத்திற்கு நிகரில்லை. அதின் சாராம்சம் மட்டுமல்ல, பிரசங்க மன்னராகிய நமதாண்டவர் சத்தியங்களைக் குறிப்பிட்டுள்ள வரிசைக் கிரமமும் நமது கவனத்திற்குரியது. ஆன்மீகப் பயிற்சிகளின் துர்ப்பிரயோகங்களைக் கண்டித்துக்கொண்டிருக்கையில் கர்த்தர் இயேசு முதலாவது தானதர்மத்தையும் அதற்குப் பின்னரே ஜெபத்தையும் குறித்துப் பேசுகிறார் (மத் 6:1-4,5-8). இதற்குக் காரணமில்லாமலில்லை. ஜெபமென்பது விண்ணகத் தந்தையை நோக்கிய பாச மொழியாகுமானால், தானதர்மமென்பது மண்ணுலகத் தரித்திரரை நோக்கிய பரிவு மொழி யாகும். "கண்கண்ட சகோதரனிடம் அன்பு செலுத்தாதவன் கண்காணாத கடவுளிடம் எப்படி அன்பு செலுத்துவான்?" (1 யோ 4:20). வேதம் கூறும் கடவுள் ஏழைகளின் தேவன் (நீதி 14:31). இறைவனின் இதயத்தை உடைப்பது நமது இதயத்தையும் உடைக்காவிடில், அவரது இதய பாரத்தை நாம் ஜெபத்தில் பகிர்ந்துகொள்ளமுடியாது.

விதவைகளின் வீடுகளை விழுங்கி நீண்ட ஜெபம் பண்ணுவதாய் நடித்த அக்காலத்துப் பரிசேயரை இயேசு கடுமையாய்க் கண்டனம்பண்ணினார் (மத் 23:14). இன்றும் நிலைமை அதுதான். அநேகமாக காணிக்கையிலேயே கவனங்கொண்டு அநேக விதவைகளுக்காகவும் உதவியற்றோருக் காகவும் அநேக ஜெபங்களைப் பண்ணும் பிரசங்கிமார் அநேகர்.

தானதர்மமானது நமது ஜெபங்களை எவ்விதம் கடவுளுக்குமுன் சுகந்த வாசனையாக்குகிறதென்பதைக் கொர்நெலியுவின் சரிதை அழகாய்ச் சித்தரிக்கிறது. அவன் புறவினத்தாரிலேயே முதல் விசுவாசி என்பது மட்டுமல்ல, அப்போஸ்தலர்கள் அவனுக்காக ஜெபிக்கவோ அவன்மீது கைகளை வைப்பதற்கோ முன்னர் பரிசுத்த ஆவியைப் பெற்றவனும் கூட (அப் 10:44). அவனைக் குறித்து அவன் "மக்களுக்கு மிகுந்த தருமங்



களைச் செய்து, எப்பொழுதும் தேவனை நோக்கி ஜெபம்பண்ணிக்கொண்டி ருந்தான்" என்று சொல்லப்பட்டிருக்கிறது (வச 2). விண்ணுலகிலிருந்து அவனுக்குத் தூதன் கொண்டுவந்த செய்தியாவது: "உன் ஜெபங்களும் உன் தருமங்களும் கடவுளுக்கு நினைப்பூட்டுதலாக அவர் சந்நிதியில் வந்தெட்டியிருக்கின்றன" (வச 4).

ஓர் இக்கட்டான சூழல் உருவாகி, உங்கள் ஜெபங்கள் கேட்கப்படாத நிலையிருக்குமானால், உடனே ஒவ்வொரு ஊழியராய்த் தரிசனம் காணச் செல்லுவதை நிறுத்தி, நீங்கள் புறப்பட்டுப்போய் ஓர் ஏழை, ஒரு விதவை, ஓர் அனாதை, அல்லது ஒதுக்கப்பட்டுக் கைவிடப்பட்டவர் ஒருவருக்கு உதவிசெய்யுங்கள். நீங்கள் எதிர்பார்க்கிறதற்கும் முன்னதாக உங்கள் ஜெபங்களுக்குப் பரத்திலிருந்து பதில் வந்துவிடும்!

### 3. துதியும் தானதர்மமும்

தொழுகைதான் கிறிஸ்தவப் பணிவிடைகளிலெல்லாம் மகுடமானது. எனவேதான் விண்ணகத்தில் இடைவிடாது நடப்பது துதியும் தொழுகை யுமாகும் (வெளி 4:8-11). ஆனால் கடவுளின் மக்கள் மண்ணுலகிற்கு எப்பயனுமில்லாத அளவு விண்ணுலகச் சிந்தையிலேயே பறந்துசென்று கொண்டிருக்கக்கூடிய அபாய நிலை குறித்து அவர்களை எபிரெய நிருப ஆக்கியோன் எச்சரித்தான். கரிசனையோடு அவன் எழுதியதைக் கவனியுங்கள்: "ஸ்தோத்திர பலியை இயேசு மூலம் எப்போதும் கடவு ளுக்குச் செலுத்துவோமாக. **அன்றியும்** நன்மை செய்யவும், தானதர்மம் பண்ணவும் மறவாதிருங்கள்; இவ்வகைப் பலிகள்மேல் கடவுள் பிரியமாயிருக்கிறார்" (எபி 13:15,16).

ஆலயத்தின் நான்கு சுவர்களுக்குள்ளிருந்து ஆரவாரமாய்த் தொழுது கொண்டிருக்கும் அதே வேளையில் வெளியே வருந்தி மடிந்துகொண் டிருக்கும் ஏழை எளியவரின் கதறல்களைக் கவனியாதிருக்க ஏராளம் வாய்ப்புண்டு. "கடவுளைப்" பிரியப்படுத்த அல்ல, "நம்மையே" பரவசப் படுத்த நவீன கால ஆராதனைகளில் மறைந்திருக்கும் ஆபத்து நிறைய வுண்டு. நாம் உற்சாகமடைவதைவிட கடவுளின் இருதயத்தை மகிழ் விப்பதே ஆராதிப்பதில் நமது நோக்கமாயிருந்தால் சமுதாயத்திலுள்ள ஏழை எளியவருக்கான அவரது அன்பில் பங்கேற்பது இயல்பான விளைவாகிறது.

தொழுகையென்பது ஒரு பரவச அனுபவந்தான். துதியெனும் தைலத் தின் அபிஷேகம் நம்மை உன்னதங்களுக்கு எடுத்துச்செல்லும். அகிலவுலகப் பிரசித்திபெற்ற சுவிசேஷகர் ஒருவரிடம் அவரது சபைப் பின்னணி

எதுவென்று நான் கேட்டபோது அவர், “நான் பெந்தெகொஸ்தேகாரன்தான், ஆனால் கால்கள் இரண்டும் தரையில்தான்” எனப் பதிலளித்தார். பரவச மூட்டும் ஆன்மீக அனுபவங்கள் நம்மை நடைமுறைக் காரியங்களிலிருந்து துண்டித்துவிடக்கூடாது என்பதே இந்த முதிர்ந்த தேவ மனிதன் என்னிதயத்தில் பதிக்க விரும்பியதாகும். அவர் கொடுத்த நகைச்சுவையான பதிலை நினைத்துச் சிரித்துக்கொண்டே வீடு திரும்பியபோது திடீரென ஏசாயா 66:1 என் நினைவுக்கு வந்தது. கடவுள் விண்ணுலகச் சிங்கா சனத்தில் அமர்ந்திருந்தாலும் அவரது பாதங்கள் மண்ணுலகில்தான் இருக்கின்றனவாம்! ஹா... ஹா!

புதிய இசைக்கருவி ஒன்று வாங்குவதற்கோ ஒலி பெருக்கி அமைப்பை நவீனமாக்கவோ பணம் செலவழிப்பது சரிதான். ஆனால் ஏழைகளை ஆசீர்வதித்து அவர்களது “உள்ளத்தைக் களிப்பால் பாடச் செய்வதற்காய்” நமது சபை பட்ஜெட்டில் தாராளமாய்ப் பணம் ஒதுக்க மறந்துவிடக்கூடாது (யோபு 29:13).

சொல்லப்போனால், நாம் ஏழைகளை ஆதரிக்கும்போது கர்த்தரையே ஆராதிக்கிறோம்! எருசலேமிலுள்ள ஏழை விசுவாசிகளுக்காய்ப் பணம் சேகரிப்பதைக் குறித்து கொரிந்து சபையினருக்கு எழுதும்போது அப்போஸ் தலன் பவுல் இச்சத்தியத்தை வெளிப்படுத்துகிறான்: “இந்தத் தர்ம சகாய மாகிய பணிவிடை பரிசுத்தவான்களுடைய குறைவுகளை நீக்குகிறது மல்லாமல், அநேகர் தேவனை ஸ்தோத்திரிப்பதினால் சம்பூரண பலனுள்ள தாயும் இருக்கும்... தங்களுக்கும் மற்ற அனைவருக்கும் நீங்கள் உதாரத்துவமாய்த் தர்மஞ்செய்கிறதினால் அவர்கள் தேவனை மகிமைப் படுத்துகிறார்கள்” (2 கொரி 9:11-13). “தேவன் அருளிய சொல்லிமுடியாத ஈவுக்காக அவருக்கு ஸ்தோத்திரம்” எனும் உச்சத் தொனியில் அப்போஸ் தலன் இவ்வத்தியாயத்தை முடிக்கிறான் (வச 15). வேறு வார்த்தைகளில் சொன்னால், நாம் நம்மால் முடிந்த உச்ச அளவில் எளியவருக்குக் கொடுக்கும்போதும், நாம் தேவனிடமிருந்து பெற்றுக்கொண்டவை களோடு அதை ஒப்பிட்டால் அது துச்சமே!

பிரிய வாசக நண்பரே, வேதத்திலில்லாத ஒன்றை ஏதோ கற்பனை செய்து நான் ஒரு புதிய உபதேசத்தைக் கண்டுபிடிக்கவில்லையென்பதைத் தயவுசெய்து மனதிற்கொள்ளுங்கள். மாறாக, பரிசுத்த வேதத்தில் மறைந்து கிடக்கும், அதே வேளையில் வசதியாக மறக்கப்பட்டதொரு, சத்தியத்தையே தோண்டியெடுக்கிறேன். அப்பப்பா, அப்போஸ்தலர் 2:4இல் மட்டும் எத்தனை பிரசங்கங்கள்! (“அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வாக்கின்படியே



வெவ்வேறு மொழிகளிலே பேசத் தொடங்கினார்கள்.”) அப்போஸ்தலர் 2:44ஐப் பற்றியென்ன? (“விசுவாசிகளெல்லாரும் ஒருமித்திருந்து எல்லாவற்றையும் பொதுவாய் வைத்து அனுபவித்தார்கள்.”) ஆயிரம் கிறிஸ்தவர்கள் ஓர் அரங்கத்தில் கூடிவந்து அன்னிய பாஷைகளில் ஆர்ப்பரிக்கட்டும். சுற்றியுள்ள உலகம் இது ஒரு வேடிக்கையென்று கவனியாது விட்டுவிடும். ஆனால் அவர்களில் நூறுபேர் எளியதொரு வாழ்க்கை முறையை மேற்கொண்டு தங்கள் உடைமைகளை இல்லா தாரோடு பகிர்ந்துகொள்ளட்டும் — இவ்வித அசாதாரண அன்பின் ஆழமான பாதிப்பைச் சமுதாயம் கண்டும் காணாமலும் இருக்கமுடியாது. தானதர்மச் செயல்களுக்கு எந்த மொழியாக்கமும் தேவையில்லை! அன்பின் ஆவியானவரின் அபிஷேகத்திற்கு அப்போஸ்தலர் 2:4ஐ விட அப்போஸ்தலர் 2:44 மறுக்கமுடியா அடையாளமாகும்!

## 4. காணிக்கையும் தானதர்மமும்

தசமபாகம் என்பது புதிய ஏற்பாட்டுக் கிறிஸ்தவருக்கு ஒரு கட்டாயப் பிரமாணமில்லையெனினும், அது ஒழுங்கும் பக்தியுமானதொரு ஆன்மீகப் பழக்கமாகும். ஞாயிற்றுக் கிழமையை ஓய்வு நாளென்றல்ல, கர்த்த ருடைய நாளென்று அழைப்பதுபோல், கர்த்தருக்கென்று எடுத்துவைக்கும் பணத்தைத் “தசமபாகம்” என்றல்ல, கர்த்தரின் பணம் என்றே அழைக்க விரும்புகிறேன். இப்பொழுது கேள்வியென்னவென்றால், குடும்பத்திலோ சபையிலோ கர்த்தருக்கென்று நாம் எடுத்துவைக்கும் தொகையில் எவ் வளவு ஏழைகளுக்குச் செல்லவேண்டும் என்பதே. எளியவருக்காய்ச் செலவழிக்கும் எதுவும் எவ்விதத்திலும் “ஆன்மீகக்” காரியங்களுக்காய்ச் செலவழிப்பதைவிடக் குறைந்த மதிப்புள்ளதல்ல. ஏழைகளுக்கு இரங்குவதே கர்த்தருக்குக் கொடுக்கும் கடன்தானே! (நீதி 19:17).

இங்குதான் இயேசுவின் காலத்துப் பரிசேயரும் வேதபாரகரும் தவறினர். “மார்க்க” சம்பந்தமான காரியங்களுக்குத் தசமபாகம் கொடுப்பதில் கண்ணும்கருத்துமாயிருந்த அவர்கள் எளியோரையோ மறந்துவிட்டனர். இவர்கள்மீது “ஐயோ” எனக் கூறிய ஆண்டவர் ஏழை களுக்கு “நியாயமும் இரக்கமும்” செய்து “நம்பகமாய்” நடந்துகொள்வது சட்டமாய்த் தசமபாகம் கொடுப்பதைவிட “விசேஷித்தது” எனக் குறிப்பிட்டு அவர்களை அதிரச் செய்தார் (மத் 23:23). இப்போதனையைச் செரிப்பது நமக்குக் கடினமாயிருக்கிறதோ? அப்படியானால் நாம்தான் இன்றையப் பரிசேயர்!

சபைக்குத் தசமபாகம் கொடுப்பதை உபதேசிக்க மல்கியா 3:10ஐ மேற்கொள் காட்டும் நாம் நிலமற்ற லேவியரையும், உதவியற்ற அந்நி

யரையும், அனாதைகளையும், விதவைகளையும் பராமரிக்கத் தங்கள் விளைச்சலின் (வியாபாரம் அல்லது வேலை) தசமபாகத்தைக் கொடுக்கும்படிக் கடவுள் கட்டளையிட்டிருக்கிற உபாகமம் 14:28,29ஐயும் மறந்துவிடக்கூடாது. தமது சுற்றுப்பயண ஊழியத்திற்காக இயேசுவுக்குப் பணத்தேவைகள் இருந்திருந்தாலும், அவரும் அவரது சீடரும் ஏழை களுக்கு எடுத்துக்கொடுப்பதற்காக ஒரு தனிப் பணப்பை வைத்திருந்தனர் (யோ 12:5,6; 13:29).

ஏழைகளுக்கு எவ்வளவுதான் கொடுக்கவேண்டுமென்று இன்னும் ஒரு கேள்வி எழலாம். திருமுழுக்கினன் யோவானையும் சகேயுவையும் உயிரோடெழுப்பிக் கேட்டால் “பாதி” என்று சொல்லிவிடுவார்கள்! (லூக் 3:11; 19:8). அப்போஸ்தலன் பவுல் எளியவருக்குப் “பெருக... உற்சாகமாய்... உதாரத்துவமாய்... தாராளமாய்க்” கொடுக்கவேண்டும் என்பான் (2 கொரி 9:6,7,13; 1 தீமோ 6:18). ஏறத்தாழ எல்லாச் சபைகளுமே காணிக்கை உறைகள் மீது “உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரிய மாயிருக்கிறார்” என்ற வசனத்தை அச்சடிக்கின்றன. ஆனால் இவ்வசனம் சொல்லப்பட்ட சந்தர்ப்பம் எளியவருக்காய்ப் பணம் திரட்டுவதையடுத்தது என நாமறிவோமோ? (2 கொரி 9).

எளியவருக்கு நமது இரக்கமின்மையைக் கடவுள் எவ்வளவு கோபத்துடன் பார்க்கிறாரென்பது அனனியா-சப்பீராள் தம்பதியரின் சடுதி மரணத்திலிருந்து தெளிவாகிறது (அப் 5:5,10). அப்போஸ்தலர் பாதத்தில் அவர்கள் வைக்கப்போகும் பணம் யாவும் ஏழை எளியவருக்கே சென்று விடுமென்று அவர்கள் நன்கறிந்திருந்தனர் (அப் 4:34,35). ஏழைகள் உயர்த்தப்பட்டு, சபையில் எல்லாருக்கும் ஒரே அந்தஸ்து கிடைத்து, தங்களுக்கு இனிமேல் ஆலயத்தில் சிறப்பாக தனி நாற்காலிகள் கிடைக்காது என்ற சூழ்நிலையையெல்லாம் அவர்களால் கற்பனை செய்தும் பார்க்க முடியவில்லை போலும்! (யாக் 2:2-4). ஏழைகளுக்குச் சாதகமான யோவான் ஸ்நானனின் செய்தி கனியற்ற மரங்கள் வெட்டப்பட்டு எரிக்கப்படுமென எச்சரித்திருந்தது (லூக் 3:9-11). அவ்விதமே, மண்ணுக்குப் பாரமாயிருந்த கனியற்ற மரங்களாகிய அனனியாவும் சப்பீராளும் வெட்டி வீழ்த்தப்பட்டனர்!

### 5. உபவாசமும் தானதர்மமும்

பழைய ஏற்பாட்டில் உபவாசத்தைக் குறித்த விரிவான பகுதி ஒன்று ஏசாயா 58இல் உண்டு. சர்வவல்லவராகிய ஆண்டவரிடமிருந்து துருவி ஆராயும் இரு கேள்விகள் இப்பகுதியிலுண்டு: “இதையா உபவாசம் என்று



சொல்லு வாய்?” “இது அல்லவோ எனக்கு உகந்த உபவாசம்?” (வச 5,6). அதாவது இப்பகுதியில் தேவன் தவறான முறையில் உபவாசிப் பதற்காய்த் தமது மக்களைக் கடிந்துகொண்டு தமக்குப் பிரியமாய் உபவாசிக்கக் கற்றுக்கொடுக்கிறார்.

தங்கள் ஜெப தியான வாழ்வில் மக்கள் அதிக உன்னிப்பாயிருந்தனர். தினமும் ஜெபித்தனர், திருவசனத்தை மகிழ்வுடன் தியானித்தனர், கடவு ளின் திருச்சட்டங்களின்படி நடக்க முழு முயற்சியெடுத்தனர் (ஏசா 58:2). தங்கள் உபவாச நாட்களில் இரட்டுடுத்தி சாம்பலில் உட்கார்ந்தனர். அவர் கள் சாப்பிடவும் குடிக்கவுமில்லையென்பது தெளிவு. அதனால் முகம் வாடியும் காணப்பட்டனர் (வச 5). தங்கள் ஆத்துமாவை ஒடுக்கும் பயிற்சி யாகவே உபவாசத்தை அவர்கள் புரிந்திருந்தனர் (வச 3,5). அவர்கள் செய்தவைகளில் தவறேதுமில்லை; ஆனால் யாவும் தன்னலத்திற்காகவே செய்யப்பட்டன. கடவுளின் ஆமோதிப்பைவிட மக்களின் பாராட்டே அவர் களது நாட்டம் (வச 3,4). இன்னும் மோசமான காரியம் என்னவென்றால், தங்களது உபவாச நாட்களில்கூட அவர்கள் தங்கள் கூலிக்காரர்களை வாட்டிவதைத்தனர் (வச 3,4).

தவறாய் உபவாசிப்பதைக் குறித்துத் தமது மக்களைக் கடிந்துகொண்ட ஆண்டவர் உபவாசம் எனும் பயிற்சி உள்ளடக்கவேண்டிய காரியங்களை வரிசைப்படுத்தினார்: 1. கொடுமைத் தளைகளை அவிழ்ப்பது; 2. நுகத்தின் பிணையல்களை அறுப்பது; 3. ஒடுக்கப்பட்டோரை விடுதலை செய்து அனுப்புவது; 4. எவ்வகை நுகத்தையும் உடைப்பது; 5. பசித்தோருக்கு உணவைப் பகிர்ந்து கொடுப்பது; 6. தங்க இடமில்லா வறியோரை இல்லத்திற்கு அழைத்துவருவது; 7. உடையற்றோருக்கு உடுக்கக் கொடுப்பது (ஏசா 58:6,7). இவ்வேழு இரக்கச் செயல்களையும் “உன்(னைப் போன்ற) மாம்சமான வனுக்கு உன்னை ஒளிக்காமலிருப்பது” என்ற ஒரே வாக்கியத்தில் அடக்கலாம். அதாவது, நமது சக மனிதருக்குச் செய்ய வேண்டிய கருணைச் செயல்களை உள்ளடக்கும்போதுதான் நமது நோன்பு இறைவனுக்குமுன் அங்கீகாரம் பெறுகிறது. நமது விருப்பங்களையும் இன்பங்களையும் ஒதுக்கிவைத்து (அல்லது உபவாசித்து) அதினால் தியாகச் சிந்தையுடன் பாவப்பட்டோருக்கும் தேவைப்பட்டோருக்கும் உதவ நம்மை இயேசு அழைக்கிறார். ஏதோ ஓரிரு வேளை சாப்பிடாமல் இருந்துவிடுவது முழுமையான உபவாசமல்ல. அது உபவாசத்தின் ஓர் அம்சம்தான்.

உபவாசம் என்பது கிறிஸ்தவத்திற்கே உரியதென்றும் சொல்லமுடியாது. மற்ற மார்க்கங்களிலும் இப்பழக்கம் உண்டு. உடல் நலத்திற்காகவும் நோன்பு மேற்கொள்ளப்படுவதுண்டு. திருவசனத்தின்படியான உபவாசத்தின் தனிச்

சிறப்பு என்னவென்றால் அது வசதியற்றோரை உயர்த்தும் செயலோடு சம்பந்தப்பட்டுள்ளதுதான். மருத்துவ உதவி மற்றும் நிவாரணப் பணிகள் மூலம் கிறிஸ்தவ மிஷனரிகள் மக்களை ஏமாற்றி மதமாற்றம் செய்கின் றனரென்ற சில இந்துமத வெறியர்களின் குற்றச்சாட்டிற்குப் பதில் கொடுக்கும் வகையில் ஓர் இந்து மேதையே இவ்விதம் கேட்டிருக்கிறார்: “இந்துக் கோயில் பூசாரிகளே, நீங்களும் ஏன் கிரஹாம் ஸ்டெயின்ஸ் போன்று தொழுநோயாளிகளைத் தொட்டுச் சிகிச்சையளித்து, அல்லது அன்னை தெரசா போன்று குப்பைத் தொட்டிகளிலிருந்து வேண்டாத குழந்தைகளைத் தூக்கியெடுத்துப் பராமரித்து மக்களை மதமாற்றம் செய்யக் கூடாது?” ஆம், கிறிஸ்துவின் மனதுருக்கத்தை அதே சிந்தை யின்றி காட்ட முடியாது!

அற்புத சுகத்திற்காக உபவாசித்தலைக் குறித்துக் கேள்விப்பட்டிருக் கிறோம். ஆனால் *“சுகமடைய ஏழு படிகள்”* என்றொரு கைப்பிரதியிலோ பிரசங்கத்திலோ தானதர்மம் ஏழிலொரு படியாகக்கூடச் சொல்லப்பட வில்லையே! வேதமோ தானதர்மத்தின் நேரடி விளைவாக உடல் சுகத்தைப் பல இடங்களில் வாக்களித்துள்ளது. எளியவருக்கு உதவும்படி சுய வெறுப்புடன் உபவாசம் மேற்கொண்டால், “**அப்பொழுது** விடியற்கால வெளுப்பைப்போல உன் வெளிச்சம் எழும்பி, உன் சுகவாழ்வு சீக்கிரத்தில் துளிர்க்கும்” (ஏசா 58:8). சங்கீதக்காரன் தாவீதின் கூற்றும் இதுவே: “சிறுமைப்பட்டவன்மேல் சிந்தையுள்ளவன் பாக்கியவான்... படுக்கையில் வியாதியாய்க் கிடக்கிற அவனைக் கர்த்தர் தாங்குவார்; நோய் நீங்கிப் படுக்கையினின்று அவன் எழும்பும்படிச் செய்வார்” (சங் 41:1,3). மறக்கப்பட்ட சத்தியங்களைத் திருச்சபைக்குள் திரும்பக் கொண்டுவரத் தீர்க்கதரிசிகள் இங்குதான் நமக்குத் தேவை. நூற்றுக்கணக்கான பொது மருத்துவர்கள் கண்டுபிடிக்கத் தவறியவற்றைக் கண்டுபிடிக்கும் நிபுணர்களே இறைவனது தீர்க்கதரிசிகளாம்.

### 6. பிரசங்கிப்பதும் தானதர்மமும்

கர்த்தருடைய ஆவியானவர் தம்மீது வந்த பிரதான நோக்கத்தை இயேசு சாட்சியாக அறிவித்தார்: “தரித்திரருக்கு நற்செய்தியைப் பிரசங்கிக்கும்படி என்னை அபிஷேகம் பண்ணினார்... ஒடுக்கப்பட்டோரை விடுதலைசெய்து அனுப்பவும்... என்னை அனுப்பினார்” (லூக் 4:18). இயேசுவின் மேசியா ஊழியத்தின் முடிவான அடையாளம் “தரித்திரருக்குச் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுகிறது” என்பதே (லூக் 7:22).

துர்ப்பாக்கியமாக இவ்வசனங்களையும் நாம் எழுத்தின்படி எடுத்துக் கொள்ளாமல் இவைகளுக்கு ஆன்மீக அர்த்தம் கொடுத்துவிட்டோம்.



இங்கு எளிமை என்பது ஆவியில் எளிமையைக் குறிப்பிடவில்லை, அது பொருளாதார வறுமையையே சுட்டிக்காட்டுகிறது. “தரித்திரர்” என்றால் பரம ஏழைகள் எனப் பொருள். இயேசுவின் ஊழியம் கைவிடப்பட்டோரையும் தாழ்த்தப்பட்டோரையும் குறிவைத்தது. பரலோகத்தைத் தரித்திரர்கள் நிரப்புவார், துதியுங்கள்! (யாக் 2:5; 1 கொரி 1:27,28; மத் 19:23,24).

சுகமளிப்புக் கூட்டங்களுக்கான அழைப்பிதழ்களிலும் சுவரொட்டி களிலும் லூக்கா 7:22 அச்சிடப்பட்டிருக்கும்: “குருடர் காண்கிறார்கள், முடவர் நடக்கிறார்கள், குஷ்டரோகிகள் சுகமடைகிறார்கள், செவிடர் கேட்கிறார்கள்!” “மரித்தோர் எழுந்திருக்கிறார்கள்” என்பதை நாம் வசதியாக விட்டுவிடுவோம்; ஏனெனில் சடலங்களை ஜெபிப்பதற்காகக் கொண்டுவாருங்கள் என்று சொல்ல நமக்குத் துணிச்சல் கிடையாது. ஆனால், “தரித்திரருக்குச் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுகிறது” என்பதையும் விட்டதேனோ? நமது கூட்டங்களில் முன் வரிசை நாற்காலிகள் செல்வாக் குடையோராலேயே நிரப்பப்படவேண்டுமென்று விரும்புகிறோமோ? நண்பரே, கவனியுங்கள்! நமது சுகமளிப்புக் கூட்டங்களைப் பிச்சைக்காரர், தொழுநோயாளிகள், கைவிடப்பட்டோர் மற்றும் தள்ளப்பட்டோரால் நிரப்ப நாம் கற்கும்வரை எதிர்பார்க்கும் அளவு அற்புதங்கள் நடக்காது. அன் பில்லையேல் அற்புதமில்லை! உதவியற்றோர்மீதுள்ள மனதுருக்கத் தினாலேயே இயேசுவின் அற்புதங்களில் பெரும்பாலானவை நிகழ்ந்தன. எழுதப்பட்டுள்ளபடி இயேசுவின் முதல் சுகமளிப்பு அற்புதம் தெருவிலுள்ள தொழுநோயாளி ஒருவனுக்கும், திருச்சபையின் முதல் அற்புதம் ஒரு பிச்சைக்காரனுக்கும் செய்யப்பட்டன (மத் 8:1,2; அப் 3:2). இவையெல்லாம் காரணமில்லாதவையல்ல. தங்களது கூட்ட அழைப்பிதழ்களை ஆலய வாசல்களிலே வினியோகிக்காமல் தொழுநோய் மனைகள், பிச்சைக்காரர் குடியிருப்புகள், குருடர்-செவிடர்-ஊமையர் பள்ளிகள், ஊனமுற்றோர் மற்றும் மூளை வளர்ச்சி குன்றியோர் இல்லங்களிலும் சாலையோரவாசி களுக்கும் வினியோகிக்கும்படி சுகமளிப்பு ஊழியரை வருந்திக் கேட் கிறேன். இப்படிப்பட்ட அவதியுறுவோர் இருக்குமிடங்களுக்கே சென்று அன்னாருக்கு ஜெபித்து ஊழியம் செய்வது இன்னும் மேல். அசாதாரண மானதைச் செய்தால்தான் அசாதாரணமானதைக் காணலாம்.

பேதுருவும் யாக்கோபும் யோவானும் இயேசுவின் சீடர் கூட்டத்தில் உள்வட்டத்தினர். மற்ற சீடரைக்காட்டிலும் அவர்களுக்குத் தங்கள் ஆண்டவரின் மனது கூடுதல் புரிந்திருக்குமென்பது தெளிவு. அவர்கள் ஆதிச்சபையில் “தூண்களாகக்” கருதப்பட்டார்கள். பவுலையும் பர்ன பாவையும் யூதரல்லாதோருக்கு மிஷனரிகளாய் இத்தலைவர்கள் அனுப்பிவைத்தபோது சொன்னதெல்லாம், “தரித்திரரை நினைத்துக்

கொள்ளுங்கள்'' என்பதுதான். இதைக் கலாத்திய நாட்டுக் கிறிஸ்த வருக்குப் பவுல் எழுதுகையில், "அப்படிச் செய்யும்படி அதற்கு முன்னமே நானும் கருத்துள்ளவனாயிருந்தேன்'' எனக் குறிப்பிட்டான் (கலா 2:9.10). மேய்ப்பர்கள் அல்லது சுவிசேஷகர்கள் அல்லது மிஷனரிகளின் பிரதிஷ்டை ஆராதனைகளில் இவ்விதம் தரித்திரரை மறந்துவிடக்கூடாதென்ற குறிப்பான ஆலோசனை சொல்லப்படுகிறதாவென்பது எனக்குச் சந்தேகம். நமது ஊழியத் திட்டங்களின் முக்கியத்துவத்தைத் திரும்பச் சீராக வரிசைப்படுத்துவோம். ஊழல் நிறைந்த அரசியல்வாதிகள் மற்றும் வன இலாகா அதிகாரிகளின் ஏமாற்றங்களுக்குத் தப்பும்படி அறியாத ஆதிவாசிகளின் கண்கள் திறக்கப்படவேண்டும். திருட்டு வியாபாரிகள் மற்றும் இரக்கமற்ற ஜமீன்தார்களின் கொத்தடிமைகளாக அவதியுறும் வறியவர் இவ்வித நுகத்தடிகளிலிருந்து அவிழ்க்கப்படவேண்டும். தீண்டப்படாதோரெனும் வகுப்பினர் தாங்களும் கடவுளால் உண்டாக்கப்பட்ட மனிதர்தான் எனும் அறிவிற்குள்ளும் மதிப்பிற்குள்ளும் கொண்டுவரப்பட வேண்டும். நற்செய்தியறிவிப்பானது இவ்விதத் துணிச்சலான இரக்கப் பணிகளை உள்ளடக்க வேண்டும். இல்லையேல் நுகம் முறிக்கும் அபிஷேகம் நமக்கெதற்கு ? (லூக் 4:18,19; ஏசா 10:27இ).

"சமூக நலக் கண்ணோட்டம் இல்லாத ஆன்மீகச் சுவிசேஷம் உட லில்லாத உயிராகும்; ஆன்மீகச் சத்து இல்லாத சமூகநல சுவிசேஷம் உயிரற்ற உடலாகும். ஒன்று அலைந்து திரியும் ஆவி; அடுத்தது வெறும் சடலம்'' என்றார் பண்டிதர் E. ஸ்டான்லி ஜோன்ஸ். கிறிஸ்தவமானது முக்கியமாக மூன்று நதிகளாய் ஓடுகிறது: பெந்தெகொஸ்தே சபை சாராத விசுவாசிகள், புராதன திருச்சபைக் கிறிஸ்தவர்கள், பெந்தெகொஸ்தே சபையினர். முதல் வகுப்பினராகிய பெந்தெகொஸ்தே சபை சாரா விசுவாசிகள் "வசனத்தில்'' திடமானவர்கள். வேத வியாக்கியானங்கள், ஆராய்ச்சி வேதங்கள் மற்றும் வேதாகம ஆய்வுகளில் ஏறத்தாழ 75 சதவீதம் இவ்வகுப்பிலிருந்தே வெளிவருகிறது. புராதனச் சபையினர் பொதுவாகத் தானதர்மச் "செயல்களில்'' வல்லவர்கள். அனாதை இல்லங்கள், கல்விக் கூடங்கள், மருத்துவ மனைகள், நிவாரணப்பணித் திட்டங்கள் போன்றவை இவர்களது சாதனைகளுக்கு எடுத்துக்காட்டுகள். மூன்றாம் பிரிவாகிய பெந்தெகொஸ்தே சபையினர் இயல்பாகவே "அற்புத அடையாளங் களை'' வற்புறுத்துவர். பவுலைக் கேட்டால் "பூரண சுவிசேஷம்'' என்றால் "வார்த்தை... செய்கை... அற்புத அடையாளங்கள்'' ஆகிய மூன்றும் பொருத்தமான விகிதத்தில் கலந்திருப்பதே என்பான் (ரோ 15:18,19). சபைப் பிரிவுகள் ஒன்றுக்கொன்று எவ்வளவாய்த் தேவை! ஒருவரது பலம் அடுத்தவரது பலமின்மையில் உதவும்.



## 7. இரண்டாம் வருகையும் தானதர்மமும்

Y2K எனும் பிரச்னை குறித்துக் கணிப்பொறியுலகம் வெகுவாய்க் கலங்கிக்கொண்டிருந்த வேளையில், கிறிஸ்தவர்களாகிய நாமோ நமது நேசரின் வருகையைக் களிப்புடன் எதிர்பார்த்து நின்றோம், நிற்கிறோம். ஆயினும், அவரது வருகையில் நாம் வெட்கப்பட்டுப்போகாதபடி, நமது நித்தியத்தை நிர்ணயிக்கும் முக்கிய காரியம் ஒன்றைக் கவனிக்கத் தவறிவிடக் கூடாது. அது தானதர்மத்தைப் பற்றியது. அப்போஸ்தலன் பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதும்போது செல்வந்தருக்குக் "கட்டளையிடு'' என எச்சரித்ததிலிருந்து அதின் முக்கியத்துவம் தெளிவாகிறது: "அவர்கள் நன்மை செய்யவும், நற்செயல்களில் செல்வந்தர்களாகவும், தாராளமாய்க் கொடுக்கிறவர்களும், உதாரகுணமுள்ளவர்களாயிருக்கவும் கட்டளையிடு'' (1 தீமோ 6:17-19).

ஆண்டவராகிய இயேசுவும் அவரது அப்போஸ்தலரும் பணக்காரர்மீது கடுமையாகவே இருந்தனர் எனப் புதிய ஏற்பாட்டில் எங்கும் காண்கிறோம். தங்களுக்கு அவ்வளவு பணமில்லையென்பதால் பணக்காரர்மீது அவர்கள் அவ்விதம் கண்டிப்பாயிருக்கவில்லை. மாறாக, இல்லாதவரோடு பகிர்ந்து கொள்ளப்படவேண்டிய பணம் பதுக்கப்படுவதிலுள்ள அபாயத்தை அவர்கள் நன்குணர்ந்திருந்தார்கள். நமது தேவைக்குமேல் கடவுள் நமக்குக் கொடுப் பாரானால் அது தேவையிலுள்ளோருக்குக் கொடுப்பதற்காகவே. அளவுக்கு மீறிப் பணத்தைக் குவித்து வைப்பதிற்கெதிரான கடினமான எச்சரிப்பு ஒன்று யாக்கோபுவிடமிருந்து வருகிறது: "செல்வந்தரே, கேளுங்கள்: உங்களுக்கு வரப்போகும் இழிநிலையை நினைத்து அலறியழுங்கள்... உங்கள் பொன்னும் வெள்ளியும் துருப்பிடித்துவிட்டன. அந்தத் துருவே உங்களுக்கு எதிர்ச்சான்றாக இருக்கும்... இவ்வுலகில் நீங்கள் ஆடம்பரமாய் வாழ்ந்து, சுகபோகத்தில் உழன்றீர்கள்... இதோ, நியாயாதிபதி வாசற் படியில் நிற்கிறார்'' (யாக் 5:1-9). நித்திய நோக்குடன் நாம் வாழ்ந்தால் பணத்தைக் குறித்த நமது மனப்பான்மையே புரட்சிகரமாய் மாறிவிடும்.

ஏழை லாசரு மற்றும் அந்த செல்வந்தனின் கதையைக் கவனியாது இக்கட்டுரையை முடிப்பது நன்றன்று (லூக் 16:19-31). செய்யத் தவறியவை எனும் பாவங்களே அவனை நரகத்தில் ஆழ்த்துவதற்குக் காரணமாயிருக்கு மென அவன் கனவிலும் நினைத்திருக்கமாட்டான். அவனது சாப்பாட்டு மேசையிலிருந்து விழுந்த சோற்றுப் பருக்கைகளுக்காக ஏழை லாசருவோடு போட்டிபோட்ட தனது நாய்களை அவன் விரட்டியிருக்கலாம், அல்லது கட்டிவைத்திருக்கலாம். தனது தவற்றை அவன் உணர்ந்தது உண்மைதான்; ஆனால் காலம் பிந்திப்போயிற்றே!

# 11

# இதிலும் பெரிதானவைகள்!

*(ஒருசில நண்பர்களுடன் ஆசிரியர் 1970இல் நிறுவிய ஆசீர்வாத இளைஞர் இயக்கத்தின் வெள்ளி விழாவில் அவர் கொடுத்த ஒரு செய்தி)*

ஆசீர்வாத இளைஞர் இயக்க ஊழியத்தில் 26ஆம் ஆண்டிற்குள் நுழைந்துள்ள நமக்குத் தேவன் தரும் செய்தி கிறிஸ்து அன்று நாத்தான் வேலுக்கருளிய வாக்குத்தத்தமே ஆகும். "இதிலும் பெரிதானவைகளைக் காண்பாய்!" (யோ 1:50).

"நாத்தான்வேல்" என்ற பெயருக்கு "தேவன் அருளியுள்ளார்" என்பது பொருள். இரண்டு உன்னத ஈவுகளை தேவன் இம்மனிதனுக்குக் கொடுத்திருந்தார். முதலாவது, தூய உள்ளம். "இதோ, கபடற்ற உத்தம இஸ்ரவேலன்" என்று இயேசு அவனைக் குறித்து சாட்சிபகர்ந்தார் (வச 47). அடுத்து, தேவனைப்பற்றிய அறிவு. கிறிஸ்துவின் முப்பரிமாண ஊழியத்தைக் குறித்த அத்தனை தெளிவான அறிவு அவனுக்குக் கிடைத் திருந்தது (வச 49). "ரபீ" — தேவனிடமிருந்து வந்த போதகர் அல்லது ஒரு "தீர்க்கதரிசி;" "தேவகுமாரன்" — தேவனுக்குப் பலி அல்லது அவருக்குமுன் ஓர் "ஆசாரியர்"; "இஸ்ரவேலின் ராஜா" — ராஜாதி "ராஜா." கிறிஸ்துவைப்பற்றிய ஒப்பற்ற அறிவு! முழு வெளிப்பாடு!

பரிசுத்தம், வேதவசனம் ஆகிய இவ்விரு நித்திய ஆசீர்வாதங்களை நெடுகவே தேவன் நம்மீதும் பொழிந்தருளி வந்திருக்கிறாரென்று இவ்வியக்கத்தின் 25 ஆண்டுச் சரித்திரத்தைத் திரும்பிப் பார்த்தால்



தெளிவாகும். இதுவரை நாம் பெற்றுள்ள பிரசங்கங்களையும் போதனை களையும் ஒரு கம்ப்யூட்டரில் போட்டால் அவ்வியந்திரமே இவைகளை இவ்விரு தலைப்புகளின்கீழ் பிரித்துவிடும்!

கிறிஸ்துவின் முன்னறிவை வியந்துகொண்டிருந்த நாத்தான்வேலுக்கு அதிலும் பெரிதானவைகள் வாக்களிக்கப்பட்டன. யோவான் சுவிசேஷம் முதல் அத்தியாயத்தையடுத்துள்ள மூன்று அத்தியாயங்களில் குறைந்தது ஐந்து பெரிதான காரியங்களைக் காண்கிறோம். கர்த்தர் வருகை தாமதிக்குமானால் அடுத்துள்ள கால் நூற்றாண்டில் இவற்றை நமது ஊழியத்தில் உரிமைபாராட்ட ஆவியானவர் விரும்புவார்.

### 1. இன்னும் ருசியான ரசம் (2:1-12)

கிறிஸ்துவின் இந்த முதல் அற்புத அடையாளத்தை நாம் நன்கறிவோம். விருந்தினரை மகிழ்விக்க அந்நாட்களில் திராட்சரசம் பரிமாறப்பட்டது. வேத ஆக்கியோன்கள் திராட்சரசத்தை அடிக்கடி பரிசுத்தாவியின் மகிழ்ச்சிக்கு ஒப்பிட்டுள்ளனர். இரு அப்போஸ்தலரின் வார்த்தைகளை இங்கு மேற்கோள் காட்டலாம். பெந்தெகொஸ்தேயின் 120 சீடரின் அபிஷேகத்தை விளக்கிப் பேசிய பேதுரு திராட்சரசத்தைக் குறிப்பிட்டான். சீடர்கள் இகத்தின் மதுபானத்தினாலல்ல, பரத்தின் புதுப்பானத்தினால் நிறைந்திருக்கிறார்களென அவன் சாட்சியிட்டான் (அப் 2:13-17). தமது மக்களைத் தேவன் புதிய ரசத்தினாலும் எண்ணெயினாலும் திருப்திப் படுத்துவாரென்ற யோவேலின் தீர்க்கதரிசனத்தையே பேதுரு எடுத் தாண்டான் (யோவேல் 2:18,19,28). அப்படியே பவுலும் எபேசு விசுவாசி களுக்கு எழுதிய நிருபத்தில் குடிவெறிக்கும் ஆவி நிறைவுக்கும் வேறுபாடு காட்டினான் (எபே 5:18).

1971இல் நமது முதல் ஆசீர்வாத முகாமிலிருந்து நமது கூடுகை களிலெல்லாம் ஆவியின் ஆரவாரத்திற்குக் குறைவில்லை. நமது முந்திய முகாம்கள் ஒன்றில் பாடல் புத்தகத்தின் பெயரே *"ஆனந்த சத்தம்"* என்றிருந்தது! இத்தனை ஆண்டுகளும் முதல் ரசத்தை ருசித்து வந்திருக்கிறோம். இப்பொழுது அதைவிட ருசியான ரசத்தைத் தேவன் வாக்கருளுகிறார்! முன்மாரிக் காலத்திலிருந்து பின்மாரிக் காலத்திற்குள் கடந்துசெல்லுகிறோம்.

எபேசியர் 5:18-21இல் வரையறுக்கப்பட்டுள்ள ஆவியின் நிறைவின் மூன்று விளைவுகளில் நாம் இன்னும் பெருகுவோம். ஐக்கியம் — "ஒருவருக்கொருவர் புத்திசொல்லி." ஆராதனை — "கர்த்தரைப் பாடி." உறவு — "ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்து." இம்மூன்று பகுதிகளிலும் விருத்தியடைய நாம் ஆவியானவரோடு ஒத்துழைக்கவேண்டும்.

நாம் இம்மூன்று பொறுப்புகளையும் நிறைவேற்றத் தீவிரக் கவனம் செலுத்தவேண்டும். ஐக்கியம் ஆழமாகட்டும். ஆராதனை உயரட்டும். உறவுகள் மிருதுவாகட்டும். ஒருவருக்கொருவர் ஊழியஞ்செய்ய நம்மை அதிகமதிகமாய் அர்ப்பணிப்போம். வசனத்தில் ஆவியானவர் அனுமதித்துள்ள அத்தனை பரிமாணங்களையும் நமது ஆராதனையில் கூட்டிக்கொள்வோம். உறவுகளிலுள்ள இறுக்கங்களைத் தளர்த்திவிடுவோம். இதுவே இன்னும் மதுரமான ரசத்தை ருசிக்கும் வழியாகும்.

இந்த ஆசீர்வாதங்களையெல்லாம் ஓரளவு நாம் அனுபவித்துக்கொண்டிருக்கிறோமென்பதில் ஐயமில்லை. ஆனால் நிறைந்தோடும், வழிந்தோடும் இவ்வாழ்வில் இதிலும் பெரிதானவைகளைக் காண்போம்.

## 2. இன்னும் மகிமையான ஆலயம் (2:13-22)

எருசலேம் தேவாலயத்திற்கு இதுவே தேவ குமாரனின் அதிகாரப்பூர்வமான முதல் வருகை. ஆலயத்தின் துர்ப்பிரயோகம் அவரை அதிர்ச்சிக்குள்ளாக்கிற்று. புனிதத் தலம் வியாபாரமயமாகியுள்ளதைக் கணப்பொழுதும் அவரால் சகிக்கமுடியவில்லை. தமது பரம தந்தையின் வீட்டைச் சந்தை வெளியாக்கியோர்மீது சினங்கொண்டார். அவரது புரட்சிகரச் சிந்தை பகிரங்கமாக வெளிப்பட்டது இதுவே முதல் தடவை எனலாம். பின்னர் தீவிரவாதி (செலோத்தே/ zealot ) ஒருவனைத் தமது பன்னிருவர் குழுவில் அவர் இணைத்துக்கொண்டதில் ஆச்சரியமொன்றுமில்லை! "உமது வீட்டைக் குறித்து உண்டான பக்திவைராக்கியம் என்னைப் பட்சித்தது" என்ற சங்கீதப் புத்தகத் தீர்க்கதரிசனத்தைச் சீடர் நினைவுபடுத்திக் கொண்டனர் (சங் 69:9). ஜெப தூப வாசனை கிளம்பவேண்டிய இடத்திலிருந்து சாணங்களின் துர்நாற்றம் வீசியது.

மிருகங்களும் பறவைகளும் பலி செலுத்துவதற்காகவே விற்கப்பட்டதாலும், காசுகள் ஆலய வரிக்காகவே மாற்றப்பட்டுக்கொண்டிருந்ததாலுமே யூதர்கள் இவற்றை ஆலயத்திற்குள் அனுமதித்திருந்தனர். எனவே இயேசுவின் செயலுக்கான அதிகாரத்தைக் கேள்விகேட்டனர். அதற்கு அவர், "இந்த ஆலயத்தை இடித்துப்போடுங்கள், மூன்று நாளைக்குள்ளே இதை எழுப்புவேன்" என்றார் (2:19). கற்களினாலான கட்டிடத்தையல்ல, ஓர் ஆன்மீக ஆலயத்தைக் குறித்து அவர் பேசினார். பூமிக்கடுத்த பொருட்களினால் கட்டப்பட்டதல்ல, நித்திய ஆவியானவரால் நிரப்பப்பட்டிருக்கும் ஆலயமே இங்கு வாக்களிக்கப்படும் "பெரிதான" காரியமாகும். இப்புதிய ஆலயமானது இன்று கிறிஸ்துவின் உடலாகிய (வச 21) சபையையும் (எபே 4:15,16) கிறிஸ்தவர்களின் உடல்களையும் குறிக்கும் (1 கொரி 6:19).



மிக முக்கியமானதொரு படிப்பினை இங்கு நமக்குண்டு. நோக்கங்கள் நிறைவேறிய பின்னரும் நின்று கொண்டிருக்கும் கட்டிடங்களைத் தேவன் கடந்துசெல்கிறார். கிறிஸ்துவுக்கு முன்னோடியானவன் ஆலயத்திற்கு வெளியே ஊழியஞ்செய்தான் (லூக் 3:2). இங்கே ஒரு நகைச்சுவையைக் கவனியுங்கள். ஆலயத்தில் பிரதான ஆசாரியராயிருந்த அன்னாவுக்கும் காய்பாவுக்குந்தான் இறை வார்த்தை வந்திருக்கவேண்டும். அதுவோ அவர்களைத் தவிர்த்துவிட்டு "வனாந்தரத்தில்" யோவானுக்கு வந்தது. தாவீதின் குமாரனாகிய கிறிஸ்து தாவீதின் தலைநகரில் பிறக்கவில்லை. மாறாக, அவர் எங்கோ இருந்த ஒரு கிராமத்தைத் தனக்குத் தொட்டிலாக்கிக் கொண்டார். ஒரு பீடத்தின் மீதிருந்தல்ல, ஒரு மலைமீதிருந்து தமது மிகப்பெரிய பிரசங்கத்தைப் பண்ணினார். அவர் உயிர் விட்டதும் எருசலேமுக்கு வெளியேதான். சரித்திரங் காணாத இந்த மிகப்பெரிய பலி ஆலயத்திற்கு வெளியேதான் செலுத்தப்பட்டது. அதற்கு "ஆமென்" சொல்லுவதுபோல் அவரது மரணத்திற்கு மாறுத்தரமாக தேவாலயத் தொங்குதிரை தன்னைக் கிழித்துக்கொண்டது! தங்கள் இதயங்களைக் கிழிக்க மனமற்றோருக்காக அது இன்னுமா காத்திருக்கும்! உயிர்த்த கிறிஸ்துவும் முதலாவது ஆலயத்திலல்ல, ஒரு தோட்டத்திலும் பின்னர் ஒரு வீட்டிலும் காட்சியளித்தார். அப்படியே கிறிஸ்துவுக்குப் பின் தொடர் ஊழியராய் வந்த பரிசுத்த ஆவியானவரும் ஆலயத்திற்குள் அல்ல, ஒரு மேலறையில் வந்திறங்கினார்.

சரித்திரத்திலிருந்து நாம் கற்றுக்கொள்ள தேவன் விரும்புகிறார். ஆலயத்தின் நான்கு சுவர்களுக்கு வெளியே விடுதலைச் சாவடி நடத்திய "தேவனால் அனுப்பப்பட்ட ஒரு மனிதனாகிய" ஜான் (வெஸ்லி)க்கு எதிராக இங்கிலாந்து திருச்சபை கதவடைத்தது. ஆனால் "உலகமே எனது சபை மக்கள்" என்பதே அவரது முழக்கமாயிருந்தது! இன்று இங்கிலாந்தின் இவ்வாலயக் கட்டிடங்களில் பல கடைகள் வைக்க விற்கப்பட்டுள்ளன; அவற்றின் ஊசிக் கோபுரங்கள் உடைக்கப்பட்டுள்ளன.

25 ஆண்டுகளைக் கடந்து அடுத்த பகுதிக்குள் நாம் செல்கையில் பெரிய பெரிய கட்டிடங்களைக் கட்டுவதிலல்ல, கர்த்தருக்காக ஒரு கூட்டம் மக்களை எழுப்புவதிலேயே நாம் அதிகக் கவனம் செலுத்த வேண்டும். அடுக்கடுக்காய்க் கட்டிடங்களைக் கட்டுவதில் இன்று கிறிஸ்தவ உலகம் காட்டும் தீவிரத்திலிருந்து நம்மைத் தப்புவித்துக்கொள்வோம். மிகச் சீக்கிரமாய் இருக்கப்போகிற கிறிஸ்துவின் வருகைக்கு முன்னாலுள்ள மிகக் குறுகிய காலத்திற்கே தேவையான கட்டிடங்களுக்கு மிக அதிகமாய்ப் பணத்தைச் செலவழிக்கிறோமோவென அஞ்சுகிறேன்.

கட்டிடங்களின் தேவையை நான் மறுக்கவில்லை. ஆனால் தேவனோடு கடந்து முன்செல்வதற்குப் பல சந்தர்ப்பங்களில் கட்டிடங்கள் நமக்குத் தடங்கலாய் மாறிவிடுகின்றன என்பதை அறிய வேண்டும். மக்கள் வெளியே சிதறிச் சென்றுவிடக்கூடாதென்பதே பாபேல் கோபுரத் திட்டத்தின் நோக்கமாகும். இது நோவாவுக்குத் தேவன் வெளிப்படுத்திய அவரது திட்டத்திற்கு முரண்பாடானதாகும் (ஆதி 9:1; 11:4).

கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன்னோடிகளான நாம் வனாந்தரமான உலகிற்குள் பரவிச் சென்று நம்பிக்கையற்றோருக்கும் நாதியற்றோருக்கும் "இதோ தேவாட்டுக்குட்டி!" என அறிவிப்போம். கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலின் வல்லமையோடும் பரமேறுதலின் வரங்களோடும் உலகெங்கும் சபைகளை எழுப்புவோம். காலம் குறுகியது. பெரும் கட்டிடத் திட்டங்களுக்குச் செலவழிக்க இன்னும் "நாற்பத்தாறு ஆண்டுகள்" எல்லாம் எங்கே ? (யோ 2:20).

இவ்வியக்கத்தில் நமக்கிருக்கும் கட்டிடங்களுக்காகத் தேவனைத் துதிப்போம். ஆனால் அவர் "இதிலும் பெரிதானவைகளை" வாக்குப் பண்ணியதும் இன்னும் அநேக கட்டிடங்கள் கிடைக்கப்போகின்றன என்றெண்ணிவிடக்கூடாது. தேவன் குறிப்பிடுவது ஆன்மீக மாளிகைகளே. அவற்றிலேயே நாம் கவனம் செலுத்தவேண்டும்.

### 3. இன்னும் ஆழமான வாழ்க்கை (3:1-21)

நாம் உரிமை பாராட்டவேண்டிய அடுத்த "பெரிதான" காரியம் நிக்கொதேமுவுடன் கிறிஸ்துவின் உரையாடலில் அடங்கியுள்ளது. வசனங்கள் 6, 12 அதைச் சுட்டிக்காட்டுகின்றன: "மாம்சத்தினால் பிறப்பது மாம்சமாயிருக்கும், ஆவியினால் பிறப்பது ஆவியாயிருக்கும்." "மண்ணுலகக் காரியங்களை நான் உங்களுக்குச் சொல்லியும் நீங்கள் விசுவாசிக்கவில்லையே, விண்ணுலகக் காரியங்களை உங்களுக்குச் சொல்வேனானால் எப்படி விசுவாசிப்பீர்கள் ?" ஆவியானவரால் பிறப்பது மனிதரால் பிறப்பதைவிடப் பெரியது. பரத்தின் காரியங்கள் இகத்தின் காரியங்களைவிடப் பெரியவை. மாம்சீக வாழ்க்கையல்ல, ஆன்மீக வாழ்க்கையே ஆழமானது.

மாம்சத்தின்படியான அல்லது ஊனியல்பின்படியான வாழ்க்கையை விளக்கினால் ஆவிக்குரிய அல்லது ஆவியின் சிந்தையோடுள்ள வாழ்க்கை என்ன என்பது தெளிவாகும்.

` மாம்சீக வாழ்வு என்றால் அனுபவமற்ற அறிவாகும். நிக்கொதேமு ஒரு வேதப் போதகனாயிருந்தும் அவன் ஆவிக்குரிய காரியங்களை அறிந்



திருக்கவில்லை. மாறாக, தாமும் தம்மை விசுவாசிப்பவர்களும் ஆவிக்குரிய வாழ்வின் அனுபவரீதியான அறிவைக் கொண்டிருப்பதாக இயேசு குறிப்பிட்டார் (வச 10,11). பல மிஷனரி இயக்கத்தினரைவிட ஆசீர்வாத இளைஞர் இயக்கத்தினர் வேத அறிவில் தேறினவர்களென்று நான் நினைக்கிறேன். ஆனால் வசனத்தை அதிகமாய்க் "கேட்டும்" அதின்படி மிகச் சொற்பமாகவே "செய்யும்" சுயவஞ்சக நிலைக்குள் நம்மையறியாது விழுந்துவிட்டோமோவெனக் கலங்குகிறேன் (யாக் 1:22). வஞ்சிக்கப்பட்டவனுக்குத் தான் வஞ்சிக்கப்பட்டது தெரியாததுதான் பெரிய சோகம். இயேசு நிக்கொதேமுவிடம் கூறியது அவனை அதிர்ச்சிக்குள்ளாக்கிற்று (வச 7). இயேசு அவனிடம், "நீ அறியாமலிருக்கிறாயா ?" என்றார் (வச 10). கடந்த கால் நூற்றாண்டாக நாம் பெற்றுக்கொண்ட சத்தியங்களின் வெளிச்சத்தில் நம்மை ஆராய்ந்து பார்ப்போம். குறிப்பாக, அன்பைக் குறித்து இத்தனை பிரசங்கங்கள் கேட்ட பின்பும் உறவுப்பிரச்னைகளில் நாம் வெற்றி காணாதிருப்பது எனக்கு மிகுந்த வேதனையாயிருக்கிறது.

` மாம்சீக வாழ்வு என்றால் உள்ளான மாற்றமின்றி வெறுமனே ஆசீர்வாதங்களை அனுபவித்துக்கொண்டிருப்பதாகும். தண்ணீரை ரசமாக்கினது போன்ற அடையாளங்கள் இயேசுவைப் பின்பற்றியவர்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தின. "அப்படியிருந்தும், இயேசு எல்லாரையும் அறிந்திருந்தபடியால்... மனிதருள்ளத்திலிருப்பதை அவர் அறிந்திருந்தபடியால்... அவர்களை நம்பி இணங்கவில்லை" (2:24,25). எனவேதான் அம்மனிதருள் ஒருவனாகிய நிக்கொதேமு அவரைப் பாராட்ட வந்தபோது அவனது பூமாலையை வாங்கிக்கொள்ள கழுத்தை நீட்டவில்லை. மாறாக, அவர் அவனைப் பார்த்து, "நீ மறுபடியும் பிறக்கவேண்டும்" என்றார்! "உனக்கு உள்ளான மாற்றம் தேவை. வெறுமனே அடையாளங்களுக்கும் அற்புதங்களுக்கும் கைதட்டுவதில் பயனில்லை!" (3:1-3). இது 2000 ஆண்டுகட்கு முன் எழுதப்பட்ட நமது கதைதான் என்றெண்ணுகிறேன்! இயேசுவை ஆசீர்வதிக்கிறவரெனத் துதிக்கிறோம். அவர் தண்ணீரை ரசமாக்கியதும், அப்பத்தைப் பெருக்கியதும் அவரைச் சுற்றிக் கூட்டம் போடுகிறோம். ஆனால் தேவனிடமிருந்து வரும் ஒவ்வொரு ஆசீர்வாதமும் ஒவ்வொரு ஜெபத்திற்கான பதிலும் நமது உள்ளான மாற்றத்திற்கான அவரது செய்தியென உணருவதில்லை. தேவனருளும் ஒவ்வொரு அடையாளமும் அற்புதமும் நம்மைக் கூடுதல் அர்ப்பணிப்பிற்கும் ஆழமான மாற்றத்திற்கும் வழிநடத்தாவிடில் நன்றிகெட்ட மக்கள் மீது தேவன் தமது நன்மைகளை வீணாய்க் கொட்டுகிறாரென்றுதான் பொருள். தேவனது எதிர்பார்ப்புகளை இன்னும் தவிடுபொடியாக்கிக் கொண்டிருப்போமோ ?

` மூன்றாவதாக, மாம்சீக வாழ்வு என்றால் தெய்வீக வல்லமையை உணராது லவுகீகச் சிந்தையிலேயே விவாதித்துக்கொண்டிருப்பதாகும் (3:4-9). "இது எப்படியாகும் ?" என்றே நிக்கொதேமு கேட்டுக்கொண்டி ருந்தான். நாமும் அப்படித்தான். "இவ்விதப் பாவங்களில் நான் வெற்றிப்பெற முடியுமோ ? அவ்வப்போது இவற்றை மேற்கொண்டாலும் நிரந்தர வெற்றி சாத்தியமோ ?" என்று நாம் கேட்டுக்கொண்டே சில "மாம்சக் கிரியைகளில்" தொடர்ந்து வாழ்கிறோம். சோதனைக்காரனைவிடப் பெரியவராகிய கிறிஸ்து நம்மில் வாசமாயிருப்பதால் இயற்கைக்கப்பாற்பட்ட வல்லமை நமக்குள் உண்டென்பதை உணருவதில்லை. "ஆவியின் கனிக்கு" முன்பாக "மாம்சக் கிரியைகள்" சரணடைய வேண்டுமே. ஆவியின் கனிக்கு விரோதமான சட்டமெங்கே ? (கலா 5:19-22). இயேசுவால் தண்ணீரை ரசமாக்க முடியுமானால், அவரால் நமது கல்லான இருதயத்தைக் கனிவானதாக்க முடியாதோ ? அவரது ஒளியால் துரத்தமுடியாத இருள் எதுவும் நமது வாழ்க்கையில் இருக்கமுடியாது (யோ 3:19-21).

` மாம்சீக வாழ்வு என்பது முன்னேறிச் செல்லாது அரிச்சுவடிகளிலேயே தங்கிவிடும் தேக்க நிலையைக் குறிப்பிடும். "பூமிக்கடுத்த காரியங்களைப்" பற்றிய இயேசுவின் வார்த்தைகளையே நிக்கொதேமுவால் செரிக்கமுடிய வில்லை (வச 12). "பூமிக்கடுத்த" காரியங்களென்று இயேசு குறிப்பிட்டது யாது ? அவர் தண்ணீரினாலும் ஆவியினாலும் மறுபடியும் பிறப்பதைக் குறித்தல்லவா பேசிக்கொண்டிருந்தார் ? உண்மைதான், ஆனால் இயேசு வைப் பொறுத்தவரை இவையெல்லாம் துவக்கக் காரியங்கள்தான். எபிரெய நிருப ஆக்கியோனும் இதே தத்துவத்தைக் கொண்டுள்ளான். மனந் திரும்புதல், ஞானஸ்நானம், கைகளை வைக்குதல் போன்றவற்றையெல்லாம் அவன் கிறிஸ்துவைப் பற்றிய "மூல" உபதேசங்கள் அல்லது "முதல்" பாடங்கள் என்கிறான் (எபி 6:1,2). பரிதாபகரமாக நாமோ மனந்திரும்புதல், தண்ணீர் ஞானஸ்நானம், ஆவியின் ஞானஸ்நானம் ஆகியவற்றையே "முழு" அல்லது "பூரண" சுவிசேஷம் என்கிறோம் ! சாதாரணமே அசாதாரணமாக நமக்குத் தோன்றுமளவு அடிமட்டத்திலிருக்கிறோம் ! மனந்திரும்புதல், திருமுழுக்கு, அபிஷேகம் இவையெல்லாம் முதலாம் வகுப்பிற்கு முந்திய மூன்று பாலர் வகுப்புகளுக்குச் (PKG, LKG, UKG) சமானம் ! நாம் பின்வாங்கிவிடாதபடி இவைகளை விட்டுக் கடந்து முன் செல்லும்படி தேவன் நம்மை அழைக்கிறார் (எபி 6:1-6). முன்செல்லாவிடில் பின்வாங்குதல்தான். இயேசுவின் முன்னறிவைக் குறித்து நாத்தான்வேலும் அவரது அற்புத வல்லமையைக் குறித்து நிக்கொதேமுவும் அதிசயித்து நின்றனர் (யோ 1:48-51; 3:1,2). ஆனால் கிறிஸ்துவோ நாத்தான் வேலுக்குப் "பெரிய" காரியங்களையும் நிக்கொதேமுவுக்குப் "பரம" காரியங்களையும் வைத்திருந்தார் (1:40; 3:12). கிறிஸ்துவைப் பற்றிய பரலோக வெளிப்பாடுகளையே இவை குறிப்பிடும் (1:51; 3:13). இதுவே நமது தணியா தாகமும் நலியா நாட்டமாகவும் இருக்கட்டும்.



## 4. இன்னும் சிறந்த தலைவர்கள் (3:22-36)

இப்பொழுதிருப்பவர்களைவிடத் திடமான, ஆழமான, சிறந்ததொரு புதிய தலைமுறைத் தலைவர்களையும் பிரசங்கிகளையும் கர்த்தர் இந்த இயக்கத்தில் எழுப்பப்போகிறார். இது நிறைவேறும்படி நாம் நிறைவேற்ற வேண்டிய சில நிபந்தனைகளும் பொறுப்புகளும் உண்டு.

` "மேலேயிருந்து" அடுத்த தலைவர்கள் மீது சால்வை விழும்படி நாம் ஜெபிக்கவேண்டும். "பரலோகத்திலிருந்து ஒருவனுக்கு கொடுக்கப்பட்டா லொழிய, அவன் ஒன்றையும் பெற்றுக்கொள்ளமாட்டான்" (3:27). அது சாத்தியமாயிருந்திருந்தால் எலியா ஒரு பிரதிஷ்டை ஆராதனையென்று பெருங்கூட்டத்தைக் கூட்டி அதில் தனது ஊழிய வரத்தை எலிசாவுக்குக் கொடுத்திருப்பான் ! மாறாக, குமாரனைப்போல் தான் சேவித்துவந்த எலியா எடுத்துக்கொள்ளப்பட்டபோது எலிசா மேல்நோக்கிப் பார்க்கவேண்டிய திருந்தது (2 இரா 2:9-13). பரலோக ஊழியப் பொறுப்புகள் பூமியின் சமதள மட்டத்தில் கடத்தப்பட முடியாது. தங்கள் மீதுள்ள அபிஷேகத்தை எதிர்காலத் தலைமைத்துவத்திற்காகப் பிறருக்குக் கடத்திவிடத் தலைவர்கள் விரும்பத்தான் செய்கிறார்கள். அவர்கள் தீமோத்தேயுக் களையும் தீத்துக்களையும் பயிற்றுவிக்கலாம், நியமிக்கலாம், அவர்கள்மீது கரங்களையும் வைக்கலாம். ஆனாலும், இரண்டாம் வரிசையினருக்கென தேவன் சிறப்பானதொரு அபிஷேகத்தை அருளாவிடில் இன்றையத் தலைவர்களின் முயற்சியெல்லாம் பயனற்றுப்போகும். அவர்கள் வெறும் எலும்புக்கூடுகளைத்தான் விட்டுச் செல்வார்கள். எனவே, ஜெபியுங்கள் !

` அடுத்த வரிசையினர் தேறி வளருவதற்கு இன்றையத் தலைவர்கள் மனமுவந்து உதவி, அதை மகிழ்வுடன் கவனிக்கவேண்டும். யோவானின் ஊழியத்திலிருந்து இயேசுவின் ஊழியத்திற்குச் செல்லுகையில் நான்கு அம்சமான படிகளைக் கவனிக்கிறோம். யோவானை முதல் வரிசைத் தலைவர்களுக்கும் இயேசுவை இரண்டாம் வரிசையினருக்கும் ஒப்பனையாக எடுத்துக்கொள்வோம். படி ஒன்று: யோவான் ஊழியம் செய்கிறான்; இயேசு அவனிடம் வருகிறார் (யோ 1:28,29). படி இரண்டு: இயேசு பேசுவதைக் கேட்டு யோவான் மகிழுகிறான் (3:29). படி மூன்று: யோவான் கொஞ்சங் கொஞ்சமாக பின்னால் நகருகிறான் (3:30). படி நான்கு: யோவான் இயேசுவை உயர்த்துகிறான் (3:31). இரண்டாம் வரிசைத் தலைவர்களை எழுப்புவதெப்படி என்று சில ஆண்டுகட்குமுன் நான் ஒரு நிர்வாகவியல் புத்தகத்தில் வாசித்ததற்கு இது இணையாக இருக்கிறது. அப்புத்தகத்தில் கொடுக்கப்பட்டிருந்த நான்கு படிகள் : 1. நான் செய்கிறேன், நீ கவனி;

2. நான் செய்கிறேன், நீ உதவு; 3. நீ செய், நான் உதவுகிறேன்; 4. நீ செய்; நான் கவனிக்கிறேன். தலைமைப் பயிற்சி முகாம் அல்லது வணிக நிர்வாகப் பட்டப்படிப்பு எதுவும் யோவானுக்குக் கிடைத்ததில்லை. ஆனால் அவனது நடைமுறை ஞானத்தைக் கண்டு வியக்கிறேன். அவன் நிசமாகவே ஒரு பெருந்தலைவன்தான்!

அடுத்த வரிசையினர் இன்றையத் தலைவர்களுக்கு அடங்கியிருந்து, தங்கள் வேளைக்காய்க் காத்திருந்து, அவர்களுக்கெதிராக ஒன்றும் பேசாமல் இருக்கவேண்டும். இயேசு தம்மை யோவானின் ஞானஸ்நானத் திற்கு அர்ப்பணித்தார் (மத் 3:13-15). இயேசு போட்டியைத் தவிர்த்தார். பரிசேயர் ஆட்களைக் கணக்குப்பார்த்து இயேசுவின் ஊழிய வெற்றியை யோவானின் ஊழியத்தோடு ஒப்பிட்டுக் பேசுகின்றனரென்று தெரிந்ததும் இயேசு வேறிடம் போய்விட்டார் (யோ 4:1-3). இவ்வித எலிப் பந்தயங்களில் அவர் சேரமாட்டார். யோவான் மரித்ததும் தமது சொந்த பலத்தில் உடனே தீவிரமாய் எதையும் தொடங்காமல் சிலகாலம் ஜெபத்தில் தரித்திருக்கச் சென்றுவிட்டார் (லூக் 9:9,10). உண்மையில், இயேசுதான் யோவானைவிடப் பெரியவர். ஆனால் இயேசுவோ யோவானிலும் பெரியவன் எவனுமில்லை என்றார் (மத் 11:11). எலிசா தனது வேளைக்காய்க் காத்திருந்தான். இவ்வியக்கத்தின் தலைமைத்துவ மட்டங்கள் அத்தனையிலும் இந்த ஆவியே நிலவுவதாக.

### 5. இன்னும் அமோக விளைச்சல் (4:1-42)

இவ்வூழியத்தின் துவக்கமுதலே நமக்கு நல்ல ஆத்தும அறுவடை கிடைத்து வந்திருக்கிறது. இவ்வியக்கத்தின் முழுநேர ஊழியரல்லாதோர் மற்றும் முழுநேர ஊழியரின் சாட்சி மூலமாக பல்லாயிரங்கள் இறையர சுக்குள் மறுபடி பிறந்துள்ளனர். இன்னும் அமோக விளைச்சல் இனிதான்! இவ்வேதப்பகுதியில் இரு வசனங்கள் அசாதாரண விளைச்சலைக் குறிப்பிடுகின்றன. வசனங்கள் 39,41, "அநேகர் அவர்மேல் விசுவாச முள்ளவர்களானார்கள். இன்னும் அநேகர் விசுவாசித்தார்கள்." மேலும் இது கடைசிக் காலத்தின் கடைசி நாட்களானதால் என்றும் காணா அறுவடையை இன்று எதிர்பார்க்கலாம்.

அச்சமாரியப் பெண்ணின் சரிதையானது இன்றைய இந்தியாவை அப்படியே சித்தரித்துக் காட்டுவதாயுள்ளது. (அ) இனவுணர்வு: "யூதர்கள் சமாரியருடன் சம்பந்தம் கலவாதவர்கள்" (வச 9). (ஆ) மூதாதையர் நம்பிக்கைகள்: "எம் தந்தை யாக்கோபைவிட நீர் பெரியவரோ?" (வச



12). (இ) முடிவிலா தேடலும் தணியா தாகமும்: "ஐயா அத்தண்ணீரை எனக்குக் கொடும்; அப்போது எனக்குத் தாகமும் எடுக்காது; தண்ணீர் மொள்ள நான் இங்கு வரத் தேவையும் இருக்காது" (வச 13-15). (ஈ) பாவமும் அவமானமும்: "உனக்கு ஐந்து கணவர்கள் இருந்தார்கள் என்றாலும் இப்போது உன்னுடன் இருப்பவர் உன் கணவர் அல்ல" (வச 16-18). (உ) புண்ணியத்தலங்கள்: "எங்கள் முன்னோர் இம்மலையில் வழிபட்டுவந்தனர். ஆனால் நீங்கள் எருசலேமில்தான் வழிபடவேண்டும் என்கிறீர்களே" (வச 20,21). (ஊ) சிலை வணக்கம்: "கடவுள் ஆவியா யிருக்கிறார்" (வச 24) (எ) கிறிஸ்துதான் பதில்: "இரட்சிப்பு யூதர் வழியாய் வருகிறது" (வச 22). அறுவடை ஆயத்தம் (வச 35).

அறுவடை பெருகவேண்டுமானால் அறுவடையாளரின் தியாகமும் பெருகவேண்டும். ஏறத்தாழ 25 கி.மீ. நடந்து நடுப்பகலில் மிகவும் களைப்புற்ற வேளையில்தான் இயேசு அப்பெண்ணிடம் ஆத்துமாதாயப் பணியைத் துவங்கினார் (வச 6). ஓர் ஆத்துமா குணப்பட்ட மகிழ்ச்சியில் அவருக்கு ஆகாரத்தில்கூட விருப்பமில்லாது போயிற்று (வச 31-34). நமது கண்ணீரும், வியர்வையும், இரத்தமும் இப்பாரத மண்ணில் சிந்தினா லொழிய சுவிசேஷ விதைகள் இந்நாட்டில் வீரியமாய் முளைக்காது. ஆனாலும், மிஷனரிகளுக்கு ஒரு சிறு உபசரிப்பைக்கூட மறுக்கும் இந்தியர் தாங்களாகவே மிஷனரிகளைத் தங்கள் ஊர்களில் தங்களோடு தங்கியிருக்க வற்புறுத்தும் காலம் வெகு தூரத்திலில்லை (வச 7-9,40). "இயேசுவே "கிறிஸ்துவாகிய உலக இரட்சகர்" என்று இந்தியாவே முழங்கும் (வச 42).

நமதாண்டவர் நம்மூலம் செய்யப்போகிற வேறு அநேக பெரிதான காரியங்களுமுண்டு. "அவைகளை ஒவ்வொன்றாக எழுதினால் எழுதப் படும் புத்தகங்களை உலகமே கொள்ளாதென்று எண்ணுகிறேன். ஆமென்!" (21:25).

# 12

# உன் தேவனைச் சந்திக்க நீ ஆயத்தமா?

இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைக் குறித்த விபரங்களை விவாதிப்பதைவிட அதற்காய் ஆயத்தப்படுவதே அதிமுக்கியம். இரண்டாம் வருகையை அடுத்துள்ள சம்பவங்களின் வரிசையைக் குறித்த பல்வேறு கருத்துக்கள் கிறிஸ்தவர்கள் நடுவில் பெரும் பிளவை உண்டுபண்ணி யுள்ளன. ஆனால் நமது கர்த்தரைச் சந்திப்பதற்கான ஆயத்தப்படிகளோ, ''இதோ, மணமகன் வருகிறார்; அவரை எதிர்கொள்ள வாருங்கள்'' என்ற அழைப்பிற்குக் காத்திருக்கும்படி நம்மை ஒன்று சேர்த்துக் கூட்டுகிறது (மத் 25:6). கீழுள்ள கேள்விகளைக் கேட்டுப்பார்த்து உன்னை ஆயத்தப் படுத்திக் கொள். அவர் சீக்கிரம் வருகிறார்!

### 1. பரிசுத்தமாய் வாழ அக்கறைகொண்டுள்ளேனா?

''இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் இறைவனைத் தரிசிப்பார்கள்.'' (மத் 5:8)

''பரிசுத்தமுள்ளவர்களாயிருக்க நாடுங்கள்; பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரைத் தரிசிப்பதில்லையே.'' (எபி 12:14)

''மனிதர் உள்ளங்களில் மறைந்திருப்பவற்றைக் குறித்து நியாயத்தீர்ப்பு கொடுக்கும் நாளிலே ...'' (ரோ 2:16)



''நாம் அவபக்தியையும் உலகு சார்ந்த தீய நாட்டங்களையும் வெறுத்து, தெளிந்த புத்தியும் நீதியும் தேவபக்தியும் உள்ளவர்களாய் இவ்வுலகில் வாழ்ந்து... இயேசு கிறிஸ்துவின் மகிமையின் பிரசன்னமாகுதலுக்கு எதிர்பார்த்துக் கொண்டிருக்கும்படி ...'' (தீத் 2:11-13)

இவைகளெல்லாம் அழிந்துபோகிறதாயிருக்கிறபடியால் நீங்கள் எப்படிப்பட்ட பரிசுத்த நடக்கையும் தேவபக்தியும் உள்ளவர்களாயிருக்க வேண்டும்!'' (2 பேது 3:10-12)

''அவர் தோன்றும்போது நாமும் அவரைப்போல் இருப்போம்; ஏனெனில் அவர் இருப்பதுபோல் அவரைக் காண்போம். அவர்மீது இவ்வித நம்பிக்கை வைத்திருக்கும் எவனும் அவர் தூயவராய் இருப்பதுபோல் தன்னையும் தூய்மையாக்கிக்கொள்ளுகிறான்.'' (1 யோ 3:2,3)

### 2. பிறரை நேசிப்பதில் உண்மையாயிருக்கிறேனா?

''நீங்கள் தண்டனைத் தீர்ப்புக்கு ஆளாகாதவாறு ஒருவர் மற்றவருக்கு எதிராக முறையிடாதீர்கள்; இதோ, நீதிபதி வாசற்படியில் நிற்கிறார்.'' (யாக் 5:9)

''நீ உன் சகோதரனைக் குற்றவாளியென்று தீர்க்கிறதென்ன? நீ உன் சகோதரனை இழிவாகக் கருதுகிறதென்ன? நாமெல்லாரும் கிறிஸ்துவின் நடுவர் இருக்கை முன் நிறுத்தப்படுவோமே... நம்மில் ஒவ்வொருவனும் தன்னைக் குறித்துக் கடவுளுக்குக் கணக்கு கொடுப்பான்.'' (ரோ 14:10-12)

''எல்லாவற்றிற்கும் முடிவு நெருங்கிவிட்டது... எல்லாவற்றிற்கும் மேலாக ஒருவரிலொருவர் ஊக்கமான அன்புள்ளவர்களாயிருங்கள்; அன்பு திரளான பாவங்களை மூடும்.'' (1 பேது 4:7,8)

''யாவரோடும் சமாதானமாயிருக்க... நாடுங்கள்; பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரைத் தரிசிப்பதில்லையே.'' (எபி 12:14)

''நீங்களும் ஒருவரிடம் ஒருவர் வைக்கும் அன்பிலும் மற்றெல்லா மனிதரிடம் வைக்கும் அன்பிலும் கர்த்தர் உங்களைப் பெருகவும் நிலைத்தோங்கவும் செய்து, இவ்விதமாய் நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து... வரும்போது, நீங்கள்... பிழையற்ற பரிசுத்தமுள்ளவர்களாயிருக் கும்படி உங்கள் இருதயங்களை உறுதிப்படுத்துவாராக.'' (1 தெச 3:12,13)

## 3. ஜெப வாழ்வில் விழிப்புடனிருக்கிறேனா ?

“எல்லாவற்றிற்கும் முடிவு நெருங்கிவிட்டது; ஆகையால் தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருந்து, ஜெபம்பண்ண விழிப்புள்ளவர்களாயிருங்கள்.” (1 பேது 4:7)

“அந்த நாளையும் வேளையையும் பிதா ஒருவர் தவிர வேறு எவருக்கும் தெரியாது, விண்ணகத்திலுள்ள தூதருக்கும் தெரியாது, குமாரனும் அறியார். அந்நேரத்தை நீங்கள் அறியாதபடியால் கவனமாயிருங்கள், விழிப்பாயிருந்து ஜெபம் பண்ணுங்கள்.” (மாற் 13:32,33)

“உங்கள் உள்ளங்கள் பெருந்தீனியினாலும், குடிவெறியினாலும், இவ்வுலகக் கவலைகளினாலும் பாரமடையாதபடிக்கும், நீங்கள் எதிர்பாராத நேரத்தில் அந்த நாள் உங்கள்மேல் வராதபடிக்கும் எச்சரிக்கையாயிருங்கள்... இனி நிகழப்போகும் இவைகளுக்கெல்லாம் நீங்கள் தப்பி, மனுக்குமாரனுக்கு முன் நிற்கத் தகுதியுள்ளவர்களாக எண்ணப்படுவதற்கு, எப்பொழுதும் ஜெபம்பண்ணி விழித்திருங்கள்.” (லூக் 21:34-36)

“மனந்தளராமல் எப்பொழுதும் ஜெபம்பண்ண வேண்டும்... தேவன் தம்மை நோக்கி அல்லும்பகலும் கூக்குரலிடுகிறவர்களாகிய தம்மால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களின் காரியத்தில் நீடிய பொறுமையுள்ளவராயிருந்து அவர்களுக்கு நீதி வழங்காமல் இருப்பாரோ ?... ஆயினும் மனுக்குமாரன் வரும்போது மண்ணுலகில் விசுவாசத்தைக் காண்பாரோ ?” (லூக் 18:1,7,8)

## 4. எனது குடும்பக் கடமைகளில் தவறாதிருக்கிறேனா ?

பெற்றோரும் பிள்ளைகளும் ஒருவருக்கொருவர் சுமூகமான உறவு கொள்ளாத நிலையிலிருக்கும் குடும்ப நிலையைப் போன்று கடவுளைக் கோபப்படுத்துவது வேறில்லை. நமது இல்லங்களிலிருக்கும் சீர்கேடுகளைச் சரிசெய்ய அவர் முழுமூச்சாய்ச் செயல்பட விரும்புகிறார்—

“இதோ, கர்த்தருடைய பெரிதும் பயங்கரமுமான நாள் வருமுன் நான் உங்களிடம் எலியா தீர்க்கதரிசியை அனுப்புகிறேன். நான் வந்து உலகைச் சபித்துத் தண்டிக்காதபடி, அவன் தந்தையர்களுடைய உள்ளங்களைப் பிள்ளைகளிடத்தும், பிள்ளைகளின் உள்ளங்களைத் தந்தையர்களிடத்தும் திருப்புவான்.” (மல் 4:5,6)

ஆட்டுக்குட்டியானவரின் கலியாணத்தைக் கொண்டாட திருச்சபையானது தனது மணமகனின் வருகையை எதிர்நோக்கியிருக்கிறது.



“கிறிஸ்து சபையில் அன்புகூர்ந்து, தாம் அதைத் திருவசனத்தைக் கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து... மகிமையுள்ள சபையாக அதைத் தமக்குமுன் நிறுத்திக்கொள்வதற்குத் தம்மைத்தாமே அதற்காக ஒப்புக் கொடுத்தார்.” கிறிஸ்து திருச்சபையைப் பேணி வளர்ப்பதுபோல கணவர்களும் தங்கள் மனைவியர்மீது அன்பு செலுத்தி அவர்களை மேம்படுத்தவேண்டும். சபையானது கிறிஸ்துவுக்குப் பணிந்திருப்பதுபோல மனைவியரும் தங்கள் கணவன்மாருக்கு எல்லாக் காரியங்களிலும் கீழ்ப்படிந்திருக்க அறிவுறுத்தப்படுகின்றனர். இவ்விதம் கணவன்-மனைவி உறவானது விண்ணுலக அனுபவத்தின் மண்ணுலக நிழலாயிருக்க வேண்டும்! (எபே 5:22-32)

நோவா காலத்து வெள்ளம்போல் கடவுளின் கோபம் இவ்வுலகில் ஊற்றப்படும் (மத் 24:36-39). தனது குடும்பம் முழுவதும் காக்கப்பட அவன் பெரும்பேழை ஒன்றைச் செய்தான். இரட்சிக்கப்படாத தனது ஐந்து சகோதரர்களுக்கு உதவ முடியாது பிந்தித் தவித்த அச்செல்வந்தனது நிலை நமக்கு ஏற்பட்டுவிடாதபடி இன்றைக்கே நமது குடும்ப உறுப்பினர் ஒவ்வொருவரின் இரட்சிப்பிற்காய்ப் பாடுபடுவோம்.(லூக் 16:27,28)

## 5. எனது வேலையில் கவனமாயிருக்கிறேனா ?

“இருவர் வயலில் இருப்பர். ஒருவர் எடுத்துக்கொள்ளப்படுவார்; மற்றவர் விட்டுவிடப்படுவார். இருவர் திரிகையில் மாவரைத்துக் கொண்டிருப்பர். ஒருவர் எடுத்துக்கொள்ளப்படுவார்; மற்றவர் விட்டுவிடப்படுவார். விழிப்பாயிருங்கள்; ஏனெனில் உங்கள் ஆண்டவர் எந்த வேளையில் வருவாரென்று உங்களுக்குத் தெரியாது.” (மத் 24:40-42)

“நீங்கள் நினையாத நேரத்தில் மனுமகன் வருவார்; ஆதலால் நீங்களும் ஆயத்தமாயிருங்கள். ஏற்ற வேளையிலே தன் வேலைக்காரருக்கு ஆகாரங்கொடுத்து அவர்களை விசாரிக்கும்படி தலைவன் வைத்த உண்மையும் விவேகமுமுள்ள பணியாளன் யார்? தலைவன் வந்து பார்க்கும்போது தம் பணியைச் செய்துகொண்டிருக்கிறவனாய்க் காணப்படுகிற பணியாளனே பாக்கியவான்.” (மத் 24:44-46)

நம்மில் தாலந்தில்லாத ஒருவருமில்லை. நமக்கு தேவன் தந்துள்ள தாலந்துகளும் வரங்களும் நபருக்கு நபர் வேறுபடும். நமது வேலை எதுவாயினும் அவரது பேர்ப் புகழுக்காகவும் மனுக்குலத்தின் நலனுக்காகவும் அவற்றைத் திறம்படப் பயன்படுத்த வேண்டுமென்று அவர் எதிர்பார்க்கிறார். இயேசு சொன்ன உவமை ஒன்றில் ஐந்து தாலந்தும் இரண்டு தாலந்தும் பெற்றோர் தங்களுக்குக் கொடுக்கப்பட்டவைகளைக்

கொண்டு உண்மையுடனும் ஊக்கத்துடனும் வாணிபம் செய்ததால் மகிழ்வுடன் கவுரவிக்கப்பட்டனர். ஒரு தாலந்தைப் பெற்றவனோ கவலையீனம் மற்றும் சோம்பேறித்தனத்தினால் ஒன்றும் செய்யாது இருந்துவிட்டதால் பயனற்றவனாக நித்திய இருளிலே தள்ளப்பட்டான். (மத் 25:14-30)

## 6. நற்செய்திப்பணியில் தீவிரமாயிருக்கிறேனா ?

“உன் செயல்களை நானறிவேன். உனக்குச் சிறிதளவு வலிமைதான் இருப்பினும் நீ என் பெயரை மறுதலியாமல், என் வசனத்தைக் கடைப் பிடித்தபடியால், இதோ, திறந்த வாசலை உனக்குமுன் வைத்திருக்கிறேன், அதை ஒருவனும் பூட்ட முடியாது... இதோ, விரைவில் வருகிறேன்; ஒருவனும் உன் கிரீடத்தைப் பறித்துக்கொள்ளாதபடி உனக்குள்ளதை உறுதியாய்ப் பற்றிக்கொள்.” (வெளி 3:8,11)

கிறிஸ்துவிடம் நாம் கொண்டுவந்த நபர்களே நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வருகையின்போது நமக்கு மகிழ்ச்சியும், நம்பிக்கையும், பெருமையோடு சூடப்போகும் வெற்றிவாகையுமாய் இருப்பார்கள். (1 தெச 2:19,20)

“ஞானிகள் வானத்தின் பேரொளியைப் போலவும், பலரை நல்வழிக்குக் கொணர்ந்தவர் விண்மீன்களைப் போலவும், என்றென்றும் முடிவில்லாக் காலத்திற்கும் ஒளிவீசித் திகழ்வர்.” (தானி 12:3)

“கடவுள் முன்னிலையிலும் வாழ்வோருக்கும் இறந்தோருக்கும் தீர்ப் பளிக்கப்போகிற கிறிஸ்து இயேசு முன்னிலையிலும் அவர் தோன்றப் போவதை முன்னிட்டும் அவரது ஆளுகையை முன்னிட்டும் நான் ஆணை யிட்டுக் கூறுவது: இறை வார்த்தையை அறிவி. வாய்ப்பு கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் இதைச் செய்வதில் நீ கருத்தாயிரு.” (2 தீமோ 4:1,2)

ஒருவரும் அழிந்துபோகாமல் அனைவரும் மனம் மாறவேண்டுமென்று நமதாண்டவர் விருப்பங்கொண்டுள்ளதால் நற்செய்தியை அவர்களுக்கு அறிவிக்க விசுவாசிகளாகிய “நமக்குப்” போதுமான காலம் தரப்படுவதற் காகவே “நம்மேல்” அவர் நீடிய பொறுமையுள்ளவராய் தமது வருகையைத் தாமதிக்கிறார். (2 பேது 3:9)

கிறிஸ்துவின் வருகைக்கு நாம் நேரத்தைக் குறித்துக் கொண்டிருக்கக் கூடாது; அழிந்துபோவோரை மீட்கக் குறிகளை வைத்துப் பணியாற்றிக் கொண்டிருக்கவேண்டும். (அப் 1:7,8)

“உன் ஆகாரத்தைத் தண்ணீர்கள்மேல் போடு... ஏழுபேருக்கும் எட்டு பேருக்கும் பங்கிட்டுக்கொடு; மண்ணுலகில் என்ன ஆபத்து நேரிடுமோ உனக்குத் தெரியாது.” (பிர 11:1,2)



“உலகெங்குமுள்ள எல்லா மக்களினத்தாருக்கும் சாட்சியாக விண்ண ரசின் நற்செய்தி அறிவிக்கப்படும். அதன் பின்பு முடிவு வரும்.” (மத் 24:14)

## 7. எளியவருக்குத் தயாளமாய் உதவுகிறேனா ?

“செல்வர்களே, சற்றுக் கேளுங்கள். உங்களுக்கு வரப்போகும் இழிநிலையை நினைத்து அலறி அழுங்கள்... இந்த இறுதி நாட்களில் செல்வத்தைக் குவித்து வைத்திருக்கிறீர்களே... இவ்வுலகில் ஆடம்பர மாகவும் இன்பமாகவும் வாழ்ந்தீர்கள்... ஆண்டவரின் வருகை நெருங்கி வந்துவிட்டது.” (யாக் 5:1-8)

“இரக்கம் காட்டாதோருக்கு இரக்கமற்ற தீர்ப்புதான் கிடைக்கும். இரக்கமே தீர்ப்பை வெல்லும்” (யாக் 2:13). தரித்திரமான பிச்சைக்காரன் ஒருவனுக்கு எக்கரிசனையும் காட்டாத அச்செல்வந்தனின் பரிதாப முடிவை நினைத்துக்கொள்ளுங்கள். (லூக் 16:19-26)

“நீங்கள் மாளும்போது உங்களை நித்தியமான வீடுகளிலே ஏற்றுக் கொள்வார் இருக்கும்படி, அநீதியான உலகப்பொருளால் உங்களுக்கு நண்பரைச் சேர்த்துக்கொள்ளுங்கள்.” (லூக் 16:9)

ஏழைக்குக் கொடுக்கப்படுவது ஆண்டவருக்குக் கொடுக்கப்பட்ட கடனாம் (நீதி 19:17). “மண்ணுலகில் உங்களுக்கெனச் செல்வத்தைச் சேமித்து வைக்கவேண்டாம்... ஆனால் விண்ணுலகில் உங்கள் செல்வத்தைச் சேமித்து வையுங்கள்... உங்கள் செல்வம் எங்குள்ளதோ அங்கே உங்கள் உள்ளமும் இருக்கும்.” (மத் 6:19-21)

“இவ்வுலகில் செல்வர்களாய் இருப்பவர்களுக்கு இவ்வாறு கட்ட ளையிடு: ... அவர்கள் நிலையில்லாச் செல்வத்தில் நம்பிக்கை வைக்காமல்... நல்லதைச் செய்து நற்செயல்கள் என்னும் செல்வத்தைச் சேர்ப்பார்களாக; தங்களுக்குள்ளதைத் தாராள மனதோடு பகிர்ந்தளிப்பார்களாக. இவ்வாறு அவர்கள் தங்களது வருங்காலத்திற்கென்று நல்லதோர் அடித்தளமாகிய இச்செல்வத்தைச் சேமித்து வைப்பதால் நித்திய வாழ்வை அடையமுடியும்.” (1 தீமோ 6:17-19)

## 8. பாடுகளில் மகிழ்ச்சியாயிருக்கிறேனா ?

“அழியக்கூடிய பொன் நெருப்பினால் புடமிடப்படுகிறது. அதைவிட விலையுயர்ந்த உங்கள் விசுவாசம் மெய்ப்பிக்கப்படவே துயருறுகிறீர்கள். இயேசு கிறிஸ்து வெளிப்படும்போது அந்நம்பிக்கை உங்களுக்குப் புகழும் மாண்பும் பெருமையும் தருவதாய் விளங்கும்.” (1 பேது 1:6-9)

“முன்னைய நாட்களை நினைவுகூருங்கள். நீங்கள் ஒளி பெற்றபின் உங்களுக்கு நேரிட்ட துன்பம் நிறைந்த போராட்டத்தை மனவுறுதியோடு ஏற்றுக்கொண்டீர்கள்... உங்கள் தைரியத்தை விட்டுவிடாதீர்கள்... இன்னும் மிகமிகக் குறுகிய காலமே இருக்கிறது; வரவிருக்கிறவர் வந்துவிடுவார், காலம் தாழ்த்தமாட்டார்.” (எபி 10:32,35,37)

“உலகில் உங்களுக்குத் துன்பம் உண்டு, எனினும் துணிவுடனிருங்கள். நான் உலகின்மீது வெற்றிகொண்டுவிட்டேன்.” (யோ 16:33)

“நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன். இனி நீதியின் கிரீடம் எனக்கென வைக்கப்பட்டிருக்கிறது. நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தருவார்; எனக்கு மட்டுமல்ல, அவர் தோன்றுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார்.” (2 தீமோ 4:7,8)

## 9. உபதேசத்தில் ஆரோக்கியமாயிருக்கிறேனா ?

“ஒரு காலம் வரும். அப்போது மக்கள் நலந்தரும் போதனையைத் தாங்கமாட்டார்கள். மாறாக, செவித்தினவு கொண்டவர்களாய்த் தங்கள் தீய நாட்டங்களுக்கேற்பத் தங்களுக்கெனப் போதகர்களைத் திரட்டிக் கொள்ளுவார்கள். உண்மைக்குச் செவிசாய்க்க மறுத்துப் புனைக் கதைகளை நாடிச் செல்வார்கள். நீயோ அனைத்திலும் அறிவுத் தெளிவோடிரு.” (2 தீமோ 4:3,4)

“பல போலித் தீர்க்கர் தோன்றிப் பலரை நெறி தவறி அலையச் செய்வர்... ஆனால் இறுதிவரை மனவுறுதியுடன் இருப்பவரே மீட்பு பெறுவர்... போலி மேசியாக்களும் போலித் தீர்க்கரும் தோன்றி முடியுமானால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களையே நெறி தவறச் செய்ய பெரும் அடையாளங் களையும் அற்புதங்களையும் செய்வார்கள்.” (மத் 24:11,13,24)

“சகோதரரே, நமது ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் வருகையையும், நாம் அவரிடம் சேர்க்கப்படுவதையும் குறித்து, நாங்கள் உங்களைக் கேட்டுக் கொள்வது என்னவென்றால்,... எவரும் உங்களை எவ்வகையிலும் ஏமாற்ற இடங்கொடாதீர் ... சத்தியத்தை விசுவாசியாமல் அநீதியில் பிரியப்படுகிற யாவரும் ஆக்கினைக்குள்ளாக்கப்படும்படி, அவர்கள் பொய்யை விசுவாசிக் கத்தக்கதாகக் கொடிய வஞ்சகத்தைக் கடவுள் அவர்களுக்கு அனுப்புவார்.”
(2 தெச 2:1,3,11,12)



“வானமும் பூமியும் ஒழிந்துபோகும், என் வார்த்தைகளோ ஒழியவே மாட்டா.” (மத் 24:35)

“இதோ ! நான் விரைவில் வருகிறேன்; இப்புத்தகத்திலுள்ள தீர்க்கதரிசன வசனங்களைக் கடைப்பிடிக்கிறவன் பாக்கியவான்.” (வெளி 22:7)

## 10. பிசாசை முழுமூச்சாய் எதிர்க்கிறேனா ?

“பிசாசானவன் தனக்குச் சிறிதுகாலமே எஞ்சியிருக்கிறதென்று அறிந்து, கடுஞ் சீற்றங்கொண்டு, உங்களிடம் இறங்கினபடியால், உங்களுக்கு ஆபத்து வரும்... இறக்கவேண்டியதிருந்தாலும் அவர்கள் தங்கள் உயிர் மீது ஆசை வைக்காமல், ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலும் தங்கள் சாட்சியின் வசனத்தினாலும் அவனை வென்றார்கள்.” (வெளி 12:12,11)

“இவை நிகழும்போது நீங்கள் விசுவாசிக்கும்படி, இவை நிகழுமுன்பே, உங்களுக்குச் சொல்லிவிட்டேன்... இவ்வுலகின் அதிபதி வருகிறான், அவனுக்கு என்னிடம் ஒன்றுமில்லை.” (யோ 14:29,30)

“பொல்லாத நாள் வரும்போது, எதிர்த்து நின்று, அனைத்தின்மீதும் வெற்றிபெற்று நிலைநிற்க வல்லமை பெறும்படி, கடவுளருளும் எல்லாப் படைக்கலன்களையும் எடுத்துக்கொள்ளுங்கள்.” (எபே 6:13)

“பின்னர் அந்த அக்கிரமக்காரன் தோன்றுவான். ஆண்டவர் தம் வாயினால் ஊதி அவனை ஒழித்துவிடுவார்; அவர் வரும்போது அவரது தோற்றமே அவனை அழித்துவிடும்.” (2 தெச 2:8)

»¿ °jt thœéš
ãiwthŒ tsu cztë¡F«
xU Âdrç¤ Âahd üš...




சகோதரன் ஸ்டான்லி நாற்பது ஆண்டுகளில்
எழுதியவற்றிலிருந்து தொகுக்கப்பட்டது.

**அனைத்துச் சபையினரும்...**
**அனைத்து வயதினரும்...**
**அனைத்துத் துறையினரும்...**
**விரும்பி வாசிக்கும்**
**ஒரு புதிய படைப்பு!**

*ஆங்கிலம், இந்தி, ஒரியா, கன்னடம், பெங்காலி, மலையாளம், தெலுங்கு ஆகிய மொழிகளிலும் உண்டு.*

*பிறந்த நாள், திருமணம், ஆண்டு விழா, பட்டமளிப்பு, புத்தாண்டு போன்றவற்றிற்குச் சிறந்த வெகுமதி!*

*தொடர்புக்கு:*

Blessing Literature Centre
21/11 West Coovam River Road, Chintadripet,
Chennai 600002, India
*Tel: 044-28450411 <bymliterature@vsnl.net>*